## அர்ப்பணம்...

வானொலி மற்றும் தொலைக்காட்சியில் அளித்த கர்த்தருடைய செய்தியை இந்த இரண்டாம் புத்தகத்தில் வெளியிடுவதில் எல்லையில்லா மகிழ்ச்சியடைகின்றோம். Vol.1 ல் 51 பிரசங்கங்கள் அடங்கிய புத்தகத்தை வெளியிட கர்த்தர் கிருபை செய்தார். இந்த Vol.2 ல் 53 பிரசங்கங்கள் வெளியிட உதவிய எங்கள் தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

தமிழ்பேசும் மக்கள் மத்தியில் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற சகோதரர்களுக்கும், சத்தியத்தை கற்று கர்த்தருடைய சித்தம் செய்ய விரும்பும் தேவஜனங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என நினைத்து இப்புத்தகத்தை வெளியிடுகிறோம். குறிப்பாக தொலைக்காட்சி நேயர்கள் இப்புத்தகம் வெளிவரவேண்டும் என கேட்டுக்கொண்டனர்.

தமிழகத்தில் கர்த்தருடைய சபை எல்லா இடங்களிலும் உருவாக வேண்டும் என்பது எங்களுடைய ஆவல். இதற்காக மாவட்டங்கள் தோறும் கர்த்தருடைய ஊழியங்களை கண்டு அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய ஊழியங்களை செய்துகொண்டு வருகின்றோம். கர்த்தரையும் கர்த்தருடைய உபதேசங்களையும் மையமாக வைத்து நடைபெறும் இந்த ஊழியம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவதை நாங்கள் நன்கு உணர்ந்து, கர்த்தருடைய பெலத்தால் தொடர்ந்து இவ்வூழியங்களை செய்து வருகின்றோம். ஒவ்வொரு வருடமும் இதுபோன்று செய்திகளை புத்தக வடிவில் கொண்டுவர ஜெபிக்கும் வத்தலக்குண்டு சபையாருக்கும், இப்புத்தகம் வெளிவர எல்லாவகையிலும் எங்களை உற்சாகப்படுத்தி வரும் World Evangelism-த்திற்கும் நன்றி சொல்லுகிறோம். நேயர்களுக்கு இப்புத்தகத்தை அர்ப்பணிக்கிறோம்.

ஆண்டவரின் பணியில்,
**B. Arjunan & Glory**

Order From

World Literature Publications
P.O.Box.5, Batlagundu - 624 202, South India.
e-mail:arjunanglory@gmail.com
Our website:thewordofchristindia.com
Our Phone: 04543 263278, Mobile: 94435 58041

Sharon Print System, Madurai -2, Phone 99439-33377

ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2006 - 2007

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

**2006 - 2007**



செய்தியாளர்
**B. அர்ஜுனன்**

**Vol. 2**

Published by
***The Word of Christ***

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ
2006 -2007

Preacher
**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

Coyright:2012
The Word of Christ Publications
First Pinting Tamilnadu -2012
This Printing -1000 Copies



# பொருளடக்கம்

1. உங்கள் பொக்கிஷம் எங்கே? – **Where is your treasure?**
2. தேவன் சத்தியமுள்ளவர் – **God is true**
3. தேவன் அருளிய அப்பம் – **The bread, given by God**
4. பயப்படாதிருங்கள் – **Be not afraid**
5. சுயாதீனம் – **Liberty**
6. சிலுவை – **The Cross**
7. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுகிறீர்கள்? – **What ye bind on earth?**
8. தம்மைத்தாமே தாழ்த்தினார் – **He humbled himself**
9. பரிசுத்தம் – **Holiness**
10. சோர்ந்துபோகாதிருங்கள் – **Not to be fainted**
11. ராஜாதி ராஜா – **King of Kings**
12. ஒரே தேவன் – **One God**
13. ஒரு பாவி – **A Sinner**
14. சோதனை – **Temptation**
15. ஆவிக்குரிய பிறப்பு – **Spiritual Birth**
16. குற்றமற்ற ஜீவியம் – **Blameless life**
17. புது உடன்படிக்கை – **A New Covenant**
18. இயேசு கண்ணீர்விட்டார் – **Jesus Wept**
19. ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு – **Holding fast the Word of Life**
20. பண்டிகைகள் – **Feasts**
21. மனத்தாழ்மை – **Lowliness of Mind**
22. புதிய உபதேசம் – **New Doctrine**
23. தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார் – **God Shall Supply All Your Need**
24. பாவமில்லாத பிரதான ஆசாரியர் – **An High Priest, Without Sin**
25. இயேசு எதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்? – **Why Did Jesus Give Himself?**
26. ஒற்றுமை – **Unity**
27. செவிகொடுங்கள் – **Hear**

28. ஆவிக்குரிய கனிகள் – Spiritual fruits
29. கிரியைகளில்லாத விசுவாசம் எப்படிப்பட்டது? – How is faith without works?
30. நீங்கள் உங்களை எதற்குப் பழக்குவிக்கிறீர்கள் – For what you trainup yourself?
31. கிறிஸ்துவின் சுவிசேஷம் – The Gospel of Christ
32. இளைப்பாறுதல் – Rest
33. உடன்படிக்கையின் ஆசீர்வாதம் – Blessing of The Covenant
34. திருப்தி – Satisfaction
35. மேட்டிமை – Pride
36. விசுவாச கப்பல் – Faith Ship
37. கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி – Perfect in Christ Jesus
38. இருதயம் – Heart
39. ஆகாதவைகள் – Bad Things
40. நீங்கள் உங்களை எதற்குப் பழக்குவிக்கிறீர்கள்? – For What you train up yourself?
41. தேவனோடே ஒப்புரவாகுங்கள் – Be ye reconciled to God
42. மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள் – Profitable unto Men
43. நல்ல போராட்டம் – A Good Fight
44. நாம் எதற்காகத் தேவனை தொழுது கொள்கிறோம்? – Why do we worship God?
45. நன்மை செய்யப் படியுங்கள் – Learn to do well
46. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல் – Repentance unto life
47. தேவனுடைய சித்தம் – Will of God
48. பெருமை – Pride
49. எழுதியிருக்கிறபடி – As it is written
50. யோசேப்பு கனிதரும் செடி – Joseph is a fruitful bough
51. கர்த்தருக்கு விரோதமான துரோகம் – Transgression against the Lord
52. பண ஆசை – Love of Money
53. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் – The Blood of Jesus Christ



## 1. உங்கள் பொக்கிஷம் எங்கே?
## Where is your treasure?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். உங்கள் பொக்கிஷம் எங்கே? Where is your treasure? என்ற தலைப்பின் கீழ் இன்றைய நாளிலே தியானிப்போம். பொக்கிஷம் என்றவுடனே ஞாபகத்திற்கு வருவது பணம், பொருட்கள் தான். உங்களுடைய பொக்கிஷம் எங்கேயிருக்கிறது? பேங்கிலா அல்லது உங்கள் வீட்டு இரும்பு பிரோவிலா? ஒவ்வொருவரும் இப்படியே தங்களுக்குரிய பொக்கிஷங்களை சேர்த்துவைக்க விரும்புவார்கள். பரிசுத்த வேதாகமத்தில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். ‘‘உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்’’ (மத்.6:21). உண்மைதான், உங்களுக்கு ஒரு தேவை வரும்போது பேலன்ஸ் எவ்வளவு இருக்கிறது என்று யோசிக்கிறீர்கள் அல்லது வீட்டில் எவ்வளவு பணம் இருக்கிறது என்று போய் பார்க்கிறீர்கள். அதுமட்டுமல்ல இரவில் தூங்கும்போதுங்கூட உங்கள் இருதயம் உங்கள் பொக்கிஷத்தின்மீதே இருக்கும். யாக்கோபு சொல்கிறார்: ‘‘ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும் கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது’’ என்கிறார் (யாக்.5:1–4). தேவைக்கு மிஞ்சி சேர்த்துவைக்கக்கூடியவர் களுடைய நிலைமை இப்படித்தானிருக்கிறது. பணம் துருப்பிடித்துப்போகும் அளவு சேர்த்துவைக்கிறார்கள் ஆகையால் துரு அவர்களுக்கு விரோதமாக எழுந்து சாட்சி சொல்கிறது. நாம் சில வேளைகளில் செய்திதாளில் படிக்கிறோம். பூட்டிய வீட்டில் திருடர்கள் பூட்டை உடைத்து நகைகளையும் பணத்தையும் கொள்ளையடித்து சென்று விட்டனர் என்று, இதற்கு பயந்துபோய் பலர் பேங்கில் டெபாசிட் செய்கின்றனர் அல்லது பணத்தை அங்கு போட்டு வைக்கின்றனர். சிலர் லாக்கரில் பத்திரமாக வைத்து பாதுகாக்கின்றனர். எது எப்படியிருந்தபோதிலும் இங்கே சேமித்து வைக்கக்கூடிய பணத்திற்கு

ஆபத்திருக்கிறது. பிறகு என்னதான் செய்வது? என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து இல்லாதவர்களுக்கு உதவும்படி உங்களை ஒப்புக்கொடுங்கள். ''நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய்பேசும்'' (லூக்.6:45). ஒரு மனிதன் எப்படியோ அப்படியே அவன் எண்ணமும் இருக்கும். இருதயத்தின் நிறைவினாலே அவன் வாய்பேசுகிறது. அன்பானவர்களே, நல்லவன் நல்லவைகளையே பேசுவான். அவன் இருதயம் நல்ல பொக்கிஷம் எனவேதம் கூருகிறது. உங்கள் இருதயமாகிய பொக்கிஷம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? இந்த பொக்கிஷத்திலே கர்த்தருடைய வசனம் தங்க இடம்கொடுங்கள்.

பொதுவாக எல்லோருமே பொக்கிஷங்களை பூமியிலே சேர்த்துவைக்க விருப்பம் கொள்கின்றனர். ஆனால், ''பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்'' என்று கர்த்தர் குறிப்பிடுகிறார் (மத்.6:19). ஆண்டவர் சொன்னால் அது மெய்யாகத்தான் இருக்கும். ஆக, நாம் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டிய இடம் பரலோகம். அங்கே அநுதினமும் சேர்க்கலாம். 24 மணி நேரமும் அந்த பேங்க் திறந்தே இருக்கும். அது அழியாத ஒரு இன்சூரன்ஸ் ஆபிஸ். அதற்காக உத்திரவாதம் செய்கிறவர்கள் அவருடைய ஊழியர்களே. அவர் சொல்லுகிறபடி உங்கள் பொக்கிஷத்தை பரலோகத்தில் சேர்த்துவையுங்கள். பரலோகத்திலே சேமிக்க ஏஜன்ட் இருக்கிறார்களா என்று கேட்டுவிடாதீர்கள். ''...மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்கிறார் (மத்.25:40). பரலோகத்திலே உங்களுடைய பொக்கிஷங்களை சேர்த்துவைக்க பலவழிகள் இருக்கின்றன. அதிலே ஒரு வழியைத்தான் ஆண்டவர் இங்கே குறிப்பிடுகிறார். ஆண்டவருடைய வேலைகளை செய்யக்கூடிய அநேக தேவ தாசர்களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். அந்த விதமான மக்களுக்கு நீங்கள் எதை செய்கிறீர்களோ அதை அவருக்கே செய்கிறீர்கள். நீங்கள் அவர்களுக்கு செலவு செய்த பணம் பரலோகத்திலே உள்ள உங்கள் சேமிப்பு கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படிவிசுவாசிப்பீர்கள் என்றால் வலதுகை செய்கிறதை இடதுகை அறியாது தாராளமாக கொடுக்கக்



கற்றுக்கொள்ளுங்கள். கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றார். கர்த்தர் நிமித்தமாக கொடுக்கக்கூடியவர்கள் திரளாய் பெற்றுக்கொள்கிறார்கள். ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்கு கடன் கொடுக்கிறான் என்று நீதிமொழிகளில் வாசிக்கிறோம். நீங்கள் கொடுத்ததை அவர் திரும்பக்கொடுப்பார். பவுலும்கூட ''நான் உங்களில் எவ்வளவு அதிமாய் அன்புகூருகிறேனோ அவ்வளவு குறைவாய் உங்களால் அன்புகூரப்பட்டிருந்தாலும், மிகவும் சந்தோஷமாய் நான் உங்கள் ஆத்துமாக்களுக்காகச் செலவுபண்ணவும் செலவுபண்ணப்படவும் விரும்புகிறேன்'' என்று கொரிந்து சபைக்கு எழுதுகிறார் (2கொரி.12:15). நாம் முதலாவது உதவி செய்யும்போது அது கர்த்தருக்காகவும், கர்த்தருடைய நாமம் மகிமைக்காவும் செய்கிறோம் என்ற தீர்மானத்தோடு செய்யவேண்டும். இந்த விதமான உதவி எதிர்பார்ப்போடு செய்யக்கூடாது. அந்த ஆத்துமா இரட்சிக்கப்படவேண்டும் என்ற உயரிய நோக்கோடு செய்யவேண்டும். தனக்குண்டான வைகளை செலவு செய்வதிலே சகேயு மிகவும் சரியானவனாக கர்த்தருடைய பார்வையிலே காணப்பட்டிருக்கிறான். ''சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே'' என்றார் (லூக்.19:8,9). அவனுடைய இரக்ககுணம் அவனை விசுவாசத்தின் பிள்ளையாக மாற்றினது. நீங்களும் நானும் ஆபிரகாமுக்கு குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் இருக்கவேண்டுமானால் நாமும் சகேயுவைப்போல ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்தப்படியாக செய்வீர்களா?

மேலும் ''பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை'' (மத்.6:20). பரலோகத்தின் சேமிப்பு 100 சதவீத உறுதியானது. பூமியிலே சீட்டு போடுகிறவர்களைக் குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதை வசூலிக்கிறவர்கள் அவர்களை உற்சாகப்படுத்தும்படியாக சில இலவசபொருட்களைக் கொடுத்து தங்களுடைய கம்பெனியில் சேர்த்துக்கொள்வார்கள். பணம் அதிகமாக வசூல் செய்த பிறகு நாளடைவில் அக்கம்பெனி பூட்டப்பட்டிருக்கும் அதிலே சீட்டுப்போட்டவர்கள் சிலநாள் பொறுத்திருந்து பார்த்து பின்பு காவல் நிலையத்தில் புகார்செய்வார்கள் இது

நடைபெறாத ஊரே இல்லை என்று சொல்லலாம். இப்படி பணம்சேர்த்து ஏமாற்றம் அடைகிறவர்கள் அநேகர். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே, உங்கள் பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்துவையுங்கள். லூக்கா21:1–3 வசனங்களில் ஒரு ஏழை விதவையைக் கர்த்தர் குறிப்பிடும்போது: ''அவர் கண்ணேறிட்டுப் பார்த்தபோது, ஐசுவரியவான்கள் காணிக்கைப்பெட்டியிலே தங்கள் காணிக்கைகளைப் போடுகிறதைக் கண்டார். ஒரு ஏழை விதவை அதிலே இரண்டு காசைப் போடுகிறதையும் கண்டு: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாகப் போட்டாள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலிருந்தெடுத்து தேவனுக்கென்று காணிக்கை போட்டார்கள்; இவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள்'' என்றார். இந்த ஏழை விதவைக்கு பூமியிலே சேர்த்துவைக்கத் தெரியாதா என்று கேட்கிறேன். அந்த இரண்டு காசை சம்பாதித்த அப்பெண்ணிற்கு அதை வட்டிக்கு விடவும் தெரியும். பூமியிலே சேர்த்துவைக்கவும் தெரியும். ஆனால் அவள் அப்படிச்செய்யவில்லை. தன்னிடத்தில் இருந்த அந்த இரண்டு காசை காணிக்கை கொடுத்துவிட்டால் நாளைக்கு ஒன்றுமில்லை என்பதும் அவளுக்கு தெரியும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தன் ஜீவனத்துக்கு இருந்த எல்லாவற்றையும் போட்டுவிட்டாள். அவள் எந்த நம்பிக்கையில் இதை செய்திருக்கக்கூடும். நாளைக்கு கர்த்தர் பார்த்துக்கொள்வார் என்ற அசையாத நம்பிக்கை. இந்த நம்பிக்கை ஒவ்வொருவருடைய இருதயத்திலும் பிறக்கவேண்டும் அதுவே எனது ஜெபமாகும்.

மக்கெதோனியா நாட்டுச் சபையார் ''மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்'' என்று 2கொரி.8:2–ல் வாசிக்கிறோம். இது பரலோக சேமிப்புக்கு மிகவும் முன்மாதிரியான ஒரு சபையாக இருந்தது. இவர்கள் கொடுத்த காணிக்கை பல வகையில் திருச்சபையின் வளர்ச்சிக்கு பயன்பட்டது. அநேகருடைய துயர் துடைக்கப்பட்டது. கொடுத்தல் விஷயத்தில் அநேகர் என்னிடத்தில் கொடுக்க ஒன்றுமில்லை என்பார்கள். தேவன் ஒவ்வொருவருக்கும் சில தாலந்துகளைக் கொடுத்திருக்கிறார். அதைவைத்து அவர்கள் தங்களுடைய ஜீவிய நாட்களிலே அவைகளைப் பெருக்கிக்காட்டவேண்டும். ஒரு நாளிலே கர்த்தர் நம்மிடத்தில் கணக்கு கேட்ப்பார். குயவனுக்கு மண்ணின் மீது முழுஅதிகாரம் இருப்பதைப்போல நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு நம்மீது



முழுஅதிகாரமிருக்கிறது. ஒரு உவமையிலே பிரபுவாகிய ஒருவன் தன் ஊழியக்காரரில் பத்துப்பேரை அழைத்து, அவர்களிடத்தில் பத்துராத்தல் திரவியங்கொடுத்து: நான் திரும்பிவருமளவும் இதைக்கொண்டு வியாபாரம்பண்ணுங்கள் என்று சொன்னான். அந்தப்படியாக வியாபாரம் செய்து முந்தினவன் வந்து: ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான். அப்படியே இரண்டாம் மூன்றாம் மனிதர்களும் வந்து தங்களுடைய வருமானத்தை தெரிவித்தனர். பின்பு வேறொருவன் வந்து: ஆண்டவனே, இதோ உம்முடைய ராத்தல், இதை ஒரு சீலையிலே வைத்திருந்தேன். நீர் வைக்காததை எடுக்கிறவரும், விதைக்காததை அறுக்கிறவருமான கடினமுள்ள மனுஷனென்று அறிந்து, உமக்குப் பயந்திருந்தேன் என்றான். அப்பொழுது அவனுடைய பிரபு சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி: அந்த ராத்தலை அவன் கையிலிருந்தெடுத்து, பத்துராத்தல் உள்ளவனுக்குக் கொடுங்கள் என்றான். ''உள்ளவன் எவனுக்குங் கொடுக்கப்படும், இல்லாதவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (லூக்.19:26). அன்பானவர்களே, தேவன் ஒருவரையும் வெறுமனே விட்டுவிடவில்லை. நம்மிடத்தில் இருக்கிற எல்லாமே தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டவைகளே. அவைகளைக் கொண்டு ஜீவனம்பண்ணி பரலோகத்திலே பொக்கிஷத்தை சேர்த்துவைக்க வேண்டும். அப்படியென்றால் பூமியிலே அவருடைய திருசித்தத்தின்படியாக அவைகள் செலவு செய்யப்படவேண்டும். உங்களுடைய பொக்கிஷம் பரலோகத்திலே இருக்கட்டும்.

## கேள்வி நேரம்

**பரலோகத்திலே பொக்கிஷங்களை சேர்த்துவைப்பதாலே நமக்கு என்ன கிடைக்கும்?**

ஒன்று நாம் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து சேர்த்துவைப்பதாலே, அதற்கேற்ற பலனை கர்த்தராலே பெற்றுக்கொள்வோம். மற்றொன்று அழிவிலிருந்து காக்கப்படுகிறோம். ஐசுவரியவானை பற்றிய உவமையிலே ''அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து,

பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்'' (லூக்.12:17–19). ஆனால் தன் ஆத்துமாவைகாக்க மறந்தான். தனக்காக பொக்கிஷங்களை சேர்த்துவைக்கிறவர்கள் இப்படியே இருக்கிறார்கள். பிரசங்கி சொல்லுகிறான்: ''தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்ததுபோலவே நிர்வாணியாய்த் திரும்பப் போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டுபோவதில்லை'' (பிர.5:15). இப்படியிருக்கிறபடியால் உங்கள் பொக்கிஷம் பரலோகத்தில் இருக்கட்டும்.

## 2. தேவன் சத்தியமுள்ளவர்
## God is true

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் உயிர்த்தெழுந்த நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். தேவன் எப்படிப்பட்டவர் என்று நாம் தியானிக்கும்போது தேவன் சத்தியமுள்ளவர் என்று பரிசுத்த வேதாகமம் அவரைக்குறித்து சொல்லுகிறது. ''அவர் கன்மலை; அவர் கிரியை உத்தமமானது; அவர் வழிகளெல்லாம் நியாயம், அவர் நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்; அவர் நீதியும் செம்மையுமானவர்'' (உபா.32:4). இப்படிபட்ட உண்மையான தேவனைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அன்பானவர்களே, உலகத்திலே எத்தனையோ விதமான தேவர்களையும் தேவிகளையும் நாம் கேள்விப்படுகிறோம். ஆனால் இந்த தேவனுடைய வழிகளெல்லாம் நியாயம். அவர் நியாயக்கேடில்லாதவர், சத்தியமுள்ளவர். சிலருடைய வேண்டுதலைப்பார்க்கும்போது, என் எதிராளியினுடைய கையையாவது, காலையாவது வாங்கிவிடவேண்டும் அப்பொழுது நான் உனக்கு இன்னதைச்செய்வேன் என்று உலக தேவர்களை நோக்கி வேண்டிக்கொள்வார்கள். அந்தப்படியாக நடந்தவுடனே அவர்கள் நேர்ந்துகொண்டதைச் செய்வார்கள். பிரியமானவர்களே, சர்வத்தையும் உண்டாக்கின தேவன் அவர் நீதியும் செம்மையுமானவர். அவர் உலகத்தாருடைய பாவத்தை மன்னித்து கிருபை அளிக்கிறவர். அந்த தேவன் சத்தியமுள்ளவர். அவருடைய குமாரனாகிய இயேசுவும் சத்தியமுள்ளவர். பரிசுத்த ஆவியானவரும் சத்தியமுள்ளவர். இம்மூவரும்



ஒன்றாயிருக்கிறார்கள் என்று வேதாகமம் சொல்லுகிறது. தேவன் மனிதனை அவருடைய வசனத்தினாலே பரிசுத்தமாக்குகிறார். ஆண்டவர் இயேசு ஜெபிக்கும்போது ''உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்'' என்றார் (யோவா.17:17). பாவஉலகில் இருக்கிற ஒரு மனிதன், தன் பாவத்தை முழுவதும் போக்கிவிட முடியாது. அவனை பரிசுத்தப் படுத்த, அவனை உண்டாக்கின ஆண்டவருடைய வசனம் தேவை. ஆகையால்தான் ஆண்டவர் ஜெபிக்கும்போது உம்முடைய வசனத்தினாலே அவர்களை பரிசுத்தமாக்கும் என்று சொல்லி ஜெபிக்கிறார். தேவன் நிலையானவர் மனிதனைப்போல அவருக்கு மரணம் என்பது இல்லை. சங்கீதக்காரனாகிய தாவீது அவரைக்குறித்து சொல்லும்போது: ''நீரோ மாறாதவராயிருக்கிறீர்; உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை'' (சங்.102:27). மனிதர்களாகிய நாம் சில வேளைகளில் தேவனை நம்மோடு ஒப்பிட்டுப்பார்த்து விடுகிறோம். களிமண் தமக்குச் சமமாக குயவனை நினைக்கலாமா? கூடாதே. ஆனால் அநேகர் அவ்விதமாக நினைக்கிறார்கள். யோபு இப்படியாக சொல்லுகிறார்: ''ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறார். இதோ, அவர் என் அருகில் போகிறார், நான் அவரைக் காணேன்; அவர் கடந்துபோகிறார், நான் அவரை அறியேன். இதோ, அவர் பறிந்துக்கொண்டுபோகிறார், அவரை மறிப்பவன் யார்? நீர் என்ன செய்கிறீர் என்று அவரைக் கேட்பவன் யார்?'' (யோபு9:10–12). பிரியமானவர்களே, இந்த சத்திய தேவனை சத்தியத்தின் படி தேடினால்தான் கண்டுகொள்ளமுடியும். தேவன் மனிதர்களுக்கு தந்தருளிய பரிசுத்த வேதாகமம் இதற்கு உதவுகிறது. அநேகர் அறிவில்லாமல் அவர் யார்? அவருடைய ரூபம் எப்படிப்பட்டது? அவரை உன்னால் காட்ட முடியுமா? என்று வாதிடுகிறார்கள்.

மேலும் அவரைக்குறித்து பரிசுத்த வேதம்: ''.....எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன்'' என்று எபி.6:18–ல் குறிப்பிடுகிறது. தேவன் ஆபிரகாமுக்கு செய்த வாக்குத்தத்தை நிறைவேற்ற வல்லவராயிருந்தார். அவனுக்கு 75 வயது இருக்கும்போது வாக்கு பண்ணினார். ''கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள்

ஆசீர்வதிக்கப்படும் என்றார்'' (ஆதி.12:1–3). அதன் பின்பு 100 வருடம் அவனை கரம்பிடித்து வழிநடத்தினார். ஆபிரகாம் 175 வயதில் மரித்தான் என்று காண்கிறோம். மனிதன் வாக்கு கொடுத்து மாறுவான். தேவனோ தம்முடைய வாக்குத்தத்தை குறித்து மாறாதவராயிருக்கிறார். அவர் பொய்சொல்ல ஒரு மனிதன் அல்ல. மேலும் யோபு சொல்லும்போது ''நான் அவருக்குப் பிரதியுத்தரம் சொல்லுகிறதற்கும், நாங்கள் கூடி நியாயத்திற்கு வருகிறதற்கும், அவர் என்னைப்போல மனுஷன் அல்லவே'' என்கிறார் (யோபு9:32). அநேக வேளைகளில் மனிதர்கள் தங்களுடைய யோசனையின்படி தேவனை நினைத்துவிடுகிறார்கள். என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார். மனிதன் தன்னை நல்லவனைப்போல காண்பித்துக்கொள்ளலாம். ஆனால் அவன் நல்லவனாக இருக்கமுடியாது. ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தலைவன் ஒருவனிடம் பேசும்போது; ''நீ என்னை நல்லவன் என்று சொல்வானேன்? தேவன் ஒருவர் தவிர நல்லவன் ஒருவனும் இல்லையே'' என்றார் (லூக்.18:19). மனிதர்களிலே பெரும்பாலானோர் சுயநலவாதிகளாகவே காணப்படுகின்றனர். தேவனோ நல்லலோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும், பரிதானம் வாங்குகிறவரும் அல்ல. அவரிடத்தில் பரிதானம் செல்லாது. எனக்கு தெரிந்த ஒரு சகோதரருக்கு நல்லாசிரியர் விருது வழங்கப்பட்டது. அவரை கனப்படுத்தும்படியாக ஒரு விழா ஏற்பாடு செய்யப்பட்டது. அவ்விழாவிலே அவர் பேசும்போது இவ்வசனத்தை நினைவு கூர்ந்தார். எனக்கு நல்லாசிரியர் விருது வழங்கியிருக்கிறார்கள். ஆனால் எல்லா ஆசிரியர்களும் நல்லாசிரியர் என்று சொல்லிவிட முடியாது, ஆகையால் முதல்வர் சொல்லியதைப்போல நல்லாசிரியர் விருது என்பதை விட டாக். ராதாகிருஷ்ணன் விருது என்று சொல்லவேண்டும் என்றார். ஆம் எனக்கு அன்பானவர்களே, மனிதர்களில் யாரும் நல்லவர்களாக இருக்கமுடியாது அப்படி நல்லவர்கள் இருந்திருந்தால், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்பூமிக்கு வரவேண்டிய அவசியம் இல்லாமற்போயிருக்கும். நாம் தேவனைக்குறித்து அறிந்திருப்பது கொஞ்சம் அவரைப் பற்றி அறியவேண்டிய காரியங்கள் நிறைய இருக்கிறது. பரிசுத்த வேதாகமத்திற்கு நம்முடைய கவனத்தை செலுத்தி ஆராயும்போது, அவரையும் அவருடைய சத்தியங்களையும் நாம் அறிந்துகொள்ளமுடியும். தேவன் சத்தியத்தை உடையாக அணிந்திருப்பவர். இருக்கிறவராகவே இருக்கிறவர்.

அவருடைய விருப்பத்தை நாம் முதலாவது



அறிந்துகொள்ளவேண்டும். தேவனுடைய விருப்பத்தை அறிந்து கொள்ள மனிதர்களை நாடுவீர்கள் என்றால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆலோசனை சொல்லுவார்கள். நீங்கள் வேதாகமத்திற்கு செல்லவேண்டும். ''உண்மையாய்த் தொழுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்'' (யோவா.4:23,24). இவ்விதமாக தேவனை தொழுகொள்ளுகிறீர்களா? அப்படியில்லை என்றால் இன்றே ஆவியோடும் உண்மையோடும், அதாவது சத்தியத்தோடும் தொழுகொள்ளுங்கள். ஆவியோடு என்றால் குதிப்பதல்ல சிலர் தவறாக புரிந்து கொண்டு ஆடிப்பாடி தேவனை ஆராதிக்கிறார்கள். ஆராதனையானது தேவனுக்கு ஏறெடுக்கப்படும் ஸ்தோத்திரம். அதை கருத்தோடும் பயபக்தியோடும் ஏறெடுக்கவேண்டும். மனிதனுடைய யோசனையின்படியும் கருத்துக்களின்படியும் செய்வதல்ல. முதல்நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் எப்படி தேவனை ஆராதித்தார்களோ அந்தவிதமாக நாம் தேவனை ஆராதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தேவன் வீணான ஆராதனைகளுக்கு செவிகொடார். தேவன் சத்தியபரர் அவர் சத்தியத்தின்படியே நமக்கு செவிகொடுப்பார். அவர் தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை நித்திய நித்தியமாக தம்மோடு வைத்துக்கொள்ளும்படியான திட்டம்வைத்திருக்கிறார். அதற்காகத்தான் இப்பூமியிலே அவரால் நாம் தெரிந்துகொள்ளப்படுகிறோம். ''தேசத்தில் உண்மையானவர்கள் என்னோடே வாசம்பண்ணும்படி என் கண்கள் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கும்; உத்தமான வழியில் நடக்கிறவன் என்னைச் சேவிப்பான்'' (சங்.101:6). உண்மையானவர்கள் தேவனோடு வாசம்பண்ணமுடியும். உண்மையில்லாதவர்களை தேவன் புறம்பாக்கிப்போடுவார். பொதுவாக உறவினர்களும் தன் உடன்பிறந்தவர்களும் இரட்சிக்கப்படவேண்டும் என்பது நம்முடைய விருப்பமாக இருக்கலாம். ஆனால் தேவன் உண்மையானவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறார். அப்படிப்பட்டவர்களை நேசிக்கிறார். அப்படிப்பட்டவர்கள் தேவனை சேவிப்பார்கள். துன்மார்க்கன் தேவனை தேடான். தேவன் ஒருவர் இல்லை என்பதே அவனுடைய முடிவு. எனக்கு அன்பானவர்களே, நீங்கள் தேவனை உண்மையுள்ள இருதயத்திலிருந்து ஆராதிக்கிறீர்களா? ஒவ்வொருநாளும் அவருடைய சமூகத்தை

தேடுகிறீர்களா? அப்படிச் செய்வீர்கள் என்றால் கர்த்தர் உங்களோடிருந்து உங்களை பாதுகாத்து தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார். கபடுசெய்கிறவன் என் வீட்டுக்குள் இருப்பதில்லை; பொய்சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை என்கிறார். ஆம் கபடுசெய்கிறவர்கள் தேவனுடைய சபையில் இருக்கமாட்டார்கள். தேவன் சத்தியபரர் ஒருக்காலும் துன்மார்க்கத்திற்கு உடன்பட மாட்டார். பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். அது பொய்யர்களுக்காகவும், பொய்க்கு பிதாவாகிய பிசாசுக்காகவும் நியமிக்கப்பட்ட இடம். ஆகையால் பொய்பேசுகிறவன் அவருடைய கண்களுக்கு முன்பாக நிற்கமுடியாது.

இயேசு சொல்கிறார்: “ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப்பிதாவானவர் கனம்பண்ணுவார்” (யோவா.12:26). இன்றைக்கு நீங்கள் யாருக்கு ஊழியம் செய்கிறீர்கள்? மனிதர்களுக்கா அல்லது கிறிஸ்துவுக்கா? நீங்கள் கிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்தால் அவரைப்பின்பற்ற வேண்டும். அப்படி செய்வீர்கள் என்றால் அவர் ஊழியத்தை நிறைவேற்றி தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைப்போல நீங்கள் அவரோடு தேவசமுகத்தில் இருப்பீர்கள். அவருக்கு ஊழியம் செய்யும்போது பிதாவாகிய தேவன் உங்களை கனம்பண்ணுவார். மனிதர்களுக்கு ஊழியம் செய்தால் மாய்மாலக்காரர்களாக இருந்து கொண்டு மனிதனைப்பிரியப்படுத்தப்பார்ப்பீர்கள். அப்படிப்பட்டவர்கள் இருக்கும் வரை அந்த ஊழியம் இருக்கும் அதன்பின் ஒன்றுமில்லாமற்போம். எனக்கு அன்பானவர்களே! தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது. ஒன்று தேவனைப் பிரியப்படுத்துவான் அல்லது உலகத்தை பிரியப்படுத்துவான். நீங்கள் தேவனையா, உலகத்தையா எதைப்பிரியப்படுத்தப்போகிறீர்கள்? உலகமும் உலகத்திலுள்ளவைகளும் அழிந்துபோகும் என்பதை நீங்கள் நினைவில்கொள்ளவேண்டும். தேவசித்தம் செய்பவனோ என்றென்றும் நிலைத்திருப்பான். “தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று,



கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்” என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் 2கொரி.5:19,20 வசனங்கள். சத்தியபரராகிய அவரோடு ஒப்புரவாகுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி நேரம்**

**சத்தியபரராகிய தேவனை அறியாதவர்களுடைய நிலைமை என்னவாகும்?**

“தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜூவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும், ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும் போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்” என்று 2தெச.1:7–10 வசனங்களில் வாசிக்கிறோம். பரிசுத்தவேதாகமம் மிகத்தெளிவாக தேவனை அறியாதவர்களுடைய நிலைமையை விவரிக்கிறது. அவர்கள் அழிந்துபோகவேண்டும் என்பதற்காக அல்ல இந்த எச்சரிப்பை கேள்விப்பட்டு தேவனைஅறியாதவர்கள் மனந்திரும்வேண்டும் என்பதற்காகவே ஆவியானவர் இவைகளை வெளிப்படுத்தியிருக்கிறார். இந்த சத்தயபரராகிய தேவனை நீங்கள் அறியாதிருந்தால் அறிந்துகொண்டு, உங்களுடைய ஆத்துமா காக்கப்பட வேதாகம ஆலோசனைக்கு செவிகொடுங்கள்.

## 3. தேவன் அருளிய அப்பம்
## The bread, given by God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் உலகத்தின் பாவத்தை போக்கவந்த நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். தேவனாகிய கர்த்தர் மனிதனைசிருஷ்டித்து விட்டு அவனை அப்படியே விட்டுவிடாமல் அவனுடைய தேவைகளை அறிந்து எல்லாவற்றையும் பூமியிலே அவனுக்குக் கொடுத்தார். அவன் பிசாசின்

உபதேசத்திற்கு செவிகொடுத்து பாவத்தில் வீழ்ந்து போனசூழ்நிலையிலும் அவனை காக்கும்படியாக இரட்சகர் இயேசுவை இக்கடைசி நாட்களில் அனுப்பினார். ''வானத்திலிருந்திறங்கி, உலகத்துக்கு ஜீவனைக் கொடுக்கிற அப்பமே தேவன் அருளிய அப்பம்'' (யோவா.6:33). வானத்திலிருந்து இறங்கினவரும் வானத்துக்கு ஏறினவரும் இவர் ஒருவரே. இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இவர் உலகத்தின் பாவத்தை போக்கும் பலியாக தன்னுடைய ஜீவனையே ஒப்புக்கொடுத்தார். அவருடைய இரத்தத்தினாலே நமக்கு பாவமன்னிப்பு உண்டு. இயேசு சொல்கிறார்: ''நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம்; இந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே'' என்றார் (யோவா.6:51). இதைக் கேட்ட யூதர்கள்: இவன் தன்னுடைய மாம்சத்தை எப்படி நமக்குப் புசிக்கக் கொடுப்பான் என்று தங்களுக்குள்ளே வாக்குவாதம்பண்ணினார்கள். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிறதான நீங்களும் அப்படி நினைக்கக்கூடும். அன்பானவர்களே, நம்முடைய ஜீவனை காக்கும்படியாக வந்த ஜீவஅப்பமாகிய கிறிஸ்துவையும் அவருடைய இரத்தத்தையும் நாம் நினைவுகூரும்படியாக இப்படிச் செய்யவேண்டியவர்களாக இருக்கிறோம். என்னில் நிலைத்திருங்கள் அப்பொழுது நானும் உங்களில் நிலைத்திருப்பேன் என்கிறார். நாம் அவரில் நிலைத்திருக்கிறோம் என்பதற்கு என்ன அடையாளம் இருக்கிறது. ஆகையால் அவர் மேலும் சொல்லுகிறார். நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். நம்முடைய ஜீவன் காக்கப்படவேண்டுமானால் நாம் அவரில் நிலைத்திருந்து தேவன் அருளியஅப்பமாகிய அவரை நாம் நினைவுகூரவேண்டியவர்களாக இருக்கிறோம். ''ஜீவ அப்பம் நானே, என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்'' (யோவா.6:35). அப்பமல்லாததற்காக உங்கள் பிரயாசத்தை செலவழிப்பானேன். அவரிடத்தில் வருகிறவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக்கண்டடைவான். இந்தவிதமான ஆசீர்வாதம் கர்த்தருடைய சமூகத்தில் இருக்கிறது. மேலும் அவர் சொல்லும்போது: ''உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள். இதிலே புசிக்கிறவன் மரியாமலிக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பம் இதுவே'' (யோவா.6:49,50). நம்முடைய முற்பிதாக்களுக்கு தேவதூதர்கள் சாப்பிடும்



மன்னாவை 40 வருஷம் கொடுத்தார். அதை அவர்கள் புசித்தும் மரித்தார்கள். என்னை புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி என்று குறிப்பிடுகிறார், அப்படியென்றால் நாம் மரியாமல் நித்திய நித்தியமான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ளும்படியாக இயேசுகிறிஸ்து ஜீவஅப்பமாக இவ்வுலகத்திற்கு கடந்துவந்தார்.

அவர் இப்பூமியிலே வரும்போது நாம் எப்படிப்பட்டவர்களாக இருந்தோம்? பரிசுத்தவேதாகமம் நமக்குச் சொல்லுகிறது; ''அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்'' (எபே.2:1). தேவனுக்கு சத்துருக்களாகவும், அக்கிரமகிரியைக்காரராகவும், பாவத்தின்கீழ் காவல்பண்ணப்பட்டவர்களாகவும் இருந்ததோம். தேவனோ நம்மில் இரக்கமுள்ளவராக அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே நம்மை உயிர்ப்பித்தார். ''நித்தியவாசியும் பரிசுத்தர் என்கிற நாமமுள்ளவருமாகிய மகத்துவமும் உன்னதமுமானவர் சொல்லுகிறார்: உன்னதத்திலும் பரிசுத்த ஸ்தலத்திலும் வாசம்பண்ணுகிற நாம், பணிந்தவர்களின் ஆவியை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்கினவர்களின் இருதயத்தை உயிர்ப்பிக்கிறதற்கும், நொறுங்குண்டு பணிந்த ஆவியுள்ளவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறேன்'' என்று தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் ஏசாயா57:15. நீங்கள் தேவனுடைய பார்வையில் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்? எனக்கு எல்லாம் தெரியும் என்ற மேட்டிமை சிந்தையோடு இருக்கிறீர்களா? கர்த்தர் பணிந்தவர்களிடத்திலும் நொருங்குண்டுவர்களிடத்திலும் வாசம்பண்ணுகிறார். அப்படிப்பட்டவர்களை உயிர்ப்பிக்கிறார். அவர் நித்தியமானவர், உன்னதமானவர், அழிவில்லாதவர். அப்போஸ்தலர்கள் அவரைக்குறித்து சாட்சியிடும்போது; ''பிதாவானவர் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம். இயேசுவானவர், தேவனுடைய குமாரனென்று அறிக்கைபண்ணுகிறவன் எவனோ அவனில் தேவன் நிலைத்திருக்கிறார், அவனும் தேவனில் நிலைத்திருக்கிறான்'' (1யோவா.4:14,15). நீங்கள் ஜீவஅப்பமாகிய இயேசுவை உலகரட்சகர் என்று அறிக்கையிடுகிறீர்களா? என்னை அறிக்கைபண்ணுகிறவனை நானும் பரலோகத்திலிருக்கிற என்பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன், என்னை மறுதலிக்கிறவனை நானும் என்பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் என்கிறார். இந்த உலகம் கொடுக்கக்கூடாத சமாதானத்தையும் சந்தோஷத்தையும் அவர் ஒருவரே கொடுக்க வல்லவர். அவரில் நிலைத்திருங்கள் அப்பொழுது இந்தவிதமான

ஆசீர்வாதங்களைப் பெற்று அனுபவிக்கமுடியும். ‘‘தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்’’ (யோவா.3:16,17). இயேசுகிறிஸ்து மனிதனுடைய ஜீவனை அழிக்க அல்ல அவனை இரட்சிக்கவே தம்முடைய ஜீவனை கொடுத்தார். இது தேவனுடைய அநாதிதீர்மானம். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. ஆகையால் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனையே நம்முடைய பாவங்களைபோக்கும்படியாக சிலுவையிலே ஒப்புக்கொடுத்தார். அவர் சிந்திய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமகுக் உண்டாயிருக்கிறது. ஒருவேளை அவர் மரியாதிருப்பாரானால் நீங்களும் நானும் பாவத்தின் கீழ் அடிமைப்பட்டவர்களாகவே இருப்போம்.

நாம் ஏன் ஜீவஅப்பத்தை வாரந்தோறும் நினைவுகூருகிறோம்? இது இயேசுவின் கட்டளையாக இருக்கிறது. என்னைநினைவுகூரும்படியாக இதைச்செய்யுங்கள் என்றார். ‘‘அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக்கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக்கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது’’ என்றார் (மத்.26:26–28). ஒரு எஜமான் ஒரு காரித்தை சொன்னால் அதை அந்த வேலைக்காரன் செய்யாமலிருப்பானா? நிச்சயமாக செய்வான் அல்லவா! அப்படியானால் கர்த்தர் என்னைநினைவுகூரும்படியாக இதைச்செய்யுங்கள் என்று சொல்லியிருக்கும்போது நாம் அதை நினைவுகூரவேண்டியது அவசியமான ஒன்றல்லவா? சிலர் மாதம் ஒரு முறையும் சிலர் நினைக்கும்போதெல்லாம் அவரை நினைவுகூருகின்றோம் என்று சொல்லி அப்பத்திலும் திராசைரசத்திலும் பங்குகொள்ளுகின்றனர். ஆதி அப்போஸ்தலர்கள் வாரத்தின் முதல்நாளிலே அப்பம்பிட்கும்படி கூடிவந்திருக்கையில் என்று அப்போஸ்தலர் 20ம் அதிகாரத்தில் வாசிக்கின்றோம். அப்படியானால் அவர்கள் எதற்காக கூடிவந்தார்கள்? குறிப்பாக அப்பம்பிட்கும்படியாக, மற்ற எல்லாநாட்களிலும் கூடிவந்திருப்பார்கள். ஜெபிப்பதற்கும் அல்லது வேதாகமத்தை



தியானிப்பதற்கும் கூடிவந்திருப்பார்கள் என நாம் வசனத்தின் வாயிலாக அறிந்துகொள்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுலும் ‘‘நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றக்கொண்டேன்; என்னவெனில், கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்’’ (1கொரி.11:23–26). அப்பமும் இரசமும் இந்த நோக்கத்தோடு நாம் வாரந்தோறும் இடைவிடாமல் கைக்கொள்ளவேண்டிய நினைவுகூருதலான கட்டளையாயிருக்கிறது. நீங்கள் வேறே எந்தவகையிலும் கர்த்தரை நினைவுகூர்ந்தாலும் அதை அவர் ஏற்றுக்கொள்ளார். நினைவுகூருகிறவர்கள் கவனிக்கவேண்டிய சில காரியங்கள் இருக்கிறது. சபைக்கு செல்லக்கூடிய எல்லாரும் கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளலாம் என்று எண்ணுகிறார்கள் அது தவறு. கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிந்து திருமுழுக்கு பெற்றவர்கள் மட்டுமே அதில் பங்குகொள்ளவேண்டும். அவர்களே அதில் பங்குகொள்ள தகுதியுடையோர். வசனம் இவ்விதமாக போதிக்கிறது: ‘‘எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன். என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்’’ (1கொரி.11:28–31). கர்த்தருடைய பந்தியைக் குறித்த விஷயத்தில் நாம் பயத்தோடும் பக்தியோடும் கைக்கொள்ளவேண்டிய ஐக்கியத்தின் அடையாளமாக கொடுக்கப்பட்ட பந்தியாகும். ஒவ்வொருவரும் தங்களை தாங்களே சோதித்து பங்குபெறவேண்டிய பந்தி. சிலர் சபை கூடிவருதலைவிட்டுவிட்டு தாங்கள் நினைத்தபோது பந்தியை எடுக்க

விரும்புகின்றனர். இது தவிர்க்கப்படவேண்டிய காரியம். சபைகூடிவருதலைக்காட்டிலும் அப்படி என்னவேலை? ஆண்டவர் நம்மை மீட்கத்தக்கதாக தமது ஜீவனை ஒப்புக்கொடுத்ததை நினைவுகூரவேண்டிய நேரத்தில் அதைக் காட்டிலும் முக்கியமான ஒரு வேலை ஒருவருக்கு இருக்குமானால் அவர் கர்த்தருடைய பந்தியை அசட்டை செய்கிறார் என்று தான் அர்த்தமாகிறது. மோசேயின் நாட்களில் மூப்பர்களை அழைத்து: உங்கள் பிள்ளைகள் இந்த ஆராதனையின் கருத்து (இந்த பஸ்காவைக்குறித்து) என்னவென்று கேட்டால்: "இது கர்த்தருடைய பஸ்காவாகிய பலி; அவர் எகிப்தியரை அதம்பண்ணி, நம்முடைய வீடுகளைத் தப்பப்பண்ணினபோது, எகிப்திலிருந்த இஸ்ரவேல் புத்திரருடைய வீடுகளைக் கடந்துபோனார் என்று நீங்கள் சொல்லவேண்டும் என்றான். அப்பொழுது ஜனங்கள் தலைவணங்கி பணிந்துகொண்டார்கள்" என்று வாசிக்கிறோம். இன்றைக்கு இந்த விதமான கீழ்ப்படிதலோடு கர்த்தருடைய பந்தி பங்கெடுக்கப்படுகிறதா? பந்தியைக் குறித்து நம்முடைய பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுக்கிறோமா? அன்பானவர்களே தேவன் அருளியஅப்பத்தை வாரந்தோறும் நினைவுகூர்ந்து அவருடைய வருகைக்கு ஆயத்தமாகுங்கள்.

### கேள்வி நேரம்

**கர்த்தருடைய பந்தியின்போது அவருடைய சரீரத்திற்கு மாதிரியாக வைக்கப்பட்டுள்ள அப்பம் மாறுகிறதா?**

அப்பம் அப்பமாகவேதான் இருக்கும். அதில் எந்த விதமானமாற்றங்கள் ஏற்படுகிறதில்லை. சிலர் அது கர்த்தருடைய சரீரமாக மாறுகிறது, அதைபோல அவருடைய இரத்ததிற்கு மாதிரியாக வைக்கப்பட்டுள்ள திராட்சைரசம் இரத்தமாக மாறுகிறது என்கின்றனர். இது வேதாகமத்திற்கு விரோதமான போதனையாக இருக்கிறது. நமது ஆண்டவர் என்னை நினைவுகூரும்படியாக இதைச் செய்யுங்கள் என்றார். நாமும் அவருடைய மரணத்தை நினைவுகூரும்படியாக வாரந்தோறும் கைக்கொள்ளுகிறோம். புரிந்துகொள்ளாத சிலர் இயேசுவின் சரீரத்தை புசித்து இரத்தத்தை குடிக்கிறோம் என்கிறார்கள். இயேசு பஸ்காவை ஆயத்தம்பண்ணும்படி சீஷர்களுக்கு கற்பித்தார். அந்த சமயத்திலே அவர்கள் போஜம்பண்ணுகையில், அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். அப்பொழுது அது சரீரமாக மாறியதா இல்லையே அப்பமாகவேதான் இருந்தது. பஸ்கா அத்தோடு முடிகிறது என்பதையும் இது தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. ஏனெனில் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றவந்தேன் என்கிறார். இப்பொழுது பஸ்காவாக கிறிஸ்து நமக்காக



பலியாகியிருக்கிறார். அவரை நினைவுகூரும்படியாக கர்த்தருடைய பந்தியில் பங்குகொள்ளுங்கள்.

## 4. பயப்படாதிருங்கள்

## Be not afraid

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் சதா நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்று சொன்னவருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். பயம் ஒவ்வொருவரையும் ஆட்டிப்படைக்கிறது. நாம் பயப்படவேண்டியவருக்கு பயந்து நடந்தோமானால் தேவையில்லாத பயம் நம்மை ஒன்றும் செய்யமுடியாது. "ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. ஆதலால், பயப்படாதிருங்கள்: அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்" என்று ஆண்டவர் இயேசு மத்தேயு10:29–31 வசனங்களில் சொல்வதை வாசிக்கிறோம். ஆம், அன்பானவர்களே பிதாவின் சித்தமில்லாமல் ஒன்றும் நடைபெறாது. அவர் நம்மைக்குறித்து கரிசனையுள்ள தேவனாக இருக்கிறார். உலகத்தில் உள்ள எல்லாவற்றைப்பார்க்கிலும் மனிதனைத்தான் அவர் மிகவும் அதிகமாக நேசிக்கிறார். ஏனென்றால் அவனை தமது சாயலாக சிருஷ்டித்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். இவ்விருவரும் தேவனுக்கு பயந்து அவர் கட்டளையிட்ட பிரமாணத்தின்படியாக வாழும்போது மெய்யான ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக்கொள்ளமுடியும். தாவீது அரசன் கூறும்போது: "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும்; பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது" என்கிறார் (சங்.33:18,19). தேவன் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். தாவீது அரசனாக இருந்தபோதிலும் அவன் கர்த்தருக்குப் பயப்படுகிறவனாயிருந்தான் ஆகையால் தேவனாகிய கர்த்தர் அவனை உயர்த்தினார். அவனுடைய ராஜ்யபாரம் ஸ்திரப்பட்டது அவன்நிமித்தமாக அவனுடைய சந்ததியையும் தேவன் ஆசீர்வதித்தார். சவுல் தாவீதை கொல்லும்படியாக எவ்வளவோ முயற்சிசெய்தும் அவனை கொலைசெய்ய முடியவில்லை. தேவனாகிய கர்த்தர் அவனை தப்புவித்தார்.

அதே வேளையில் தாவீதுக்கு சவுலை கொல்லும்படியான தருணம் கிடைத்தது. அந்தத்தருணத்தை தாவீது பயன்படுத்தவில்லை, ஏனென்றால் சவுல் தேவனால் அபிஷேகம் செய்யப்பட்டவர் அவர்மேல் கைவைத்து குற்றமில்லாமற்போகிறவன் யார் என்று சொல்லி அவரை கொலைசெய்ய பயந்தான். இந்த எண்ணம், சகோதர சகோதரிகளுக்கு இருக்குமானால் தேவனுடைய மனுஷர்கள் மீது குற்றம் சுமத்தமாட்டார்கள். பிரியமானவர்களே, ஆண்டவர் நம்மைக் காண்கிறார், நம்மோடிருக்கிறார் என்ற உணர்வு நமக்கு எப்பொழுதும் இருக்கவேண்டும். ஒரு முறை இயேசு சீஷர்களிடத்தில் வரும்போது கடலின்மேல் நடந்து வந்தார். சீஷர்கள் அதைக்கண்டு ஆவேசம் என்று சொல்லி பயந்து அலறினார்கள். நான்தான், பயப்படாதிருங்கள் என்றார். ''பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்துபோகையில்; ஆண்டவரே, என்னை ரட்சியும் என்ற கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்'' (மத்.14:28–31). சிலவேளைகளில் புயல்போல எழும்பக்கூடிய பிரச்சனைகளைக் கண்டு பயந்து விசுவாசத்தில் குறைகிறோம். பேதுருவுக்கும் அவ்விதமான சூழ்நிலை, காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு பயந்து ஆண்டவரே ரட்சியும் என்றான். தன்னோடு கர்த்தர் இருக்கிறார், தம்மை அழைத்திருக்கிறார் அவர் பார்த்துக்கொள்வார் என்ற எண்ணமெல்லாம் போய்விட்டது அவன் கண்களில் பட்டது காற்று பலமாயிருக்கிறது என்பது மட்டுமே. நமக்கும் இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும்போது சதா நாட்களிலும் நம்மோடு இருக்கிறவரை மறந்துவிடுகிறோம். தேவனை தஞ்சமாக கொள்ளும்போது ''இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளைநோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்'' (சங்.91:5,6).

மேலும், ''கர்த்தர் என் வெளிச்சமும் என் இரட்சிப்புமானவர், யாருக்குப் பயப்படுவேன்? கர்த்தர் என் ஜீவனின் பெலனானவர், யாருக்கு அஞ்சுவேன்?'' (சங்.27:1). நாம் மனிதர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை. மனிதர்களுக்குப் பயப்படும்பயம் கண்ணியை வருவிக்கும் என வேதம் சொல்லுகிறது. ''தேவனை நம்பியிருக்கிறேன், நான் பயப்படேன்; மனுஷன் எனக்கு என்னசெய்வான்?'' (சங்.56:11). ஆகையால் தாவீது துணிந்துசென்று கோலியாத்தை ஜெயித்ததை நாம் வாசிக்கிறோம்.



இஸ்ரவேலர் எல்லாரும் அந்த மனுஷனைக் காணும்போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்துக்கு விலகி ஓடிப்போவார்கள். தாவீதோ; என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்ற நம்பிக்கையிலே ''கோலியாத்தை நோக்கி: நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார்; நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும் கொடுப்பேன்; அதனால் இஸ்ரவேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக்கூட்டமெல்லாம் அறிந்துகொள்ளும்; யுத்தம் கர்த்தருடையது; அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்'' (1சாமு.17:45–47). இந்த தாவீது தேவனை தன் நம்பிக்கையாக கொண்டிருந்தான். ஆகையால் இஸ்ரவேலை நிந்தித்த பெலிஸ்தனை கொன்று இஸ்ரவேலிலே இருந்த பயத்தைப் போக்கினான். சவுலுடைய மகன் யோனத்தானை நீங்கள் அறிவீர்கள் இந்த யோனத்தானும் தாவீதும் மிகவும் சிநேகமாக இருந்தார்கள். இந்த யோனத்தானுடைய மகன் மேவிபோசேத் தாவீதைப் பார்க்க வரும்போது மிகவும் பயந்துபோய் முகங்குப்புற விழுந்து வணங்கினான். ''தாவீது அவனைப் பார்த்து: நீ பயப்படாதே; உன் தகப்பனாகிய யோனத்தான் நிமித்தம் நான் நிச்சயமாய் உனக்குத் தயைசெய்து, உன் தகப்பனாகிய சவுலின் நிலங்களையெல்லாம் உனக்குத் திரும்பக்கொடுப்பேன்; நீ என் பந்தியில் நித்தம் அப்பம் புசிப்பாய் என்றான்'' (2சாமு.9:7). பொதுவாக பழைய பகையை எல்லலோரும் வைத்து வைப்பார்கள் தாவீதோ அப்படியல்ல; சவுல் தனக்கு செய்ததை நினைக்கவில்லை. தாவீது நினைத்திருப்பாரேயானால் மேவிபோசேத்துக்கு உதவியிருக்கமாட்டார். அவனுடைய தகப்பனுடைய சிநேகத்தை நினைவுகூர்ந்து இரண்டு காலும் முடமாயிருக்கிற மேவிபோசேத்துக்கு உதவி செய்ய தீர்மானித்து **பயப்படாதே** என்ற வார்த்தையை சொல்லி அவனை தைரியப்படுத்துவதை நாம் வாசிக்கிறோம். அன்பானவர்களே, நாம் எத்தனை பேருக்கு இந்த விதமான வார்த்தைகளை சொல்லி தைரியமூட்டுகிறோம்.

''கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப்பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார். கர்த்தர் நல்லவர் என்பதை

ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' (சங்.34:7,8). இச்செய்தியை கேட்கிறதான எனதருமை சகோதரனே சகோதரியே நீ அவருக்கு பயந்து வாழ்வாயானால் உன்னை சகல காரியங்களிலுமிருந்து விடுவிக்க கர்த்தர் வல்லவராயிருக்கிறார். இஸ்ரவேலை காக்கிற தேவன் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை. உங்கள் நம்பிக்கையை அவர் மீது வைத்து, கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள். கர்த்தருடைய பரிசுத்தவான்களே, அவருக்குப் பயந்திருங்கள்; அவருக்குப் பயந்தவர்களுக்குக் குறைவில்லை. சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது என தாவீது எழுதுகிறார். ''கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது'' (சங்.25:14). சிதேக்கியா ராஜா எரேமியா தீர்க்கதரிசியை அழைத்தனுப்பி: கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ என்று ராஜா அவனைத் தன் வீட்டிலே இரகசியமாய்க்கேட்டான். அதற்கு எரேமியா: உண்டு, பாபிலோன் ராஜாவின் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவீர் என்று சொன்னான். இந்த இரகசியத்தை எரேமியா சொன்னதினாலே என்னகிடைத்ததென்றால் எரேமியாவை பிடித்து காவற்சாலையின் முற்றத்திலே காக்கவும் ஒரு அப்பத்தை அவனுக்கு வாங்கிக்கொடுக்கவும் கட்டளையிட்டான். மேலும் ''இந்த நகரத்திலே தரித்திருக்கிறவன், பட்டயத்தாலும், பஞ்சத்தாலும், கொள்ளைநோயாலும் சாவான்; கல்தேயரிடத்துக்குப்புறப்பட்டுப்போகிறவனோ உயிரோடிருப்பான்; அவனுடைய பிராணன் அவனுக்குக் கிடைத்த கொள்ளையுடைமையைப்போலிருக்கும்; அவன் பிழைப்பானென்பதைக் கர்த்தர் உரைக்கிறார்''... என்றான் (எரே.38:1). அப்பொழுது அவர்கள் எரேமியாவைப் பிடித்து, அவனைக் காவற்சாலையின் முற்றத்திலிருந்து அம்மெலேகின் குமாரனாகிய மல்கியாவினுடைய துரவிலே போட்டார்கள்: எரேமியாவைக் கயிறுகளினால் அதிலே இறக்கிவிட்டார்கள்; அந்தத் துரவிலே தண்ணீர் இல்லாமல் உளையாயிருந்தது, அந்த உளையிலே எரேமியா அமிழ்ந்தினான். இதை அறிந்த எபெத்மெலேக் ராஜாவை நோக்கி என் ஆண்டவனே, இந்தப் புருஷர் எரேமியா தீர்க்கதரிசியைத் துரவிலே போட்டுச் செய்தது எல்லாம் தகாத செய்கையாயிருக்கிறது; அவன் இருக்கிற இடத்திலே பட்டினியினால் சாவானே, இனி நகரத்திலே அப்பமில்லை என்றான். இதைக் கேட்ட ராஜா பயந்துபோய் 30பேரை உன்னுடனே கூட்டிக்கொண்டுபோய் எரேமியா தீர்க்கதரிசி சாகாததற்குமுன்னே அவனைத் துரவிலிருந்து தூக்கிவிடு என்று கட்டளையிட்டான்.



அன்பானவர்களே தேவனுடைய மனுஷர்களிடத்தில் தேவரகசியம் இருக்கிறது. அவர் தம்முடைய ஊழியக்காரருக்கு அதை தெரிவிக்கிறார். இப்படியாக பரிசுத்தவேதாகமும் எழுதப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டிலே தீர்க்கதரிசிகளை பிடித்து தொந்தரவு செய்தார்கள் அதைப்போல புதிய ஏற்பாட்டு காலத்திலும் ''அப்போஸ்தலர்களை பிடித்து, பொதுவான சிறைச்சாலையிலே வைத்தார்கள். கர்த்தருடைய தூதன் இராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே கொண்டு வந்து: நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்த ஜீவவார்த்தைகள் எல்லாவற்றையும் ஜனங்களுக்குச் சொல்லுங்கள்'' என்றான் (அப்.5:18–20). தேவதூதன் அவர்களை விடுவித்தான் என்று அறிகிறோம். மேலும், பிரதான ஆசாரியன் நீங்கள் அந்த நாமத்தைக்குறித்துப் போதகம்பண்ணக்கூடாதென்று நாங்கள் உங்களுக்கு உறுதியாய்க் கட்டளையிடவில்லையா? அப்படியிருந்தும், இதோ, எருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பி, அந்த மனுஷனுடைய இரத்தப்பழியை எங்கள்மேல் சுமத்தவேண்டுமென்றிருக்கிறீர்கள் என்று சொன்னான். அதற்குப் பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும்; மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்ப்டிகிறதே அவசியமாயிருக்கிறது என்று தைரியமாக பேசஆரம்பித்தார்கள். தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் அவருடைய நாமத்திற்காகத் தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்டபடியினாலே, அவைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொண்டு உபத்திரவத்தை பயமில்லாமல் அனுபவித்தார்கள். கர்த்தர் தங்களோடு இருக்கிறார் என்ற அசையாத நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. இன்றைக்கு அது உங்களிடம் எந்த அளவிற்கு இருக்கிறது. அந்த நம்பிக்கையை வருவித்துக்கொள்ள தொடர்ந்து கர்த்தருக்குள் நிலைத்திருங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுக்காக யுத்தம் செய்வார். பயப்படாதிருங்கள்.

## கேள்வி நேரம்

**பயப்படுகிறவர்களைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது?**

''பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்'' (வெளி.21:8). பயத்தை கொடுக்கக்கூடியவன் பிசாசு. அவனையும் அவனுடைய ஆலோசனையும் தள்ளிப்போடுங்கள். உங்கள் நண்பர்கள் மூலமாகவும் அல்லது உறவினர்கள் மூலமாகவும் வரலாம்.

இயேசுவுக்கு ஒரு முறை பேதுரு ஆலோசனை சொல்லும்போது: அவரோ திரும்பிப் பேதுருவைப் பார்த்து: எனக்குப் பின்னாகப்போ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய் தேவனுக்கேற்றவைகளை சிந்தியாமல் மனுஷருக்கு ஏற்றவைகளை சிந்திக்கிறாய் என்றார். நீங்கள் தேவனுக்குப் பயப்படுவீர்கள் என்றால் நீங்கள் நடக்கவேண்டிய வழியை அவர் உங்களுக்குப் போதிப்பார். "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" (சங்.147:11). கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள். நீங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும் பங்கடைகிறதான நித்திய அழிவிலிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுங்கள்.

## 5. சுயாதீனம்
## Liberty

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் மரித்து உயிர்த்தெழுந்த இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். சுயாதீனம் - Liberty நாம் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டுள்ளோம். ஆகையால் நாம் அடிமைப்பட்டவர்கள் அல்ல. சத்தியத்தை அறியாதிருந்த நாட்களில் அவைகளுக்கு அடிமைப்பட்டவர்களாயிருந்தோம். "ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்" (கலா.5:1). இஸ்ரவேலர்கள் நாங்கள் எகிப்திலே இருந்திருந்தோமானால் நலமாயிருக்கும் என்று சொல்லியதைப்போல மறுபடியும் மறுபடியும் அடிமைத்தனத்தின் பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கு திரும்பும்படியாக விரும்புகின்றனர். தாங்கள் எந்த மார்க்கத்திலிருந்து வருகிறார்களோ அந்தமார்க்கத்தின் சில பிசுறுகள் அவர்களுடைய வாழ்க்கையில் ஒட்டிக்கொண்டே வந்து விடுகிறது. சுயாதீனத்திற்கு வந்தபிறகும் அவர்களுடைய வாழ்க்கையிலே அவைகள் காணப்படுமானால் எப்படியிருக்கும்? "இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க, அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க, பெலனற்றதும் வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி? நாட்களையும், மாதங்களையும்,



காலங்களையும், வருஷங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக்குறித்துப் பயந்திருக்கிறேன்" என்கிறார் பவுல் (கலா.4:9–11). உங்களுக்கு சத்தியத்தை சொன்ன ஒரு ஊழியன், நீங்கள் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீனத்தில் நிலைத்திருக்கவேண்டும் என்று சொல்லி எவ்வளவு முயற்சி எடுத்திருந்திருப்பான். நீங்கள் சுயாதீனத்தில் நிலைத்திருந்தால் அவன் எடுத்த முயற்சி பிரயோஜனமாக இருந்திருக்கும். இல்லை என்றால் பவுல் சொல்லியதைப்போல பிரயாசம் எல்லாம் வீணாய்ப்போயிருக்கும். "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலா.5:13). மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும் ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. இதனால் அன்பின் ஊழியம் பாதிக்கப்படுகிறது. மாம்சத்திற்குரியவர்கள் மாம்சத்திற்குரிய காரியங்களை சிந்திப்பார்கள். கிறிஸ்துவின் ஊழியம் அன்பின் ஊழியமாக இருக்கிறது. அது நியாயப்பிரமாணத்தின் படியானது அல்ல. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டவர்களல்ல. மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார் என அறிகிறோம். "கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" (கலா.5:6). கிரியை இல்லாத விசுவாசம் செத்தது என்று யாக்கோபு கூறுகிறார். ஒரு கிறிஸ்தவன் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைத்திருந்து கிரியை செய்யக்கடவன். "நீங்கள் நன்மைசெய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. சுயாதீனமுள்ளவர்களாயிருந்தும் உங்கள் சுயாதீனத்தைத் துர்க்குணத்திற்கு மூடலாகக் கொண்டிராமல், தேவனுக்கு அடிமைகளாயிருங்கள்" (1பேது.2:15,16). உலகத்திலே சத்தியத்தை அறியாத மக்கள் கோடானகோடிப்பேர் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் சத்தியத்தை அறிந்துகொள்ளவேண்டுமானால் நாம் நன்மை செய்கிறதிலே சோர்ந்துபோகாமலிருந்து கிரியை செய்யவேண்டும். சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்ட நாம் இந்த விஷயத்தில் தேவனுக்கு அடிமைகள். ஏனென்றால்

அவரே நம்மை பாவத்திலிருந்து மீட்டு கிருபையினாலே இரட்சித்தார். ஆகையால் பவுலைப்போல "நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தை தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல; நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்"என்கிறார் (1கொரி.10:32,33). இந்த விதமான சிந்தை இருக்குமானால் தேவனுடைய சித்தம் ஒவ்வொருநாளும் நிறைவேறும்.

ஒரு கிறிஸ்தவன் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறான்; எப்படியென்றால் "காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார். ஆகையால் இனி நீ அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால், கிறிஸ்துமூலமாய் தேவனுடைய சுதந்தரனாயுமிருக்கிறாய்" (கலா.4:5–7). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக இந்தபாக்கியத்தை பெற்றுக்கொள்கிறோம். அப்பா, பிதாவே என்று கூப்பிடும் தகுதி இயேசுகிறிஸ்துவுக்கு மட்டுமே இருந்தது ஏனெனில் அந்த தகுதியை இழந்தவர்களாக இருந்தோம். நாம் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியும்போது தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் ஆகையால் நாமும் புத்திரராயிருக்கிறபடியால் அப்பா, பிதாவே என்று கூப்பிடும் பாக்கியத்தை பெறுகிறோம். தேவன் தம்முடைய அநாதிதீர்மானத்தின்படியே நம்மை தம்முடைய ஒரேபேறான குமாரனுடைய மரணத்தின்மூலமாக மீட்டுக்கொண்டார். "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம்" என்று பவுல் கொலேசேயர் 1:12,13 வசனங்களில் எழுதுகிறார். அடிமைப்பட்டுகிடந்த நம்மை ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மை தகுதியாக்கும்படி பிசாசின் அதிகாரமாகிய இருளின் அதிகாரத்தினின்று விடுவித்து கிறிஸ்துவின் ராஜ்யமாகிய சபையில் அங்கமாக்கினார். குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. ஆகையால் "கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட



அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான். நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள்; மனுஷருக்கு அடிமைகளாகாதிருங்கள். சகோதரரே, அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே தேவனுக்கு முன்பாக நிலைத்திருக்கக்கடவன்" (1கொரி.7:22–24). நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்கள் அப்படியென்றால் தேவன் தம்முடைய சுய இரத்தத்தினாலே உங்களை சம்பாதித்துக்கொண்டார். ஆகையால் கிறிஸ்துவுக்கு அடிமைகளாகிய நாம் மனுஷர்களுக்கும் பாரம்பரிய பழக்கவழக்கங்களுக்கும் அடிமைப்படாதிருக்கவேண்டும்.

"என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன்சாயல் இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியைசெய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்" (யாக்.1:23–25). சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் சுயாதீனப்பிரமாணத்தின்படியாக ஜீவிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதின்படி நடக்காதவன் கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான் என்று யாக்கோபு கூறுகிறார். ஆம் வேதாகமம் ஒரு கண்ணாடி. அன்பானவர்களே! நம்முடைய தவறை அது சுட்டிக்காட்டுகிறது. நாம் இவ்வுலகத்திலே எப்படி ஜீவனம் பண்ணவேண்டும் என்று போதிக்கிறது. இதைக்குறித்து பவுல் கொரிந்துசபைக்கு எழுதும்போது: "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் நான் ஒன்றிற்கும் அடிமைப்படமாட்டேன். வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்" (1கொரி.6:12,13). இன்றைக்கு சிலர் எப்படி வாழ்ந்தால் என்ன, என்று சொல்லுகிறார்கள் ஒரு கிறிஸ்தவன் இப்படிதான் வாழ வேண்டும் என்ற ஒரு வரையறை இருக்கிறது. ஸ்திரீகளைப் பொறுத்தமட்டில் மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்காரிப்பு

உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். இப்பொழுது உள்ள ஸ்திரீகளில் அநேகரை நாம் அவ்விதமாக பார்க்கமுடியவில்லை இவ்வசனத்திற்கு விரோதமாக தங்களை அலங்கரித்துக்கொள்ளுகிறார்கள். இது கிறிஸ்தவத்திற்கே ஒவ்வாத ஒன்றாக இருக்கிறது. சகோதரர்களிலும் சிலர் இவ்விதமாக இருக்கிறார்கள். தங்களை வித்தியாசப்படுத்தி காண்பிக்கும்படியாக துணிந்து செயல்படுகிறார்கள். கிறிஸ்து அப்படி வந்திருப்பாரேயானால் எப்படியிருந்திருக்கும் அவர் அவ்விதமாக வராமல் நம்மைப்போல பாடுள்ள ஒரு மனுஷனாக அவதரித்தார் என வேதம் சொல்லுகிறது. பவுல் சொல்லும்போது எல்லாவற்றையும் அநுபவிக்க அதிகாரமுண்டு ஆனால் எல்லாம் தகுதியாயிராது என்பதை கவனியுங்கள். ஆனபடியால் அதற்குரிய தகுதிஉடையவர்களாக நடந்து கொள்ளவேண்டும். நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட நாம் தேவனை அறியாத மக்கள் மத்தியில் வாழும்போது, நம்முடைய நற்கிரியைகளை அவர்கள் பார்த்து இயேசுவை ஏற்றுக்கொள்ளவேண்டும் அல்லது தேவனை மகிமைப்படுத்தவேண்டும். ஆகையால் நம்முடைய நடக்கையும் பேச்சும் பரிசுத்தமுள்ளதாகவும், கிறிஸ்துவின் வாசனையை வெளிப்படுத்துகிறதாகவும் இருக்கவேண்டும். ''சுயாதீனப்பிரமாணத்தினாலே நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள். ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக்கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்குமுன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்'' (யாக்.2:12,13). எனவே காலத்தை பிரயோஜனப்படுத்துங்கள். சுயாதீனமுள்ளவர்களாகிய நாம் இந்த பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்கப்படுவோம். ''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்'' (யோவா.12:48). நம்மை நியாயந்தீர்க்கக்கூடியது கர்த்தருடைய வசனமே. எனக்கு தெரியாது என்று



ஒருவரும் சொல்லமுடியாது. ஏனெனில் கர்த்தருடைய வசனம் எங்கும் எல்லா இடங்களிலும் பரம்பி மகிமைப்பட்டுவருகிறது. சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்ட நாம் கிறிஸ்துவினுடையவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துபோகாமல் சுயாதீனப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிவோம்.

### கேள்வி நேரம்

**சுயாதீனப்பிரமாணத்தில் உள்ள ஒருநபரை நியாயப்பிரமாணம் கட்டுப்படுத்துமா?**

''இப்பொழுதோ நாம் பழமையான எழுத்தின்படியல்ல, புதுமையான ஆவியின்படி ஊழியஞ்செய்யத்தக்கதாக, நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதினின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்'' (ரோம.7:6). இப்படியிருக்கிறபடியால் புதிதும் ஜீவனுமான உடன்படிக்கைக்கு ஊழியம் செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதல்ல ஏனெனில் எழுத்து கொல்லும் ஆவியோ உயிர்ப்பிக்கிறது. இப்படியிருக்க, நியாயப்பிரமாணமில்லாமல் தேவநீதி வெளியாக்கப்பட்டிருக்கிறது; அதைக்குறித்து நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும் சாட்சியிடுகிறது. அது இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் தேவநீதியே; விசுவாசிக்கிற எவர்களுக்குள்ளும் எவர்கள்மேலும் அது பலிக்கும், வித்தியாசமே இல்லை. தேவன் கிறிஸ்துஇயேசுவினுடைய இரத்தத்தைப்பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத்தினார். இப்படியிருக்க, மேன்மைபாராட்டல் எங்கே? அது நீக்கப்பட்டதே. எந்தப் பிரமாணத்தினாலே? கிரியாப்பிரமாணத்தினாலேயா? அல்ல; விசவாசப்பிரமாணத்தினாலேயே என காண்கிறோம். இந்த விசுவாசப்பிரமாணமாகிய சுயாதீனப்பிரமாணமே ஒருவரை கட்டுப்படுத்துகிறது. ஏனெனில் விசுவாசத்தின் மூலமாக நீதிமான்களாக்கப்படுகிறார்கள்.

## 6.சிலுவை

## The Cross

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்த ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். சிலுவை – The Cross சிலுவை என்றாலே நம் ஞாபகத்திற்கு வருவது இயேசுசிலுவையில் மரித்த காட்சி தான். இந்த சிலுவை கிறிஸ்தவ மதத்தின் புனித சின்னமா? என்ற

கேள்வி அநேகருக்கு இருக்கிறது. அன்பானவர்களே இயேசு சிலுவையில் மரித்தார் என்பது உண்மை. ஆனால் அந்த சிலுவை, கிறிஸ்தவ மார்க்கத்தின் புனித சின்னமல்ல. அப்போஸ்தலனாகிய பேதுரு இது குறித்து தமது நிரூபத்தில் குறிப்பிடும்போது ''நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்'' (1பேது.2:24). ஆனபடியினாலே சிலுவையானது, நமது பாவத்தை சுமந்து தீர்க்க பயன்படுத்தப்பட்ட ஓர் ஆயுதமாகும். கொடிய குற்றவாளிகளை அந்நாட்களில் சிலுவை மரத்தில் தூக்கிபோடும் பழக்கம் இருந்தது. ''மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்'' (கலா.3:13). ஆக சாப சின்னமாக சிலுவை இருந்தது. உண்மைச் சம்பவம். அந்நாட்களிலே பிலாத்து இயேசுவை ஒப்புக்கொடுத்த பிரதான ஆசாரியர்களையும் அதிகாரிகளையும் ஜனங்களையும் கூடிவரச்செய்து, நீங்கள் சாட்டுகிற குற்றங்களில் ஒன்றையும் நான் இவனிடத்தில் காணவில்லை. ஏரோதினிடத்திற்கும் அனுப்பினேன்; அவரும் இவனிடத்தில் குற்றம் காணவில்லை; மரணத்துக்கேதுவாக இவன் ஒன்றும் செய்யவில்லையே. ஆனபடியால் இவனை தண்டித்து விடுதலையாக்குவேன் என்றான். பண்டிகைதோறும் அவர்களுக்கு ஒருவனை அவன் விடுதலையாக்குவது அவசியமாயிருந்தபடியால் அப்படிச் சொன்னான். ஜனங்களெல்லாரும் அதைக் கேட்டு: இவனை அகற்றும், பரபாசை எங்களுக்கு விடுதலையாக்கும் என்று சத்தமிட்டுக் கேட்டார்கள். அந்தப் பரபாசென்பவன் நகரத்தில் நடந்த ஒரு கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்தான். பிலாத்து இயேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியும் அவர்களிடத்தில் பேசினான். அவர்களோ: அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்து இயேசுவை அவர்கள் இஷ்டத்துக்கு ஒப்புக்கொடுத்தான். கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். உலகத்தாருடைய பாவத்தை அவர்மீது சுமத்தினபடியால் தேவன் அவரை அந்தவிதமான பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்து, மூன்றாம் நாளிலே உயிர்ப்பித்தார்.

முற்பிதாக்களின் காலத்திலே கொள்ளிவாய் சர்ப்பங்கள் ஜனங்களை கடித்தபடியால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள்



செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களைவிட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள். ''அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப்பார்த்தால் பிழைப்பான் என்றார்'' (எண்.21:8). அப்படியே செய்தான் அதை நோக்கிப்பார்த்துப் பிழைத்தார்கள். ''சர்ப்பமானது மோசேயினால் வனாந்தரத்திலே உயர்த்தப்பட்டதுபோல மனுஷகுமாரனும், தன்னை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, உயர்த்தப்படவேண்டும்'' (யோவா.3:14,15). ஆனடியினாலே, பாவத்தினாலே கடிபட்டவர்களை உயிர்ப்பிக்கும்படியாக அவர் சிலுவையின்மீது உயர்த்தப்பட்டார் என அறிகிறோம். நான் பாவம் செய்யவுமில்லை, பாவத்தினால் கடிபடவுமில்லை என்று சொல்லாதிருங்கள். எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானோம் என திருமறை போதிக்கிறது. நமக்குள் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

''சிலுவையைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது'' (1கொரி.1:18). இரட்சிக்கப்படுகிறவர்கள் என்றால் காக்கப்படுகிறவர்கள். அதாவது இந்த உபதேசத்தைக்கேட்டு பாவ வழியைவிட்டு மனந்திரும்பி, குணப்படுகிறவர்கள். சிலுவையைப்பற்றிய உபதேசம் உங்களுக்கு எப்படித்தோன்றுகிறது? அநேகருக்கு இது பைத்தியமாக தோன்றுகிறது, ஏனென்றால் இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கிப்போட்டான். ஆகையால் அவர்களால் சத்தியத்தைப் பார்க்கமுடியவில்லை. நோக்கிப்பார்த்தவர்கள் பிழைத்தார்கள் என்ற வசனத்தின்படி யாரெல்லாம் சிலுவையை நோக்கிப்பார்த்து அந்த உபதேசத்திற்கு செவிகொடுக்கிறார்களோ அவர்களுக்கு அது தேவபெலனாயிருக்கிறது. ''இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்'' (யோவா.8:31,32). இன்றைக்கு

சிலுவையைப்பற்றிய உபதேசம் மிக முக்கியமானது ஆனால் அதைத் தள்ளிவிட்டு, அநேகர் இந்த உபதேசத்தைப்பற்றி அறிய என்னஇருக்கிறது! வாரந்தோறும் சபைக்கு சென்றால் போதும் அல்லது காணிக்கை கொடுத்துவிட்டால் போதும். வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி யார்தான் நடக்கிறார்கள் என்ற தவறான எண்ணத்தோடு உபதேசத்திற்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். அன்பானவர்களே, கர்த்தர் இந்த வசனத்தில் மிகத்தெளிவாக தம்மை விசுவாசித்த யூதர்களை பார்த்துச் சொல்லுகிறார். என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷர்களாயிருப்பீர்கள். இந்த உபதேசம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடைய உபதேசமாக இருக்கிறது. பிதாவானவர் என்ன சொன்னாரோ அதையே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். அவர் சுயமாக ஒன்றும் செய்யவில்லை.

''கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல, கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்'' (2யோவா.9,10). இந்த வசனத்தின்படி உங்கள் வீட்டிற்கு வருகிறவர்கள் கிறிஸ்துவின் ஊழியர்களா? அவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தை கொண்டுவருகிறார்களா? என, நீங்கள் முதலாவது அறியவேண்டும். அப்படி ஒருவர் கொண்டுவராதபட்சத்தில் அவரை நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அப்படி மீறி நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களானால் மேலும் வசனம் சொல்லுகிறது அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாகிறான். மற்றவர்கள் செய்யும் பாவத்திற்கு உடன்படாதீர்கள். இந்த விஷயத்தில் யாருக்கும் நாம் அடிமைப்பட்டவர்கள் அல்ல சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் கிறிஸ்து உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள். சிலருக்கு கர்த்தருடைய உபதேசம் கடினமான ஒன்றாக தோன்றும் அப்போஸ்தலனாகிய பவுல் பேலிக்ஸ் உடன் சுவிசேஷத்தை பகிர்ந்துகொண்டிருக்கும்போது ''அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில், பேலிக்ஸ் பயமடைந்து: இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயமானபோது உன்னை அழைப்பிப்பேன் என்றான்'' (அப்.24:25). இப்படி பயப்பட்டு சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதோர் ஏராளம். இரட்சிப்பு கர்த்தருடையது கீழ்ப்படிவது நம்முடைய



கடமை. எனக்குச் சமயமானபோது பார்க்கலாம் என்றால் சமயம் நமக்காக வராது போனகாலம் திரும்பவராது. எனக்கு அன்பான தேவ ஜனமே, நீ கர்த்தருடைய வார்த்தையை ஏற்று இன்றே கீழ்ப்படி நாளை நம்முடையதல்ல. இதோ, இப்பொழுதே அநுக்கிரககாலம், இப்பொழுதே இரட்சணிய நாள். உங்கள் பாவங்கள் கழுவப்படும்படியாக சிலுவையின் உபதேசத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்து கீழ்ப்படியுங்கள்.

''ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' (மத்.16:24). சிலுவையைப் பற்றிய உபதேசம் பலவந்தமான ஒன்றல்ல. அநேகர் தவறான கருத்துடையவர்களாக இருக்கிறார்கள். கர்த்தர் இங்கே மிக தெளிவாக போதிக்கிறார் ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் என்கிறார். அப்படியென்றால், ஒருவனுக்கு முதலாவது விரும்பம் வேண்டும். விருப்பமில்லாமல் யாரும் எந்த ஒரு காரியத்தையும் செய்வது இல்லை. துணிவாங்கினாலும், வீடுகட்டினாலும், திருமணம்செய்தாலும் விருப்பத்தோடே செய்கிறார்கள் அதைப்போல என்னைப் பின்பற்றி வர விரும்பினால் என்று சொல்லுகிறார். அப்படிப்பட்டவர்கள் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, அப்படியென்றால் கழுத்திலே ஒரு சிலுவையை போட்டுக்கொண்டு என்று அர்த்தமல்ல, தனக்கு வரக்கூடிய பாடுகளை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் என்றார். என்னை பின்பற்றினால் பாடு வராது பிரச்சனை வராது என்று இயேசு எங்கும் சொல்லவில்லை. அநேகர் இயேசுவின் உபதேசத்தை தவறாக பயன்படுத்துவதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கடன் தொல்லையா? கர்த்தர் உங்கள் கடனை அடைப்பார், வியாதியா? உங்கள் வியாதிகளை எல்லாம் சிலுவையின்மேல் அணியடித்துவிட்டார் இனி வியாதியை காணாதிருப்பாய் என்று சொல்லி அநேகரை திருப்திபடுத்த முயற்சிக்கின்றனர். கர்த்தர் ஒருபோதும் இப்படிப்பட்ட காரியங்களை சொல்லி ஜனங்களை அழைக்கவில்லை. ''தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல என்றார்'' (மத்.10:38). நாம் அவரை பின்பற்றும்போது நம்முடைய பாடுகளோடுதான் அவரைப் பின்பற்றவேண்டும். மூக்கிருக்கும் வரை சளி இருக்கும் என்பார்கள். மனிதனாக பிறந்து விட்டாலே அவனவனுக்குரிய பாடுகளும் அவனோடு வருகிறது அதை ஒவ்வொருவரும் நிறைவேற்றியே ஆகவேண்டும். ''வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்கிறார் (மத்.11:28). இளைப்பாறுதல் என்றால், பாடுகளிலிருந்து இளைப்பாறுதலல்ல.

உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்கிறார். நம்முடைய பாவத்தை போக்கும் பலியாக சிலுவையில் இரத்தம் சிந்தினார். நம்முடைய கடன்களை போக்கவும் நம்முடைய பாடுகளை நீக்கவும் இயேசு சிலுவையில் மரிக்கவில்லை. அவருடைய தழும்புகளால் குணமானோம் என்றால் ஆத்துமாக்களில் இரட்சிப்பு. மாறாக, வியாதிகளில் இருந்து விடுதலை என்றல்ல. அப்போஸ்தலனாகிய பவுலை நீங்கள் அறிவீர்கள். புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் அதிகமான நிருபங்களை அவர் எழுதியுள்ளார். அவருக்கும் பிரச்சனை இருந்தது. அவர் சொல்வதை வாசிப்போம் ‘‘என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்’’ என்றார் (2கொரி.12:7–9). உங்களுக்கு வரக்கூடிய பாடுகளை சகித்தால் அவரோடு ஆளும்படியான பாக்கியத்தை பெறுவீர்கள்.

### கேள்வி நேரம்

**சிலுவை முக்கியமா அல்லது சிலுவையில் மரித்த இயேசு முக்கியமானவரா?**

இன்றைக்கு அநேகர் சிலுவையைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சிலுவையில் மரித்த இயேசுவை விட்டுவிட்டார்கள். சிலுவையைப் பார்க்கிலும் அதிலே மரித்த இயேசு முக்கியமானவராக இருக்கிறார். நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்பதை நினைவுகூரவேண்டும். ஆண்டவர் தம்முடைய ஜெபத்திலே இப்படியாக ஜெபிக்கிறார்: ‘‘ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்’’ (யோவா.17:3). மெய்த்தேவனையும் அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன். மற்றபடி நீங்கள் பற்றிக்கொண்டிருக்கும் சிலுவை முக்கியமானது அல்ல. அவர் அரையப்பட்டதுபோல இரண்டு கள்ளர்கள் சிலுவைகளில் அறையப்பட்டார்கள் என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும். ‘‘எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்’’ (1கொரி.1:30,31). சிலுவை சாபசின்னமாக



இருக்கிறது. சிலுவையில் மரித்த இயேசு நித்தியத்திற்கு போகும் வழியாக இருக்கிறார்.

## 7. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுகிறீர்கள்?

## What ye bind on earth?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுகிறீர்கள்? – What ye bind on earth? இந்த பூமியிலே நிரந்தரமாக யாரும் இருக்கப்போவதில்லை. இதை சிலர் அறிந்தும் அறியாதவர்கள் போல நிலையான கட்டடங்களையும், ஏராளமான சொத்துக்களையும் சேர்த்துவைக்கிறார்கள். பூமி நிலைமாறினாலும் அவர்கள் தங்களுடைய எண்ணங்களிலிருந்து மாறுவதில்லை. இயேசு சொல்கிறார்: ‘‘பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும்; பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்’’ (மத்.18:18). பூலோகத்திலே நலமான காரியங்களைச் செய்வீர்களென்றால் பரலோகத்திலும் உங்களுக்கு நலமான காரியங்களை கர்த்தர் செய்வார். பிறரை நீங்கள் மன்னிப்பீர்கள் என்றால், உங்களையும் பரம பிதா மன்னிப்பார். அதை விட்டு, வீட்டிற்கு மேல் வீட்டைக் கட்டிக்கொண்டு, பரலோகத்திலும் நமக்கு வீடு கட்டப்பட்டிருக்கும் என்று கனவுகாணாதீர்கள். பரலோகத்திலிருந்து இறங்கி வந்து உலகத்தின் பாவத்தைபோக்க தன்னையே தியாகபலியாக ஒப்புக்கொடுத்த ஆண்டவர் இயேசு பூலோகத்திலே எதைக்கட்டினார்? தேவனுடைய ராஜ்யமாகிய தம்முடைய சபையைக் கட்டினார். அவர் அதற்காக எருசலேமிலே பத்தாயிரம் ஏக்கர் நிலத்தை வாங்கவில்லை. மனுஷகுமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லை என்று வசனம் கூறுகிறது. பிறகு எதைக் கட்டினார். ஆநேக ஆத்துமாக்களைக் கொண்ட திருச்சபையைக் கட்டினார். முதன்முதலாக எருசலேமிலே அது ஆரம்பிக்கப்பட்டது. 3000 அங்கத்தினருடன் 12 அப்போஸ்தலர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அந்த சபை உலகளவில் வளர்ந்து இன்று அநேக பிராந்தியங்களைக்கொண்டு சுயஆட்சி உடைய சபையாக ஆங்காங்கே செயல்படுகிறது. கிறிஸ்து அதன் இரட்சகராக,

தலைவராக, சபையைக் கட்டுபவராக இருந்து செயல்படுகிறார். பேதுருவைப்பார்த்து சொல்லும்போது: “மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பேதுருவாய் இருக்கிறாய், இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை” (மத்.16:18). ஆண்டவருடைய சபையை பாதாளத்தின் வாசல்கள் மேற்கொள்வதில்லை. ஏனென்றால் அவரே அதன் இரட்சகர். பாதாளத்திற்கும் பரலோகத்திற்கும் திறவுகோள்களை உடையவராக இருக்கிறார். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட அப்படியே நிற்கும். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா! அப்படி விசுவாசிப்பீர்கள் என்றால் அவரோடு சேர்ந்து இப்பூமியில் அவருடைய சபையை முதலாவது கட்ட உங்களை ஒப்புக்கொடுங்கள். அவருடைய சபையைக் கட்டும்போது அவர் உங்களுடைய குடும்பங்களைக் கட்டுவார். நீங்களும் ஆசீர்வாதமாக இருப்பீர்கள்.

ஒரு ஐசுவரியவானைப்பற்றி கர்த்தர் சொல்லும்போது: அவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. “அப்பொழுது அவன்: நான் என்னசெய்வேன்? என் தானியங்களைச் சேர்த்துவைக்கிறதற்கு இடமில்லையே; நான் ஒன்று செய்வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்துவைத்து பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்துவைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக்கொண்டான்” (லூக்.12:17–19). இன்றைக்கு இந்த உவமையை குறித்து போதிக்கிற அநேகர் இந்த மனிதனைப்போல இடித்து பெரிதாகக் கட்டிக்கொண்டே போகிறார்கள். எவ்வளவுதூரம் கட்டுவார்களோ தெரியாது. வானத்தை தொடமுடிந்தால் கூட தொட்டுவிடுவார்கள். மனிதனுடைய ஆசைக்கு அளவே இல்லை. பழையஏற்பாட்டு புத்தகத்திலே முன்னோர்களைப்பற்றி வாசிக்கிறோம். நோவாவின் ஜலப்பிரளயத்திற்கு பின்பு ஜனங்கள் நாம் சாகாதபடி ஒரு பெரிய கோபுரத்தைக் கட்டி நமக்கு பேர் உண்டாகப்பண்ணுவோம் என்று சொல்லி பாபேல் கோபுரத்தைக் கட்டினார்கள். அதை தவிடு பொடியாக கர்த்தர் மாற்றிப்போட்டார். நாம் இறங்கிப்போய் , ஒருவர் பேசுவதை மற்றொருவர் அறியாதபடிக்கு, அங்கே அவர்கள் பாஷையைத் தாறுமாறாக்குவோம் என்றார். அப்படியே கர்த்தர் அவர்களை அவ்விடத்திலிருந்து பூமியின்மீதெங்கும் சிதறிப்போகப்பண்ணினார்; அப்போது நகரம் கட்டுகிறதை விட்டுவிட்டார்கள். இது அன்று மட்டுமல்ல இன்றும் நடக்கிறது.



அப்படி கர்த்தர் செய்தும் உலகப்பிரகாரமான விஷயத்தில் மக்கள் மனந்திரும்பவில்லை. ஆனால் நாம் பார்க்கிற வானமும் பூமியும் ஒரு நாள் அழிந்துபோம். அதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆகையால் பரலோகத்திலே கட்டுவோம்.

மேற்கண்ட வசனத்தின் பின்பகுதியில்: பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்கிறார். கட்டவிழ்த்தல் என்றால் என்ன? பிறருடைய கஷ்டத்தில் பங்குபெறவேண்டும். அதாவது மற்றவர்களுக்கு உதவி செய்யவேண்டும். குறிப்பாக மன்னிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுது நம்மையும் கர்த்தர் மன்னித்து ஏற்றுக்கொள்வார். ஜெபஆலயத்தில் ஆண்டவர் போதகம் பண்ணிக்கொண்டிருக்கும்போது ஒரு கூனியைக் கண்டார். “இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா என்றார்” (லூக்13:16). நாம் கூடிவருகிற திருச்சபைகளில் இப்படிப்பட்டவர்களை இன்றும் நாம் காண்கிறோம். ஆனால் நம்முடைய ஜெபம் எப்படிப்பட்டதாக இருக்கிறது என்றால், என்னுடைய குடும்பத்தின் தேவைகள் சந்திக்கப்படவேண்டும், என் பிள்ளைகளுக்கு நல்ல வேலைகிடைக்கவேண்டும். நல்ல ஆரோக்கியமான உடல்நலத்தோடு வாழவேண்டும். இப்படியே ஜெபம் பண்ணுகிறோம். மற்றவர்களை இங்கே நினைவுகூர்ந்தோமா? நம்மால் ஆன உதவிகளை நாம் அப்படிப்பட்டவர்களுக்கு செய்யும்போது நம்முடைய தேவைகளை கர்த்தர் சந்திப்பார். இப்படிச்செய்யும்போது பூமியிலே கட்டப்பட்டுள்ள கடன் காரர்களையும், வியாதியுள்ளோரையும், கட்டவிழ்க்கிறோம். அப்படிச்செய்யும்போது பரலோகத்தில் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும். அதாவது நம்முடைய நற்காரியங்கள் பெருகும் பாவக்கட்டுகள் குறையும். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து இதற்காகத்தான் பூமிக்கு கடந்துவந்தார். ஏசாயா புத்தகத்தில் இப்படியாக வாசிக்கிறோம். “கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம்பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும்,

துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்; அவர்கள் கர்த்தர் தம்முடைய மகிமைக்கென்று நாட்டின நீதியின் விருட்சங்களென்னப்படுவார்கள்'' (ஏசா.61:1–3) என்ற தீர்க்கதரிசனத்தின்படி அவர் கட்டுண்டவர்களை விடுவித்தார், சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்தார், துயரப்பட்டவர்களை சீர்படுத்தினார். அவரை திரளான ஜனங்கள் பற்றிக்கொண்டதை புதிய ஏற்பாட்டிலே நான்கு சுவிசேஷங்களிலும் வாசிக்கிறோம். மேலும் பேதுரு சொல்லும்போது: ''நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றிதிரிந்தார்'' (அப்.10:38). அநேகர் பாவக்கட்டுகளிலிருந்து விடுபட வேண்டுமானால் இயேசுவை அறிந்த ஒவ்வொருவரும் இயேசுவைப்போல சுற்றித்திரியவேண்டும். நாம் அவ்விதமாக செய்யும்போது தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாக இருப்போம்.

புதிய ஏற்பாட்டிலே இயேசுவுக்குப் பின் அப்போஸ்தலர்கள் எதைக்கட்டினார்கள். அவரிடத்தில் பயிற்சிபெற்ற அவர்கள் அநேக விஷயங்களில் அவரைப்போல மாற்றப்பட்டார்கள். ஆவியானவர் அவர்களை மாற்றினார் என்று சொல்லலாம். ''பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்'' என்றார் (அப்.1:8). அந்தப்படியாக சுவிசேஷத்தை அறிவிக்கச்சென்று சிலர் இரத்தசாட்சிகளாக மரித்தார்கள். அவர்கள் மூலமாக உலகத்தின் பல பாகத்திலும் சுவிசேஷமானது முதல் நூற்றாண்டு காலத்தில் அறிவிக்கப்பட்டது. அன்று அறிவிக்கப்பட்டதுபோல இன்று அறிவிக்கப்படுமானால் என்றோ உலகமுழுவதும் கிறிஸ்துவுக்குள்ளாக வந்திருக்கும். அந்த அளவிற்கு தீவிரமாக சுவிசேஷத்தை பிரசங்கித்தார்கள். சகலத்தையும் பொதுவாக வைத்து அநுபவித்தார்கள் ஒருவனும் தன்னுடையது என்று சொல்லவில்லை என்று வாசிக்கிறோம். அவர்கள் நினைத்திருந்தால் ஒவ்வொரு நாட்டிலும் கணக்கிலடங்கா சொத்துக்களை வாங்கி குவித்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் அந்தவிதமாக செய்யவில்லை. பட்டணங்கள்தோறும் சபைகளை ஏற்படுத்தி அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்தார்கள். இன்று ஒரு பிராந்திய சபை, மூப்பர்களை ஏற்படுத்த படாதபாடு படுகிறது. ஏனென்றால்



அந்த அளவுக்கு தகுதியுடையோரை பார்ப்பது அரிதாக இருக்கிறது. முதல் நூற்றாண்டு காலத்தில் மூப்பர்களை ஏற்படுத்தி இருப்பார்கள் என்றால் அவர்கள் எந்த அளவுக்கு சபைக்காக உழைத்திருப்பார்கள் என்று எண்ணிப்பாருங்கள். இப்படியாக நாமும் திருச்சபையை கட்டும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம். ''போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதை விளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான்'' (1கொரி.3:11–14). நீங்கள் எப்படிக்கட்டிக்கொண்டு இருக்கிறீர்கள். நீங்கள் கட்டுவது ஒரு நாள் சோதித்துப்பார்க்கப்படும். அப்பொழுது நீங்கள் கட்டினது எத்தன்மையுள்ளது என்பது வெளியாகும். கர்த்தருடைய சித்தத்தின்படியாக கட்டுங்கள், கட்டவிழ்த்துவிடுங்கள். அப்பொழுது பரத்தில் உங்களுடைய கணக்குப் பெருகும். மேலும் நாமே தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம் என்பதை ஒருக்காலும் மறந்துபோகக்கூடாது. நாம் அவருடைய ஆலயமாக இருந்தால் அந்த ஆலயத்தை எப்படிப் பராமரிக்கவேண்டும்! அந்த ஆலயத்தில் தீயகாரியங்கள் நடைபெறலாமா? விபசாரம் போன்ற பாவங்களுக்கு அந்த ஆலயத்தை பயன்படுத்தலாமா? எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே கர்த்தர் அநுதினமும் நம்மை அறிகிறவராயிருக்கிறார். நம்முடைய ஆண்டவர் சபைக்காக பாடுபட்டதைப்போல நாமும் சபைக்காக பாடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். சபையினுடைய தேவைகளை அறிந்து அதற்காக முழுமுயற்சியுடன் ஒவ்வொருவரும் ஒத்துழைப்புதாருங்கள். அப்படிச்செய்யும்போது ஒரு மெய்யான புதியஏற்பாட்டு சபையை உங்கள் வட்டாரத்தில், சமுதாயத்தில் கட்டமுடியும். அதற்குவேண்டிய அனைத்து உதவிகளையும் கர்த்தர் உங்களுக்குத் தந்தருளுவாராக!

## கேள்வி நேரம்

**புதிய ஏற்பாடு சபை எப்படி கட்டப்படுகிறது?**

சபை எப்படிக் கட்டப்படவேண்டும் என்பதைக் குறித்து பவுல் எபேசு சபைக்கு எழுதுவதின் மூலம் அறிகிறோம்: ''நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து, அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள்

என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்; அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டுவருகிறீர்கள்'' (எபே.2:19–22). இந்தப்படியாக திருச்சபையானது கட்டப்படவேண்டும். பரிசுத்தவேதாகமத்திலே இப்படியாக சபையானது கட்டப்பட்டது என வாசிக்கிறோம். உடனே அப்போஸ்தலர்களையும் தீர்க்கதரிசிகளையும் ஏற்படுத்தவேண்டும் என்பதல்ல. அவர்களால் சொல்லப்பட்ட போதனையின்படி மூப்பர்களைக் கொண்ட சபையை எழுப்ப பாடுபடவேண்டும். பட்டங்களை நாடுகிற சபைகள் தான் பெருகிக்கொண்டே போகிறது. ஒருவன் முதன்மையானவனாக இருக்கவிரும்பினால் அவன் பணிவிடைக்காரனாக இருக்கக்கடவன் என்ற கர்த்தருடைய வசனத்தை நினைவுகூருங்கள். பின்பு ஆண்டவருக்கு ஊழியம் செய்யுங்கள். கர்த்தர் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்க ஜெபிக்கிறோம்.

## 8. தம்மைத்தாமே தாழ்த்தினார்
## He humbled himself

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தம்மைத்தாமே தாழ்த்தின ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். தம்மைத்தாமே தாழ்த்தினார் – He humbled himself மேலான இடத்திலிருந்து யாரும் கீழான இடத்துக்கு வரவிரும்பமாட்டார்கள். அப்படியே அவர்களை கீழான இடத்திற்கு போகசொன்னாலும் போகமாட்டார்கள். நாம் காண்கின்ற வானத்தையும் பூமியையும் அண்ட சராசரங்களையும் உண்டாக்கிய ஆண்டவர் இயேசுகிறிஸ்து தாழ்மைகோலம் பூண்டு மனிதனை பாவத்திலிருந்து மீட்கும்படியாக இவ்வுலகத்திற்கு கடந்துவந்தார். ''சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை'' (யோவா.1:3). இன்றைக்கு இந்த உலகம் எப்படிவந்தது என்றால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை சொல்வார்கள். பரிசுத்த வேதாகமம் மிகத்தெளிவாக நமக்குப் போதிக்கிறது. அது தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. அந்த வசனங்கள் பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு எழுதப்பட்டவைகள். அநேக பஞ்சாங்க புத்தகங்களுக்கு அளவேஇல்லை. ஆனால் பரிசுத்த வேதாகமம் தனிச்சிறப்பு பெற்று விளங்குகிறது.



உலகத்திலே அதிகமாக விற்பனையாகும் ஒரே புத்தகம் பரிசுத்த வேதாகமமே. ''அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ அவரை அறியவில்லை'' (யோவா.1:10). நாட்டின் ஒரு பிரதான அதிகாரி வருகின்றாரென்றால் அந்நாடே அவரை வரவேற்க காத்திருக்கிறது. உலகத்தையே உண்டாக்கின கர்த்தர் மனிதகுமாரனாக பிறந்திருக்கிறார் என்றால் உலகமே அவரை காண துடித்திருக்கவேண்டுமல்லவா? ஆனால் உலகமோ அவரை அறியவில்லை. அவரைப் பார்த்து யூதர்கள்: இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா? இவன் தாய் மரியாள் என்பவள் அல்லவா? யாக்கோபு யோசே சீமோன் யூதா என்பவர்கள் இவனுக்குச் சகோதரர் அல்லவா? இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி அவரைக்குறித்து இடறலடைந்தார்கள். இப்படியாக உலகத்தில் அவர் இருந்தும் உலகம் அவரை அறியவில்லை. இன்றும் அறியாமல்தானிருக்கிறது. அவர் கடைசி கட்டளையை கொடுக்கும்போது இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். இதை ஒரு சிலர் ஏற்றுக்கொண்டு கர்த்தர் சதாகாலமும் தங்களோடு இருப்பதாக நம்புகின்றனர். அப்படிப்பட்டவர்கள் ஆபிரகாமின் குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் கருதப்படுகின்றனர். ''அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்'' (யோவா.1:12). அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறார்கள். உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கும் போது நாம் அவருடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுவது எத்தனை ஆசீர்வாதம்! அன்பானவர்களே, நாம் அவருடைய பிள்ளைகள் என்றால் உலகமக்கள் தங்களை இன்னாரின் பிள்ளைகள் என்று டைட்டில் போட்டுக்கொண்டு பெருமை பாராட்டுவதுபோல அல்ல. உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். ''அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்'' (மத்.20:28).

மேற்கண்ட வசனத்தின்படி நம்முடைய சிந்தனைகள் அமையவேண்டும். பவுல் பிலிப்பிய சபைக்கு எழுதுவதுபோல; ''ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல்,

மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக'' (பிலி.2:3,4). உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள் என்ற வசனத்திற்கேற்ப நாம் பிரமாணத்தை நிறைவேற்ற பிறருக்கானவைகளையும் நோக்கவேண்டும். தான்வயிறு நிறைந்தால் போதும் என்று இல்லாது நம்மைப்போல பாடுள்ள மனுஷர்களுக்கு நம்மை ஒளிக்காது. அவர்களுடைய தேவையை அறிந்து நாம் உதவி செய்யவேண்டும். அப்படிசெய்யும்போதே நாம் பிரமாணத்தை நிறைவேற்றுகிறோம். வாசிக்கும்போதும், மற்றவர்களுக்கு போதிக்கும்போதும் அல்ல அவைகளின்படி செய்யும்போது நிறைவேற்றுகிறோம். பவுல் சொல்லுகிறார்: ''நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்'' (1கொரி.9:19). அநேகருக்கு அதிகமாக சம்பாதித்து உலகபணக்காரராக வரவேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. அப்படியில்லாவிட்டாலும் அட்லீஸ்ட் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. ஆனால் பவுலுக்கோ அதிக ஜனங்களை ஆதாயம் செய்யவேண்டும் என்ற தனியாத தாகம் இருந்தது. ஆகையால் என்னைத்தானே அடிமையாக்குகிறேன் என்கிறார். தன்னைத்தான்தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்திற்கேற்ப பவுல் இங்கு தன்னைத் தாழ்த்துகிறதை நாம் வாசிக்கிறோம். கிறிஸ்துவும் நம் எல்லோரையும் மீட்கும்படியாக தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். ''அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்தஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்'' (தீத்.2:14). எந்த ஒரு மனிதனாலும் செய்யமுடியாத காரியத்தை கர்த்தர் செய்தார். பாருங்கள்: ஒன்றை முடித்திருப்போம் மற்றொன்று வந்துவிடும். என்னசெய்வது என்று அறியாது திகைத்துப்போய் நிற்போம். ஆனால் கர்த்தர் சகல அக்கிரமங்களினின்றும் நம்மை மீட்டுக்கொண்டுள்ளார். பாவம் படர் தாமரையைப்போல பரவக்கூடியது அவைகள் எல்லாவற்றையும் நம்மிலிருந்து எடுத்துப்போட்டு புதிய மனிதர்களாக அவருக்குரிய சொந்தஜனங்களாக



பக்திவைராக்கியமுள்ளவர்களாக கிறிஸ்துஇயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்படுகிறோம். ஆகையால் ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின. நற்கிரியைகளை செய்யும்படியாக தெரிந்துகொள்ளப்பட்டுள்ளோம். அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்.

இன்றைக்கு ஒவ்வொரு கிறிஸ்தவனும் இவ்விதமாக இருப்பார்களேயானால் உலகத்திலே சமாதானம் பிறக்கும் மக்கள் சந்தோஷமாக வாழ்வார்கள். ''நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; உலகம் அவரை அறியாதபடியினாலே நம்மையும் அறியவில்லை. பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம்'' (1யோவா.3:1,2). மனுஷகுமாரனாக வந்த இயேசுவை அறியாததினால் நம்மையும் உலகம் அறியவில்லை. நம்மையும் அந்த கண்ணோட்டத்திலே பார்க்கிறது. பிரியமானவர்களே, நாம் இவ்வுலகத்திலே ஜீவிக்கிற நாட்களிலே மற்றவர்கள் நம்மை கனம் பண்ணவேண்டும் என்ற நோக்கத்தோடு வாழாமல், அறியாமல் வாழ்கிற மக்கள் மத்தியில் தேவனை அறிந்த அல்லது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நாம் கூடுமானவரை அவர்களை ஆதாயம் செய்யும் படியாக ஆண்டவரைப்போல தாழ்மையாக சென்று அவர்களுக்குச் சுவிசேஷம் சொல்ல கடமைபட்டவர்களாக இருக்கிறோம். ''கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' (பிலி.2:5). அவர் எப்பொழுதும் பிதாவின் சித்தம் நிறைவேற்றுகிறவராக இருந்து பிசாசு கொண்டுவருகிறதான சகலத்தையும் எதிர்த்தார். அவரை தமக்கு கீழ்ப்படியப்பண்ணும்படி எவ்வளவோ தந்திரங்களை கையாண்டான். ஒன்றும் ஆண்டவரிடம் நடைபெறவில்லை. உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்ற தீர்க்கதரிசனத்தின்படி, கர்த்தர் அவன் தலையை நசுக்கினார். எப்படியென்றால் மரணத்துக்கு அதிகாரியான பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே ஜெயித்தார் என அறிகிறோம். எனக்கு அன்பானவர்களே, அவரோடு சேர்ந்து பிசாசின் தந்திரங்களோடு

எதிர்த்து நின்று போரிடுங்கள். அப்பொழுது அவனை ஜெயிப்பீர்கள்.

அநேகருக்கு கஷ்டங்கள் பாடுகள் என்றாலே பயம். அருமையானவர்களே நாம் அப்படியிருக்கலாகாது. பவுலை பாருங்கள்: ‘‘என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு’’ (பிலி.4:11–13) என்றார். பவுலைப்போல ஒவ்வொருவரும் மாறபிரயாசப்பட வேண்டும். ஆகையால்தான் அவர் என்னைப்போல் ஆகுங்கள் என்கிறார். ஒவ்வொருவரும் எல்லாவற்றிலும் வாழ்ந்திருக்க கற்றுக்கொள்ளவேண்டும். என்னால் அப்படியெல்லாம் வாழமுடியாது என்று அநேகர் சொல்வதைக்கேள்விப்பட்டிருப்பீர்கள். நாட்டின் பாதுகாப்பு படைக்கு ஆட்களை தேர்வுசெய்கிறார்கள். பின்பு தேர்வு செய்தவர்களுக்கு சிறப்பான பயிற்சி கொடுக்கிறார்கள். எதற்காக? அவர்களால் வரக்கூடிய போராட்டங்களை தாக்குப்பிடிக்கவேண்டும். அப்பொழுதே அவர்கள் நாட்டை காக்கமுடியும். இங்கே பவுல் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன் என்கிறார். அவருக்கு சிறப்பான பயிற்சி கர்த்தர் மூலமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. நீங்கள் ஒரு காரியத்தை நினைவுகூரவேண்டும். தேவன் எல்லாவற்றையும் நம்முடைய நன்மைக்காகவே அனுமதிப்பார் என்று நம்பவேண்டும். இந்த நம்பிக்கை உங்களில் உருவாகுமானால், நீங்கள் திடசாட்சியாக, கர்த்தருக்காக பக்திவைராக்கியமுள்ள கிறிஸ்தவர்களாக வாழமுடியும்.

ஆண்டவரைப் பற்றி நாம் தியானிக்கும்போது: ‘‘அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்’’ (பிலி.2:6,7). தம்மைத்தாமே வெறுமையாக்கி என்று சொல்லும்போது நான் ஒன்றுமில்லை என்று அவர் பிதாவுக்கு தம்மை ஒப்புவித்தார். ஆகையால்தான் ஜீவனை ஒப்புக்கொடுக்கும்போது பிதாவே என் ஆவியை உம்முடைய கரங்களில் ஒப்புக்கொடுக்கிறேன் என்றார். மகிமையின் தேவன் அவரை மூன்றாம் நாள் உயிரோடு எழுப்பினார். இன்று உங்களையும் என்னையும் தேவன் ஒரு இடத்திற்கு அனுப்புவாரேயானால் நாம் என்னசொல்லுவோம். தகப்பனே அந்த இடம் சரி இல்லாத இடம் வேறுஇடத்திற்கு என்னை அனுப்பும் என்று



சொல்லுவோம் அல்லது வேறு ஏதாவது ஒரு சாக்குபோக்கு சொல்லுவோம். ஆண்டவர் இயேசு அப்படி சொல்லியிருப்பாரானால் இன்று நீங்களும் நானும் எங்கே நிற்போம் பாவத்தில் பிசாசின் கரத்திலிருப்போம். அவன் கொல்லவும் அழிக்கவும் வருகிறான். ஆனால் நம்ஆண்டவர் இயேசுவே அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன் என்கிறார். தம்மை தாழ்த்தி வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷசாயலாய் வந்த இயேசுவின் வார்த்தைக்கு செவிகொடுத்து உங்களை தாழ்த்துங்கள் அப்பொழுது உயர்த்தப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

### கேள்வி நேரம்

**எவ்வளவு நாட்களுக்கு நம்மை தாழ்த்தவேண்டும்?**

தாழ்மை என்பது ஒரு குறிப்பிட்ட காலம் மட்டும் அல்ல. பொதுவாக நாம் எல்லோரும் ஒரு ஊருக்குப்போனால் எவ்வளவு நேரம் பயணம்செய்யவேண்டும் என்று கேட்போம். அதைப்போல நான் இந்த கோர்ஸ் படித்தால் எத்தனை நாட்களுக்கு பின்பு எனக்கு வேலைகிடைக்கும் என்று கேட்போம். தாழ்மை என்பது நாம் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படி அர்பணித்த நாள் முதல் துவங்கவேண்டிய ஒன்று. நம்முடைய ஆண்டவரும்: ‘‘மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்’’ (பிலி.2:8). கொஞ்சநாள் மட்டுமல்ல. மரணபரியந்தமும் தம்மைத்தாமே தாழ்த்தினார் என்று வாசிக்கிறோம். கூலக்கும்பிடு போடுகிறவர்களைப்பார்த்து இருப்பீர்கள். ஆளைக்கண்டால் ஒரு கும்பிடு ஆளைக்காணாவிட்டால் அவன் கிடக்கிறான் என்பார்கள். அப்படியில்லாது, தேவன் ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வோடு கீழ்ப்படிந்து நம்மை நாமே தாழ்த்தவேண்டும். மனிதர்களுக்காக வாழும்படியாக கிறிஸ்தவர்கள் தேர்வுசெய்யப்படவில்லை. கர்த்தருக்காக பக்திவைராக்கியமுள்ளவர்களாக வாழும்படியாக அழைக்கப்படுகிறோம். மரணபரியந்தமும் உங்களை தாழ்த்தி வாடாத ஜீவகீரிடத்தை பெறுங்கள்.

## 9. பரிசுத்தம்
## Holiness

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் பரிசுத்தமுள்ள ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். பரிசுத்தம் – Holiness அநேகவிஷயங்களில்

தூய்மையாக இருக்கவிரும்புகிறோம். நல்லதுதான். அவ்விதமாக இருக்கும்போது அநேகரிடத்திலே நற்சாட்சிபெறுவோம். வாழ்க்கையில் பேச்சும் நடக்கையும் சொல்லியபடி இருக்கவேண்டும். இதையே அநேகர் விரும்புகின்றனர். பரிசுத்த வேதாகமம் பரிசுத்தத்தைப் பற்றி பேசுகிறது: ''உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே'' **(1பேது.1:15,16).** பரிசுத்தத்திற்கு அழைத்ததேவன் பரிசுத்தராயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. ஆகையால் நம்முடைய நடக்கைமுழுவதும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். பொதுவாக பரிசுத்தத்தை வாஞ்சிக்கிறவர்கள் சொற்பபேராக இருக்கிறார்கள். அசுத்தத்தையே அநேகர் தேர்வு செய்கிறார்கள். அசுத்தத்திலே எப்படிவேண்டுமானாலும் இருந்துகொள்ளலாம் ஆனால் பரிசுத்தத்தில் அப்படியல்ல. இன்னும் பரிசுத்தமாகும்படியாக வேதம் நம்மை பரிசுத்தத்திற்கு நேராக வழிநடத்தும். ''நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்'' **(1பேது.2:9).** ஒரு விவசாயி தோட்டத்தில் பயிரிடுகிறபோது நல்ல பயிரில் விளைந்த தானியத்தை அடுத்த விவசாயத்திற்கென்று எடுத்து, பிரித்து, சுத்தப்படுத்தி வைக்கிறான். நம்முடைய தேவனும் அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர் என்ற வசனத்தின்படி கொஞ்ச ஜனங்களை தம்முடைய சந்ததியாகவும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாகவும் தெரிந்துகொள்கிறார். உங்களுக்கு ஆவிக்குரிய தாகம் இருக்கும் பட்சத்தில், பரிசுத்தத்தின் மேல் வாஞ்சை இருக்கும்வேளையில் உங்களை தேவன் தெரிந்துகொள்வார். அவர் எப்படியிருக்கிறாரோ அவ்விதமே நம்மையும் சுத்தப்படுத்துகிறார். ''இவ்விதமான சீரைப்பெற்ற ஜனம் பாக்கியமுள்ளது; கர்த்தரை தெய்வமாகக் கொண்டடிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது'' என்று தாவீது தமது சங்கீதம்144:15–ல் பாடியிருக்கிறார். நீங்கள் இந்த தேவனை உங்கள் தெய்வமாக கொண்டிருக்கிறீர்களா?

''இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; மோசே



தேவனுடைய வீட்டிலே எங்கும் உண்மையுள்ளவனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்'' **(எபி.3:1,2).** தேவன் நம்மை தெரிந்துகொண்டார் என்றால் உண்மையிலே அது ஒரு பெரிய ஆசீர்வாதம். ஆனால் அதற்கு நாம் முதலாவது பாத்திரவான்களாக இருக்கவேண்டும். கர்த்தர் இந்த விஷயத்திலே அவர் உண்மையுள்ளவராயிருந்தார். பிசாசு என்னைப் பணிந்துகொள் இந்த ராஜ்யம்முழுவதையும் உனக்குத் தருவேன் என்றான். கர்த்தர் அதற்கு கீழ்ப்படிந்து விடவில்லை. அப்பாலே போ சாத்தானே என்றார். உங்களுக்கு வரக்கூடிய சோதனைகளை வசனத்தின் மூலம் ஜெயிக்கவேண்டும். அப்பொழுதே நீங்கள் ஒரு மெய்யானகிறிஸ்தவராயிருக்க முடியும். இயேசுவை எல்லாவகையிலும் கவனித்துப்பாருங்கள். அவர் வஞ்சனை செய்யவில்லை ஒருவரையும் பயமுறுத்தவில்லை. வாய்திறவாத ஆட்டைப்போலிருந்தார்.

ஒவ்வொரு பரிசுத்தவானும் அவ்விதமாகவே இருக்கவேண்டும் என்று பேதுரு தமது புத்தகத்திலே எழுதுகிறார். ''தீமைக்கு தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத்தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து, ஆசீர்வதியுங்கள். ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின் தொடரக்கடவன்'' **(1பேது.3:9–11).** தேவன் நமக்கு நித்திய ஜீவனை கொடுப்பதாக சொல்லியிருக்கிறார். அதுவே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தமாக இருக்கிறது. அந்த ஜீவனை பெறக்கூடிய நாம் இங்கே இருக்குமளவும் ஆசீர்வதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். தீமைக்கு தீமையை செய்தால் இன்னும் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கிறவர்களாகயிருப்போம் சத்தியம் நமக்குள்ளிராது. ''ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்'' **(2பேது3:14).** வாரந்தோறும் எதற்காக நாம் சபையாககூடி தேவனை ஆராதிக்கிறோம்? பரிசுத்தத்தின்மேல் பரிசுத்தமடையவும், கறைதிறை ஒன்றுமில்லாமல் ஆயத்தமுள்ளவர்களாக இருக்கும்படியாக அவர் சந்நிதியில் கூடிவருகிறோம். அநேகர் அவர் சமூகத்திற்கு போனால்தான் ஜெபத்தைக் கேட்பாரா, இல்லையென்றால் என் ஜெபத்தைக் கேட்க மாட்டாரா என்று பிடிவாதமாக தங்களுக்கு தாங்களே போதகர்களாக மாறிக்கொண்டு தேவனுடைய

வார்த்தைகளை புறம்பாக்கிப் போடுகிறார்கள். எனக்கு அன்பானவர்களே, ஓர் ஊருக்கு செல்லும்போது எந்தஅளவு ஆயத்தமாக செல்கிறோம். துணிகளை எல்லாம் துவைத்து, அயன்பண்ணி எடுத்துக்கொண்டு, தேவைக்கு பணத்தை எடுத்துக்கொண்டு ஆயத்தமாக செல்கின்றோம். பரம ராஜ்யத்தை அடையும்படியாக அழைக்கப்பட்ட நாம் ஆவிக்குரிய பரிசுத்தத்தோடே தேவ சந்நிதியில் காணப்படவேண்டாமா? ஆயத்தமில்லாதவர்களை அழைத்துப்போகவில்லை என்பதை பத்து கன்னிகைகளைப்பற்றிய உவமையிலே நாம் அறிகிறோம். ஆயத்தமாக இருந்த அந்த புத்தியுள்ள ஐந்து கன்னிகைகள் மட்டுமே மணவாளனோடு பிரவேசித்தார்கள் பின்பு கதவும் அடைக்கப்பட்டது. இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்கிறோம்? ஆயத்தமுள்ளவர்களை அழைத்துசெல்வார். ஆயத்தம் என்றால் எல்லாவற்றிலும் ஆயத்தமாக இருக்கவேண்டும். ஏனென்றால் ‘‘யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே’’ (எபி.12:14). பரிசுத்தமாக இருந்தால்தான் கர்த்தரை நாம் முகமுகமாய் தரிசிக்கமுடியும். ராத்தலைப்பற்றிய உவமையிலே ஆண்டவர் குறிப்பிடும்போது;‘‘அப்பொழுது முந்தினவன் வந்து; ஆண்டவனே, உம்முடைய ராத்தலினால் பத்துராத்தல் ஆதாயம் கிடைத்தது என்றான். எஜமான் அவனை நோக்கி: நல்லது உத்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையுள்ளவனாயிருந்தபடியால் பத்துப் பட்டணங்களுக்கு அதிகாரியாயிரு என்றான்’’ (லூக்.19:16,17). கொஞ்சத்திலே உண்மையாயிருக்கும்போது அநேகத்தின்மேல் அதிகாரியாக உயர்த்தப்படுவோம். இந்த விதமான ஆசீர்வாதங்களை அநேகர் பெற்றுக்கொள்ள காத்திராமல் குறுக்குவழியை கையாளுகின்றனர். அதனுடைய முடிவு மரணம் என்று அறிகிறோம்.

அநேகர் பரிசுத்தத்தின் மேல் வாஞ்சையில்லாமலிருப்பதற்கு அநேக காரணங்களிருக்கிறது. ஒரு காரணத்தை நாம் எடுத்து தியானிபோம். இது கடைசி காலம்: கடைசி காலம் என்றதும் நம்முடைய ஞாபகத்திற்கு வருவது. லோத்தினுடைய நாட்கள் மற்றும் நோவாவின் நாட்கள்தான். ‘‘நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள், பெண்கொண்டு கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது. லோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோலவும் நடக்கும், ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும்



கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்’’ (லூக்.17:26–30). அன்பானவர்களே இது இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கிறது. ஜனங்கள் அறிவில்லாமல் தாங்கள் போகும் போக்கிலே போய்க்கொண்டிருக்கிறார்கள். சதா உலகமென்று வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். நியாயம் இல்லை, துன்மார்க்கன் செழித்துப்போகிறான். அக்கிரமம் அதிகமாகிறது இதனால் அநேகருடைய அன்பு தணிந்துபோகிறது. தேவபக்தியுள்ள ஜனங்களை பார்ப்பது அரிதாயிருக்கிறது. பக்தியுள்ளவர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் வெறும்வேஷம்போடுகிறார்கள். ஆகையால் நாம் யாரை நம்புவது என்ற கேள்வி எழும்புகிறது? இக் காலங்கள் கொடிய காலங்களாகவே இருக்கிறதை நாம் அறிகிறோம். ‘‘கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களானால், உங்களுக்குத் தீமைசெய்கிறவன் யார்?’’ (1பேது.3:12,13). இந்த பேதுருவின் ஆலோசனைப்படி நாம் வாழ்வோமானல் நமக்கு விரோதமாய் இருப்பவன் யார்? தேவன் நம்பட்சத்தில் இருப்பார். நீங்கள் தேவனுக்கு விரோதமாக செயல்படும்போது தேவன் உங்கள் மேல் எரிச்சல் உள்ளவராக மாறுகிறார். அப்படியே சோதோம் கொமோரா மக்கள் மேல் தேவ கோபம் மூண்டதினாலே கந்தகத்தை வருஷிக்கச்செய்து அவைகளை அழித்துப்போட்டார். தேவன் மனிதனை நேர்த்தியாக சிருஷ்டித்திருந்தார். ஆனால் அவர்களோ அனேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டார்கள். இன்றைக்கு அழிவுக்கு மூலகாரணம் யார் என்று நாம் தியானிக்கும்போது ஒன்று பிசாசு, மற்றொன்று கீழ்ப்படியாத மனிதர்கள். இவர்களுக்காகவே அக்கினிகடலை தேவன் வைத்துவைத்திருக்கிறார். இதிலிருந்து தப்பிக்கொள்ள நாம் செய்யவேண்டுவதென்ன?

மனந்திரும்பி பரிசுத்தமாகவேண்டும். இதோ, கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறேன் என்று திருவுளம் பற்றியிருக்கிறார். அவருடைய வருகைக்கு ஆயத்தமாக உங்களை ஆயத்தப்படுத்துங்கள். கிறிஸ்துவின் வருகையில் கிறிஸ்துஇயேசுவுக்குள் இருக்கிறவர்கள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படுவார்கள். மற்றவர்கள் கைவிடப்படுவார்கள். ‘‘ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக,

மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்'' என வாசிக்கிறோம் (1தெச.4:16,17). அவருடைய வருகையிலே உயிர்த்தெழுதலுக்கு, கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களுக்கு முதலிடம் பின்பு உயிரோடிருக்கிற நாமும் என்றால் அந்தவேளையிலே உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்கள் அதாவது கிறிஸ்துஇயேசுவுக்குள் இருப்பவர்கள். கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படலாம் ஆனால் நீங்கள் கிறிஸ்துஇயேசுவுக்குள் இருக்கிறார்களா? என்பதுதான் முக்கியம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின என்ற வசனத்தின் படி இருந்தால் பரிசுத்தமுள்ளவர்களாக இருப்பீர்கள். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களிலிருந்தும் நம்மை சுத்திகரிக்கும். ''இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக''(1தெச.3:13).

### கேள்வி நேரம்

**பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவன் மறுபடியும் பாவம் செய்தால் அவன் நிலை என்ன?**

யோவான் சொல்வது என்னவென்றால், ''என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே; நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்கிற பலியாயிருக்கிறார்'' (1யோவா2:1,2). முதலாவது பாவத்திலிருந்து கழுவப்பட்ட ஒரு கிறிஸ்தவன் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசும் ஆண்டவர் நமக்கு இருக்கிறார் என்று சொல்லி மறுபடியும், மறுபடியும் பழைநிலைமைக்கு திரும்பக்கூடாது. அப்படி அவன் திரும்புவானேயானால் இவ்வசனத்தை நினைக்கவேண்டும்; ''சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்'' (எபி.10:26,27). நியாயமான தீர்ப்பு உண்டு என்பதை



மறந்துபோகக்கூடாது. இந்த தீர்ப்பு சத்தியத்தின்படியானதாக இருக்கும். ''என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்'' என்று கர்த்தர் யோவா.12:48–ல் சொல்லியிருக்கிறார்.

## 10. சோர்ந்துபோகாதிருங்கள்
## Not to be fainted

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். சோர்ந்துபோகாதிருங்கள் Not to be fainted. சோர்வுகள் மனிதனுக்கு பல வழிகளில் வருகிறது. உடல் சோர்வு, உள்ளச்சோர்வு ஏற்பட்டு எதுவும் செய்ய இயலாமல் போய்விடுகிறான். முயற்சித்தும் கிடைக்காமற்போகும்போது சோர்வடைந்துவிடுகிறான். அதிலும் பிசாசு கொண்டுவருகிறதான சோதனையில் மனிதன் மிகவும் சோர்ந்துபோகிறான். ''நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்'' (மாற்.14:38). ஆவியும் மாம்சமும் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது. ஆகையால் நாம் விழித்திருந்து ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஜெபம் என்றாலே அநேகருக்கு தூக்கம்தான் வரும் நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஆவியில் விழித்திருந்து ஜெபிக்கக்கற்றுக் கொள்ளவேண்டும். சீஷர்களும்கூட ஆண்டவரோடு ஜெபிக்கும்படியாக சென்றிருந்தபோது, கெத்செமனே என்ற இடத்திலே அவர்களை உட்கார்ந்திருக்க சொல்லி, சற்று அப்புறம்போய் ஜெபம்பண்ணிவிட்டு அவர்களை பார்க்கும்போது அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு ஒரு மணிநேரம் விழித்திருக்கக்கூடாதா? என்றார். ஆண்டவரோடு கூட இருந்த சீஷர்களே இந்த விஷயத்தில் சோதனைக்கு உட்பட்டு நித்திரை செய்தனர். அநேக வேளைகளில் சரீர சோர்வினால் களைத்துப்போய் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறதில்லை. ஜெபத்தின் மூலமாக சோர்வுகளை அகற்றி விழித்திருந்து ஜெபிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும்.

நமது ஆண்டவரையும் பிசாசு சோதிக்கும்போது அவனை வசனத்தின் மூலமாக ஜெயித்ததை வாசிக்கிறோம். ''இயேசு பரிசுத்த

ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு, நாற்பதுநாள் பிசாசினால் சோதிக்கப்பட்டார். அந்த நாட்களில் அவர் ஒன்றும் புசியாதிருந்தார்; அந்த நாட்கள் முடிந்தபின்பு அவருக்குப் பசியுண்டாயிற்று. அப்பொழுது பிசாசு அவரை நோக்கி; நீர் தேவனுடைய குமாரனேயானால் இந்தக் கல் அப்பமாகும்படி சொல்லும் என்றான். அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். பின்பு பிசாசு அவரை உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் ஒரு நிமிஷத்திலே அவருக்குக் காண்பித்து; இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின் மகிமையையும் உமக்குத் தருவேன், இவைகள் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக் கொடுக்கிறேன். நீர் என்னைப் பணிந்து கொண்டால் எல்லாம் உம்முடையதாகும் என்று சொன்னான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; எனக்குப் பின்னாகப்போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைசெய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது அவன் அவரை எருசலேமுக்குக் கொண்டுபோய், தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி: நீர் தேவனுடைய குமாரனேயானால், இங்கேயிருந்து தாழக்குதியும். ஏனெனில், உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார் என்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும், எழுதியிருக்கிறது என்று சொன்னான். அதற்கு இயேசு: உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறதே என்றார். பிசாசானவன் சோதனையெல்லாம் முடித்தபின்பு, சிலகாலம் அவரை விட்டு விலகிப்போனான்'' (லூக்.4:1–13). ஆண்டவரையே சோதித்த பிசாசு மனிதனை விட்டு வைப்பானா? நமக்கு வரக்கூடிய சோதனைகளில் சோர்ந்துபோகாமல் அந்த சோதனைகளை கர்த்தருடைய வல்லமையுள்ள வார்த்தையினாலே ஜெயிக்கவேண்டும். சோதனைகளில் வெற்றிகொள்ள அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைப்போல ''இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள், ஸ்தோத்திரத்துடன் ஜெபத்தில் விழித்திருங்கள்'' கொலோ4:2. மேலும் ஆண்டவர் சொல்வதைக்கவனியுங்கள்: ''ஒரு பட்டணத்தில் ஒரு நியாயாதிபதி இருந்தான்; அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அந்தப்



பட்டணத்திலே ஒரு விதவையும் இருந்தாள்; அவள் அவனிடத்தில் போய்; எனக்கும் என் எதிராளிக்கும் இருக்கிற காரியத்தில் எனக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று விண்ணப்பம்பண்ணினான். வெகுநாள்வரைக்கும் அவனுக்கு மனதில்லாதிருந்தது. பின்பு அவன்: நான் தேவனுக்குப் பயப்படாமலும் மனுஷரை மதியாமலும் இருந்தும், இந்த விதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியினால், இவள் அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்யவேண்டும் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான் என்றார். பின்னும் கர்த்தர் அவர்களை நோக்கி: அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தித்துப்பாருங்கள். அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ? சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனுஷகுமாரன் வரும்போது பூமியிலே விசுவாசத்தைக் காண்பாரோ என்றார்'' (லூக்.18:2–8). ஆண்டவர் சொன்ன இந்த அநீதியுள்ள ஒரு நியாயாதிபதியே இரக்கம் செய்யும்படி இரங்கியிருக்கும்போது. சோர்ந்துபோகாமல் தம்மை நோக்கி இரவும் பகலும் வேண்டிக்கொள்ளுகிறவர்கள் விஷயத்தில் தேவன் இரங்கி உதவி செய்வார்.

''நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்'' என அப்போஸ்தலனாகிய பவுல் ரோம சபையாருக்கு எழுதுகிறார். இந்த மூன்றில் நீங்கள் நிலைத்திருந்தால் முற்பிதாக்களின் தேவன் நம்மோடிருந்து நம்மை கரம்பிடித்து வழிநடத்துவார். நம்பிக்கையிலே சந்தோஷம் வேண்டும், உபத்திரவத்திலே பொறுமைவேண்டும், ஜெபத்திலே உறுதிவேண்டும். இவைகள் நம்மில் இருக்கும்போது நாம் சோர்ந்துபோகாமல் போராடுவோம். ''சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்'' (ஏசா.40:29–31). ஆம் எனக்கு அன்பான தேவஜனமே அவர் சோர்ந்துபோகிறவனுக்கு பெலன் கொடுத்து சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். சிம்சோனை குறித்து நாம் படிக்கும்போது; பெலிஸ்தர்

அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள். அவன் தலைமயிர் சிரைக்கப்பட்டபின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று. அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு; கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி, சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கிநிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக்கொண்டு, என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள். “ஆபத்துக்காலத்திலே நீ சோர்ந்துபோவாயானால், உன் பெலன் குறுகினது” நீதி.24:10–ம் வசனத்தின் படி சிம்சோன் ஆபத்துக்காலத்திலே சோர்ந்துபோகாமல் கர்த்தரை நோக்கிவேண்டி பெலத்தைப் பெற்றுக்கொண்டான். “நீ காலாட்களோடே ஓடும்போதே உன்னை இளைக்கப்பண்ணினார்களானால், குதிரைகளோடே எப்படிச் சேர்ந்து ஓடுவாய்? சமாதானமுள்ள தேசத்திலேயே நீ அடைக்கலம் தேடினால், யோர்தான் பிரவாகித்து வரும்போது நீ என்னசெய்வாய்?” (ஏரே.12:5). கர்த்தர் நமக்கு சிறப்பான பயிற்சியை கொடுக்கிறார். நீ காலாட்களோடே ஓடுகிறாய், இதிலே நீ சோர்ந்துபோவாயானால் குதிரைகளோடே உன்னை ஓட வைக்கப்போகிறேன் நீ எப்படி சேர்ந்து ஓடுவாய் என கேட்கிறார். எனக்கு அன்பானவர்களே, கர்த்தர் நம்மை பெலப்படுத்த அறிந்திருக்கிறார். நீ சோர்ந்துபோகாமல் அவரைநோக்கி வேண்டிக்கொள்.

நாம் சோர்ந்துபோகாமல் நமக்காக வேண்டிக்கொள்வதோடுமட்டுமல்லாது எல்லாருக்காகவும் வேண்டிக்கொள்ளவேண்டும். பவுல் இது குறித்து குறிப்பிடும்போது; “நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள



யாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்” (1தீமோ.2:1–4). நாம் ஒவ்வொருநாளும் தேவனுடைய திருச்சித்தத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்புடையவர்களாகயிருக்கிறோம். ஆனபடியினாலே, எல்லாருக்காகவும் வேண்டுதல் செய்யவேண்டும். அத்தோடு “எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்” என்று எபேசு சபைக்கு எழுதுகிறார் எபே.6:18. எப்பாபிராவைக்குறித்து பார்க்கும்போது “உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்” என்று பவுல் கொலொசே சபையாருக்கு எழுதுகிறார் கொலொசேயர்4:12. நீங்கள் இந்தவிதமாக சபையாருக்காகவோ அல்லது உங்களுடைய நண்பர்களுக்காகவோ போராடி தேவனிடம் ஜெபித்திருக்கிறீர்களா? ஒவ்வொரு சபையும் தேவனுடைய சித்தத்தை புரிந்து அதின்படிசெயல்பட அவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியவர்களாகயிருக்கிறோம். “ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்” (எபி.12:1–3). கர்த்தர் அதற்கு வேண்டியபெலத்தை உங்களுக்கு கட்டளையிடுவாராக!

## கேள்வி நேரம்

**சோம்பலினால் என்னவுண்டாகும் என வேதம் போதிக்கிறது?**

“மிகுந்த சோம்பலினால் மேல்மச்சுப்பழுதாகும், கைகளின்

நெகிழ்வினாலே வீடு ஒழுக்காகும்'' பிர.10:18. வீடு ஒரு மனிதனுக்கு மிகவும் முக்கியமானது. அதை அவன் தன்னுடைய சோம்பலினால் பராமறிக்கவில்லை என்றால் அது பழுதாகும். நாளடைவிலே அது ஒழுக்காகும். மேலும் ''சோம்பல் தூங்கிவிழப்பண்ணும் அசதியானவன் பட்டினியாயிருப்பான் என நீதிமொழிகள் 19:15–ல் வாசிக்கிறோம். சோம்பலினால் செய்யவேண்டிய பணிகள் பாதிக்கப்படுகிறது. ''கதவு கீல்முளையில் ஆடுகிறபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான்'' நீதி.26:14. ''சோம்பேறி தன்கையைக் கலத்திலே வைத்து அதைத் தன் வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான்'' நீதி.26:14. சோம்பேறியின் கைகள் வேலைசெய்யச் சம்மதியாததினால், அவன் ஆசை அவனைக் கொல்லும் நீதி.21:25. ''சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்'' (நீதி.10:4). சோம்பேறியின் உயர்வு தாழ்வு அவன் கையிலேதானிருக்கிறது. சுறுசுறுப்பாக வேலைசெய்தால் அவன் வசதிபடைத்தவனாக மாறுவான். இல்லையேல் அவன் ஆசை அவனைக் கொல்லும். அதுமட்டுமல்ல, அவன் பரம ஏழையாக மாறி தேவனைத் தூஷிக்கிற நிலைமைக்கு தள்ளப்படுவான். சோம்பலினால் வரும் இவைகளை தள்ளி, உற்சாக மடைய உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 11. ராஜாதி ராஜா
## King of Kings

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ராஜாதி ராஜாவாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள். இந்த உலகத்திலே எத்தனையோ ராஜ்யங்கள் எழுந்தது, பல ராஜாக்கள் ஜனங்களை ஆண்டார்கள். ஆனால் அந்த ராஜ்யங்கள் எல்லாம் நிர்மூலமாகிவிட்டது. இன்றைக்கு அவைகள் வெறும் காட்சிப்பொருளாக மட்டுமே இருக்கிறது. அவைகளை சென்று பார்க்கிறவர்கள் இந்த ராஜா இந்த வருடத்தில் இந்த நாட்டை ஆண்டு இருக்கிறான் என்று தெரிந்து கொள்கிறார்கள். அன்பானவர்களே வேதம் சொல்கிறது, ''தேவன் பூமியனைத்திற்கும் ராஜா; கருத்துடனே அவரைப் போற்றிப்பாடுங்கள்'' (சங்.47:7). பூமி அனைத்திற்கும் ஒரே ராஜாதான் உண்டு, அவர் கர்த்தர். அவரை ராஜாவாக ஏற்றுக்கொண்ட ஜனம் பாக்கியமுள்ளது. நாம் அவரை துதித்துப் பாடவேண்டியவர்களாக இருக்கிறோம். இஸ்ரவேல் மக்களைப் பற்றி நீங்கள் அறிவீர்கள். தேவன் அவர்களுக்கு ராஜாவாக இருந்தும், மற்ற



ராஜாக்களைப் பார்த்து பயந்துபோய் அவர்களோடே யுத்தம் செய்ய தங்களுக்காக ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்பினர். ஆகையால் சாமுவேல் அவர்களைநோக்கி: ''அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும், நீங்கள் என்னை நோக்கி: அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள்மேல் ஆளவேண்டும் என்றீர்கள்'' (1சாமு.12:12). இந்தக் காரியம் கர்த்தருக்கு மிகவேதனையாயிருந்தது. ஆகையால் கர்த்தர் சாமுவேலைப் பார்த்து: ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள் என்றார். தேவன் அற்புதவிதமாக 40 வருஷம் வனாந்தரத்தில் வழிநடத்திவந்த சம்பவத்தை மறந்தார்கள். இன்றைக்கும் நாம் அநேக வேளைகளில் தேவன் செய்த நன்மைகளை மறந்துவிடுகிறோம். மனிதனை சிருஷ்டித்த கர்த்தர் அவனை மறக்கவில்லை. அவனை தாய் மறந்தாலும் நான் மறவேன் என்ற வசனத்தின்படியாக இன்றும்போஷித்து வருகிறார். கர்த்தர் தமது ஜனத்திற்காக யுத்தம் செய்கிறார். ''ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால்களைப்போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்'' (நீதி.21:1). ஒரு விவசாயி தன் நிலத்திற்கு நீர்ப்பாய்ச்சும்போது அவன் தன் இஷ்டப்படி தண்ணீரை திருப்பிவிடுகிறான். அதைப்போல ராஜாக்களுடைய இருதயம் கர்த்தர் கையில் இருப்பதால் அவர் இஷ்டப்படி செய்கிறார். ஒரு ராஜாவைத் தள்ளி மற்றொரு ராஜாவை ஏற்படுத்துகிறார்.

நேபுகாத்நேச்சாரின் காலத்திலே அவனுக்குப்பின் எழும்பப்போகிற ராஜ்யத்தைக்குறித்து '' அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்'' என்கிறார் (தானி.2:44). தேவன் அழியாத இந்த கிறிஸ்துவின் ராஜ்யத்தை அவர்மூலமாக புதிய ஏற்பாட்டுக்காலத்திலே நிறைவேற்றினார். ராஜா என்றால் எருசலேமிலே ஒரு அரண்மனை இருக்கவேண்டும், படைகள் இருக்கவேண்டும் அவர் சிம்மாசனத்தில் உட்கார்ந்து ஆட்சிசெய்யவேண்டும் அதுதான் ஆட்சி என்று அநேகர்

நினைத்துக்கொண்டு அவர் ஆட்சி இனிமேல் சம்பவிக்கக்கூடியதாக இருக்கிறது என்று கருதுகின்றனர். “இயேசு பிரதியுத்தரமாக: என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார்” (யோவா.18:36). இவ்வசனத்திலே ஆண்டவர் மிகதெளிவாக போதிக்கிறதை நாம் அறிகிறோம். அவருடைய ராஜ்யம் மாம்சபிரகாரமாக பூமியிலே இருக்குமானால் அவருடைய சீஷர்கள் அவரை சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்திருப்பார்களா? நாம் அறிவோம் இயேசுவின் மீது கைபோட்ட மல்குசுவை பேதுரு தன் பட்டயத்தை உறுவி உடனே காதற வெட்டினான். அப்படிப்பட்ட பேதுரு விட்டுவிடுவானா? என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்கிறார். அவருடைய ராஜ்யம் ஆவிக்குரியது. அவர் ராஜாவாக சபையின் தலைவராக, நமக்காக பிதாவிடம் பரிந்துபேசும் பிரதான ஆசாரியராக, இரட்சகராக இருந்து செயல்படுகிறார். அன்பானவர்களே, ஆண்டவர் இயேசு திருமுழுக்கு எடுத்த பின்பு “மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கிக்கத் தொடங்கினார்” (மத்.4:17). இது எந்த ராஜ்யத்தைக் குறித்து சொல்லுகிறார் என்றால் தாம் ஆரம்பிக்கப்போகிற சபையாகிய அவருடைய ராஜ்யத்தைக்குறித்துப்பேசுகிறார். இந்த ராஜ்யம் நித்தியத்திற்கு சொந்தமானது. பிதாவிடம் இந்த ராஜ்யத்தை ஒப்புக்கொடுக்கும்வரை அவர் ஆளுகைசெய்யவேண்டியது. “அன்றியும், அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்” (மாற்.9:1). இந்த வசனத்தில் இங்கே நிற்கிறவர்களில் சிலர் மரணத்தை காணுமுன் என்றால் அவர்கள் மரிக்கும்முன் தேவனுடைய ராஜ்யம் வந்துவிடும் என்று அர்த்தம் அவ்வளவு சமீபமாக இருந்தது ஆகையால் ஆண்டவர் இந்தவிதமாக சொல்லுகிறார். அந்தப்படியாக அப்போஸ்தலர் 2–ம் அதிகாரத்தில் அப்போஸ்தலர்களாலே அது பலமாக ஸ்தாபிக்கப்பட்டதை அறிகிறோம். அந்த ராஜ்யம் இன்றும் பல இடங்களில் செயல்படுகிறது. அது சபையாக செயல்படுகிறது. இந்த ராஜ்யமாகிய சபையிலே புதியஏற்பாட்டின் சட்டப்புத்தகம் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் இவர்கள் பழைஏற்பாட்டு புத்தகத்தை ஏற்கமாட்டார்கள் என்பதல்ல. இரண்டும் சேர்ந்த வேதாகமத்தையே வைத்திருக்கின்றனர். பழையஏற்பாடு நம் முற்பிதாக்களுக்கு கொடுக்கப்பட்டது. புதிய ஏற்பாடு நமக்கும் நமக்குப்பின்வரும் சந்ததிக்குய



கொடுக்கப்பட்டது. பழையஏற்பாடு மேசியாவின் வருகையைக்குறித்துபோதிக்கிறது மற்றும் அவருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதைக்குறித்துப்போதிக்கிறது. இவை இரண்டும் புதியஏற்பாட்டில் நிறைவேறுகிறது. ஆக, நாம் இன்னும் அவைகளை எதிர்பார்க்கவேண்டிய அவசியம் இருக்கிறதா? இல்லையே!

மேலும் நாம் வாசிக்கிறோம், “யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு, அவரைப் பணிந்துகொள்ள வந்தோம் என்றார்கள். ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடுகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான். அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்: யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரவேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று, தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்” (மத்.2:2–6). மீகா தீர்க்கதரிசி சொல்லிய வேதவசனம் இங்கே நிறைவேறுகிறதை அறிகிறோம். இது ஏரோதுக்கு மிக கலக்கமாக இருந்தது நமக்கு விரோதமாக ஒரு இராஜ்யம் எழும்பி விட்டதா, என்று ஆச்சரியப்பட்டு, அதற்கு விரோதமாக எழும்பி அநேக குழந்தைகளை கொன்று குவித்தான். தீர்க்கதரிசனத்தில் சொல்லப்பட்டபடியாக இயேசுவானவர் பிறந்து ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவகிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார். இவர் உலகப்பிரகாரமான ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்த வரவில்லை. பிதாவின் திருசித்தத்தை நிறைவேற்றவே பூமிக்கு வந்தார். அவர் ஒரு முறை ஒலிவமலையென்னப்பட்ட மலையின் அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்குச் சமீபித்தபோது, திரளான கூட்டமாகிய சீஷரெல்லாரும் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங் குறித்துச் சந்தோஷப்பட்டு, “கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரலோகத்திலே சமாதானமும் உன்னதத்திலே மகிமையும் உண்டாவதாக என்று மிகுந்த சத்தத்தோடே தேவனைப் புகழ்ந்தார்கள்” (லூக்.19:38). அவரை ராஜா என்று சொல்லி மகிமைப்படுத்தினார்கள். பரிசேயரில் சிலர் போதகரே, உம்முடைய சீஷரை அதட்டும் என்றார்கள். இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். உங்களையும் என்னையும் ஆவிக்குரிய சர்வத்துக்கும் ராஜாவாக இருந்து ஆட்கொண்டுவருகிறார்.

அவருடைய ஆளுகைக்குள்ளாக இருப்பாயானால் அவருக்கு செவிகொடு. அந்தநாட்களில் இருந்த சீஷர்கள் இயேசுவின் அற்புதங்களை கண்ணாரக்கண்டவர்கள் அவர்கள் இயேசுவை ராஜாவாக ஏற்றுக்கொண்டு இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். இதையெல்லாம் பார்த்து பயந்துபோன ''பிலாத்து அவரை நோக்கி: நீ யுதருடைய ராஜாவா என்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரதியுத்தரமாக: நீ சொல்லுகிறபடிதான் என்றார்'' (லூக்.23:3).

அன்பானவர்களே அவருடைய ஆளுகையின் கீழ் நீங்கள் இருக்கிறீர்களா? அவர் சர்வத்தையும் ஆளுகிறார். அவருக்கு முன்பாக எதிர்த்துநிற்பவன் யார்? அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்று அப்போஸ்தலர்களைப்பார்த்து சொன்னார். அந்தப்படியாக அவர்கள் காத்திருந்தனர். முதல் முதல் அந்தநாட்களிலே எருசலேம் பட்டணத்தில் அவருடைய ராஜ்யமானது ஆரம்பிக்கப்பட்டது. இன்றுவரை அவருடைய ராஜ்யமாகிய சபையில் அநேகர் சேர்க்கப்பட்டு வருகின்றனர். கர்த்தர் இரட்சிக்கப் படுகிறவர்களை அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவருகிறார். அந்த ராஜ்யம் அழியாதது, நித்தியமானது, வாக்குத்தத்தம் செய்யப்பட்டது. அதற்கு கிறிஸ்து ராஜாதி ராஜாவாக இருக்கிறார். அவர் ஏற்படுத்தியுள்ள இந்த ராஜ்யமாகிய சபையிலே மனிதத்தலைவர்கள் இருக்க முடியாது அப்படி ஒரு சபையிலே இருப்பார்களேயானால் அது அவரால் ஏற்படுத்தப்பட்ட ராஜ்யமல்ல. அது மனிதர்களால் ஏற்படுத்தப்பட்டது அங்கே மனிதர்கள் ஆட்சிசெய்வார்கள். உலகப்பிரகாரமாக சண்டைகளும், சச்சரவுகளும் அங்கே காணப்படும். ஆனால், தேவன் ஏற்படுத்திய ராஜ்யத்திலே அவைகளை நீங்கள் பார்க்கமுடியாது. ஏனென்றால் அது கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட சபை அல்லது ராஜ்யம். அதை அடையாளம் கண்டு கொண்டு இரட்சிக்கப்பட பிரயாசம் எடுங்கள். ''கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார்; பூமி பூரிப்பாகி, திரளான தீவுகள் மகிழக்கடவது'' என்ற சங்.97:1 –ன் படி நாம் மகிழ்ந்து களிகூருவோம். அவருடைய ஆட்சியின் கீழ் இருப்பீர்கள் என்றால் ஒரு குறைவுமிருக்காது. நல்ல ஆட்சி வந்தவுடன் ஜனங்கள் மகிழ்ந்து களிகூருகிறார்கள். காரணம் ஏன்? அவர்கள் எதிர்பார்த்த



ஆட்சிவந்துவிட்டது. அதைப்போல இயேசுவின் பிறப்பை எதிர்பார்த்திருந்த சிமியோன். இயேசு பிறந்தபோது, அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு, தேவனை ஸ்தோத்திரித்து: ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும், உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும் , தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான். அன்பர்களே, அவரை உங்கள் ராஜாதி ராஜாவாக ஏற்றுக்கொண்டு ஆவிக்குரிய ராஜ்யத்தில் நிலைத்திருங்கள்.

### கேள்வி நேரம்

**ஆயிரவருட அரசாட்சி உண்டா?**

இன்றைக்கு கிறிஸ்தவத்திலே ஆயிரவருட அரசாட்சிபற்றி தவறான போதகர்களால் உபதேசிக்கப்பட்டு ஜனங்களில் அநேகர் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் காரியம். கிறிஸ்து தீர்க்கதரிசிகள் மூலமாக சொல்லப்பட்ட வாக்குதத்தத்தின்படி இப்போதும் நம்மை ராஜாவாக இருந்து சபை மூலமாக ஆண்டுவருகிறார். அவருடைய ராஜ்யம் ஆவிக்குரியது என்று நாம் செய்தியில் தியானித்தோம். வெளிப்படுத்தல் 20:6–ல் சொல்லப்பட்ட வசனத்தைவைத்து ஆயிரம் வருஷம் அவரோடு அரசாளுவோம் பூமியெங்கும் அப்போது அவருடைய ஆளுகையானது இருக்கும் என்று தவறாக புரிந்துகொண்டிருக்கிறார்கள். இந்த புத்தகத்தைப்பொருத்தவரையில் நடந்தது, நடந்துகொண்டிருப்பது, நடக்கப்போவது இந்த மூன்று காரியங்களைக்குறித்துப்பேசுகிறது. கிறிஸ்துவானவர் இப்போது ஆவிக்குரிய ராஜ்யத்தின் ராஜாவாகி வீற்றிருக்கிறார். மேலும், அவருடைய ராஜ்யம் பூமிக்குரியதல்ல. இனி நாம் எதிர் பார்ப்பதெல்லாம் அவருடைய இரண்டாம் வருகை. அதைக்குறித்து மட்டுமே வேதத்தில் படிக்கிறோம். அவருடைய வருகையில் நாம் காண்கிற வானமும் பூமியும் அழிந்துபோம். நாம் அவரோடு எடுத்துக்கொள்ளப்படுவோம். நீங்கள் அவருடைய வருகைக்கு ஆயத்தமா? உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 12. ஒரே தேவன்
## One God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்தமான நாமத்தில்

வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். நமக்கு ஒரே ஒரு தேவன் மட்டுமே உண்டு. அவர் வானத்திற்கும் பூமிக்கும் மேலானவர். அவர் வல்லமை படைத்தவர் அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அந்த தேவனை நீங்கள் அறிந்து இருக்கிறீர்களா? அப்படி அறிவில்லை என்றால் இச்செய்தியை தொடர்ந்து கேளுங்கள். தேவன் தாம் தெரிந்துகொண்ட மக்களுக்கு அதாவது முற்பிதாக்களுக்கு கட்டளைகளைக் கொடுத்தார். அந்த கட்டளைகள் பத்துக்கற்பனைகளை கொண்டதாக இருந்தது. அதில் முதலாம் கற்பனை என்னவென்றால் “என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்” என்பதே யாத்.20:3. நாம் பார்க்கிற வானத்திலும் பூமியிலும் இந்த கற்பனையை மோசேயினிடத்தில் கொடுத்த தேவனைத் தவிர வேறே தேவர்கள் இல்லை. ஆனால் மனிதர்கள் அநேக தேவர்களையும் தேவிகளையும் உண்டாக்கிக்கொண்டார்கள். இது தேவனுக்கு விரோதமான ஒரு பெரிய பாவமாகும். தன்னை சிருஷ்டித்த ஒருவர் இருக்கும்போது சிருஷ்டிப்புக்களை இன்றைய மானிடர் ஆராதித்துவருகிறார்கள். ஒருமுறை வேதபாரகரில் ஒருவன் ஆண்டவர் இயேசுவிடம் வந்து கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்று கேட்டான். “இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்; இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்” என்று பதிலளித்தார் மாற்.12:29. இன்றைக்கு அந்த யூத ஜனங்களில் அநேகர் அந்த மெய்தேவனையும் அவரால் அனுப்பப்பட்ட ஆண்டவர் இயேசுவையும் புறம்பாக்கிப்போட்டார்கள். ஆகையால் தான் இஸ்ரவேலே கேள் என்று சொல்லுகிறார். இஸ்ரவேலர்கள் அன்றும் சரி இன்றும் சரி வணங்கா கழுத்துள்ள ஜனங்களாகயிருக்கிறார்கள். இச்செய்தியை கேட்கும் அன்பான சகோதரனே சகோதரியே, வானத்திற்கும் பூமிக்கும் மேலான இந்த தேவனை அறிந்துகொள். அவர் ஆவியாயிருக்கிறார் என வேதம் போதிக்கிறது. “தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்” (யோவா.4:24). நீங்கள் அவ்விதமாக தொழுது கொள்ளுகிறீர்களா? அந்த தொழுகையைத் தான் தேவன் ஏற்றுக்கொள்வார். மற்றபடி உங்களுடைய ஆராதனை வீணான ஆராதனையாகப்போய்விடும். மனுஷருடைய உபதேசங்களை போதித்து வீணாக தேவனை ஆராதித்து வருகிற ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. இதைக்குறித்து நமது ஆண்டவர் சொல்லும்போது ஏசாயா சொன்ன காரியத்தை திரும்பவும் நினைவுபடுத்துகிறார். என்னவென்றால், “மனுஷருடைய கற்பனைகளை



உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார்” (மத்.15:9). இன்றைக்கு இந்த விதமான வீணான ஆராதனையை நாம் அநேக இடங்களில் பார்க்கிறோம். தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே என்கிற மனித கட்டளைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து. தேவன் அருளின மெய்யான உபதேசத்தை அவர்கள் மாற்றிப்போட்டார்கள். மனிதனுடைய உபதேசம் ஒரு மனிதனை இரட்சிக்காது அன்பானவர்களே, அவைகள் மனிதனால் ஏற்படுத்தப்பட்டபடியால் அவர்களுக்குப்பின்பு அந்த உபதேசம் மறைந்துபோய்விடும். ஆனால் கர்த்தருடைய உபதேசங்களோ, வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் அவைகள் ஒழிந்துபோகாது என்று நாம் படிக்கிறோம். இந்த உபதேசத்திற்கு செவிகொடுத்து மெய்தேவனையும் அவரால் அனுப்பப்பட்டவராகிய இயேசுவையும் அறிந்துகொண்டு கர்த்தருக்குள் வளருங்கள். அப்பொழுது நித்தியமான தேவன் உங்களோடிருந்து உங்களுடைய ஆராதனையை ஏற்றுக்கொள்வார்.

வேதாகமத்தில் உள்ள சங்கீதம் என்ற புஸ்தகத்திலே நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். “கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக்கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது” (சங்.33:12). நீங்கள் அவரை தெய்வமாகக்கொண்டு இருக்கிறீர்களா? அப்படி அவரை சொந்த தெய்வமாகக் கொள்வீர்கள் என்றால் பாக்கியவான்களாக இருப்பீர்கள். இன்றைக்கு அநேகர் தங்கள் குலதெய்வம் என்று சொல்லி மரங்களையும், சந்திர சூரியனையும், கடல் வாழ் உயிரினங்களையும், ஆயுதங்களையும், ஆடு, மாடு, பாம்புகளையும் வைத்து வழிபடும் பழக்கத்தை உடையவர்களா இருக்கின்றனர். கர்த்தர் சொல்லும்போது “மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்” என்றார். இவ்வசனத்திற்கு இஸ்ரவேல் மக்களில் அநேகர் செவிசாய்காமற்போனார்கள். அன்பானவர்களே, சற்று நீங்கள் யோசித்துப்பாருங்கள். வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் ஒருவர் இருக்கும்போது அவரை ஆராதிக்காமல் அவரால் உண்டாக்கப்பட்டவைகளை ஆராதித்து வந்தால் அவருக்குத்தான் எப்படியிருக்கும். எடுத்துக்காட்டாக பாருங்கள். உங்களுக்கு உதவி செய்த ஒருவர் இருக்கும்போது, அவரை நீங்கள் நினையாமல் அவர் நினைவாக வருடந்தோறும் சென்று கடலிலே தங்கம் தங்கமாக அவருக்கென்று கரைத்தால் கூட அதினாலே அவருக்கு ஏதாவது பிரயோஜனம் உண்டாகுமா?

அந்த நபருக்கு நீங்கள் நன்றிகடனாக ஏதாவது செய்தால் பிரயோஜனமாக இருக்கும் அல்லவா? அதைப்போல நம்மை உண்டாக்கின தேவன் ஒருவர் இருக்கும்போது அவரை நினையாமல் அவருடைய பேரில் நாம் வீணானகாரியங்களை செய்வதால் ஒரு பிரயோஜனமுமில்லை. இஸ்ரவேலர் கர்த்தரை விட்டு பின்வாங்கினபோது முழுஇருதயத்தோடு அவரை ஆராதித்துவந்த யோசுவா என்று சொல்லப்பட்ட மனிதன் “கர்த்தரை சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்” (யோசு.24:15). பின்மாற்றமாகிப்போகிறவர்கள் மற்ற ஜனங்களைப்பார்த்து பின்மாற்றமாகிபோகிறார்கள். இந்த விஷயத்திலே யோசுவா முன்வைத்த காலை பின்வைக்கவில்லை. நானும் என் வீட்டாருமோவென்றால் கர்த்தரையே சேவிப்போம் என்று உறுதியுடன் சொன்னான். அதைப்போல நீங்கள் உறுதியுடனிருந்து இந்த மெய்தேவனை ஆராதித்தீர்கள் என்றால் யோசுவாவைப்போல ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

இந்த தேவன் நித்தியமானவர்: மோசேயினிடம் தம்மை வெளிப்படுத்தும்போது “இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்” (யாத்.3:14). தேவன் வெகுநாட்களாக இஸ்ரவேலரை கண்ணோக்காமல் இருந்தார். பின்பதாக அவர்களுடைய துன்பத்தை கண்டு மனதிரங்கி அவர்களை இரட்சிக்க திட்டமிட்டார். அப்பொழுது மோசேயைத் தெரிந்தெடுக்கும்போது அவனிடத்தில் இருக்கிறவராக இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று சொல்லி சில அடையாளங்களையும் கொடுத்து அனுப்பினார். அந்த தேவன் இன்றும் இருக்கிறவராகவே இருக்கிறார். அன்பானவர்களே, அவரை நீங்கள் அறிந்துகொள்ளவேண்டும். அவரை நீங்கள் அறிந்துகொண்டு அவரை ஆராதிக்க வேதாகமத்திற்கு உங்களுடைய கவனத்தை திருப்பவேண்டும் என்பதே என்னுடைய செய்தியாக இருக்கிறது. இவர் ஆதியிலே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என ஆதியாகமம்1:1–ல் வாசிக்கிறோம். மனிதன் குரங்கிலிருந்து வந்தான் என்று ஒரு சாரார் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள். குரங்கு மனிதனாக மாறினால் இன்றைய குரங்குகள் ஏன் மனிதான மாறவில்லை. பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது மனிதன்



தேவசாயலில் உண்டாக்கப்பட்டான். மற்றவைகள் அது அதனுடைய சாயலிலே உண்டாக்கப்பட்டன. நாம் அறிந்துள்ளபடி மான், மான் குட்டியை ஈனுகிறது, குரங்கு குரங்கு குட்டியை ஈனுகிறது இதில் எந்தவிதமான மாற்றமுமில்லை. மனிதன் மனிதனைப் பெற்றெடுக்கிறான். வேதாகமமும் மிகத்தெளிவாக அவ்விதமாகவே போதிக்கிறது. மனிதனுடைய கற்பனைக்கு அளவே இல்லை. ஆகையால் அன்பானவர்களே, உங்களுடைய முழுகவனத்தையும் வேதாகமத்திற்கு திருப்பும்படியாக கேட்கிறேன்.

இயேசு சொல்கிறார்: “ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிவதே நித்தியஜீவன்” (யோவா.17:3). அழியாத ஒரு வாழ்வை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டுமானால். தேவனையும் அவரால் அனுப்பப்பட்ட இயேசுகிறிஸ்துவையும் அறியவேண்டும். கடைகளிலே நமக்கு இஷ்டமானதை வாங்கிவிடுகிறோம். அதைப்போல நாம் கர்த்தரை வாங்கிவிடமுடியாது. அவரைப்பற்றி தெரிந்துகொள்ளும்படியாக அவருடைய பிள்ளைகளோ சேர்ந்து அவரை நீங்கள் ஆராதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். வேதாகம பாடசாலைக்கு தவறாது கலந்துகொண்டு, கர்த்தரை அறிகிற அறிவில் வளர்ச்சியடையவேண்டும். அப்படிச்செய்யும்போது கர்த்தர் வாக்குதத்தம் செய்த நித்தியஜீவனைப்பெற்றுக்கொள்வீர்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் விருதாவாகபோய்விடும். அநேகர் தவறாக ஜனங்களை வழிநடத்திக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் தேவனைக் கண்டதாகவும் தேவன் தங்களோடு பேசி, சில காரியங்களை செய்யச்சொன்னதாகவும் சொல்லிவருகிறார்கள். இவர்கள் வேதப்புரட்டர்கள், இவர்களுடைய வார்த்தைகளைக் குறித்த விஷயத்தில் நீங்கள் மிக கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் பரிசுத்த ஆவியானவராலே ஏவப்பட்டுபேசின வார்த்தைகளில் ஒன்றையும் கூட்டவும் கூடாது ஒன்றையும் குறைக்கவும் கூடாது. அப்படி ஒரு நபர் கூட்டிபேசுவாரேயானால் அவர் வேதாகமத்தை புரட்டுகிறார். வேதவாக்கியங்களுக்கு விரோதமாக செயல்படுகிறார் என்று அர்த்தமாகிறது. உதாரணமாக பாருங்கள் அப்போஸ்தலனாகிய யோவான் குறிப்பிடும்போது; “தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை, பிதாவின் மடியிலிருக்கிற ஒரேபேறான குமாரனே அவரை வெளிப்படுத்தினார்” என்று எழுதுகிறார் யோவா.1:18. அப்படியென்றால் கிறிஸ்துவானவரே பிதாவாகிய தேவனை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் அவரை ஒருவரும் கண்டதில்லை. என்னைக் கண்டவன் பிதாவைக்காண்கிறான் என்றால் அவருடைய தன்மையை அங்கு வெளிப்படுத்துகிறார். தேவன் அன்பாயிருப்பதைப் போல இயேசுவும்

அன்பாயிருக்கிறார். அதுதான் அதனுடைய அர்த்தமாயிருக்கிறது. மேலும், ''தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை; நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்புகூர்ந்தால் தேவன் நமக்குள் நிலைத்திருக்கிறார்; அவருடைய அன்பும் நமக்குள் பூரணப்படும்'' என்கிறார் (1யோவா.4:12). தேவனை ஒருவரும் ஒருபோதும் கண்டதில்லை என்பதை சற்று கவனியுங்கள். அப்படியிருக்கும்போது அந்த தேவனை நான் பார்த்தேன் என்று ஒருவர் சொன்னால் அது பொய்யல்லவா? அது மெய்யென்று ஒருவர் நிருபிக்க முயற்சிப்பாரேயானால் வேதாகமம் பொய்யாகிவிடுகிறது இவர் சொல்வதுதான் மெய்யாகிவிடுகிறது. நீங்களே தீர்மானம் செய்யுங்கள். எது பொய் என்றும், எது மெய்யென்றும். பவுல் சொல்லுகிறார்: ''ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்; அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' என்று தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் 1தீமோ.6:16. சாவாமையுள்ளவர், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவர், மனுஷரில் ஒருவம் கண்டிராதவர், காணக்கூடாதவருமாயிருக்கிறவர் இப்படிப்பட்ட தேவனை நான் பார்த்தேன் என்று ஒருவர் சொன்னால் அது மெய்யாகுமா? பிரியமானவர்களே தேவனை அறிந்து தொழுது கொள்ளுங்கள், அவர் ஒருவருக்கே உங்களுடைய கனத்தையும், மகிமையையும் செலுத்துங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். உங்களை உண்டாக்கினதேவன் உங்களை வழிநடத்துவாராக!

### கேள்வி நேரம்

**நாம் பார்க்கிற உலகம் தோன்றுமுன் இந்த தேவன் இருந்தாரா?**

அவர் இருக்கிறவராகவே இருக்கிறார் என்று செய்தியிலே தியானித்தோம். அவர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார் என ஆதியாகம புத்தகத்திலே வாசிக்கிறோம். மேலும், சங்கீதத்தில் மோசே ஜெபிக்கும்போது ''பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்'' சங்.90:2. ஆம் எனக்கு அன்பானவர்களே, அவர்தான் அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறார். அவருக்கு முன் என்ற வார்த்தைக்கே இடமில்லை. அவர்மூலமாகவே நாம் காண்கிற யாவும் உண்டாயின. யோபு புத்தகத்தில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். ''ஆகயமண்டலத்திலே பிரகாசிக்கிற சூரியனை முதலாய் ஒருவரும் நோக்கிப் பார்க்கக்கூடாதே; தேவனிடத்திலோ பயங்கரமான மகத்துவமுண்டு. சர்வவல்லவரை நாம் கண்டு பிடிக்கக்கூடாது; அவர்



வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர்; அவர் மகாநீதிபரர்; அவர் ஒடுக்கமாட்டார். ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்படவேண்டும்; தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்கமாட்டார்'' என்று வாசிக்கிறோம் யோபு37:22–24. அன்பானவர்களே, அவரை நாம் ஒரு நாள் கிறிஸ்வோடு சந்திபோம். அவருக்கு பயந்து அவரை ஆராதியுங்கள்.

## 13. ஒரு பாவி
## A Sinner

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் பாவிகளை இரட்சிக்க வந்த இயேசுகிறிஸ்துவின் தூய நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். ''பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான்'' என்று பிர.9:18. ஆதாம் தேவனுடைய கட்டளையை மீறியதால் பாவத்தின் கீழ்அடைக்கப்பட்டான். பாவியான ஒருவன் மிகுந்த நன்மையைக் கெடுப்பான் என்ற வசனத்தின்படியாக உலகத்தில் பாவம் பரவ முதல் காரணமானான். பாவம் அவனை ஆண்டுகொண்டது. அது மட்டுமாக தேவசாயலில் இருந்த அவன் பாவத்தின் நிமித்தமாக தேவசமுகத்திலிருந்து பிரிக்கப்பட்டான். அதனுடைய விளைவு எல்லாரும் பாவிகளானோம். ''அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்'' (ரோம.5:19). பாவம் செய்தது ஒருவன் தான் ஆனால் பாவத்தின் விளைவால் அநேகர் பாவிகளாக மாற்றப்படுகிறார்கள். அதைப்போல ஒருவருடைய கீழ்ப்படிதல் என்று சொல்லும்போது கிறிஸ்து தம்மைத்தாமே பாவத்தைப்போக்கும் பழுதற்றபலியாக சிலுவையிலே ஒப்புக்கொடுத்ததினாலே எல்லாரும் நீதிமான்களாக மாற்றப்படுகிறோம். அன்பானவர்களே, நாம் ஒரு வேளை பாவம் செய்யவில்லை என்று சொல்வோமானால் அது மெய்யாகிவிடாது. ஏனெனில் மேற்சொல்லியபடி ஆதாமுடைய பாவத்தின் விளைவால் பாவம் எல்லோரையும் ஆண்டுகொண்டது. பாவத்தின் கீழ் அடிமைப்பட்டுள்ள ஜனங்களை மீட்கும்படியாக ஆண்டவர் இயேசுகிறிஸ்து பூமிக்கு வந்தார். அவருடைய இரத்தம் சிந்துதலினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கிறோம். ''நமக்குள் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச்

சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். நாம் பாவம் செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப்பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது'' (1யோவா.1:8–10). தனக்குள் பாவம் இல்லையென்று சொல்லிக்கொள்ளும் மனிதன் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் மனிதனாக இருக்கிறான். வியாதியுள்ள மனிதன் மற்றவர்கள் தனக்குச் சொல்லும் அறிவுரையை புறம்பே தள்ளுவான், ஏனென்றால் எனக்குள் அந்தவிதமான வியாதி இல்லை. எனக்கெல்லாம் அப்படிப்பட்ட வியாதிவராது என்பான். மருத்துவ மனைக்கு சென்று டெஸ்ட் பண்ணும்போது தெரியவரும். அன்பானவர்களே, வியாதி நல்லவர்கள் தீயவர்கள் என்று பார்த்து வருவது இல்லை அது எல்லாரையும் தொற்றிக்கொள்கிறது. அதைப்போல பாவம் எல்லாரையும் ஆண்டுகொண்டது. நாம் பாவிகள் என்பதை ஒத்துக்கொள்ளும்போது நம்முடைய எல்லா பாவத்தையும் அவர் மன்னித்து அதிலிருந்து விடுதலையைத் தருகிறார். உங்களுக்கு பாவத்திலிருந்து விடுதலை வேண்டுமானால் கிறிஸ்துவைப் பற்றிக்கொள்ளுங்கள். அவருடைய சத்தியத்திற்கு செவிகொடுங்கள்.

''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்துஇயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான பாவி நான்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் 1தீமோ.1:15–ல் குறிப்பிடுகிறார். பவுல் ஒரு தேவனுடைய மனிதனாக மாற்றப்பட்டார். அநேக நிருபங்களை புதியஏற்பாட்டிலே எழுதியிருக்கிறார். பாவிகளில் பிரதான பாவி நான் என்று சொல்லும்போது, அவர் தான் ஒரு பாவிஎன்பதை முற்றிலுமாக ஒத்துக்கொள்வதை நாம் இந்த வசனங்களின் மூலமாக அறிகிறோம். தான் ஒரு பாவி என்பதை அநேகர் ஒத்துக்கொள்ள மறுக்கின்றனர். ஏனென்றால் வெட்கம், தன்னை நீதிமான்களாக காட்டவே விரும்புகின்றனர். இப்படிப்பட்டவர்கள் நித்தியமான ஆக்கினைக்கு செல்லும்போது என்னசெய்வார்கள்? அவர்களுடைய வெட்கம் அவர்களை அந்த ஆக்கினையிலிருந்த தப்புவிக்கமாட்டாதே. எனக்கு அன்பானவர்களே, பாவிகளை இரட்சிக்க வந்த இயேசுவுக்கு உங்களை அர்ப்பணியுங்கள் அப்பொழுது உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்படும். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை என அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்திலே வாசிக்கிறோம். ''தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்கு தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால்



தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது'' (1யோவா.4:9,10). இன்றைக்கு பொதுவாக அநேகர் சொல்வதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள் அந்த மனிதர் எவ்வளவு உத்தமர், எவ்வளவு அன்பு நிறைந்தவர் என்று சொல்லிக்கொண்டே போவார்கள். அப்படிப்பட்ட ஒருநபர் ஒரு பாவியை இரட்சிக்க முடியுமா? அந்த நபர் மற்றவர்களிடத்தில் அன்பு செலுத்தலாம். ஆனால் அந்த அன்பினாலே ஒருவரையும் காப்பாற்றமுடியாது. ஆகையால் தேவன் முதலாவது நம்மீது அன்பு செலுத்தி, அதற்கு அடையாளமாக தம்முடைய குமாரனையே இவ்வுலகத்தின் பாவத்தைப்போக்கும் பலியாக ஒப்புக்கொடுத்தார். அதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. ஆக, முதலாவது தேவன் நம்மீது அன்பு செலுத்தினார். பின்புதான் நாம் அவரில் விசுவாசம் கொண்டோம். இதில் எந்தவிதமான மாற்றமுமில்லை. ''இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்'' (எபி.10:10). இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் பலியிடப்படவில்லையென்றால் நாம் இன்னும் பாவத்தில் இருப்போம். பாவம் நம்மை மரணத்திற்கு ஏதுவாக ஆண்டுகொண்டிருக்கும். ''நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்'' (1பேது.3:24,25). சிதறுண்ட ஆடுகளாகிய நாம் இப்பொழுது நம்முடைய ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராகிய கிறிஸ்துஇயேசுவிடம் திருப்பப்பட்டிருக்கிறோம். ஆக, அவருக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவோம். அவர் நல்லமேய்ப்பராக இருக்கிறார். நமக்காக ஜீவனையே ஒப்புக்கொடுத்திருக்கிறார். அவருடைய மந்தையின் ஆடுகளாக இருக்கும்போது நல்லமேய்ச்சலைக் கண்டடைவோம்.

பாவத்திலே நிலைத்திருந்தால் என்னதான் வரும்? பார்க்கலாமே, என்று மிகுந்த தைரியமாக பேசுகிறவர்களை நீங்கள் பார்த்து இருப்பீர்கள். வேதம் சொல்லுகிறது, ''பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பெய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே

பங்கடைவார்கள்'' (வெளி.21:8). திட்டமும் தெளிவுமாக இவ்வசனங்கள் நமக்குப் போதிக்கிறது. ஒருவரும் சாக்குபோக்கு சொல்லிவிடமுடியாது. இந்தவிதமாக பாவம் செய்கிறவர்கள் மனந்திரும்ப வேண்டும் என வேதம் போதிக்கிறது. பொய் சொன்னால் என்ன, நான் தானே சொன்னேன், அதனால் வருவது வரட்டும் என்று சொல்லுகிறவர்கள் தயவுசெய்து கவனிக்கவேண்டும். இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். சாதாரண அக்கினிக்கு முன்பாக நம்மால் போகக்கூடாதிருக்க அக்கினியும் கந்தகமும் எரிகிற கடல் என்றால் அது எப்படியிருக்கும்! கடலிலே பெரிய பெரிய கப்பல் செல்கிறது அவைகள் சிலவேளைகளில் பழுது ஏற்பட்டு மூழ்கி விடுகிறது. ஏன், டைட்டானிக் கப்பலை கேள்விப்பட்டிருக்கிறோம். அந்த கப்பல் ஒருக்காலும் சேதம் அடையாது அது கடலில் மூழ்க வாய்ப்பே இல்லை என்று சொல்லும்அளவிற்கு அது வடிவமைக்கப்பெற்றது. அந்த கப்பலே மூழ்கிவிட்டது. கடல் இவைகளை விழுங்கி விட்டது. இதைப்போல சமீபத்தில் ஏற்பட்ட சுனாமி அநேகரை விழுங்கிவிட்டது. கீழ்ப்படியாத ஜனங்களை அந்நாட்களில் அக்கினி கடல் அப்படியே விழுங்கிவிடும். சதாவாதிக்கப்படுவார்கள். அங்கே அக்கினி அவியாமலும் புழுசாவாமலும் இருக்கும். இந்த நரக அக்கினிக்கு தப்பு கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து பாவத்திலிருந்து உங்களை தப்புவித்துக்கொள்ளுங்கள். பாவம் செய்த ஒருவரையும் தேவன் விட்டுவைக்கமாட்டார். ''பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து..'' திருஷ்டாந்தமாக வைத்திருக்கிறார் என்று 2பேது.2:4–ல் வாசிக்கிறோம். தேவதூதர்களாக இருந்தாலும் சரி அவர்களையும் தேவன் நியாயந்தீர்க்க அறிந்திருக்கிறார். இப்படியிருக்கிறபடியால் தேவன் ஒருவரையும் தப்பவிடார் என அறிகிறோம்.

''தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும். அந்நாளிலே தம்முடைய பரிசுத்தவான்களில் மகிமைப்படத்தக்கவராயும், நீங்கள் எங்களுடைய சாட்சியை விசுவாசித்தபடியினாலே உங்களிடத்திலும், விசுவாசிக்கிறவர்களெல்லாரிடத்திலும் ஆச்சரியப்படத்தக்கவராயும், அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய



தண்டனையை அடைவார்கள்'' (1தெச.1:7–10). இவ்வசனங்கள் நமக்குத் மிக தெளிவாக போதிக்கிறது. தேவனை நான் அறியவில்லை என்று ஒருவரும் சொல்லி தப்பிவிடமுடியாது. ஏனென்றால் தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படியாக இயேசு சீக்கிரம் வரப்போகிறார். அவருடைய வருகைக்கு முன்பாக நீங்கள் சுவிசேஷத்தை விசுவாசித்து அதை ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். அப்பொழுதே உங்களுடைய பாவங்கள் கழுவப்பட்டிருக்கும். அவர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றால் அவருடைய வருகையில் உங்களுக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் சொல்லவேண்டும். காணாத அவரையும் அவருடைய வருகையையும் நீங்கள் விசுவாசத்தினாலே ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்பொழுதே நீங்கள் ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாக மாற்றப்படுகிறீர்கள். ''முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம்'' (எபி.2:3,4). பிரியமானவர்களே, வேதாகமம் நாம் இரட்சிக்கப்படவேண்டும் என அநேக காரியங்களைக் குறித்து மிக தெளிவாக போதிக்கிறது. இவைகளையெல்லாம் சிலர் சிறுவயதுமுதல் கேள்விப்பட்டிருப்பீர்கள். சிலர் இப்போதுதான் கேள்விப்படுகின்றீர்கள். உங்களை முதலாவது அவருக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது அவர் உங்களை தம்முடைய சபையிலே சேர்த்துக்கொள்வார். உங்களுடைய பாவங்கள் கழுவப்படவும், நீங்கள் இரட்சிக்கப்படவும், அவருடைய வருகைக்கு ஆயத்தமாகவும், பாவத்திற்கு எதிராக நின்று போராடவேண்டியவர்களாகவும் இருக்கின்றீர்கள். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே நீங்கள் எந்நிலையையில் இருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு பாவி என்பதை தேவசமூகத்தில் ஒப்புக்கொண்டு அதற்கு பரிகாரமாக தேவன் வைத்துள்ள இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினாலே கழுப்பட உங்களை அவருக்கு ஒப்புக்கொடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## கேள்வி நேரம்

**நம் பாவங்களை கர்த்தர் மன்னித்தபின்பு பாவத்திற்கு விரோதமாக நாம்**

**போராடவேண்டுமா?**

அவசியம் போராடவேண்டும். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு விட்டதே என்று மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனென்றால் “உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலத்திலுள்ள சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே” (1பேது.4:8,9). பிசாசு தன்னுடைய வலையில் சிக்கவைக்கும்படியாக சிங்கத்தைப்போல சுற்றிவருகிறான். ஆகையால் விசுவாசத்தில் உறுதியாயிருந்து அவனுக்கு எதிர்த்துநிற்கவேண்டும். மேலும் எபிரெயஆசிரியர் சொலும்போது; “பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே” என்று எழுதுகிறார் எபி.12:4. பாவத்திற்கு விரோதமாக போராடும்போது அநேக காரியங்களை நாம் இழக்கநேரிடும். ஆண்டவர் சொல்வதைப்போல, உன் கை உனக்கு இடறல் உண்டாக்கினால் அதைத் தரிந்து எரிந்துபோடு. முதல் நூற்றாண்டு சீஷர்கள் இரத்தசாட்சிகளாக மரித்தார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களைப்போல நம்மையும் அர்பணித்து பாவத்திற்கு எதிர்த்துநிற்போம்.

## 14. சோதனை
## Temptation

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சோதனைகளைச் சகிக்க பெலன் கொடுக்க வல்லவராகிய ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள். உலகத்திலே நாம் பார்க்கும்போது சோதிக்கப்படாதவர்களே இல்லை. எல்லோரும் ஏதோ ஒரு வகையில் சோதனைகளை அநுபவிக்கிறோம். இந்த சோதனையை ஒரு மனிதன் மேற்கொள்ள என்ன செய்ய வேண்டும்? பரீட்சை எழுதக்கூடியவர்கள் நன்கு படித்து பாஸ் பண்ணிவிடுகின்றனர். பந்தைய பொருளைப் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுகிறவர்கள் பந்தயப் பொருளைப் பெற்றுக்கொள்கிறார்கள். சோதனைகளை சகிக்க ஒவ்வொருவருக்கும் மற்றொருவர் தேவை. இந்த விஷயத்தில் ஒரு மனிதன் தானாக அவைகளை சகிக்க முடியாது. அவனுக்கு மற்றொருவருடைய உதவி தேவைப்படுகிறது. பரிசுத்த வேதாகமம் “சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து,



சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார். இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்” (ஏசா.40:29–31). கர்த்தருக்கு காத்து இருக்கிறவர்கள் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்கிறார்கள். இன்றைக்கு சோதனைகளை சகிக்கமுடியாமல் அநேகர் தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள். அன்பானவர்களே, உங்களுடைய சோதனைகளை பகிர்ந்துகொள்ளக்கூடிய தேவாதி தேவன், கர்த்தாதி கர்த்தர் இருக்கும்போது நீங்கள் ஏன் உங்களை அழித்துக்கொள்ள வேண்டும். அவருக்குக் காத்திருந்து புதுப்பெலனைப் பெற்றுக்கொள்ளுங்கள். அவர் சோர்ந்துபோகிறவனுக்கு பெலன் கொடுக்கிறார்.

சோதனைக்குட்படாதபடி நாம் விழித்திருந்து செய்யவேண்டியது ஜெபம். ஆண்டவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்” (மாற்.14:38). பாருங்கள் மாம்சமும் ஆவியும் ஒன்றுக்கொன்று விரோதமாக செயல்படுகிறது. மாம்சம் விரும்புகிறது ஆவிவெறுக்கிறது. ஆவிவிரும்புகிறதை மாம்சம் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது. ஆகையால் நாம் செய்யவேண்டியது என்ன? நம்முடைய கர்த்தர் சொல்லும்போது விழித்திருந்து ஜெபம் பண்ணவேண்டும் என்றார். இந்த விஷயத்தில் சீஷர்களால் சற்றுநேரம்கூட ஜெபத்தில் விழித்திருந்து ஜெபிக்கக்கூடாமற்போயிற்று. ஆண்டவர் ஜெபித்துவிட்டு அவர்களிடம் வந்தபோது; அவர்கள் மறுபடியும் நித்திரைபண்ணுகிறதைக்கண்டார். அவர்களுடைய கண்கள் மிகுந்த நித்திரைமயக்கம் அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள். அநேக வேளைகளில் நாமும் இப்படி ஆகிவிடுகிறோம். இவைகளை மேற்கொண்டு ஆவியில் விழித்திருந்து ஜெபிப்போமானால் சோதனைகளை மேற்கொள்வோம். சோதனைகளை பிசாசு கொண்டுவருகிறான் என்று வேதாகமத்தின் மூலம் அறிகிறோம். ஆண்டவரை ஒருமுறை பிசாசு சோதித்தான். ஆண்டவர் இயேசுவைச் சோதித்த பிசாசு மனிதர்களையும் விட்டுவைக்கவில்லை. எல்லோருக்கும் சோதனைகளைக் கொண்டுவருகிறான். அவனை மேற்கொள்ள ஆண்டவரைப்போல சோர்ந்துபோகாதிருந்து, அவனை கர்த்தருடைய

வசனத்தினாலே ஜெயிக்கவேண்டும். அவனுக்கு வசனம் ஒன்றும் தெரியாது என்று நினைக்காதீர்கள். நம்மைக்காட்டிலும் அவனுக்கு அதிக வசனம் தெரியும். ஆகையினாலே ஆண்டவரோடு பேசும்போது; இங்கேயிருந்து தாழக்குதியும் ஏனெனில் உம்மைக் காக்கும்படிக்குத் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார் என்றும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்றும் எழுதியிருக்கிறதே என்றான். ஆக அவன் வசனத்தை நன்கு அறிந்தவனாக இருக்கிறான். பிரியமானவர்களே, பிசாசோடு எதிர்ப்பதென்பது சாதாரண காரியமல்ல. அப்போஸ்தலனாகிய பவுல் சொல்வதைப்போல இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும்.

"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான். சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். என் பிரியமான சகோதரரே மோசம்போகாதிருங்கள்" யாக்.1:12–16 என்று வாசிக்கிறோம். ஆம் அன்பானவர்களே, சோதனையை ஒரு மனுஷன் சகிக்கவேண்டும். அந்த சோதனை முதலாவது எப்படிவந்தது என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். பொதுவாக சோதனை வந்தவுடன் ஜனங்கள் சொல்லுகிற ஒரு வார்த்தை என்னவென்றால், அந்த ஆண்டவன் ஏன்தான் என்னை இப்படிச்சோதிக்கிறானோ தெரியவில்லை என்பார்கள். கர்த்தர் ஒருவரையும் சோதிக்கிறதில்லை. அவனவன் தன்தன் இச்சையினாலேதான் சோதிக்கப்படுகிறான். இதுதான் உண்மையானவார்த்தை. நாம் கர்த்தர் மீது அபாண்டமாக பழிசுமத்துவது தகாத காரியம். வீடுகட்டுகிறவர்கள் வீடுகட்டும்படியாக கடன் வாங்குகிறார்கள். தங்கள் வருமானத்தை பார்த்து கடன் வாங்கவேண்டும். அதிகமான ஆசையினாலே வாங்கிய கடனுக்குமேல் வீட்டைக்கட்டி விடுவார்கள். இச்சையினாலே கடன்வாங்கி, பின்பு கடனைக் கட்ட அவதிப்பட்டு சோதனை அதிகரிக்கும்போது, ஏன்தான் அந்த கர்த்தர் நம்மை இவ்விதமாக சோதிக்கிறாரோ தெரியவில்லை என்றால் எப்படி? கடன் வாங்கி வீடுகட்டுங்கள் என்று கர்த்தர் எங்கேயாவது பரிசுத்தவேதாகமத்தில்



சொல்லியிருக்கிறாரா? இல்லையே பின்பு நம் இச்சையின்படி வாங்கி கட்டின வீட்டிற்கு நாம்தான் உத்திரவாதி, கர்த்தர் அல்ல. ஆசைஇச்சைகளை கொண்டுவருகிறவன் பிசாசு. "சோதனைக்காரன் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கே சபையாருக்கு எழுதுகிறார் 1தெச.3:5. சபையாரை அநேக சோதனைக்குள்ளாக கொண்டுசெல்கிறவன் பிசாசு. இவனுக்கு அடிபணியாதிருக்க நாம் செய்யவேண்டியது என்ன? மாம்சத்தின் ஆசைஇச்சைகளை அவருடைய வல்லமையுள்ள வசனத்தினாலே ஜெயிக்கவேண்டும்.

ஜெபம் ஒரு மனிதனை சோதனையிலிருந்து தப்பிவிக்கிறது. ஆகையால் "நம்பிக்கையிலே சந்தோஷமாயிருங்கள்; உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கள்; ஜெபத்திலே உறுதியாய்த்தரித்திருங்கள்" (ரோம.12:12). வாழ்க்கையிலே எந்த ஒரு காரியத்திலும் உறுதியுடனிருக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். உறுதியுள்ளவர்கள் தங்களுடைய அஸ்திபாரத்தை கன்மலையாகிய கிறிஸ்து மீது போட்டிருக்கிறார்கள். அவர்கள் உறுதியுடனிருந்து அநேக ஆசீர்வாதங்களை பெற்று அநுபவிக்கிறார்கள். பிசாசானவன் அப்படிப்பட்டவர்களை விட்டு விலகிப்போகிறான். கர்த்தருடைய கரம் அவர்களோடிருக்கும். சிம்சோனை அறிவீர்கள், "பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டுவெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக்கொண்டிருக்க வைத்தார்கள். அவன் தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று.... அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப், இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி, சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும் பிடித்துக்கொண்டு, என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச்சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது: இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்" (நியா.16:21,28–30). அன்பானவர்களே, இந்த சிம்சோனின் ஜெபத்தைக் கேட்ட கர்த்தர் அவனைப் பெலப்படுத்தினார். இவன் தன்னுடைய பலத்தைப்பார்க்கிலும் தேவனுடைய

பலத்தை அதிகமாக நாடினான்.

அப்போஸ்தலனாகிய பவுலுங்கூட கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் அநேக பாடுகளை அநுபவித்தார். அவர் கொரிந்து சபைக்கு எழுதும்போது; ‘‘ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று, நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்’’ (2கொரி.1:8–10). பவுலைத் தப்புவித்த கர்த்தரை நீங்கள் பற்றிக்கொள்வீர்களானால் உங்களையும் தப்புவிப்பார். மாம்சமானதை தன் புயபலமாக்கிக்கொண்டு சிலர் கர்த்தரை விட்டு விலகுகின்றனர். இங்கே பவுலுடைய நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் உண்டானபோதிலும் மரித்தோரை உயிரோடு எழுப்புகிற கர்த்தர் மீது, தன்நம்பிக்கையை வைத்திருந்தபடியால் அவர்களை தப்புவித்தார். அத்தோடு, எப்பொழுதும் தப்புவிப்பார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்துகிறதை நாம் அறிகிறோம். ‘‘என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைக்காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்’’ என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதுவதை நாம் வெளி.3:10–ல் வாசிக்கிறோம். ஆதி அப்போஸ்தலர்கள் தேவனுடைய வசனத்தை காத்து பொறுமையுடனே பலன்கொடுத்தார்கள். நாமும் அதைப்போல பொறுமையுடன் காத்திருக்கும்போது சோதனைக்காலத்துக்கு தப்புவிக்கப்படுவோம்.சோதனையை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள கற்றுக்கொள்ளவேண்டும். யாக்கோபு சொல்லுகிறார்; ‘‘என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்’’ (யாக்.1:2,3). நமக்கு வரக்கூடிய பிரச்சனைகளை நாம் எடுத்துக்கொள்ளும் விதத்தில் இருக்கிறது. ஒரு சிறு பிரச்சனையை பெரிதாக்கி பெரிது படுத்துகிறவர்களை நாம் அறிவோம். ஒரு



பெரிய பிரச்சனையை பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் அதை மிக சுலபமாக ஒவர்கம் பண்ணுகிறவர்களையும் நாம் அறிவோம். அன்பானவர்களே அந்தவிதமாக நாமும் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, வரக்கூடிய பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து அதை சந்தோஷமாக வரவேற்கவேண்டும். சோதனைகளில் தான் அநேகர் சோர்ந்துபோகிறார்கள். ‘‘நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசனவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்’’ என்று வெளிப்படுத்தின விசேஷம் 2:10–ல் வாசிக்கிறோம். தேவன் நம்மோடிருக்கும்போது நாம் பயப்படவேண்டியதில்லை கொஞ்சநாட்கள் உபத்திரவப்படுவீர்கள். நானோ உங்களுக்கு ஜீவ கிரிடத்தைத் தருவேன் என்று வாக்குபண்ணுகிறார். இவைகளைப்பெற்றுக்கொள்ள சோதனைகளை சகித்து பொறுமையுடன் காத்திருங்கள்.

## கேள்வி நேரம்

### சோதனை இல்லாமல் வாழ்வதற்கு வழிகள் இருக்கிறதா?

இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மனிதன் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால் தேவனுக்கு விரோதியாக இருக்கிற பிசாசானவன் மனிதனை சோதிக்கிறான். தேவனுக்கு சத்துரு என்றால் அவன் நமக்கும் சத்துருதான். ஆகையால்தான் இயேசுவைப்பார்த்து என்னைப் பணிந்துகொள் அப்பொழுது இவைகளைஎல்லாம் உமக்குத்தருவேன் என்றான். ஒருவேளை நீங்கள் பிசாசுக்கு பணிந்து வாழ்வீர்கள் என்றால் சுகபோகமாக வாழ்வீர்கள். அப்படிப்பட்ட சுகபோகமான வாழ்க்கை உங்களுக்கு ஜீவனைக் கொடுக்காது. ஏனென்றால் ‘‘மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக்கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்?’’ என்று கேள்வியை நமது ஆண்டவர் எழுப்புகிறார் மத்தேயு 16:26. சோதனை ஒவ்வொருமனுஷனுக்கும் வரும். அவன் கர்த்தரைப் பற்றிக்கொண்டிருப்பானேயானால் அதற்கு தப்பிக்கொள்ளும்படியான ஒரு போக்கை கர்த்தர் உண்டுபண்ணுவார். அப்பொழுது கர்த்தருக்குள் சந்தோஷமாக வாழும் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்வான். சோதனை சோர்வைக்கொண்டுவரும், வேதனை வேற்றுமைகளைக்கொண்டுவரும், கர்த்தருடைய வசனமோ கர்த்தருடையவர்களைக் காக்கும்.

# 15. ஆவிக்குரிய பிறப்பு
# Spiritual Birth

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆவிக்குரிய பிறப்பைக் குறித்து இன்றைய நாளிலே தியானிக்க இருக்கிறோம். Spiritual birth. ''மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்'' என்று யோவான் 3:6–ல் இயேசு சொல்வதை வாசிக்கிறோம். ஆம், அன்பானவர்களே மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாகத்தானிருக்கிறது. ஆகையால் மாம்சத்தினால் பிறந்த மனுஷன் மாம்சத்துக்குரியவைகளையே சிந்திக்கிறான். மாம்சத்தினால் பிறப்பதற்கும் ஆவியினால் பிறப்பதற்கும் அநேக வேறுபாடுகள் இருக்கிறது. யோபு சொல்லுகிறார்; ''ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும் சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான்'' யோபு14:1. மாம்சத்தினால் பிறக்கிற மனுஷன் ஸ்திரீயினிடத்தில் பிறக்கிறான். அவனுடைய வாழ்நாள் மிக குறுகினது என்று காண்கிறோம். 969 வருஷடம் வாழ்ந்த மெத்தூசலாவைப் பற்றி வேதாகமத்தில் படிக்கிறோம். அதேவேளையில் குறுகினநாள் வாழ்ந்து மரித்த மனிதர்களையும் வேதாகமத்திலே படிக்கிறோம். மனிதனுடைய நாட்கள் எண்ணப்படுகிறது. ஆகையால் அவன் பூமியில் நீடித்திருப்பதில்லை. ஏனென்றால் அவன் மாம்சத்தில் இருக்கிறான். சஞ்சலத்தோடு தன் வாழ்க்கையை கழிக்கிறான். மோசே என்ற தேவனுடைய மனுஷன் தன்னுடைய ஜெபத்திலே இப்படியாக சொல்லுகிறார். எங்கள் ஆயுசுநாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே; அது சீக்கிரமாய்க் கடந்து போகிறது, நாங்களும் பறந்துபோகிறோம் என்று சொல்லி ஜெபிக்கிறார்.

இச்செய்தியை கேட்கிற அன்பான தேவஜனமே மனிதனுடைய வாழ்நாட்கள் குறுகினதாகவும் சஞ்சலம் மிகுந்ததாகவுமிருக்கிறது ஆனபடியினாலே அநேகர் மாம்சத்தில் நீடித்துவாழ விரும்புவதில்லை. இந்த மாம்சத்தில் வாழும் நாட்களில் நம்மை உண்டாக்கின சிருஷ்கரை நினைக்கவேண்டும். பிரசங்கிசொல்லுகிறார்: ''இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு



மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை'' பிர.12:7. மாம்சத்தில் வாழும் மனிதன் மண்ணாக இருக்கிறான். அவன் மரித்து மண்ணுக்கு ஒருநாள் திரும்புவான் என வேதம் திட்டமாக சொல்லுகிறது. அப்படிதிரும்புகிறவேளைக்கு முன்னமே நீ உன் வாலிபப்பிரயாயத்திலே அவரை (அதாவது) உன் சிருஷ்கரை நினை. இன்றைக்கு நம்மில் எத்தனைபேர் இதைக்குறித்து சிந்திக்கிறோம். அநேகருக்கு வேலைக்குப் போய்வரவே நேரம் சரியாக இருக்கிறது. யார் இதையெல்லாம் தியானிப்பது என்று சொல்லுகிறார்கள். பிரியமானவர்களே, காலத்தே பயிர்செய்யவேண்டும் என்ற வாக்கியத்தை கேள்விப்பட்டிருப்பீர்கள் எதற்காக ஒரு விவசாயி தன் நிலத்தில் காலத்தே பயிர் செய்கிறான் அப்படி பயிர்செய்தால் தான் பலனை பெறுவான். அதைப்போல நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் தேவனைத்தேடவேண்டும். ஒருவேளை வயதாகிய பிறகு நீ உன் தேவனை தேடுவாயானால் உன் சரீரம் உனக்கு ஒத்துழைக்காது. அதைக்குறித்த கவலை உனக்கு ஏற்பட்டு, அல்லது உன் அவயவங்கள் பழுதடைந்து உன் சிந்தனைக்கு இடங்கொடாதிருக்கும். ஆகையால் திருவசனம் சொல்வதுபோல உன் வாலிபப்பிராயத்திலே தேவனை தேடு அவர் வார்த்தைக்கு செவிகொடு. ''குமாரனைக் கண்டு, அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது'' என்று இயேசு சொல்கிறார் யோவான்6:40. இங்கே குமாரன் என்றால் தன்னைக்குறித்து சொல்லுகிறார். அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் நித்தியஜீவனை அடைவான் அவனை இந்த உலகத்தின் கடைசிநாளிலே எழுப்புவதாக வாக்குக்கொடுக்கிறார். நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? அவரை நீங்கள் விசுவாசித்தால் அவருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள்.

''ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்'' என்றார் யோவா.3:3. மறுபடியும் நாம் எப்படி பிறக்க முடியும்? மறுபிறப்பு என்று சொல்லுகிறார்களே அதுவா, என்று எண்ணத்தோன்றும். அன்பானவர்களே அப்படியல்ல. மறுபடியும் பிறப்பது என்பது ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறப்தாகும். ஜலத்தினாலும் ஆவியினாலும் எப்படிபிறக்கமுடியும் என்று நினைக்கிறீர்கள். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும் ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். ஆண்டவருடைய ஆவிக்குரிய வசனத்திற்கு நீங்கள் முதலாவது செவிகொடுக்கவேண்டும். அப்படி நீங்கள் செவிகொடுக்கும்போது

நம்முடைய மோசமான வாழ்வை, பரிசுத்தமான கர்த்தருடைய வசனங்கள் சுட்டிக்காட்டும். அப்பொழுது ஒரு புதுவாழ்வை பெற்றுக்கொள்ளும்படியாக நாம் வசனத்தின்மூலமாக உந்தப்படுவோம். பின்பு, ஜலத்தினாலும் ஆவியினாலும் ஞானஸ்நானத்தின் மூலம் பிறக்கும்போது கர்த்தருடைய வசனம் நம்மை பாவமற கழுவும். ‘‘முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்’’ (எபே.4:22–24). புதிய ஜீவியத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாக மாற்றப்படுகிறோம், மேலும் இயேசுகிறிஸ்துவின் சாயலிலே சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனாக மாற்றப்பட்டு ஆவிக்குரியவர்களாகிறோம். இது ஆவிக்குரிய பிறப்பாக இருக்கிறது. ‘‘அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்’’ (ரோம.6:11). நம்முடைய பழைய மனுஷன் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட்டது என்று அறிந்துகொள்ளவேண்டும். கந்தசாமி என்ற ஒரு நபர் ஆண்டவரை ஏற்றுக்கொள்வாரானால் அவர் டேவிட் கந்தசாமி என்று பெயர் வைத்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை. அவருடைய ஜீவியம் முற்றிலுமாக மாறவேண்டும். மாமிசபிரகாரமாக அவர் வாழ்வாரேயானால். அப்படிப்பட்ட நபர் ஒரு ஆவிக்குரிய பிறப்பைப் பெற்றவர் அல்ல. ஏனென்றால் ‘‘மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்’’ என்று ரோமர்8:13–ல் வாசிக்கிறோம்.

நீங்கள் ஆவிக்குரிய மக்களாக இருப்பீர்கள் என்றால் ஆவிக்குரிய வசனங்களுக்கு செவிகொடுத்து சரீரத்தின் செய்கைகளை அழித்துப்போடுங்கள். ‘‘தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல’’ (ரோம.8:9). இன்றைக்கு நாங்கள் பரிசுத்த ஆவியைப்பெற்று இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள் ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் பரிசுத்தமில்லை. ஒரு கிறிஸ்தவன் அதாவது மாம்சபிரகாரமான வாழ்வைவிட்டு, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தன்னை அற்பணிக்கவேண்டும். கிறிஸ்துவின் ஆவியை உடையவனாக இருக்கவேண்டும் அவருடைய ஆவியில்லாதவன் அவருடையவனல்ல என்று



தெளிவாக சொல்லுகிறார். அப்படியானால் அவருடைய சிந்தை இவனுக்குள் இருக்கவேண்டும். ‘‘எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்’’ (ரோம.8:14). ஆவிக்குரிய பிறப்பைப் பெற்றவன் ஆவிக்குரிய வசனத்தினாலே வழிநடத்தப்படுகிறான். அப்படிப்பட்டவன் தேவனுடைய புத்திரனாயிருக்கிறான். ஆவிக்குரிய பிறப்பு ஒரு அனுபவம் அல்ல. அது வேதவசனத்தின்படி பிறக்கும் ஒரு செயல். ஆண்டவர் இயேசுவைக் கேள்விப்பட்டு விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெற்று, கர்த்தரால் சபையில் சேர்க்கப்படுவதுமாகும். மேலும் ஆவியினால் பிறந்த மனுஷன் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கவேண்டும். ‘‘அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்’’ (கலா.6:22,23). இவைகளைக் கொடுக்காமலிருந்து கொண்டு நான் ஆவிக்குரிய சபைக்குச் செல்லுகிறேன், நான் வரம் பெற்றவன், மறுபிறப்பு அநுபவம் உள்ளவன் என்று கூறினால் எப்படி? தன் மாம்சத்திற்கென்று விதை விதைக்கிறவன் மாம்சத்தினாலே அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைவிதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனைஅறுப்பான். இப்பொழுது உங்களை நீங்களே சீர்தூக்கிப்பாருங்கள். எதற்கென்று விதை விதைக்கிறீர்கள்?

பிரியமான சகோதரனே, சகோதரியே உன் நிலைமை என்ன? நீ ஆவிக்குரிய பிறப்பை பெற்றுள்ளாயா? அல்லது உன் மனம் போன போக்கிலே வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? இன்றே இந்த அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள். ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு. அப்பொழுது ஆவிக்குரிய பிறப்பைப் பெற்றுக்கொண்டவனாயிருப்பாய். ‘‘மனதின் யோசனைகள் மனுஷனுடையது; நாவின் பிரதியுத்தரம் கர்த்தரால் வரும். மனுஷனுடைய வழிகளெல்லாம் அவன் பார்வைக்குச் சுத்தமானவைகள்; கர்த்தரோ ஆவிகளைநிறுத்துப்பார்க்கிறார்’’ (நீதி.16:1,2). உன்னுடைய ஆவி மெய்யான பிறப்பைப்பெற்றுள்ளதா என்பதை அவர் ஒருவரே அறிவார். அவரே அவைகளை நிறுத்துப்பார்க்கிறார். இந்த தேவனுக்கு உன்னை முழுவதுமாக ஒப்புக்கொடு. கர்த்தரோடிசைந்திருக்கிற எவனும் அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். ‘‘ எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய

மேனிகளுடைய மகிமையும் வேறே; சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே, மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. அந்தப்படியே முந்திய மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது; ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம்'' (1கொரி.15:39–50). இந்த விதமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளத்தக்கதாக இந்த மண்ணான சரீரத்தில் ஆவிக்குரியவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலே மண்ணான சரீரம் பரலோகத்திற்குரிய சரீரமாக மாற்றப்படும். ஆக நீங்கள் ஒரு ஆவிக்குரிய பிறப்பைப்பெற்ற கிறிஸ்தவராக இருப்பீர்கள் என்றால் ''ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது; நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது'' (கலா.5:16,17). இவைகளை மேற்கொள்ள ஆவிக்குரிய வசனங்களுக்கு செவிகொடுங்கள். அப்பொழுது எல்லா புத்திக்கும்மேலான சமாதானம் உங்களை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்.

**கேள்வி நேரம்**

**ஆவிக்குரிய பிறப்பு அந்நியபாஷைக்கு அடையாளமாக இருக்கிறதா?**

ஆவிக்குரிய பிறப்புக்கும் அந்நியபாஷைக்கும் சம்பந்தமே இல்லை. கிறிஸ்தவத்திலே ஒரு சாரார் இதை முக்கியப்படுத்தி ஜனங்களை வழிதப்பச்செய்கின்றனர். ''நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற



வெண்கலம் போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்'' என்று பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் 1கொரி.13:1. அந்நியபாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். ஆனால் மறுபடியும் ஒருவன் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யமாகிய சபையைக் காணமாட்டான். இந்த பூமியிலே பிறந்த எந்த மனிதனாக இருந்தாலும் அவன் மறுபடியும் பிறக்கவேண்டும். தேவன் வைத்துள்ள நியமத்தின்படி அவன் வசனத்தினாலே ஜெநிப்பிக்கப்படும்போது அவன் அழியாத நித்திய வாழ்வைபெற தகுதியாகிறான். இதிலே முடிவுபரியந்தம் நிலைநிற்பானேயானால் அவன் இரட்சிக்கப்படுவான். மற்றபடி அவனுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். உலகத்திலே எத்தனையோ விதமான பாஷைகள் இருக்கிறது. இது அவரவர் புரிந்துகொள்ளும்படியாக பேசப்படுகிற பாஷைகள். புரியாத பாஷைகளை பேசி இது ஆவிக்குரிய பிறப்பிற்கு அடையாளம் என்று எண்ணி வஞ்சிக்கப்படாதிருங்கள்.

## 16. குற்றமற்ற ஜீவியம்
## Blameless life

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பரிசுத்தருமாகிய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். நாம் இந்த உலகத்திலே குற்றமற்ற ஜீவியம் செய்யவேண்டும். பரிசுத்த வேதாகமம் ''உங்கள் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக'' (1தெச.5:23) என போதிக்கிறது. இவ்வுலகத்தில் ஜீவிக்கிற நாம் எப்படி வேண்டுமானாலும் ஜீவிக்கலாம் என்பதல்ல. குற்றமற்ற ஜீவியத்தை உடையவர்களாக இருக்கவேண்டும். குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பார்கள். மனிதன் குற்றம் செய்யும் போது தலைநிமிர்ந்து நடக்க முடியாமல் அவதிப்படுவதை நம் அனுதின வாழ்க்கையில் பார்க்கிறோம். குற்றவாளிகள் என்றுமே தப்பமுடியாது. ஏனெனில் வெளிக்கு வராத மறைபொருளே இல்லை என வேதத்தில் நாம் வாசிக்கிறோம். ஒரு குற்றவாளியின் முடிவு என்ன? ''பாவத்தின் சம்பளம் மரணம்'' (ரோம.6:23). அவனுக்கு கிடைக்கக்கூடிய கூலி மரணமாக இருக்கிறது. இதை அறிந்தும் குற்றம்செய்ய தீவிரிக்கிறார்கள் என்றால் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வுலகத்தையும், நம்மையும் சிருஷ்டித்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டும்

வரப்போகிறார். அவர் வரும்போது ஆவி ஆத்துமா சரீரம் இம்மூன்றையும் ஒரே மண்பாண்டத்தில் பெற்ற நாம் குற்றமற்றவர்களாயிருக்க வேண்டியது மிக அவசியம். அவர் நம்முடைய சிருஷ்டிகர், ஆகையால் அவருக்கு நாம் கணக்கு கொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். தேவன் நம்மை எப்படிசிருஷ்டித்தாரோ அப்படியே நாம் காணப்படவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரித்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறது.

ஆவிக்குரிய ஜீவியம் என்றால் கிறிஸ்தவ வட்டாரத்தில் தெரியாத ஒன்றல்ல. எல்லோரும் அறிந்த ஒன்றுதான். நாங்கள் ஆவிக்குரிய சபைக்குச் செல்லுகிறோம், நாங்கள் ஆவிக்குரிய ஆராதனை செய்கிறோம், என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போவார்கள். உங்களது ஆவிக்குரிய ஜீவியத்தில் பரிசுத்தஆவியானவர் மூலம் கொடுக்கப்பட்ட வசனங்களுக்கு முழுமையாக கீழ்ப்படிகிறீர்களா? என்று கேட்டால், நான் சிறுவயது முதல் இவைகளைக் கைக்கொள்ளுகிறேன் என்னிடத்தில் என்ன குறையுண்டு என்று ஆண்டவரிடம் ஒரு வாலிபன் கேட்டதைபோலச் சொல்வார்கள். ''எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும், பரிசுத்த ஆவிக்கு விரோதமாய் தூஷணஞ் சொல்லுகிறவனுக்கோ மன்னிக்கப்படுவதில்லை'' (லூக்.112:10). என்று வாசிக்கின்றோம். வேத வசனத்திற்கு விரோதமாகவோ அல்லது கீழ்ப்படியாமலோ இருந்து கொண்டு செயல்பட்டால், அது ஆவிக்குரிய குற்றமாகும். ''அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்'' (ரோம.8:5). நீங்கள் எவைகளைக் குறித்துச் சிந்திக்கிறீர்கள்? மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம். ஆவிக்குரிய சிந்தை, ஆவியானவர் நமக்கு கொடுத்த வேதவசனத்தின்படி நம்மை வழிநடத்தும். மாம்ச சிந்தை, பிசாசு கொண்டு வருகிற களைகள். அவைகள் நம்முடைய ஆயுள் சக்கரத்தை கொள்ளைகொள்ளும். ''தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான்'' (கலா.6:8). நீங்கள் எதற்கென்று விதைவிதைக்கிறீர்கள்? நீங்கள் ஒரு ஆவிக்குரிய கிறிஸ்தவரா? அப்படியானால் ஆவிக்குரிய காரியங்களுக்கு முதலிடம் கொடுத்து ஆபிரகாமைப்போல ஆசீர்வதிக்கப்படுங்கள். ஆவிக்குரிய காரியங்களுக்குக் கொடுத்து உதவும்போது ஆவியினாலே நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்வோம். அதிலே எந்தவித சந்தேகமுமில்லை. ''ஆவியை



அவித்துப்போடாதிருங்கள்'' (1தெச.5:13) என்று பார்க்கிறோம். ஆவியிலே எப்பொழுதும் அனலாயிருந்து கர்த்தருக்குப் பிரியமாக ஜீவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். நம்முடைய ஆவி அணைந்து போவதால் காரிருள் வந்து குடிகொள்ளும். நம்முடைய முன்னிலைமையைக் காட்டிலும் பின்னிலைமை மிக மோசமாகிவிடும். மேலும் சாலொமோன் குறிப்பிடும்போது ''மனோ துக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்'' (நீதி.15:13) என்கிறார். மனதுக்கத்தோடு ஜீவிக்கிறவர்கள் ஆவியில் தொய்ந்துபோய் நிலைகுலைந்து காணப்படுவார்கள். அப்படிப்பட்டவர்களில் சிலர் சீக்கிரம் மரித்துப்போய்விடுகிறார்கள். ஆவியில் குற்றமற்றிருக்கும்போது சந்தோஷம் நிலைவரப்படும். ஆவிக்குரிய ஜீவியத்தில் பயமில்லை, ஏனெனில் ''கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை'' என்று ரோம.8:1–ல் வாசிக்கிறோம். அது தேவனோடு வாழும் அற்புதமான வாழ்க்கை. இந்த ஜீவியம் நம்மை கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுத்தும்.

ஆத்தும ஜீவியமென்றால் எல்லோரும் அறிந்த ஒன்றே. பரிசுத்த வேதாகமத்தில் ஆத்துமாவில் குற்றம் செய்த ஒருவனைக் குறித்து வாசிக்கிறோம். ''ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகப் பொருட்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்து சொல்லிக் கொண்டான்'' (லூக்.12:19). இவனுடைய நிலைமை என்னவாயிற்று. தன் ஆத்துமாவை நேசித்து சேர்த்த எல்லாவற்றையும் இழந்தான். இதே நிலைமையை இன்றைய நாட்களில் அநேகருடைய வாழ்க்கையில் காண்கிறோம். ''பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன்மேல்தான் இருக்கும்'' (எசே.18:20). எவன் ஆத்துமாவுக்கு விரோதமாக பாவம் செய்கிறானோ அவனே பாவத்தினிமித்தம் சாவான். மற்றபடி மற்றவர்கள் செய்த பாவத்தினால் இது வந்தது என்று ஒருவரும் சொல்லமுடியாது. அதற்கு விளக்கமாக, பிதாக்கள் திராட்சக்காய்களைத் தின்றார்கள், பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை நீங்கள் இஸ்ரவேல் தேசத்தைக்குறித்துச் சொல்லுகிறது என்ன? இனி இஸ்ரவேலில் இந்தப் பழமொழியைச் சொல்வது இல்லை என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று எசேக்கியேல் தீர்க்கதரிசியைக் கொண்டு உரைத்தார்.

மேலும் “நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களைமாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்பதைக் கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்” (எசே.14:20). ஆகையால் எனக்கு அருமையான தேவ ஜனமே, பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும். “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்” (1யோவா.5:12). அப்படியென்றால் ஆத்துமாவே இல்லாதவன் என்று அர்த்தமாகிறது. உயிர் இல்லாத ஒரு சரீரம் செத்தது அப்படியே இயேசு இல்லாத ஒரு ஆத்துமா செத்தது. ஒருவன் கிறிஸ்துவை தன் ஆத்துமாவில் ஏற்றுக் கொள்ளாமலிருந்தால் அவனுடைய ஆத்துமா கைவிடப்படும். ஆகையால்தான் குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன் என்று வாசிக்கின்றோம். ஆத்துமா பிழைக்க வேண்டுமென்றால், பரிசுத்தவேதம் கூறுவதை கவனியுங்கள். “உங்கள் செவியைச் சாய்த்து என்னிடத்தில் வாருங்கள்; கேளுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்”என்கிறார் (ஏசா.55:3). ஆண்டவரிடத்தில் வந்த அனைவரும் சுகமானார்கள். அவரிடத்தில் கேட்டதைப் பெற்றுக்கொண்டார்கள் என்று சுவிசேஷ புஸ்தகத்தில் வாசிக்கின்றோம். நம்முடைய ஆத்துமாவை கறைப்படுத்துவது மாம்ச இச்சையே. இதை முதலாவது வெறுத்துத் தள்ளவேண்டும். இது ஆத்துமாவுக்கு விரோதமாய் போர் செய்கிறதென்று 1பேதுரு2:11–ல் வாசிக்கின்றோம். ஆகையால் பிரியமான சகோதரனே, சகோதரியே உங்கள் ஆத்துமாவில் குற்றமற்ற ஜீவியம்செய்து “உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக் கொள்ளுங்கள்”(லூக்.21:19).

சரீர ஜீவியம் என்பது நம்முடைய நடைமுறை வாழ்க்கையைக் குறிக்கிறது. அனுதினமும் அழிந்து போகிற இந்த சரீரத்தைக் தூக்கிக் கொண்டு அங்குமிங்கும் செல்கின்றோம். சரீர ஜீவியத்தில் தான் அநேகர் குற்றம் செய்து வீழ்ந்து போகின்றனர். தாவீதைப் கவனித்துப்பாருங்கள்: அவன் தேவனுக்காக ஆலயம் கட்ட வாஞ்சித்தான் ஆனால் தேவனாகிய கர்த்தர் அதை விரும்பவில்லை. “நீ திரளான இரத்தத்தைச் சிந்தி, பெரிய யுத்தங்களைப் பண்ணினாய்; நீ என் நாமத்திற்கு ஆலயத்தைக் கட்டவேண்டாம்; எனக்கு முன்பாக மிகுதியான இரத்தத்தைத் தரையிலே சிந்தப்பண்ணினாய்” என்றார் (1நாளா.22:8). தேவனை ஆராதிப்பதற்கும் அவருக்கு ஊழியம் செய்வதற்கும் நம்முடைய சரீரம் பரிசுத்தமாயிருக்கவேண்டும். தேவனை அசுத்த கைகளோடே துதிக்கவும்,



ஆராதிக்கவும், அவருக்கு ஊழியம்செய்யவும் முடியாது. இப்புதிய ஏற்பாட்டின் காலத்தில் வாழ்கிற நாம் இதற்குத் தப்பிக்கொள்ள ஒரு வழி கிறிஸ்துவின் சரீரத்தைத் தரித்துக்கொள்வது. அது எப்படி முடியும் என்று நினைக்கின்றீர்கள். ஒருவன் பாவத்திற்குச் செத்து நீதிக்குப் பிழைக்கும்போது அவன் கிறிஸ்துவின் சரீரமான சபையில் அங்கம் வகிக்கிறான். அப்படி அங்கம் வகிக்கிறவன் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கின்றான். ஆகையால் பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது “உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயவங்களென்று அறியீர்களா? அப்படியிருக்க, நான் கிறிஸ்துவின் அவயவங்களை வேசியின் அவயவங்களாக்கலாமா? அப்படிச் செய்யலாகாதே” (1கொரி.6:15). தவறு செய்யும் போது கிறிஸ்துவை முதலாவது நினைவில் கொள்ளுங்கள். கிறிஸ்து பாவம் செய்வாரா? பாவம் செய்யமாட்டாரே அப்படியிருக்க நான் பாவம் செய்யலாமா? கூடாதே. “ஆகையால் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப் போடுங்கள்” (கொலோ.3:5). தேவனைத் துதிப்பதற்கும் சபை ஆராதனையில் பங்குபெறுவதற்கும் நம்முடைய சரீரம் மிகவும் பயனுள்ளதாகயிருக்கிறது. நாம் ஆவிக்குரிய ஆராதனை செய்தாலும் சரீரத்தோடே சென்று ஆராதிக்கிறோம். ஆனால் சரீரத்தினால் அல்ல ஆவியினாலே ஆராதிக்கிறோம். காணிக்கை கொடுக்கும்போது இருதயத்தில் தீர்மானித்து வலது கையின் மூலம் காணிக்கை கொடுக்கிறோம். ஆக கைகள் பரிசுத்தமுள்ளதாக இருக்கவேண்டும். அநேக இரத்தத்தை சிந்தின தாவீது, அவருக்கு ஆலயம் கட்ட முடியாமல் போய்விட்டது. காணிக்கையில் ஒரு பகுதியை வஞ்சித்து வைத்த அனனியா, சப்பிராள் உடனே மரித்து போய்விட்டார்கள். இது தேவசத்தம் என்ற ஜனங்களுடைய வார்த்தையைக் கேட்ட ஏரோது பெருமை கொண்டு மரித்தான். இன்னும் எத்தனையோ பேர் சரீர ஜீவியத்தில் குற்றம் செய்து தேவனுடைய தண்டனைக்குள்ளானார்கள். பிரியமான சகோதரனே, சகோதரியே உன் சரீர வாழ்வை காத்துக்கொள். கர்த்தர் வருகிறார்.

ஆவி, ஆத்துமா, சரீரம் இம்மூன்றும் ஒன்றாகவே இருக்கிறது. இம்மூன்றிலும் நாம் தவறு செய்யாது குற்றமற்ற ஜீவியத்தைச் செய்ய வேண்டுமென்று பார்த்தோம். இம்மூன்றிலுமே நம்மை வஞ்சிப்பதற்குப் பிசாசு எப்பொழுதும் ஆயத்தநிலையில் உள்ளான் என்பதை நீங்கள் முந்தி அறிய வேண்டும். ஆவியில் மட்டும் ஆயத்தமாகயிருந்தால் போதுமென்று நீங்கள் இருந்துவிடாதீர்கள். முற்றிலும் உங்களைக் காத்துக் கொள்ள வேண்டியது

அவசியமென வேத ஆதாரத்துடன் பார்த்தோம். நாம் ஒன்றிலும் தவறு செய்யாதிருக்கும் போது நமக்கு பயமில்லை, எந்த விதமான சந்தேகமுமில்லை. கர்த்தர் இப்பொழுது வந்தாலும் நான் அவரோடு மகிமையில் பிரவேசிப்பேன் என்ற ஓர் நிச்சயத்தோடு குற்றமற்ற ஜீவியம் செய்ய வேண்டும். ''இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும் போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக!'' (1தெச.3:13).

**கேள்வி நேரம்**

**குற்றவாளிகளை தேவன் கடைசியிலே மன்னித்துவிடுவார் என்றுசொல்லுகிறார்களே அது உண்மையா?**

''தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்'' (யூதா 6). குற்றம்செய்த தேவதூதர்களையே தப்பவிடாதிருக்கும்போது, இவ்வுலகத்திலே குற்றம் செய்த மனிதர்களை தேவன் தப்பவிடுவாரா? ''சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்'' என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் 2கொரிந்தியர் 5:10. நன்மை செய்தவர்களுக்கு நிலையான ஜீவனையும், தீமைசெய்தவர்களுக்கு அழியாத ஆக்கினையையும் அளிப்பார் என மத்தேயு புத்தகத்திலே வாசிக்கிறோம். ''அந்தப்படியாக, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள்'' (மத்.25:46).

## 17. புது உடன்படிக்கை
## A New Covenant

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். புது உடன்படிக்கை A new covenant. புது உடன்படிக்கை என்பது தேவன்



மனிதனோடு செய்த புதிய ஒப்பந்தம் அல்லது புதிய கட்டளை ஆகும். இதற்கு மத்தியஸ்தர் இயேசுகிறிஸ்துவே என வேதம் போதிக்கிறது. புது உடன்படிக்கை என்று சொல்லும்போது, பழைய உடன்படிக்கை ஒன்று இருந்திருக்க வேண்டும். அது என்னவாயிற்று? ஏன் புதிய உடன்படிக்கை வந்தது? புதிய உடன்படிக்கையை பரிசுத்த வேதாகமத்தில் எங்கு காண்கிறோம்? அதற்கும், நமக்கும் என்ன சம்பந்தம்? என்ற கேள்விகளுக்கு வேதவசன ஆதாரத்தோடு விடைகாண்போம். இதற்கு பலர் பலவிதமான விளக்கங்களை கொடுக்கின்றனர். பலவிதமான புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுகிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் அப்போஸ்தலனாகிய பவுல் மிகத் தெளிவாக இதற்கு விளக்கமளிக்கிறார்.

''புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதை பழமையாக்கினார்; பழமையானதும், நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது'' என்கிறார் (எபிரெயர் 8:13). பழைய உடன்படிக்கை அதாவது பழைய கட்டளை அல்லது பிரமாணம். பழமையானதும், நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்து போகக் காலம் சமீபித்திருக்கிறது என்று வாசிக்கின்றோம். உதாரணமாக, இராஜாக்களின் காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை இன்று இருக்கிற அரசியல் சட்டத்திற்கு ஒவ்வாது. அதைப்போலவே மோசே காலத்தில் கொடுக்கப்பட்ட கட்டளை இன்று கிறிஸ்துவின் கீழ் வாழ்கின்ற நமக்கு ஒவ்வாது. அப்படியென்றால் பழைய ஏற்பாட்டைக் கிழித்துப்போட்டுவிடலாமா என்று அநேகர் வாதிடுவர். பழைய பிரமாணம் நிழலாக இருந்தது. நிஜம் வந்தவுடன் நிழலுக்கு வேலையில்லாமற்போய்விட்டது என்பதுதான் உண்மை. ''நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படுவதற்கு நியாயப்பிரமாணம் நம்மை கிறிஸ்துவினிடத்தில் வழிநடத்துகிற உபாத்தியாய் இருந்தது. விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் கீழானவர்களல்லவே'' (கலா.3:24,25). ஒரு குழந்தையை ஆசிரியரிடம் அழைத்துச் செல்லும் ஒரு ஆயாவைப் போல நியாயப்பிரமாணம் இருந்தது. ஆசிரியரிடம் குழந்தை வந்தவுடன் ஆயாவின் வேலை முடிந்தது. பின்பு ஆசிரியரே முற்றிலும் பொறுப்பாளி. ஆகையால் நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறோம். ''இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்'' (எபி.10:9). இதை ஒரு மனிதன் செய்யவில்லை, தேவனே அதை நீக்கிப்போடுகிறார். அதை எப்படி நீக்கிப்போடுகிறார்? தம்முடைய குமாரன் மூலமாக, அதாவது ''சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து'' என்று எபிரெயர்2:15–ல் வாசிக்கிறோம். ஒழித்து என்றால் இல்லாமல் செய்து அல்லது நீக்கிவிட்டு

என்று அர்த்தம். அது நமக்கு விரோதமாகவும் இருந்தது ஆகையால் “நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின் மேல் ஆணியடித்து...சிலுவையிலே வெற்றி சிறந்தார்” (கொலோ.2:14,15). இப்படியிருக்க பழைய பிரமாணங்களுக்கு அடிமைப்பட விரும்புகிறதெப்படி? அதைக் குலைத்துப்போட்டு நடுவிலிராதபடி எடுத்துப்போட்டாரே. அவர் நீக்கிப்போட்ட பிரமாணத்தைத்தேடி அதை நாம் கைக்கொள்ளுவோம் என்றால் அதினாலே பிரயோஜனமில்லை. மேலும் அது மாற்றப்பட்டதற்கான சரியான காரணம் இருந்தது.

“முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும், பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை. அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்” (எபி.7:18,19). புது உடன்படிக்கையானது முழுவதையும் மாற்றி அதிக நன்மையான நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. பழைய பிரமாணம் அந்தவிதமான நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை ஆகையினாலே அது மாற்றப்பட்டது. எபிரெய ஆசிரியர் சொல்லுகிறார்: “விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது” (எபி.11:1). அந்த நம்பிக்கையை வருவிப்பது புது உடன்படிக்கை. ஆண்டவர் குறிப்பிடும்போது: “நியாயப்பிரமாணத்தையானாலும், தீர்க்கதரிசினங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்” (மத்.5:17) என்றார். தம்முடைய ஒப்புக்கொடுத்தலின் மூலம் சிலுவையில் அதை நிறைவேற்றினார். “உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்” (கலா.5:14). அந்தப்படியே நிறைவான அன்பு வந்தவுடன் குறைவானவைகளாகிய இவைகளெல்லாம் ஒழிந்துபோயின என்று 1கொரிந்தியர் 13:10–ல் படிக்கின்றோம்.

புது உடன்படிக்கையை நாம் புதிய ஏற்பாட்டிலே காண்கிறோம் “நான் புதிய கற்பனையையும் உங்களுக்கு எழுதுகிறேன். இது அவருக்குள்ளும், உங்களுக்குள்ளும் மெய்யாயிருக்கிறது; ஏனென்றால் இருள் நீங்கிப்போகிறது, மெய்யான ஒளி இப்பொழுது பிரகாசிக்கிறது” (1யோவா.2:8). இப்பொழுது என்றால் இக்காலத்தில் நமக்கு கிறிஸ்து மெய்யான ஒளியாக, வழியாக, நல்மேய்ப்பராகப்



பிரகாசித்துக்கொண்டிருக்கிறார். அவருடைய உடன்படிக்கையின் கீழிருக்கிறோம். “அந்த உடன்படிக்கை எழுத்துக்குரியதாயிராமல், ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது” (2கொரி.3:6). மேலும் இதைக் குறித்து எபிரெய ஆசிரியர் சற்று விளக்கமாகக் குறிப்பிடுகிறார். “அவர்களுடைய பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து கொண்டு வரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்த நாட்களுக்குப்பின்பு நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்” (எபி.8:9,10). புதிய உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையாகிய நியாயப்பிரமாணத்தைப் போலல்ல. அது கற்பலகையில் எழுதப்பட்டது, இது இருதயமாகிய சதையான பலகையில் எழுதப்படுகிறது. “பூர்வகாலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்” (எபி.1:1,2). சகல அதிகாரங்களையும் உடையவராகிய இயேசுகிறிஸ்துவிடம் நீங்கள் திருப்பப்பட்டு உள்ளீர்கள். வீணும் வெறுமையுமான பழைய வழிபாடுகளுக்கு நீங்கள் திரும்பாமல் புதிதும் ஜீவனுமான “புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப் பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்” (எபி.12:24,25). பிரியமான சகோதரனே, சகோதரியே புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் கட்டளைக்கு முழுவதும் கீழ்ப்படிந்து அதன்படி நடக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். “அல்லாமலும், இஸ்ரவேல் ஜனங்கள் லேவிகோத்திர ஆசாரிய முறைமைக்குட்பட்டிருந்தல்லவோ நியாயப்பிரமாணத்தைப் பெற்றார்கள்; அந்த ஆசாரிய முறைமையினாலே பூரணப்படுதல் உண்டாயிருக்குமானால்,

ஆரோனுடைய முறைமையின்படி அழைக்கப்படாமல். மெல்கிசேதேக்கினுடைய முறைமையின்படி அழைக்கப்பட்ட வேறொரு ஆசாரியர் எழும்பவேண்டுவதென்ன? ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும்'' (எபி7:11,12). இப்பொழுது பிரதான ஆசாரியராக பிதாவினிடத்தில் நமக்காக பரிந்து பேசுபவராக இயேசுகிறிஸ்துவானவர் இருக்கிறார். ஆகையினாலே பிரமாணமும் மாற்றப்பட்டது என அறிகிறோம்.

''மோசேயின் பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனை காலின் கீழ் மிதித்து, தன்னை பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்.... ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே'' (எபி.10:28–31). புது உடன்படிக்கையை ஒருவரும் தள்ளுகிறதில்லை. அதில் ஒன்றை கூட்டவோ குறைக்கவோ ஒருவருக்கும் அதிகாரமில்லை அப்படி மீறிச் செய்தால் அவன் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்று வேதம் எச்சரிக்கிறது. இன்றைய நாட்களில் பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் கலந்து கைக்கொள்ளுகிற சபைகள் தான் உலகத்தில் அதிகம். இவ்விரண்டிற்கும் வித்தியாசம் தெரியாமல் போதித்துக் கொண்டு ''தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும் நியாயப்பிரமாணப் போதகராயிருக்க விரும்புகிறார்கள்'' (1தீமோ.1:7). பழையதையும், புதியதையும் இணைக்கக் கூடாதென்பது நமது ஆண்டவருடைய போதனை. ஆனால் இங்கு அவருடைய போதகத்தைத் தள்ளி இரண்டையும் சேர்த்து தேவனை ஆராதிக்கிறார்கள். தாவீது ஆடிப்பாடி தேவனை தொழுதுகொண்டார் என்றால் அவர் நியாயப்பிரமாணத்தின் கீழாக வாழ்ந்தார், பலி செலுத்தினார். இன்று நீங்களும் நானும் பாவமன்னிப்புக்காக பலிசெலுத்துகிறோமா? இல்லையே. அப்படியிருக்கும்போது நாம் இன்று நியாயப்பிரமாணத்தின் கீழ் உள்ள கட்டளைகளை எடுத்துக்கொண்டு தேவனை ஆராதிப்போம் என்றால் நாம் கிருபையிலிருந்து விழுந்தோம் என்று வேதம் எச்சரிக்கிறது. ''நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்'' (கலா.5:4). தேவன் நீக்கிப்போட்ட பழைய உடன்படிக்கையைப் பிடித்துக்கொண்டும்,



அந்த வாக்குத்தத்தங்களைப் பிடித்துக் கொண்டும், ஆவிக்குரிய ஆராதனையில் அவைகளைப் போதிக்கவும் கைக்கொள்ளவும் செய்தால் ''புளிப்புள்ள கொஞ்ச மாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்'' என்ற கலா.5:9–ன் படி நடக்கும். புது உடன்படிக்கை என்று சொல்லும்போது, அவருடைய இரத்தத்தினால் கிடைக்கும் இரட்சிப்பை அனுபவிக்கிற ஒரு கிறிஸ்தவன், அதாவது கிறிஸ்துவை உடையவன் நியாயப்பிரமாணத்திற்கு அடிமையாவது எப்படி? பழைய உடன்படிக்கை நல்லதென்றால், கிறிஸ்து வந்தது வீணாய் போயிற்றே. நாம் என்ன சொல்லுவோம்? முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம். ''நியாயப்பிரமாணம் சொல்லுகிறதெல்லாம் நியாயப்பிரமாணத்துக்கு உட்பட்டிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறதென்று அறிந்திருக்கிறோம்'' (ரோம.3:19). நியாயப்பிரமாணம் நமக்கல்ல அதன் கீழ்வாழ்ந்த இஸ்ரவேலருக்கு கொடுக்கப்பட்டது. பிரியநண்பரே, சிந்தித்து, வேத வசனங்களை நன்கு தியானித்து, தேவகட்டளைப்படி, அவர் சித்தப்படி ஒன்றையும் மாற்றாமல், புது உடன்படிக்கையின் கீழ் அவரை ஆராதித்து, அக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்து, பந்தையப் பொருளைப் பெற இலக்கை நோக்கித் தொடருங்கள். கர்த்தர் உங்களை புது உடன்படிக்கையின் சத்தியத்திற்குள் வழிநடத்துவாராக!

## கேள்வி நேரம்

**பழைய உடன்படிக்கையில் விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்று சொல்லியிருக்கிறது, அப்படியென்றால் புது உடன்படிக்கையை கைக்கொள்ளுகிறவர்கள் விபசாரஞ்செய்தால் பாவம் இல்லையா?**

இயேசு இதற்கு மிக சிறப்பான ஒரு விளக்கத்தைக் கொடுக்கிறார். ''விபசாரஞ்செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று'' என்று சொல்லுகிறார் (மத்.5:27,28). முதலாவது இக்கட்டளை பூர்வத்தாருக்கு என்று சொல்லுகிறார். பூர்வத்தாருக்குத்தானே என்று நாம் இங்கே மெத்தனமாக இருந்துவிடமுடியாது. அழுத்தமாக நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளுடனே விபசாரஞ்செய்தாயிற்று. பழைய பிரமாணம் செய்தால் தான் பாவம், புதிய

பிரமாணம் இருதயத்தில் நினைத்தாலே பாவம் என்கிறது. ஆக, புதிய பிரமாணமானது பழைய பிரமாணத்தைக் காட்டிலும் பன்மடங்கு உயர்வான பிரமாணமாக, ஒரு மனிதனை பாவமற கழுவி, நீதிமானாக மாற்றக்கூடியதாக இருக்கிறது. ஆனபடியினாலே பழைய பிரமாணம் கொல்லும், புதிய பிரமாணம் ஒரு மனிதனை உயிர்பிக்கும்.

## 18. இயேசு கண்ணீர்விட்டார்
## Jesus Wept

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்துக்கும் பூமிக்கும் மேலான நாமமாகிய இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்கிறோம். இயேசு கண்ணீர்விட்டார் Jesus wept . வானத்தையும் பூமியையும் உண்டாக்கின இயேசுவானவர் இப்பூமியில் கண்ணீர்விட்டார். இச்செய்தியைக் கேட்கும் எனதருமை நேயரே, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து அன்று இருந்த எருசலேம் நகரத்தைப் பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதார். ஏன்? எதற்காக என்று தெரியுமா? லூக்கா19:41,42 வசனங்களை வாசிக்கும்போது ''உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது'' என்றார். அன்று இருந்த எருசலேம் சமாதானத்துக்கு ஏற்றகாரியங்களை சிந்திக்காமல் தன் மனம்போன போக்கிலே போய்க்கொண்டிருந்தது. எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் வண்ணமாக நான் எத்தனைதரமோ என் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று என்று எருசலேமைப் பார்த்து கர்த்தர் புலம்பினார். இன்று அதே எருசலேம் பன்மடங்கு பாவத்தில் பெருகி அழிவைநோக்கி போய்க்கொண்டிருக்கிறது. இங்கு தான் முதலாவது திருச்சபை ஆரம்பமானது. இது தேவனுடைய நகரம் என்றும், தேவனுடைய வீடு என்றும் அழைக்கப்பட்டது. தாவீது தம்முடைய சிங்காசனத்தை இங்குதான் ஏற்படுத்தியிருந்தான். ஆகையினாலே இது தாவீதின் நகரம் என்றும் அழைக்கப்பட்டது. எத்தனை தரமோ இந்த எருசலேமுக்கு தருணம் கொடுத்தார் ஆனால் மனந்திரும்பாமற்போனது. அதைப்போல இன்று



எத்தனையோ நாடுகள் மனந்திரும்பாமல் தங்களுடைய சுயபலத்தை நம்பிக்கொண்டு கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கிப்போட்டுவருகிறது. இப்படிப்பட்ட நகரத்தை பார்த்து காத்தர் கண்ணீர்விடுகிறார்.

ஆதிமுதற்கொண்டு, எல்லோரையும் இரட்சிக்கவேண்டுமென்பதே தேவனுடைய திட்டமாயிருக்கிறது. ஆகையால் ஆதி முதற்கொண்டு தன்னுடைய ஜனங்களை தீமைக்கு விலகும்படி எச்சரித்து புத்தி சொல்லிக்கொண்டே வருகிறார். இதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். ஏற்றுக்கொள்ளாதவர்கள் சாபத்தை அனுபவித்து நிலையான ஆக்கினைக்கு ஆயத்தமாகயிருக்கிறார்கள். 'உனக்குக் கிடைத்த இந்தநாளிலாகிலும்' என்று ஆண்டவர் சொல்லுகிறதை கவனியுங்கள். ஒரு நாள் பிறப்பதை நாம் அறியாதவர்களாயிருக்கிறோம். காலங்கள் அவருடைய கரத்திலிருக்கிறது. எத்தனையோ நாட்களை நாம் வீணாக்கிவிட்டோம். நம் கண்களுக்கு சத்தியம் மறைக்கப்பட்டிருந்தது. இப்பொழுதோ, நமக்கு வெளியரங்கமாக தோற்ற மளிக்கிறது. ஆகையால் எனதருமை நண்பரே, காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ள இதுவே சந்தர்ப்பம். உனக்காக கண்ணீர் விட்டமுத இயேசுவை உன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள். அவரை புறம்பே தள்ளாதே. அவரில்லாமல் நீ இந்த உலகத்திற்கு வந்திருக்க முடியாது. நீ யாருக்காக வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? உன்னை சிருஷ்டித்த கர்த்தர் ''இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம் பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்'' என்றார் (வெளி.3:20). இன்று அவருடைய சத்தத்தைக் கேட்கிறீர்கள். ஒருவேளை நீங்கள் இதுவரை அவருடைய சத்தத்தைக் கேட்காமல் இருந்திருக்கலாம் அல்லது அவரை நீங்கள் அறிந்தும் அவர் உங்களிடத்தில் பிரவேசிக்க இடங்கொடாமல் இருந்திருக்கலாம். இதுவே சந்தர்ப்பம். இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும். இந்த உலகத்தில் சமாதானத்தைத் தேடி மனிதன் அங்குமிங்கும் அலைந்தோடுகிறதை நம்முடைய அனுதின ஜீவியத்தில் காண்கிறோம். ஆனால் அவர்கள் மெய்யான சமாதானத்தை பெற்றுக்கொள்ளாமல் மாயையைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். மெய் சமாதானம் ஆண்டவர் இயேசுவிடமே உண்டு. அவர் சொல்கிறார்: ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன். உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக'' என்றார் (யோவா.14:27). முப்பத்து

மூன்றரைவருடங்கள் இப்பூமியில் இருந்த ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்து சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் அவர் தம்முடைய சீஷர்களுக்கு விட்டுசென்றது சமாதானம் மட்டும்தான். ஆகையால் தான் இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும் என்றார். உலகராஜ்யங்கள் ராஜ்யங்களை, விட்டுசெல்கிறது. இன்றுவரை அந்த ராஜ்யத்தில் சமாதானமில்லாமல் நாட்டுக்கு நாடு சண்டையிட்டு தங்களைத்தாங்களே அழித்துக்கொள் கிறார்கள். எங்குபார்த்தாலும் எல்லைபிரச்சனை, மொழிபிரச்சனை, இனப்பிரச்சனை இதற்கு இன்றுவரை உலகராஜ்யங்கள் தீர்வுகாணவில்லை. இந்த இராஜ்யத்தின் கீழ் வாழ்கின்ற குடிமக்களும், உலகப்பிரகாரமான சொத்துக்களையும், சம்பத்துக்களையும் தங்களுடைய சந்ததிக்கு விட்டுச் செல்லுகிறார்கள். ஆனால் ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்கு சமாதானத்தை விட்டுசென்றார். இந்த சமாதானம் நாட்டிற்கும், வீட்டிற்கும் நற்செய்தியைக் கொண்டுவருகிறது. அதினாலே நாடு சமாதானம் அடைகிறது. வீட்டில் உள்ள அனைவரும் இரட்சிக்கப்படுகிறார்கள். இந்த சமாதானத்தை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும். உன்னுடைய குடும்பத்தில் ஒருவர் இந்த சமாதான வழியை அறியாவிட்டால் அவர் அறிந்துகொள்ள, சுவிசேஷத்தை எடுத்துச்சொல். சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் சுவிசேஷம் சொல்ல ஆயத்தமாயிருங்கள்.

சத்தியபரராகிய இயேசுகிறிஸ்துவின் நற்செய்தி உலகமெங்கும் அறிவிக்கப்பட்டிருந்தும், இன்னும் அநேகர் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை காரணம், மேற்சொல்லிய லூக்கா9:41,42 வசனத்தின் பின்பகுதியில் 'இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது' என எழுதப்பட்டுள்ளது. ஆம் பிரியமான சகோதரனே, சகோதரியே, இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்டவன் "தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்" என்று 1கொரிந்தியர்4:4–ல் வாசிக்கிறோம். யூதாஸ் பிசாசுக்கு இடங்கொடுத்ததி னாலே அவனுக்குள் பணஆசையை கொண்டுவந்தான். சத்தியம் அவன் கண்களை மறைத்தது. இன்றும் அநேகராலே சத்தியத்தைப் பார்க்கமுடியவில்லை என்ன காரணம்? இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய பிசாசு அவர்களுடைய கண்களைக் குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகையால் அவர்களால் மெய்யான



கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பார்க்கமுடியவில்லை. இப்பிசாசின் பிடியிலிருந்து வெளிவர முதலாவது பாவத்தை வெறுத்துதள்ளுங்கள். நீங்கள் மனந்திரும்பாமல் பாவத்தில் ஜீவித்துக் கொண்டிருப்பதால் என்ன பலன்? ஒன்றுமில்லையே, பாவத்தின் சம்பளம் மரணம் என வேதம் போதிக்கிறது. இப்பாவத்தை தள்ளி விட்டு உன்னை அன்போடு ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிற இயேசுவிடம் உன்னை ஒப்புக்கொடு, அப்பொழுது நிறைவான சமாதானத்தைப் பெற்றுக்கொள்வாய். நம்முடைய குடும்பத்தில் ஒருவர் பிரிந்துபோய்விட்டால் நாம் எவ்வளவு அதிகமாய் கஷ்டப்படுவோம் அல்லது வேதனைப்படுவோம் என்பதை யோசித்துப் பாருங்கள். ஒரு முறை மரியாளுடைய சகோதரன் லாசரு என்னும் போர்கொண்ட ஒருவன் மரித்துப்போய்விட்டான். அப்பொழுது மரியாள், "ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானாள் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்றாள். அவள் அழுகிறதையும் அவளோடேகூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியில் கலங்கி துயரமடைந்து அவனை எங்கே வைத்தீர்கள் என்றார். ஆண்டவரே வந்துபாரும் என்றார்கள். இயேசு கண்ணீர் விட்டார்.... அப்பொழுது யூதர்கள்; இதோ, இவர் அவளை எவ்வளவாய்ச் சிநேகித்தார் என்றார்கள்! அவர்களில் சிலர்; குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றார்கள். அப்பொழுது இயேசு மறுபடியும் தமக்குள்ளே கலங்கிக் கல்லறையினிடத்திற்கு வந்தார்" (யோவா.11:32–38). ஆண்டவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை பின்பு ஏன் கலங்கி, கண்ணீர்விட்டார். இத்தனை அற்புதங்களை இவர்கள் கண்டும் விசுவாசமில்லையே என்று கண்ணீர்விட்டிருக்கக்கூடும். இயேசு மார்த்தாளை நோக்கி: நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்றார்.

பிரியமானவர்களே, இன்று நீங்களும் நானும் இந்த யூதர்கள் சொல்லியதைப்போல இயேசுவைப் பார்ப்போமானால் சமாதானத்துக்கானவைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது. "காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார்" (யோவா.9:39). அவரைப் பார்த்த ஜனங்கள் அவரைவிசுவாசிக்கவில்லை. குருடனுடைய கண்களைத் திறந்த இவர், இவனைச் சாகாமலிருக்கப்பண்ணவும் கூடாதா என்றால் அவர்களுக்கு விசுவாசம் வரவில்லை என்று காண்கிறோம். இன்றைக்கு இந்தவிதமான ஜனங்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். விசுவாசமுள்ள ஜனங்களைப் பார்த்து: இப்படிப்பட்டவர்கள் இயேசுவை நம்புகிறார்களே ஏன் இவர்களுக்கு

இந்த குறைபாடு என்று ஏளனம் பண்ணும் ஒரு கூட்டம் இருக்கத்தான் செய்கிறது. இப்படிப்பட்ட ஜனங்களுக்காகவே இயேசு கண்ணீர்விட்டார். தன் குடும்பத்துக்கோ, அல்லது உறவினர்களுக்கோ ஒரு இன்னல் நேரிடும்போது உருக்கமாக தாங்கமுடியாமல் அழுவார்கள். மனிதர்களே இப்படியிருக்கும்போது உலகம் உண்டானது முதல் ஆபிரகாமின் வழியில் வந்த ஜனங்கள் வீழ்ந்துபோவதைக் கண்டு கண்ணீர்விடாமல் இருப்பாரா! இன்று இயேசு உனக்காக கண்ணீர்விடுவாரல்லவா! நாம் மனந்திரும்பி சமாதானத்தைப் பற்றிக்கொண்டு தன் தன் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டுமென்று விரும்புகிறார். உலகத்தையும் அதன் மேன்மையையும் உதறித்தள்ளி விட்டு அழியாத, வாடாத மாசற்ற ஜீவகிரீடத்தைப் பெற அநுதினமும் ஆவிக்குரிய வளர்ச்சியடையவேண்டும். இயேசு ஜெபித்ததைப்போல இவ்வுலகத்தில் மனந்திரும்பாத ஜனங்களுக்காக கண்ணீரோடு கர்த்தரை நோக்கி ஜெபிப்போம். ‘‘ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாதபடிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்குகிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும், ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்’’ என்று எபிரெயர்12:15–17–ல் வாசிக்கிறோம். இது அநேகருக்கு எச்சரிப்பாக எழுதப்பட்டுள்ளது. பின்வருவது வரட்டும் என்று சொல்லி, தேவன் தங்களுக்கு கொடுத்த ஆசீர்வாதத்தை இழந்துபோகும்போது மறுபடியும் அவைகளை தேவனிடமிருந்து அழுது புரண்டாலும் பெற்றுக்கொள்வது கடினம். ஏனெனில் இரங்குகிற தேவனாலே எல்லாம் ஆகும். ‘‘என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?’’ என்ற சங்கீதம் 56:8–ன்படி உன் குடும்பத்திற்கா, சபைக்காக, உலக சமாதானத்திற்காக, சாட்சியுள்ள ஜீவியத்திற்காக கண்ணீரோடு ஜெபி. கர்த்தர் விடுதலையைத் தருவார்.‘‘இப்பொழுது அழுகிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்’’ (லூக்.6;21). நிச்சயமாக உங்கள் கண்ணீர் வீண்போகாது. ஆண்டவருடைய கண்ணீர் இன்று நம்மை குணமாக்கினது. அதுபோல உங்கள் கண்ணீர் மற்றவர்களை பாவத்திலிருந்து விடுவிக்கும். ஊக்கமாக ஜெபியுங்கள்.



**கேள்வி நேரம்**

**நாமும் கண்ணீரோடு ஜெபிக்கவேண்டுமா?**

நம்மை சிருஷ்டித்த கர்த்தர் கண்ணீர்விட்டார் என்று நாம் தியானித்தோம். நாமும் கண்ணீர்விடவேண்டிய நேரத்தில் கண்ணீர்விட்டு ஜெபிக்கும்போது அதற்குரிய பலனை கர்த்தராலே பெற்றுக்கொள்வோம். எசேக்கியா என்ற ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர் மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். ‘‘அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணினான். எசேக்கியா மிகவும் அழுதான்’’(2இரா.20:2,3). அவனுடைய அழுகையைக் கண்ட கர்த்தர் அவனுக்கு இரங்கி பதினைந்து வருஷங்களைக் கூட்டிக்கொடுத்தார். தேவன் அழுகையின் கண்ணீரைக் காண்கிறவர். உங்களுடைய அழுகையின் கண்ணீரை ஆனந்த களிப்பாக மாற்றுவார்.

## 19. ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு
## Holding fast the Word of Life

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தையினாலே நம்மை ஜெநிப்பித்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். நாம் வாழும் இப்பூமியில் இரு கூட்டத்தாரைப் பார்க்க முடிகிறது. ஒருசாரார் ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டவர்கள், மற்றொருசாரார் ஜீவவசனத்தைப் பிடித்துக்கொள்ளாதவர்கள். இவ்விரு கூட்டத்தாரைப் பற்றியும் பரிசுத்த வேதாகமத்தில் நாம் காணலாம். இவர்களின் முடிவுதான் என்ன? மனிதன் எதையெதையோ பிடித்துக்கொண்டு ஜீவிக்கிறான். சிலர் பணத்தைப் பிடித்துக்கொண்டும், சிலர் உறவைப்பிடித்துக்கொண்டும், சிலர் அழகைப்பிடித்துக்கொண்டும், சிலர் கல்வியறிவுதான் மிகவும் முக்கியம் என்று அதைப்பிடித்துக்கொண்டும் ஜீவிக்கின்றனர். மனிதன் பிடிக்கவேண்டிய ஜீவசனத்தைப் பிடிக்காமல் வாழ்கின்றான். நீங்கள்

எதைப்பிடித்துக்கொண்டு இப்பூமியில் வாழ்ந்துகொண்டுவருகின்றீர்கள்? ஜீவவசனத்தைப் பிடித்துக்கொள்ளாதவர்களைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது "ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான்" என்று எழுதுகிறார் (2தீமோ.2:5). நீங்கள் ஒரு கிறிஸ்தவனாயிருக்கலாம் அல்லது கிறிஸ்துவைப் பற்றி கேள்விப்பட்டிருக்கலாம். எப்படியிருந்தாலும் கிறிஸ்துவின் உபதேசத்தின்படி நடக்கிறவர்களா யிருக்கவேண்டும். அவனே தேவனை உடையவன். வெறும் பெயரளவில் இருக்கிற கிறிஸ்தவன் கிறிஸ்துவை உடையவனல்ல. அப்படிப்பட்டவன் ஆகாயத்தில் சிலம்பம்பண்ணுகிறவனாயிருக்கிறான். இஸ்ரவேலரில் அநேகர் இப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள். "மாட்டை வெட்டுகிறவன் மனுஷனைக் கொல்லுகிறவனாகவும், ஆட்டைப் பலியிடுகிறவன் நாயைக் கழுத்தறுக்கிறவனாகவும், காணிக்கையைப் படைக்கிறவன் பன்றி இரத்தத்தைப் படைக்கிறவனாகவும், தூபங்காட்டுகிறவன் விக்கிரகத்தை ஸ்தோத்தரிக்கிறவனாகவும் இருக்கிறான்; இவர்கள் தங்கள் வழிகளையே தெரிந்துகொள்ளுகிறார்கள்; இவர்களுடைய ஆத்துமா தங்கள் அருவருப்புகளின்மேல் விருப்பமாயிருக்கிறது" (ஏசா.66:3). தேவனுடைய திருசித்தத்தை உணராதவர்கள் இப்படியே இருக்கிறார்கள். அவர்களுடைய காணிக்கைகளையும், தொழுகையையும் தேவன் அங்கிகரியார். பின்னும் அவர்களைக்குறித்து நாம் வாசிக்கிறோம் "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான்" (மத்.15:9). இப்படிப்பட்டவர்கள் மனுஷருடைய உபதேசங்களைக் கைக்கொண்டு ஜீவவசனத்தை புறம்பாக்கிப்போடுகிறார்கள். இன்றைக்கு அநேக இடங்களிலே நாம் இதைக்காணமுடிகிறது. அப்படிப்பட்ட இடங்களில் பரிசுத்தமில்லை. அசுத்தமே குடிகொள்ளுகிறது. "உமது வசனத்தைக் காத்துக்கொள்ளாத துரோகிகளை நான் கண்டபோது; எனக்கு அருவருப்பாயிருந்தது" என்று தாவீது குறிப்பிடுகிறார் சங்கீதம்119:158. கர்த்தருடைய வசனத்தைக் காத்துக்கொள்ளாதவர்களை இங்கு அவர் துரோகிகள் என்று கூறுகிறார். சுவிசேஷபுத்தகத்தில் லூக்கா யூதாஸைப் பற்றி எழுதும்போது துரோகியான யூதாஸ் காரியோத்து என்று எழுதுகிறார். ஏன் அவர் இப்படி எழுதுகிறார்? அவன் கர்த்தருடைய உபதேசத்தை தள்ளிவிட்டு, பிசாசின் தூண்டுதலினால் மனுஷர்கள் அவனுக்கு கொடுக்கும்படியாக ஒப்பந்தம் செய்த கூலியிலே அதிக கவனமாயிருந்து



அவரை காட்டிக்கொடுத்தான். ஆகையால் லூக்கா அவனை தூரோகி என்று எழுதுகிறார். இன்றைக்கு ஜீவவசனத்தை மறுதலிக்கிற, அதை புறம்பே தள்ளுகிற ஒவ்வொருவரும் துரோகிகளே. இப்படிப்பட்ட துரோகிகளை பார்க்கும்போது நமக்கும் அருவருப்பாக இருக்கிறது.

சாலொமோன் தமது நீதிமொழிகள் புத்தகத்தில் எழுதும்போது "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" என்று எழுதுகிறார் (நீதி.28:9). இன்றைக்கு ஆசீர்வாதம் வேண்டும், உங்களுடைய ஜெபம் வேண்டும், ஆனால் நாங்கள் நீங்கள் நடத்துகிற ஆராதனைக்கு வரமாட்டோம். எங்களால் ஆன காணிக்கைகளைக் கொடுக்கிறோம் என்று சொல்லுகிற ஒரு கூட்டம் இருக்கிறது. இப்படிப்பட்டவர்ளுடைய ஜெபத்தை கர்த்தர் அருவருக்கிறார். அவர்கள் கூப்பிட்டாலும் அவர் செவிகொடார். பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்ன ஆலோசனை "நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு. உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட அந்த நற்பொருளை நமக்குள்ளே வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியினாலே காத்துக்கொள்" (2தீமோ.1:13,14). நாட்டிலே ஒரு சட்டம் போட்டால் நாம் அதை ஏற்று அதன்படி நடக்கிறோம். நம்முடைய பிதாவாகிய தேவன் தம்முடைய வார்த்தைகளை அவருடைய ஒரேபேறான குமாராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக கொடுத்திருக்கிறார். அந்த உபதேச சட்டத்தை முழுவதுமாக கைக்கொள்ளவேண்டுமல்லவா! மேலும் அதை உண்மையும் நன்மையுமான இருதயத்தில் வைத்து ஆவியானவருடைய உதவியோடு அதைக் காத்துக்கொள்ளவேண்டும். அதை நற்பொருள் என்று சொல்லுகிறார். விலையேறப்பெற்ற ஒரு மோதிரத்தை நமக்கு ஒருவர் கொடுத்தால் அதை எந்த அளவு பாதுகாக்கிறோம். அதைப்பார்க்கிலும் விலையேறப்பெற்றதாக இருக்கிற ஜீவவசனத்தை, கர்த்தரிடத்தில் இருந்து பெற்ற அந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நாம் எந்த அளவு பாதுகாக்கவேண்டும். ஒருவருக்கு பரிசுத்த வேதாகமத்தை அவர் திருமுழுக்கு பெற்றபோது கொடுத்திருந்தேன். பத்து வருடங்கள் கழித்து நான் அந்த வேதாகமத்தை பார்க்கும்போது அடுப்பங்கறையில் உள்ள துணியைப்போல அதை வைத்திருந்தார். அவர் தன்னுடைய பணத்தையோ அல்லது விலையேறப்பெற்ற பொருட்களையோ அப்படிவைத்திருப்பாரா? அன்பானவர்களே, நாம் தேவனுடைய கட்டளைகளைப் பாதுகாக்கவேண்டும். "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவனோ வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, நூறாகவும் அறுபதாகவும் முப்பதாகவும் பலன்

தருவான்'' (மத்.13:23). நீங்கள் இவ்விதமாக உங்களுடைய இருதயத்தில் கர்த்தருடைய வசனத்தை பெற்று பலன் கொடுக்கின்றீர்களா? அப்படிச்செய்வீர்கள் என்றால் இன்னும் அதிக கனிகளை நீங்கள் கொடுக்கத்தக்கதாக பிதாவாகிய தேவன் உங்களை சுத்தம்பண்ணுவார், நீங்கள் என்னிலும் என்னுடைய வசனத்திலும் நிலைத்திருங்கள் என்று கர்த்தர் கூறுகிறார். மேலும், ''நீ என் நாமத்தை மறுதலியாமல் என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்'' (வெளி.3:8).

ஆகையால் எனக்கு அன்பான நேயரே '' நான் வீணாக ஓடினதும், வீணாகப்பிரயாசப்பட்டதுமில்லையென்கிற மகிழ்ச்சி கிறிஸ்துவின் நாளில் எனக்கு உண்டாயிருப்பதற்கு, ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு உலகத்திலே சுடர்களைப்போலப் பிரகாசிக்கிற நீங்கள், கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்ற பிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, எல்லாவற்றையும் முறுமுறுப்பில்லாமலும் தர்க்கிப்பில்லாமலும் செய்யுங்கள்'' (பிலி.2:14–16). ஒரு கிறிஸ்தவன் அல்லது கிறிஸ்தவள் ஆகாய மண்டலத்திலுள்ள சுடரைப்போல பிரகாசிக்க வேண்டும். ஆகையால் தான் நமதாண்டவரும் நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் என்றார். உங்களுடைய வெளிச்சம் இருளுள்ள ஸ்தலத்தில் எந்த அளவு வெளிச்சம் கொடுக்கின்றது. நீங்கள் கிறிஸ்துவினிடத்தில் பெற்ற வெளிச்சத்தை பிரதிபலிக்கச்செய்யுங்கள். சூரியனிடத்தில் பெற்ற வெளிச்சத்தை சந்திரனும் நட்சத்திரங்களும் இருளில் உள்ளவர்களுக்கு பிரதிபலிக்கச்செய்கிறது. தானியேல் சொல்வதைக் கவனியுங்கள்: ''ஞானவான்கள் ஆகாயமண்டலத்தில் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப் போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்'' என்கிறார் தானியேல்12:3. தேவனால் படைக்கப்பட்ட நாம் ஆண்டவருடைய சித்தம் முழுவதையும் நிறைவேற்ற பாடுபடவேண்டும். ஞானமுள்ளவர்களாக இருந்து கொண்டு காலத்தைப் பிரயோஜனப்படுத்தி, நம்மால் அநேகர் பயன்பெறும் விதத்தில் நற்காரியங்களை செய்வதில் அதிக நாட்டமுடையவர்களாக இருக்கும்போது ஆகாயமண்டலத்தில் உள்ள ஒளியைப்போலவும், நட்சத்திரங்களைப்போலவும் பிரகாசமுள்ளவர்களாக இருப்போம்.

''நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே'' (1தெச.5:5). தேவனை அறிந்த ஒருவன் தேவனுடைய சாயலாயிருக்கிறான். ஆகையால் அவனிடத்தில் பொதுவான



ஜனங்கள் நற்காரியங்களை எதிர்பார்ப்பார்கள். ஏனெனில் அவன் வெளிச்சத்தின் பிள்ளையாக இருக்கிறான். அப்படிப்பட்டவன் நடக்கையிலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் மற்றவர்களுக்கு மாதிரியாக ஜீவிக்கவேண்டும். ''புறஜாதியார் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாக பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல் நடக்கையுள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள் என்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்'' என்று பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.2:12). ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் ஜீவவசனத்தை பிடித்துக்கொண்டு கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்ற ஜீவியம் செய்ய பிரயாசப்படவேண்டும். உலகம் கர்த்தருடைய பிள்ளைகளை மிகவும் கவனமாக பார்த்துவருகிறது. குற்றவாளி ஒரு குற்றத்தை செய்தால் உலகம் அவனை அவன் ஒரு குற்றவாளி அவன் திருந்தமாட்டான் என்று முடிவு கட்டிவிடுகிறது. அதே வேளையில் ஒரு நிரபராதி ஒரு தவறான காரியத்தை செய்யும்போது, இவரா இப்படி செய்துவிட்டார்! இவர் இப்படி செய்வார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லையே! இவரே! இப்படி செய்யும்போது ஏன் குற்றவாளிகள் மேலும் குற்றம்செய்யமாட்டார்கள் என்று உலகம் பேசும். எனக்கு அன்பான தேவனுடைய பிள்ளையே, நீ உன் சமுதாயத்தில் எப்படிப்பட்ட மனிதனாக ஜீவித்துக்கொண்டு வருகிறாய். தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே உங்கள் மூலமாக தூஷிக்கப்பட இடம் கொடாதிருங்கள். உங்களுடைய பரிசுத்தம் அவர்கள் மத்தியில் சுடர்விட்டு எரியட்டும். '' நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும் இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்'' (1யோவா.1:6). இச்செய்தியை கேட்கும் வானொலி நேயரே நீர் எதைப்பிடித்துக்கொடிருக்கிறீர்? ஜீவவசனத்தையா? அல்லது உலகத்தையா? ஜீவவசனத்தைப் பிடித்துக்கொண்டு சுடர்களைப்போல பிரகாசிக்க வேண்டுமே தவிர புத்தியற்ற கன்னிகைகளைப்போல அணைந்துபோன விளக்கைப் பிடித்துக்கொண்டிருக்கக்கூடாது. அவர்கள் ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்று கதவைத்தட்டியும் அவர் கதவைத்திறக்கவில்லை. நான் உங்களை அறியேன் என்றார். புத்தியுள்ள கன்னிகைகளைப்போல எப்பொழுதும் ஆயத்தமாக இருங்கள். உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடி எச்சரிக்கையாயிரு என்று சொல்லப்பட்ட வசனத்தின்படி வெளிச்சம் கொடுக்கிறவர்களாக இருங்கள். ''அவர்

ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்'' (1யோவா.1:7).

### கேள்வி நேரம்

**ஜீவவசனம் என்று சொல்லுகிறீர்களே அதற்கு ஜீவன் உண்டா?**

''ஆவியே உயிர்ப்பிக்கிறது, மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்கிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது'' என்று ஆண்டவர் இயேசு யோவா.6:63–ல் சொல்வதை வாசிக்கின்றோம். அவருடைய வசனத்தை ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும்போது பாவம் மற்றும் மரணக்கட்டுகளிலிருந்து விடுதலையாகி உயிர்ப்பிக்கப்படுகிறான். பேதுரு சொல்லும்போது: ''அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே'' என்கிறார் 1பேதுரு1:23. ஆக வசனம் ஒரு மனிதனை உயிர்ப்பிக்கிறது. கர்த்தருடைய வல்லமையுள்ள வசனத்தை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். இது எப்படி சாத்தியப்படும் என்று நினைக்கின்றீர்கள். பவுல் சொல்லுகிறார் ''மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்களென்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்கு தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதை வகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார்... அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும். கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்'' (1கொரி.15:35–44). இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசிப்பீர்கள் என்றால் ஜீவவசனத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள்

## 20. பண்டிகைகள்
## Feasts



வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். பண்டிகைகள் `Feasts`. பரிசுத்த வேதாகமத்தில் பண்டிகைகளைப் பற்றி படிக்கின்றோம். ஆனால் அந்தப் பண்டிகைகள் யாருக்கு? எதற்காக? ஏன் கொடுக்கப்பட்டது? என்ற கேள்வியோடு நாம் அவைகளைப் படிக்க வேண்டியது மிக அவசியம். வேதம் முழுவதும் நமக்கே என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக்கூடாது. முற்பிதாக்களுக்கு கொடுக்கப்பட்ட அநேக காரியங்களை நாம் வேதாகமத்தில் காணலாம். அவைகளாலே நம் முற்பிதாக்களின் சரித்திரத்தை தெரிந்துகொள்ளமுடிகிறது. அறுப்பின் பண்டிகை, பஸ்கா பண்டிகை, கூடாரப் பண்டிகை, ஐம்பதாம் நாள் பெந்தெகொஸ்தே பண்டிகை இப்படி அநேக பண்டிகைகளை நம்முற்பிதாக்கள் அனுசரித்து வந்தார்கள். அந்தப் பண்டிகைகளை அனுசரித்ததற்கான சரியான காரணம் இருந்தது. ஆனால் அந்தப் பண்டிகைகளை நான் சுமந்து இளைத்துப்போனேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். இப்படியிருக்கிறபடியால் இன்று நாம் கிறிஸ்தவ வட்டாரத்திலே கிறிஸ்மஸ், ஈஸ்டர், போன்ற பண்டிகைகளை நாம் அனுசரிக்க வேண்டுமா? அதைக்குறித்து பரிசுத்தவேதம் என்ன சொல்லுகிறது. அவைகளை கிறிஸ்தவர்கள் அனுசரிக்கவேண்டுமென்று வேதம் வலியுருத்துகிறதா? இதற்கு வேதாமகத்திலிருந்து விடைகாண்போம்.

பண்டிகைகளைக் குறித்து ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் கர்த்தர் சொல்வதைப் பாருங்கள். ''உங்கள் மாதப்பிறப்புகளையும், உங்கள் பண்டிகைகளையும் என் ஆத்துமா வெறுக்கிறது; அவைகள் எனக்கு வருத்தமாயிருக்கிறது; அவைகளை சுமந்து இளைத்துப்போனேன், நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும், என் கண்களை உங்களைவிட்டு மறைக்கிறேன், நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவி சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு தீமை செய்வதைவிட்டு ஓயுங்கள்; நன்மைசெய்யப்படியுங்கள்; நியாயத்தைத் தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்'' என்கிறார் ஏசாயா1:14–17. இஸ்ரவேலரின் பண்டிகைகளை கண்ட கர்த்தர் அவைகளை வெறுப்பாக எண்ணினார். அவர்கள் அந்தப்பண்டிகைகளின் கருத்தை அறியாது அவைகளை அனுசரித்தபடியினால் அதை களியாட்டுபோல் நினைத்தனர். இன்றைக்கும் பண்டிகையை நினைவுகூருகிறவர்கள் அந்நாளிலே குடித்து, வெறித்து,

களியாட்டு செய்து, துன்மார்க்கமாய் நடந்து கர்த்தரை வருத்தப்படுத்துகிறார்கள். ஆகையால் உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு முதலாவது தீமை செய்தலைவிட்டு ஓயுங்கள் நன்மை செய்யப் படியுங்கள், நியாயத்தைத் தேடுங்கள், ஒடுக்கப்பட்டவர்களை ஆதரித்து, திக்கற்ற பிள்ளைகளின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள் என்று அன்று இருந்த நம் முற்பிதாக்களுக்கு இவ்விதமான கட்டளையைக் கொடுத்தார். இன்று அர்த்தமற்ற பண்டிகைகளைக் கொண்டாடிக்கொண்டிருக்கும் ஜனங்கள் சிந்திக்கவேண்டும். இது முதலாவது நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு பிடித்தமான ஒன்றா? அவர் என்னத்தை நம்மிடம் எதிர்பார்க்கிறார். நாம் செய்யவேண்டுவதென்ன? உலகமுழுவதும் பாவத்தின் கீழ் வீழ்ந்துபோய்கிடக்கிறது. அதை மீட்டு தம்மோடு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று தேவன் சித்தமுள்ளவராயிருக்கிறார். அவருடைய திருசித்தம் பூமியில் நிறைவேற வேண்டுமானால், இன்று இருக்கிற தேவனுடைய ஜனங்களாகிய நாம் அவருடைய திருவார்த்தைக்கு திரும்பவேண்டும். அவருடைய கட்டளைகளை கருத்தாகக் கைக்கொள்ளவேண்டும். அவர் நம்மிடத்தில் சொல்லாத காரியங்களை நாமாக ஏற்படுத்திக்கொண்டு தேவனுக்காக இதைச்செய்கிறோம் என்று சொல்வதால் பிரயோஜனம் ஒன்றுமில்லை. தாவீது சொல்கிறார்: ''பிரமாணங்களை விட்டு வழிவிலகுகிற யாவரையும் மிதித்துப்போடுகிறீர்; அவர்களுடைய உபாயம் வெறும் பொய்யே'' (சங்.119:118). பிரமாணத்தை முக்கியப்படுத்தி வைத்திருக்கிறார். அவருடைய வல்லமையுள்ள கட்டளைகளுக்கும், வசனங்களுக்கும், மனிதர் பயப்படவேண்டும். எப்படிப்பட்ட மனிதராக இருந்தாலும் சரி பிரமாணத்தை விட்டு வழிவிலகுகிற யாவரையும் அவர் நேசிக்கிறதில்லை. அப்படிப்பட்டவர்களுடைய பிரயாசம் விருதா.

''வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை'' (ஏசா.8:20). வேதாகமத்தில் சொல்லப்படாத சடங்குகளை நாம் அனுசரிப்பது பாவம். அவைகள் தேவனுக்கு வருத்தத்தை உண்டாக்கும். அன்பான நேயரே தேவனுக்கு வருத்தத்தை உண்டாக்கும் பண்டிகைகளை நீ இன்று அனுசரிக்க விரும்புகிறாயா? சற்று சிந்தித்துப்பார்; ''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்'' (ஏசா.55:8). நம் வழிகள் நமக்குச் சரியாகத்தோன்றலாம் ஆனால் அது கர்த்தருக்கு உகந்ததல்ல,



அதுபோலவே நம் நினைவுகளுமிருக்கிறது. நாமாக ஒரு பண்டிகையை வைத்துக்கொண்டால் அதை தேவன் ஏற்றுக்கொள்வாரா? இந்தக்கூற்றை அநேகர் மறுப்பர். நாம் நம்முடைய பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம், இறந்தநாளை நினைவுகூருகிறோம். அப்படியிருக்கும்போது நம்மை உண்டாக்கின தேவனுடைய பிறந்தநாளை கொண்டாடாமலிருந்தால் எப்படி? என்பார்கள். பிரிய நண்பரே, அவருக்குப் பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை. ''நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமும், முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேன்'' (வெளி.22:13) இப்படிப்பட்ட கர்த்தருக்கு நாம் ஒரு பண்டிகையை கொண்டாட முடியுமா?அப்படி கொண்டாடினாலும் அவர்தான் அதை ஏற்றுக்கொள்வாரா! யார் என்ன சொன்னாலும் நான் அவருக்குப் பண்டிகைகளை நினைவுகூருவேன் என்று சிலர் சாதிப்பதும் உண்டு. அப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் ''நீங்கள் கேளாமலும் என் நாமத்துக்கு மகிமையைச் செலுத்தும்படி இதை சிந்தியாமலுமிருந்தால்... இதோ, நான் உங்களுடைய பயிரைக் கெடுத்து, உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன்; அதனோடு கூட நீங்களும் தள்ளுபடியாவீர்கள்'' (மல்.2:2,3). சபைகளில் வசனத்தை எடுத்து பிரங்கியார் பிரசங்கிக்கும்போது என்னைத்தான் சொல்லுகிறார் என்று விசுவாசிகளில் அநேகருக்கு கோபம் ஏற்படுகிறது ஆனால் மேற்கண்ட வசனத்தில் நீங்கள் கேளாமலும் சிந்தியாமலுமிருந்தால் உங்கள் பண்டிகைகளின் சாணியையே உங்கள் முகங்களில் இறைப்பேன் என்கிறார். வேதம் சொல்வது மிக முக்கியமா? நீங்கள் அனுசரித்து வருகிற பண்டிகை முக்கியமா? நீங்களே தீர்மானம் செய்யுங்கள். நாங்கள் உங்களைக் குற்றப்படுத்தவேண்டும் என்று இவைகளைச் சொல்லவில்லை. தேவன் வெறுக்கிற காரியத்தை நாம் ஏன் செய்யவேண்டும்? சிந்தியுங்கள். இந்தப் பண்டிகைகளையெல்லாம் புறஜாதி மக்களிடமிருந்து, தேவ ஜனங்கள் கற்றுக்கொண்டார்கள். ஆகையால் கர்த்தர் சொல்லும்போது; ''மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே; உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை'' (எசே.20:32). இதை தேவன் அனுமதிப்பதில்லை. பொதுவாக முற்பிதாக்களின் காலத்தில் அனுசரித்த சில பண்டிகைகளைப் பார்க்கும்போது அது அர்த்தமுள்ளதாயிருந்தது. அதையே காலப்போக்கில் சரிவர அவர்களால் நினைவு கூர முடியவில்லை. அதிலே தேவனும் பிரியப்படவில்லை. கிறிஸ்துவின் சிலுவை மட்டும் அந்தப் பண்டிகைகள் அனுமதிக்கப்பட்டது. ''இப்பொழுதோ நீங்கள் தேவனை அறிந்திருக்க அல்லது தேவனாலே அறியப்பட்டிருக்க பெலனற்றதும்

வெறுமையானதுமான அவ்வழிபாடுகளுக்கு நீங்கள் மறுபடியும் திரும்பி, மறுபடியும் அவைகளுக்கு அடிமைப்படும்படி விரும்புகிறதெப்படி?'' (கலா.4:9). தீர்க்கதரிசிகளின் மூலமாக பிதாக்களுக்கு திருவுளம்பற்றிவந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாக திருவுளம்பற்றியிருக்கிறார். அவர் அவருடைய அன்பைப்பற்றியும் அவரை அறிகிற அறிவைப்பற்றியும் நமக்கு எடுத்துச்சொல்லியிருக்கிறார். ஆகையால் வெறுமையான அவ்வழிபாடுகளுக்கு நாம் திரும்பவேண்டிய அவசியமில்லை. ஆனால் இன்றும் யூதர்களில் அநேகர் அந்தவிதமான பண்டிகைகளை அனுசரித்து வருகிறார்கள். நியாயப்பிரமாணம் கிறிஸ்துவை நோக்கி சொல்லப்பட்டவைகள். அதன் கீழ் அனுசரிக்கப்பட்ட பண்டிகைகளும் சிலுவை மட்டுமே. ''ஆகையால், போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும், மாதப்பிறப்பையும், ஓய்வுநாட்களையும் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப்படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங்காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது; அவைகளின் பொருள் கிறிஸ்துவைப் பற்றினது'' என காண்கிறோம் (கொலோ.2:16,17). பண்டிகைகள் எல்லாமே கிறிஸ்துவைக் குறிக்கிறது. கிறிஸ்து புது உடன்படிக்கையை சிலுவையில் நிறைவேற்றியவுடன் அவைகள் பெலனற்றுப்போய்விட்டது. இப்பொழுது மாபெரும் ஒரு பண்டிகை சொல்லப்பட்டிருக்கிறது அது எதுவென்றால் 'கர்த்தருடைய பந்தி'. இன்றைக்கு இதற்கு நம்மில் எத்தனைபேர் முதலிடம் கொடுக்கிறோம். இதை முதல் நூற்றாண்டு சீஷர்கள் பண்டிகையாக அல்ல கர்த்தருடைய மரணத்தை நினைவுகூரும்படியாக வாரந்தோறும் கைக்கொள்ளும்படியாக கூடிவந்தார்கள் என அறிகிறோம்.

பஸ்கா பண்டிகை நாட்களில் முதல் நூற்றாண்டு சீஷர்கள் வழக்கம்போல சபையாக கூடி சிறைச்சாலையில் இருக்கிற பேதுருவுக்காக ஜெபித்திருக்கிறதை நாம்அப்போஸ்தலநடபடிகள் புத்தகத்தில் வாசிக்கிறோம். ''அக்காலத்திலே ஏரோதுராஜா சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத்தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே கொலைசெய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று அவன் கண்டு, பேதுருவையும் பிடிக்கத்தொடர்ந்தான். அப்பொழுது புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாட்களாயிருந்தது. அவனைப் பிடித்துச் சிறைச்சாலையிலே வைத்து, பஸ்காபண்டிகைக்கு பின்பு ஜனங்களுக்கு முன்பாக அவனை வெளியே கொண்டுவரலாமென்று எண்ணி, அவனைக் காக்கும்படி வகுப்புக்கு நான்கு போர்ச்சேவகராக ஏற்படுத்திய நான்கு வகுப்புகளின் வசமாக ஒப்புவித்தான்.



அப்படியே பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையிலே சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்'' (அப்.12:1–5). இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்ளுகிறோம். யூதர்கள் பஸ்காபண்டிகையை அனுசரித்திருக்கிறார்கள். அதேவேளையில் யூதர்களிலிருந்து மனந்திரும்பிய கிறிஸ்தவர்களும் மற்றவர்களும் தேவனை துதிக்கும்படியாகவும், பேதுருவுக்காக ஜெபிக்கும்படியாகவும், சபையாக மரியாள் வீட்டில் அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள் எனவும் 12–ம் வசனத்தில் வாசிக்கிறோம். ஆக இவர்கள் பழைய ஏற்பாட்டு பண்டிகைகளை அனுசரிக்கவில்லை எனத்தெரிகிறது. பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது ''ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்'' என்று எழுதுகிறார் (1கொரி.5:8). ஆக உங்களுடைய பண்டிகையானது இப்படிப்பட்டதாக இருக்க வேண்டும். துப்புரவாகவும் உண்மையாகவும் புளிப்பில்லாததாகவும் இருக்கவேண்டும். இந்தவிதமான நினைவு கூருதல் கர்த்தருடைய பந்தியாகத்தான் இருக்கமுடியும். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே என்று மேலுள்ள வசனத்தில் குறிப்பிடுகிறார்.

## கேள்வி நேரம்

**சிலர் நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறார்களே அவர்களைக் குறித்து வேதம் என்ன சொல்லுகிறது?**

''அன்றியும், ஒருவன் ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷமாக எண்ணுகிறான்; வேறொருவன் எல்லா நாட்களையும் சரியாக எண்ணுகிறான்; அவனவன் தன்தன் மனதிலே முழு நிச்சயத்தை உடையவனாயிருக்கக்கடவன். நாட்களை விசேஷித்துக்கொள்ளுகிறவன் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளுகிறான்; நாட்களை விசேஷித்துக்கொள்ளாதவனும் கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்ளாதிருக்கிறான். புசிக்கிறவன் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறபடியால், கர்த்தருக்கென்று புசிக்கிறான்; புசியாதிருக்கிறவனும் கர்த்தருக்கென்று புசியாதிருந்து, தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறான். நம்மில் ஒருவனும் தனக்கென்று பிழைக்கிறதுமில்லை ஒருவனும் தனக்கென்று மரிக்கிறதுமில்லை'' (ரோம.14:5–7). ஆனபடியால் நாட்களைப் பொருத்தவிஷயத்தில் நிச்சயமுடையவர்களாக இருக்கவேண்டும். சிலர் ஒரு நாளை தனக்கு உபவாச நாளாக நியமித்துக்கொள்ளுகிறார்கள். சிலர் உபவாசமே

இருப்பதில்லை. ஆகையால் இவர்களில் ஒருவரையொருவர் குற்றப்படுத்துவதில் அர்த்தமில்லை. அவரவர் நாட்களை கர்த்தருக்கென்று விசேஷித்துக்கொள்கிறார்கள். பண்டிகையாக அல்ல. இவர்களுடைய பக்தி ஓசியா தீர்க்கன் சொல்வதுபோல போய்விடக்கூடாது ''உங்கள் பக்தி காலையில் காணும் மேகத்தைப்போலவும், விடியற்காலையில் தோன்றும் பனியைப்போலவும் ஒழிந்துபோகிறது'' (ஓசி.6:4). ஆகையால் அன்பானவர்களே, உங்களுடைய நாட்கள் கர்த்தருடையதாயிருக்கட்டும்.

## 21. மனத்தாழ்மை
## Lowliness of Mind

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தம்மைத்தாமே சிலுவை வரை தாழ்த்தின, நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தினாலே வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறோம். மனத்தாழ்மை `Lowliness of Mind` எனக்கு அன்பான நேயப் பெருமக்களே, நம்முடைய வாழ்க்கையில் மனத்தாழ்மையோடு நாம் ஜீவிக்க வேண்டியது மிக மிக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் உலகத்திலிருந்து நம்மை மீட்க வந்த இரட்சகர் இயேசுகிறிஸ்துவே தாழ்மைக்கோலம் பூண்டார் என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். ஆண்டவரே இந்தவிதமான சிந்தையோடு இவ்வுலகில் நம்மை மீட்க பிரவேசித்திருக்கும்போது, நாமும் அவரைப்போல மாறிட வேண்டாமா? நான் எப்படி அந்த அளவுக்கு என்னைத் தாழ்த்துவது, என்னால் வசதி வாய்ப்பில்லாமல் ஜீவிக்க முடியாது, என்னால் ஏழ்மையான மக்களோடு ஒருமித்து வாழமுடியாது என்றெல்லாம் அடுக்கிக்கொண்டே போகலாம். உலகத்தில் ஜீவிக்கின்ற நாம் யாவரும் ஒரே மாதிரியாக தாயின் வயிற்றில் பத்து மாதங்களாக வளர்க்கப்பட்டோம். ஒவ்வொருவரும் தேவதிட்டப்படி வளர்க்கப்பட்டு, இவ்வுலகத்தில் பிறக்கின்றார்கள். ஆனால் மெய்யான கருப்பையிலிருந்து, பொய்யான மாயஉலகத்திற்கு வந்த பிறகு தேவதிட்டப்படி ஜீவிக்க மறுக்கிறார்கள், எதிர்க்கவும் செய்கிறார்கள். ஆனால் நம் ஆண்டவர் இயேசு கன்னியின் வயிற்றில் உற்பவித்த நாள் தொடங்கி, மரணபரியந்தம் பிதாவின் சித்தப்படி தம்மைத்தாமே தாழ்த்தினார். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க்



காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' (பிலி.2:6–8). இன்று அநேகர் தங்களைத் தாழ்த்துவதில் அது முடியாத காரியம் என்று சொல்லுகின்றனர். நாங்கள் ஜமீன் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், நான் இந்த ஜாதியான் என்றும், நாங்கள் பரம்பரையாக ஐசுவரிய சம்பன்னரென்றும், சிலர் ஆவிக்குரிய பெருமையடித்துக் கொண்டும், தங்களைத் தாழ்த்த மனமில்லாதவர்களாயிருக்கின்றனர். இயேசுவை நோக்கிப்பாருங்கள்: அவர் தேவனுடைய ரூபமாயிருந்தார். அவர் தேவனுக்குச் சமமாயிருந்தார், அப்படியிருந்தும் அவர் அதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்தார் என வாசிக்கின்றோம். அடிமை என்றுசொல்லும்போது, பணிவிடைக்காரனைப்போல தம்மைத் தாழ்த்தினார். பிரிய நண்பரே, இப்பொழுது உங்கள் தீர்மானம் என்ன? உலக இரட்சகரே தன்னைத் தாழ்த்தியிருக்கும்போது, நாம் மேட்டிமை சிந்தையோடிருக்கலாமா? பவுல் சொல்லும்போது; ''மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்''என்கிறார் (எபே.4:2,3). மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் அவசியம். இப்படிப்பட்ட சிந்தையுள்ளவர்கள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். தாழ்மை என்பது மனதில் எழும்பக்கூடிய ஒன்று. ஆவி ஆத்துமா சரீரத்தில் முழுமையான தாழ்மை இருக்கவேண்டும். பவுல் சொல்லும்போது; ''ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்'' (பிலி.2:3). இவ்வசனத்தின்படி நாம் பார்க்கும்போது நான் பெரிய ஆள் என்று சொல்வதற்கு இடமே இல்லை. நம்மைபோல மாம்சத்திலுள்ள சகோதர, சகோதரிகளை நாம் நம்மிலும் மேலானவர்களாகவே கருதவேண்டும். அப்படிப்பட்ட மனத்தாழ்மை வந்துவிட்டால் மற்றவர்களைப் பார்க்கும்போதெல்லாம் இவன் நம்மிலும் மேலானவன் என்ற எண்ணமே உருவாகும். ஆகையால் தான் ''உள்ளவைகளை அவமாக்கும்படி உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும், தேவன் தெரிந்து கொண்டார். மாம்சமான எவனும் தேவனுக்கு முன்பாகப் பெருமை பாராட்டாதபடிக்கு அப்படிச் செய்தார்'' (1கொரி.1:28–29).

கர்த்தர் ஒரு உவமையின் மூலம் தாழ்மையைக்குறித்து விளக்கும்போது; ''இரண்டு மனுஷர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்துக்குப்

போனார்கள்; ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தன்க்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்'' (லூக்.18:10–14). நம்மில் எத்தனைபேர் இந்த ஆயக்காரனைப்போல தன்னைத் தாழ்த்தி ஜெபிக்கிறோம். அநேகர் தங்களைத் தாங்களே மெச்சிக்கொள்வார்கள். அன்பானவர்களே உங்களை தாழ்த்துங்கள் அப்பொழுது உயர்த்தப்படுவீர்கள். பரிசேயனைப்போல மற்றவர்களை குற்றப்படுத்தாதீர்கள். பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; ''இப்படியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே'' என்கிறார் (ரோம.14:10). ஆண்டவர் எல்லோருக்கும் இரட்சகராயிருக்கிறார். நம்மில் ஒருவரையும் அற்பமாய் எண்ணாதிருக்கவேண்டும். ஏனென்றால், அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவனுக்கே கணக்குக் கொடுக்கவேண்டும். ஆகையால் சகோதரர்களுக்கு விரோதமான முறுமுறுப்பைக் குறைத்து அவர்களுடைய பெலவீனங்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ''அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் நமக்கே பிரியமாய் நடவாமல், பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும். நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக் கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன். கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்: உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதியிருக்கிறபடியே நடந்தார்'' (ரோம.15:1–3).

சிலவேளைகளில் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்கிறோம் எப்படியென்றால், நான் ஒரு சிறந்த ஞானி என்னைப்போல ஞானத்தில் சிறந்தவர் எவருமில்லை என்று நினைத்து மற்றவர்களை அற்பமான நினைப்பது. வசனம் சொல்லுகிறது; ''ஒருவனும் தன்னைத்தானே



வஞ்சியாதிருப்பானாக; இவ்வுலகத்திலே உங்களில் ஒருவன் தன்னை ஞானியென்று எண்ணினால் அவன் ஞானியாகும்படிக்குப் பைத்தியக்காரனாகக்கடவன். இவ்வுலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாகப் பைத்தியமாயிருக்கிறது. அப்படியே, ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்றும், ஞானிகளுடைய சிந்தனைகள் வீணாயிருக்கிறதென்று கர்த்தர் அறிந்திருக்கிறாரென்றும் எழுதியிருக்கிறது'' (1கொரி.3:18–20). உலக ஞானம் தேவனுக்கு முன்பாக குப்பையாக பைத்தியமாக இருக்கிறது. அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் என்பதைப்போல, இவ்வுலகத்திலே ஞானிகளாக மாற விரும்புகிறவர்கள் பைத்தியக்காரர்களாக மாறுகிறார்கள். சாலொமோனைப்பார்க்கிலும் பெரிய ஞானி ஒருவருமில்லை என்று சொல்லலாம். அவன் கட்டிய அரண்மனை என்னவாயிற்று? அவன் தேவனுக்காக கட்டிய தேவாலயம் என்னவாயிற்று? இதையெல்லாம் பார்க்கும்போது தேவனுக்கு முன்பாக மனுஷருடைய ஞானம் ஒன்றுமில்லை. அவர் தாழ்மையானவர்களையே கண்ணோக்கிப்பார்க்கிறார். அப்போஸ்தலனாகிய பவுல் புதியஏற்பாட்டிலே 14 கடிதங்களை எழுதியிருக்கிறார். அவர் மற்ற அப்போஸ்தலரைப் பார்க்கிலும் அதிக நிருபங்களை எழுதியிருக்கிறார். அநேக அற்புதங்களும் செய்திருக்கிறார். தேவன் இவரை அதிகமாக பயன்படுத்தியிருக்கிறார். ஆனால் தன்னை மற்ற அப்போஸ்தலரைக் காட்டிலும் பெரியவராக காட்டிக்கொள்ள அவர் விரும்பவில்லை என வாசிக்கிறோம்; ''நான் அப்போஸ்தலரெல்லாரிலும் சிறியவனாயிருக்கிறேன்; தேவனுடைய சபையைத் துன்பப்படுத்தினதினாலே, நான் அப்போஸ்தலனென்று பேர்பெறுவதற்கும் பாத்திரன் அல்ல'' என்று எழுதுகிறதை பார்க்கிறோம் (1கொரி.15:9). இன்றைக்கு இப்படி தன்னைத் தாழ்த்தக்கூடிய எத்தனை கிறிஸ்தவ ஊழியர்கள் இருக்கிறார்கள் என்று பார்த்தால் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள் கூட இல்லை. மேலும் பவுல் ஒரு மாய்மால அப்போஸ்தலனாகவுமில்லை. அவர் சொல்கிறார்; ''உங்களுக்கு முன்பாக இருக்கும்போது தாழ்மையாயும், தூரத்திலே இருக்கும்போது உங்கள்மேல் கண்டிப்பாயும் இருக்கிற பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்'' (2கொரி.10:1). பவுலை பொருத்த மட்டில் எந்நிலைமையிலும் இருக்க கற்றுக்கொண்டவர். ஆதலால் சபையாருக்கு சாந்தத்தோடு புத்திமதிகளை சொல்லவும் அறிந்திருந்தார். அதேவேளையில் கண்டித்து, கடிந்துகொண்டு புத்திசொல்லவும் அறிந்திருந்தார். ஆகையால் தான் ''பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப்

பலவீனனைப்போலானேன்; எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்'' என்கிறார் (1கொரி.9:22). ஆண்டவருடைய சித்தத்தை முதலாவது வைப்போமானால் எப்படியாவது சிலரை இரட்சிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு எல்லாருக்கும் எல்லாமாவோம்.

ஆண்டவர் இப்பூமிக்கு கடந்து வந்தபோது குறிப்பிட்ட சிலரை மட்டும் இரட்சிக்கவில்லை முழுவதுமாக புறம்பாக்கப்பட்டவர்களையும் கூட இரட்சித்தார். எல்லோராலும் கல்லெறியத்தக்க பாவியாகிய ஸ்திரீயையும் மன்னித்து இனி பாவம் செய்யாதே என்றார். சிலுவையில் தெங்கின கள்ளனை இன்று என்னுடனே பரதீசில் இருப்பாய் என்றார். அன்பான சகோதரனே இவ்வுலகத்தில் அநேகர் இரட்சிக்கப்பட உன்னை முழுவதுமாக தாழ்த்து, அப்பொழுது கிறிஸ்து உன்னில் பிரகாசிப்பார். பாவச்சேற்றில் வீழ்ந்துபோன ஒருவனை இரட்சிக்கவேண்டுமானால் முதலாவது நம்மை தாழ்த்தவேண்டும். அப்பொழுதே அவனை இரட்சிக்க முடியும். இன்றைக்கு கோபுரங்களில் உட்கார்ந்து கொண்டு நாங்கள் கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நமது ஆண்டவர் வானத்திலிருந்து இறங்கி வந்து, நம்மைப்போன்றவர்களோடு பேசினார், நம்மைப்போன்றவர்களோடு உறவாடினார், உண்டார், உறங்கினார். மனிதனோடு மனிதனாக இருந்தார். கிராமங்கள்தோறும் சுற்றித்திரிந்து சுவிசேஷம் அறிவித்தார். இன்றைக்கு நீங்கள் உங்களை தாழ்த்தி இந்த விதமாக ஊழியம் செய்கிறீர்களா, அல்லது என்னுடைய அழைப்பே தனி நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவன், அப்போஸ்த வரத்தை உடையவன், மிஷனரி தரிசன அழைப்புப்பெற்றவன் என்று சொல்லிக்கொண்டு உங்களை தாழ்த்தாமல் இருந்துகொண்டு செயல்படுகின்றீர்களா? எனக்கு அன்பானவர்களே, காலம் கடந்துபோகிறது மனத்தாழ்மை வரவேண்டும். ஞானி சாலொமோன் சொல்லுகிறான்; ''கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தைப் போதிக்கும்; மேன்மைக்கு முன்னானது தாழ்மை'' (நீதி.15:33). நீங்கள் உயர்த்தப்பட வேண்டுமானால் முதலாவது உங்களை தாழ்த்துங்கள் அப்பொழுது உயர்த்தப்படுவீர்கள்.

### கேள்வி நேரம்

**தன்னைதான் தாழ்த்துவதுபோல மாய்மாலம் பண்ணுகிறார்களே அவர்களுடைய நிலைமை என்ன?**

யோபு சொல்லுகிறார்; ''அவரே என் இரட்சிப்பு; மாயக்காரனே அவர் சந்நிதியில் சேரான்'' என்கிறார் (யோபு13:16). ஜனங்களுக்கு ஏற்றாற்போல பேசுவது, தன்னை தாழ்த்தி நடிப்பது, அவர்களுக்காக துக்கப்படுவதுபோல முகபாவனை செய்வது இவையெல்லாம் மாயக்காரர்கள்



செய்யக்கூடியவை இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய சந்திக்கு வரமுடியாது. ஏனென்றால் அங்கே துன்மார்க்கன் இருப்பதில்லை. பரிசுத்தவான்களே அங்கே காணப்படுவார்கள். இயேசுவானவர் ''மாயக்காரரே, உங்களைக்குறித்து: இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணு கிறார்கள்; அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது; மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீர்க்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்றார். பின்பு அவர் ஜனங்களை வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் கேட்டு உணருங்கள் வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார். அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: பரிசேயர் இந்த வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரா என்றார்கள். அவர் பிரதியுத்தரமாக: என் பரம பிதா நடாத நாற்றெல்லாம் வேரோடே பிடுங்கப்படும்'' என்றார் (மத்.15:7–13). அன்பானவர்களே அவர்களுடைய முடிவு அழிவு. ''மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, மனுஷர் பிரவேசியாதபடி பரலோகராஜ்யத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள்; நீங்கள் அதில் பிரவேசிக்கிறதுமில்லை, பிவேசிக்கப்போகிறவர்களைப் பிரவேசிக்க விடுகிறதுமில்லை'' என்கிறார் (மத்.23:13). இப்படிப்பட்டவர்கள் அதில் பிரவேசிக்கிறதில்லை.

## 22. புதிய உபதேசம்
## New Doctrine

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். புதிய உபதேசம் New Doctrine. புதிய உபதேசம் என்றவுடன், என்ன! இவர்கள் ஏதோ ஒரு உபதேசத்தைச் சொல்லி, இருக்கிற கிறிஸ்தவத்தில் ஒரு பிரிவினையை உருவாக்கப்போகிறார்கள் என நினைக்கிறீர்களா? இல்லை. அந்த வேலையைச் செய்வது எங்களுக்குத் தூரமாயிருப்பதாக. பரிசுத்த வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ளபடி கிறிஸ்துவின் உபதேசத்தை ஜனங்கள் கேட்டபோது இது என்ன, புதிய உபதேசம் என ஆச்சரியப்பட்டனர். இந்த உபதேசம் புதிய வாழ்க்கையைக் கொடுக்கிறது. புதிய உடன்படிக்கையை

அறிவுறுத்துகிறது. மேலும் புதிய ஏற்பாடு புதிய வழியைக் காட்டுகிறது. இந்த புதிய உபதேசமடங்கிய புதிய ஏற்பாட்டை நீங்களும் நானும் ஏற்றுக்கொண்டால் புது வாழ்வு வாழ்ந்து, புதிய உலகத்திற்குச் செல்லலாம். இவ்வுலகத்தில் இயேசுவின் புதிய உபதேசத்தைக் கேள்விப்படாதவர்கள் யாருமே இருக்கமுடியாது. மூலைமுடுக்கெல்லாம் ஒவ்வொரு நாளும் தொனித்துக் கொண்டிருக்கிறது. பிசாசுகளே இவருக்குக் கீழ்ப்படியும்போது இவருக்குக் கீழ்ப்படியாதவர்கள் யார்? இயேசு ஒரு முறை, ''ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து, போதகம்பண்ணினார். அவர் வேதபாரகரைப்போல போதியாமல், அதிகாரமுடையவராய் அவர்களுக்குப் போதித்தபடியினால் அவருடைய போதகத்தைக் குறித்து ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுடைய ஜெப ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் இருந்தான். அவன்: ஐயோ! நசரேயனாகிய இயேசுவே எங்களுக்கும் உமக்கும் என்ன? எங்களைக் கெடுக்கவா வந்தீர்? உம்மை இன்னாரென்று அறிவேன் நீர் தேவனுடைய பரிசுத்தர் என்று சத்தமிட்டான். அதற்கு இயேசு: நீ பேசாமல் இவனை விட்டுப் புறப்பட்டுப்போ என்று அதை அதட்டினார். உடனே அந்த அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து மிகுந்த சத்தமிட்டு அவனை விட்டுப் போய்விட்டது. எல்லாரும் ஆச்சரியப்பட்டு இது என்ன? இந்த புதிய உபதேசம் எப்படிப்பட்டது? இவர் அதிகாரத்தோடே அசுத்த ஆவிகளுக்கும் கட்டளையிடுகிறார், அவைகள் இவருக்குக் கீழ்ப்படிகிறதே என்று தங்களுக்குள்ளே ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டார்கள்'' (மாற்.1:21–27). ஆம் பிரியமானவர்களே, இயேசுவின் வார்த்தைக்கு வல்லமையுண்டு அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். கர்த்தருடைய வார்த்தை இன்றும் பூமியில் தொனித்துக்கொண்டிருக்கிறது. அது சுடர்களைப்போல பிரகாசித்துக்கொண்டிருக்கிறது. எபிரெய ஆசிரியர் சொல்லுகிறார், ''புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள். பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகியவர்கள் தப்பிப்போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து பேசுகிறவரை நாம் விட்டுவிலகினால் எப்படித் தப்பிப்போவோம்? அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று; இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குதத்தஞ்செய்திருக்கிறார்'' (எபி.12:24–26). ஆம் எனக்கு



அன்பானவர்களே புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடம் வந்துள்ளீர்கள். இந்த வானமும் பூமியும் அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டுள்ளது. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இந்த உபதேசத்தை பிதாவிடமே பெற்றுக்கொண்டார். தாமாக ஒரு புதிய வழியை ஏற்படுத்தவில்லை. ஆனால் இன்றைய உலகம் அவரை வைத்து பல பிரிவினைகளை அனுதினமும் ஏற்படுத்திக் கொண்டுவருகிறது. பலமார்க்கத்தார்களும் அவருடைய போதகத்தில் சிலவற்றை மட்டும் எடுத்துக்கொண்டு இவ்வுலகில் வாழ்ந்து வருகின்றனர். ஆண்டவர் குறிப்பிடும்போது, ''நான் சுயமாய்ப்பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்க வேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளை பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார்'' (யோவா.12:49–50). தேவன் கொடுத்த இந்த புதிய உபதேசத்தையே நமதாண்டவர் நமக்குச் சொல்லியிருக்கிறார். ஆகையால்தான் பவுல் குறிப்பிடும்போது, ''நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவை கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்'' (2கொரி.4:5). அதைப்போல யோவான் பேசும்போது, ''கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள்'' என்கிறான் (2யோவா.9,10).

இந்தப் பூமியில் எத்தனையோ தீர்க்கதரிசிகள் தேவனால் ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்கள் ஒரு புதிய உபதேசத்தைக் கொண்டுவந்தார்களா? இல்லையே! அல்லது முழு அதிகாரத்தை தேவனிடம் பெற்றிருந்தார்களா? இல்லையே! இயேசு சொல்கிறார் ''வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்'' (மத்.28:18–20). அவர் முழு அதிகாரத்தை பிதாவினிடத்தில் பெற்றபடியினாலே புதிய

கட்டளையை சீஷர்களுக்குக் கொடுத்திருக்கிறார். பிதாவாகிய தேவனும் அவரைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறார். அவருடைய சாட்சி மெய்யாயிருக்கிறது. "இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்" (மத்.17:5,6). வேறுயாருக்காவது பிதாவாகிய தேவன் இந்த விதமான சாட்சிகொடுத்திருக்கிறாரா? ஆகையால் தான் இவர் மோசேயிலும் பெரியவர், தேவாலயத்திலும் பெரியவர்,யோனாவிலும் பெரியவர் என்று பாடுகிறோம். இந்தக் கடைசிக் காலங்களில் தேவன் தம்முடைய குமாரன் மூலமாக திருவுளம்பற்றுகிறார். இதை அறியாத கிறிஸ்தவர்களில் அநேகர் மரியாளுக்கு செவிகொடுக்கவேண்டுமென்று சொல்லி, மரியாளை வணங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்த மரியாள் ஒரு கட்டளையையும் உலகத்திற்கு கொடுக்கவில்லை. ஒரு புதிய உபதேசத்தையும் கொடுக்கவில்லை. ஏனெனில் அந்த அதிகாரத்தை தேவனிடம் மரியாள் பெறவில்லை. ஆனால் ஒன்று, இயேசுவை சுமக்கும் பாக்கியத்தை பெற்றாள். ஆகையால் தான் 'கிருபை பெற்றவளே வாழ்க' என்று தேவதூதன் அவளை வாழ்த்தினான். இயேசு ஒருமுறை கானாவூர் கலியாண வீட்டில் இருக்கும்போது அங்கே திராட்சரசம் குறைவுபட்டது. அப்பொழுது மரியாள் அற்புதம் செய்ததாக வேதாகமம் சொல்லவில்லை, அவள் இயேசுவிடம் இதை அறிவித்தாள். "அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்" (யோவா.2:4,5). முழு அதிகாரத்தையும் இயேசு உடையவராக இருந்தபடியால் தண்ணீரை திராட்சரசமாக மாற்றினார். கலியாண வீடே சந்தோஷத்தினால் நிறைந்தது. ஆம், அன்பான தேவ ஜனமே அவருடைய வார்த்தைக்கு வல்லமை இருந்தபடியால், அவர் சொல்ல அப்படியே நடந்தது. இதை நீங்கள் நம்பினால் அவருடைய புதிய உபதேசத்திற்குச் செவிகொடுங்கள். அப்பொழுது அதனுடைய நன்மைகளைப் பெற்று அனுபவிப்பீர்கள். இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை பார்த்துச் சொல்லுகிறார்: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:31,32). ஒருவன் இயேசுவின் உபதேசத்தில் நிலைத்திருந்தால் தான் அவன் மெய்யான சீஷனாயிருக்க முடியும், மற்றபடி அவனுடைய விசுவாசம் வீணாய் போய்விடும்.



அப்போஸ்தலர்களைக் குறித்து வாசிக்கிறோம்: அவர்கள் எங்கும் திரிந்து இந்த சுவிசேஷத்தை சொல்லிவந்தனர். அவர்கள் தங்களுடைய சொந்த கருத்துக்களைச் சொல்லவில்லை. தங்களுடைய நாமத்தை பிரஸ்தாபப்படுத்தவில்லை. பவுல் கொரிந்து சபைக்கு எழுதும்போது, "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்று எழுதுகிறார் (2கொரி.4:5). இன்றைக்கு நம்மில் எத்தனைபேர் இந்தவிதமாக கர்த்தரை மகிமைப்படுத்தும்படியாக பிரசங்கிக்கிறார்கள். அப்போஸ்தலர்கள் கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவே பிரயாசப்பட்டார்கள். மேலும் பவுல் எழுதும்போது, "சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்தபோது, தேவனைப்பற்றிய சாட்சியைச் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாக வரவில்லை. இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன்" என்று எழுதுகிறார் (1கொரி.2:1,2). சிலுவையில் அரையப்பட்ட கிறிஸ்துவைக்குறித்து பிரசங்கிக்கும்போது பவுல் மிகைப்படுத்தி சொல்லவில்லை. சுவிசேஷம் அறிவிக்கிற அநேகர் எப்படியாவது அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்று சொல்லி தந்திரமான யோசனைகளை கையாளுகிறார்கள். உதாரணமாக பார்ப்போமானால் புறஜாதி மார்க்கத்தாரை தங்களுடைய மார்க்கத்தாராக்கும்படி அவர்களுடைய வழியே சென்று, அவர்களுடைய சடங்காசார பழக்க வழக்கத்தின்படியே சென்று ஆதாயம் செய்வார்கள். அப்படி ஆதாயம் செய்யப்பட்ட நபர்கள் சபைகளில் நிலைத்திருக்க மாட்டார்கள். விசுவாச சோதனை வந்தவுடன் பின்வாங்கிப்போவார்கள். அல்லது சபையையும் கிறிஸ்தவத்தையும் தூஷிக்கிறவர்களாக மாறிவிடுவார்கள். இப்படிப்பட்ட ஊழியத்தை செய்யாதபடி பவுல் சிறந்த வசனிப்போடாவது ஞானத்தோடாவது அறிவிக்கிறவனாயிராமல், நான் சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி வேறொன்றையும் உங்களுக்குக்குள்ளே அறியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன் என்கிறார். "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக" (1பேது.4:11). எந்த ஒரு பிரசங்கியாராக இருந்தாலும் அவர் வேதாகமத்தில் உள்ள வசனங்களின்படியே பேசவேண்டும். அதில் ஒன்றை

கூட்டிசொல்வதற்கோ, அல்லது குறைத்து சொல்வதற்கோ அவர்களுக்கு அதிகாரமில்லை. அப்படியிருக்கும்போது கர்த்தர் எனக்கு தரிசனமாகிய இவைகளை சொன்னார் என்று ஒருவர் சொல்வாரானால் அவர் மிகைப்படுத்தி பேசவிரும்புகிறார். ‘‘நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்டேன்’’ 1கொரி.11:23–ல் என்று பவுல் குறிப்பிடுகிறார். அப்படியென்றால் அதனுடைய அர்த்தம் என்ன? அவர் கர்த்தருடைய பந்தியை பற்றிய காரியத்தை அவரிடத்தில் இருந்து பெற்றுக்கொண்டார். அது கிறிஸ்துவின் புதிய உபதேசம். நீங்கள் இந்தவிதமான உபதேசத்திற்கு கீழ்ப்படிந்தால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**கேள்வி நேரம்**

**பழைய உபதேசம் என்னவாயிற்று?**

ஒரு நல்ல கேள்வி. புதிய உபதேசம் ஒன்று வந்துவிந்துவிட்டால் பழைய உபதேசம் என்னவாகும்? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். புதிய ஆட்சிவந்துவிட்டால் பழைய ஆட்சி என்னவாகும் ஒழிந்துபோகும், அதைப்போலவே பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்ற வசனத்தின்படி நடைபெறும். ‘‘முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்’’ (எபி.7:18,19). மேலும் ‘‘புது உடன்படிக்கை என்று அவர் சொலுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது’’ (எபி.8:13). நாம் பரிசுத்த வேதாகமத்தை தியானித்துப்பார்க்கும்போது அவைகள் சிலுவை வரை மட்டுமே நிலைத்திருந்தது. அதன் பின்பு இயேசு சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே பழைய கட்டளைகள் அதாவது பழைய உபதேசம் எடுத்துப்போடப்பட்டது. இதை ஒரு மனிதன் இன்றும் பின்பற்றுவானேயானால் கிறிஸ்து வந்தது வீணாய் போயிற்றே என்று பவுல் எழுதுகிறார். ‘‘தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்’’ (எபி.10:9). அவரே அதை நீக்கிப்போட்டார் என அறிகிறோம்.

## 23. தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார்



## God Shall Supply All Your Need

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் குறைவை நிறைவாக்குகிற ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தேவன் உங்கள் குறைவையெல்லாம் நிறைவாக்குவார் God shall supply all your need. இவ்வுலகத்தில் வாழ்கிற நமக்கு எத்தனையோ குறைபாடுகள் இருக்கத்தான் செய்கிறது. நான் நிறைவாயிருக்கிறேன் என்று சொல்லி ஒருவேளை தன்னைத்தானே தேற்றிக்கொள்ளலாமே ஒழிய, நிறைவாக இருக்கமுடியாது. காரணம் ஆதியிலே மனிதன் தேவகட்டளையை மீறியதால் தேவ சமுகத்தை விட்டுத் துரத்தப்பட்டான். பாவம் அவனைப் பின்தொடர்ந்தது. ஆகையால் மரணம் அவனை ஆண்டு கொண்டது. இவைகளிலிருந்து மனிதனை மீட்டு எடுக்க ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகத்தில் வெளிப்பட்டார். அவர் மனிதனுடைய குறைகளை நீக்குகிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார். அவரால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. இச்செய்தியை வாசிக்கின்ற நீங்கள் ஏதோ ஒரு குறைபாடோடு வாழ்ந்து கொண்டிருக்கலாம், இதைத் தொடர்ந்து வாசித்து கர்த்தர் தம்முடைய பரிசுத்த வேதாகமத்தின் மூலம் உங்களுக்குக் கொடுக்கும் ஆலோசனையைப் பெற்று ஆசீர்வாதம் பெறுங்கள்.

முதலாவது நாம் ஒரு முழுமையான கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும். இல்லையென்றால் இன்றே பரிசுத்த வேதாகமத்தில் சொல்லப்பட்ட பிரகாரம், உங்களை முழுவதுமாக ஒப்புக்கொத்து கர்த்தர் ஏற்படுத்தின அவருடைய சபையில் அங்கமாகுங்கள். அப்பொழுது உங்கள் குறைகளை கர்த்தர் நிறைவாக்குவார். ‘‘முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்’’ (மத்.6:33). நாம் இவ்வுலகத்தில் முதலாவது தேடவேண்டியது அவர் ஏற்படுத்தின ராஜ்யம். அது எங்கு இருக்கிறது? எப்படியிருக்கும்? அதை நான் எப்படிக்கண்டுகொள்ளமுடியும்? என்றகேள்வி உங்களுக்கு எழும்பும். அன்பானவர்களே, கிறிஸ்துவானவர் நமதுபாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயர்த்தெழுந்தார் என்ற செய்தி இன்று, நேற்று நடந்ததல்ல. இரண்டாயிரம் வருடங்கள் உருண்டோடி விட்டது. அவர் ஏற்படுத்தின ராஜ்யம் அதாவது சபை இன்றும் நிலைத்திருக்கிறது. அதை அடையாளம் கண்டுகொள்ளுங்கள். அதுவே அவருடைய ஆளுகைக்குட்பட்ட ராஜ்யமாக

இருக்கிறது. அந்த ராஜ்யத்தில் அவர் ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும், அதன் தலைவராகவும் இருக்கிறார். அவரை அறிந்து கொண்ட அப்போஸ்தலர்கள், கர்த்தர் அவர்களை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தவுடன் ''அவர்கள் படவுகளைக் கரையிலே கொண்டுபோய் நிறுத்தி, எல்லாவற்றையும் விட்டு, அவருக்குப் பின்சென்றார்கள்'' என்று (லூக்.5:11) வாசிக்கிறோம். முதலாவது அவருடைய ராஜ்யத்தை அறிந்துகொள்ள வேண்டுமானால் நம்மை நாமே வெறுத்து அவரையும் அவருடைய உபதேசத்தையும் பற்றிக்கொள்ளவேண்டும். இயேசு சொல்கிறார்: ''ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்'' என்றார் (மத்.16:24). ராஜ்யத்தின் நிமித்தமாக நாம் எதையும் இழக்க ஆயத்தமுள்ளவர்களாக இருக்கவேண்டும். மோசேயைக்குறித்து நாம் வாசிக்கிறோம்; ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்'' (எபி.11:24–26). நாம் நிலையான ஆசீர்வாதங்களை கர்த்தர் சமூகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், இந்த மோசேயைப் போல அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் எப்படிப்பட்ட வாழ்வை தெரிந்துகொண்டுள்ளீர்கள்? பார்வோன் அரண்மனையில் வளர்க்கப்பட்ட மோசே, அரண்மனை வாழ்வை தெரிந்துகொள்ளவில்லை, தான் யார் என்பதை தெரிந்து கொண்டது முதல் அதற்காக தன்னை முழுவதுமாக அற்பணித்தான். அந்தவசனத்திலே குறிப்பாக கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான் என்று வாசிக்கிறோம். இப்பேர்பட்ட சிந்தை இவனுக்குள் இருந்தபடியால் நம்முடைய ஆண்டவர் சீஷர்களோடு தனித்து ஜெபம்பண்ணும்படி சென்றபோது மோசேயோடும் எலியாவோடும் பேசிக்கொண்டு இருந்ததாக வாசிக்கிறோம்.

நம்முடைய குறைகள் நிறைவாகவேண்டுமானால் நமக்கு வரக்கூடிய சோதனைகளை சகிக்கவேண்டும். ''சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின



ஜீவகிரீடத்தைப் பெறுவான்'' (யாக்.1:12). முதல்நூற்றாண்டு சீஷர்களுக்கு பல விதமான சோதனைகள் வந்தது அவைகளை அவர்கள் வெற்றிகொண்டார்கள். அவருடைய வல்லமையுள்ள வசனத்தினாலே ஜெயித்தார்கள். பிரியமானவர்களே, நம்முடைய சுயபெலத்தினால் சோதனைகளை ஜெயிக்க முடியாது. கர்த்தருடைய வல்லமையுள்ள வார்த்தைகள் நம்மில் இருக்குமானால், நமதுஆண்டவர் வசனத்தினாலே பிசாசை விரட்டியதைப்போல நாமும் நமக்கு வரக்கூடிய சோதனைகளை ஜெயிக்கலாம். அதிகமான புத்தகங்களை எழுதி, அதிகமான ஊழியங்களைச் செய்த பவுலுக்கும் பாடுகள் பிரச்சனைகள் அதிகமாக இருந்தது. ஆனால் அவர் சோர்ந்துபோகவில்லை. அவர் இப்படியாக சொல்லுகிறார்; ''எனக்கு வெளிப்படுத்தப்பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு, என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது; என்னை நான் உயர்த்தாதபடிக்கு, அது என்னைக் குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது. அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன்'' என்கிறார் (2கொரி.12:7–9). உன்னதமான ஊழியத்தை செய்த பவுலுக்கும் குறைபாடுகள் இருந்தாக வாசிக்கிறோம். அந்தக் குறைபாடு தன்னைவிட்டு நீங்கும்படியாக அவர் தேவசமூகத்தில் வேண்டிக்கொண்டார். அப்பொழுது, அவருக்கு கிடைத்த பதில் என்கிருபை உனக்குப்போதும் என்பதே. ஆம் எனக்கு அன்பானவர்களே, ''என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' என்ற பிலிப்பியர்4:19 வசனத்தின்படி தேவன் குறைவுகளை எல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக மகிமையிலே நிறைவுசெய்ய வல்லவராயிருக்கிறார். இதை நீங்கள் விசுவாசிப்பீர்கள் என்றால் உங்களுக்கு குறை என்பதேயில்லை. பின்பு ஒரு நாள் நடக்கப்போவதை யார் பார்த்தது இன்றைக்கு வழி சொல்லுங்கள் என்பார்கள். ஒரு குழந்தை பிறந்தவுடன் அதன் எதிர்கால வாழ்வு இப்படியாக இருக்கும் என்று யாரும் கனித்துவிட முடியாது. அது நல்ல நிலைமைக்கு வந்து ஆசீர்வாதமாக வாழும்போது சந்தோஷமடைகிறோம். அந்தக் குழந்தையினுடைய நல்ல முயற்சியின் விளைவாக அதற்கு நல்லபலன் கிடைக்கிறது. அதைப்போல இவ்வுலகத்தில் குறைபாடுகளோடு கர்த்தருக்காக வாழும்பட்சத்தில் அவர் ஏற்றவேளையில் உங்களை

மகிமையிலே உயர்த்துவார். அநேக சகோதரிகள் குழந்தையில்லாமல் குறைபாடோடு அநுதினமும் செத்து செத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அன்றைய சமுதாயமும், இன்றைய சமுதாயமும் இப்படிப்பட்டவர்களை விட்டுவைக்கவில்லை. ஊரிலே நடமாட முடியாத அளவிற்கு பேசிவிடுவார்கள். அவர்களை உண்டாக்கின தேவன் தம்முடைய பிள்ளைகள் அவமானப்படுவதை பார்த்து இப்படியாக சொல்லுகிறார்: ''பிள்ளைபெறாத மலடியே, மகிழ்ந்து பாடு; கர்ப்பவேதனைப்படாதவளே, கெம்பீரமாய்ப் பாடி ஆனந்தசத்தமிடு; வாழ்க்கைப்பட்டவளுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும், அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம் என்று கர்த்தர் சொல்லுகிறார்'' (ஏசா.54:1). இந்த வார்த்தை உண்மையுள்ளது வாழ்க்கைப்பட்ட ஸ்திரீயினுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும் அநாத ஸ்திரீயினுடைய பிள்ளைகள் அதிகம். இயேசு சொல்கிறார்: என் நாமத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனோ, அவன் நூறத்தனையாய் அடைந்து, நித்திய ஜீவனையும் சுதந்தரித்துக்கொள்ளுவான் என்கிறார். ஆகையால் நூறத்தனையான பிள்ளைகளை கர்த்தர் அப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்க அறிந்திருக்கிறார். இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு குறை என்பதில்லை. யோவான்ஸ்நானகன் குறிப்பிடும்போது: ''மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத்.3:8,9). ஆம் அன்பானவர்களே, தேவன் எதையும் எப்படியும் செய்யவல்லவர். நாம் நிறைவாயிருக்கிறோம் என்று சொல்லி குறைபாடுகளோடு கர்த்தரை பின்பற்றுகிறவர்களை ஏளனமாக பேசுவதோ அல்லது அவர்களுடைய குறைபாடுகளை சுட்டிக்காட்டுவதோ தகாதகாரியம். அவர்களுடைய குறைகளை தேவன் மகிமையிலே நிறைவாக்கவல்லவராயிருக்கிறார் என்பதை மறந்துபோகவேண்டாம்.

பவுல் சொல்லுகிறார்: ''என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக்கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும்,



பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும்செய்ய எனக்குப் பெலனுண்டு'' என்கிறார் (பிலி.4:11,12). ஒரு நல்ல கிறிஸ்தவன் கர்த்தருக்குள் பரிபூரணமாக வாழவும், குறைச்சலோடு வாழவும் கற்றுக்கொள்ளவேண்டும். இப்படிப்பட்ட போதனைகள் நமக்கு மிகவும் அவசியமாயிருக்கிறது. ஐசுவரியவான் லாசரு சம்பவம் லூக்கா16:19–31–ல் சொல்லப்படுகிறது. இதில் ஐசுவரியவான் சுகபோகமாய் வாழ்ந்தான் அதாவது (அவனைப் பொறுத்த வரையில்) குறைவற்ற வாழ்க்கையென நினைத்தான். முடிவில் நரகத்தை அடைந்து வேதனைப்பட்டான். ஆனால் தரித்திரனாகிய லாசருவோ பூமியில் கொடிய வேதனைப்பட்டு அநேகக் குறைபாடுகள் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து, முடிவில் ஆபிரகாமின் மடியில் விடப்பட்டு சந்தோஷமாக இருந்தான். நாம் அவரோடு பாடுபட்டோமென்றால் அவரோடு ஆளுகையும் செய்வோம். நாம் தரித்திரரென்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறவர்களாக இருந்துகொண்டு கிறிஸ்துவுக்குள் வளர வேண்டும். உங்கள் வாழ்கையை கண்ணீரோடு கழிக்கிறீர்களா? ஒவ்வொருநாளும் பசியோடு வாழ்ந்துகொண்டு வருகிறீர்களா? உங்களைப் பார்த்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கூறுவதைப் கவனியுங்கள். ''இப்பொழுது பசியாயிருக்கிற நீங்கள் பாக்கியவான்கள்; இனி நகைப்பீர்கள்... பரலோகத்தில் உங்கள்; பலன் மிகுதியாயிருக்கும்'' (லூக்.6:21–23). மேலும் ''வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள்'' (மத்.25:34). எதை இழந்தாலும் கவலைப்படாதிருங்கள். கர்த்தர் மகிமையிலே அதையெல்லாம் நிறைவாக்குவார். முதலாவது நீங்கள் கிறிஸ்துவுக்குள் வாழ பிரயாசப்படுங்கள். ஏனென்றால் அவர் உன்னதத்திலே கிறிஸ்துவுக்குள் சகல ஆசீர்வாதத்தினால் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்.

## கேள்வி நேரம்

**இவ்வுலகத்தில் ஆசீர்வாதக் குறைவோடு வாழ்கிற ஜனங்கள் குற்றவாளிகளா?**

அநேகர் அப்படிப்பட்டவர்களை குற்றவாளிகள் என்ற கண்ணோட்டத்தோடே பார்க்கின்றனர். ''அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்'' என 2தீமோத்தேயு3:12–ல் வாசிக்கிறோம். பச்சைமரமாகிய எனக்கே இப்படியென்றால் பட்டமரமாகிய உங்களுக்கு எப்படியோ என்று கர்த்தர் சொல்வதை இங்கே நினைவுகூருங்கள். தேவபக்தியாய் நடக்க

மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். அப்படியே நம் முற்பிதாக்களையும் துன்பப்படுத்தினார்கள் என அறிகிறோம். பிசாசும் இப்படிப்பட்ட மக்களுக்கு விரோதமாக அநேக உபாய தந்திரங்களை கையாளுகிறான். ''இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிடவேண்டியதில்லையா'' என்று ஆண்டவர் கேட்கிறார் (லூக்.13:16). அப்படியென்றால் அந்தப் பெண் விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிராமைப்போல விசுவாசித்து தேவனை தொழுதுகொள்ளும்படியாக ஓய்வுநாள்தோறும் சென்றிருக்கிறாள். அவள் தன்னுடைய குறைவை நினைத்து தேவனை மறுதலிக்கவில்லை. என் தேவன் என் குறைவை நீக்குவார் என்ற நம்பிக்கையில் வாழ்ந்திருக்கக்கூடும். பின்பதாக சுகமடைந்தாள். இப்படிப்பட்டவர்கள் குற்றவாளிகள் அல்ல.

## 24. பாவமில்லாத பிரதான ஆசாரியர்
## An High Priest, Without Sin

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் பாவமில்லாத பிரதான ஆசாரியராகிய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத்தெரிவித்துக்கொள்கிறோம். பாவமில்லாத பிரதான ஆசாரியர் An high priest, without sin. பழைய ஏற்பாட்டுகாலத்தில் ஆசரிப்புக்கூடாரங்களில் ஆசாரிய ஊழியம் செய்ய பிரதான ஆசாரியர்கள் ஏற்படுத்தப்பட்டார்கள். இவர்கள் தங்களுடைய பாவங்களுக்காகவும் ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியிருந்தது. மனுஷரில் தெரிந்துகொள்ளபட்ட எந்த பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காக காணிக்கைகளைப் பற்றி நியமிக்கப்படுகிறான். ஆனால் புதியஏற்பாட்டு காலத்தில் பாவமில்லாத பிரதான ஆசாரியரைக்குறித்துப் படிக்கிறோம். ''அவர் மாம்ச சம்பந்தமான கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படி ஆசாரியராகாமல், நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத்தக்கதாக அழியாத ஜீவனுக்குரிய வல்லமையின்படியே ஆசாரியரானார்'' என்று எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி.7:17). அன்பானவர்களே, இந்த பாவமில்லாத பிரதான ஆசாரியரைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இவரை சர்வத்துக்கும் அதிபதியாக தேவன் நியமித்தார். உலகம் இவர் மூலமாய் உண்டாயிற்று, உலகமோ இவரை



அறியவில்லை. அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார், அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என யோவான் தமது சுவிசேஷ புத்தகத்தில் தெரிவிக்கிறார்.

''நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப் போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்'' (எபி.4:15). எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டார். அப்படியென்றால் அவர் ஜனத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவகாரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது. ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார். தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவதூதரிலும் சற்றுச் சிறியவராக்கப்பட்டிருந்த இயேசு மரணத்தை உத்தரித்ததினிமித்தம் மகிமையினாலும் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். மேலும், ''தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்'' (எபி.7:25). தம்முடைய சீஷர்களை பார்த்துச் சொல்லும்போது என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது; நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்றார். இன்று இயேசுவையல்லாமல் காக்கப்படும்படியாகவும், மோட்சம் போகும்படியாகவும் அநேகர் அநேக தந்திரங்களைக் கையாளுகின்றனர். அன்பர்களே, இயேசுவையல்லாமல் இரட்சிப்பு இல்லை. தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறார். நான் மரித்தேன், ஆனாலும் இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன் என்று திருவுளம்பற்றுகிறார். பிதாவாகிய தேவன் இவரை முன்குறித்திருக்கிறார். சர்வலோகத்தின் பாவத்தையும் போக்கும் தேவஆட்டுக்குட்டியாக இயேசு வெளிப்பட்டார். அவர் நமக்காக பாவமில்லாத பிரதானஆசாரியராக வேண்டுதல் செய்கிறார்.

மேலும்,'' இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்கிறார் (மத்.18:20). கூடிவரக்கூடிய திருச்சபை அவருடைய நாமத்தினால்

கூடிவரவேண்டும். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை, என்று பேதுரு தமது பிரசங்கத்தில் சொல்லுகிறார். ஆக, பிரியமானவர்களே வானத்திலும் பூமியிலும் மேலான நாமம் இயேசுவின் நாமம். அந்த நாமத்திற்குரிய கனத்தையும் மகிமையையும் செலுத்துங்கள். அவருடைய நாமத்தினாலே கூடிவாருங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான சமாதானம் உங்களை ஆண்டுகொள்ளும். முதல் நூற்றாண்டு சீஷர்கள் கர்த்தர் கட்டளையிட்டபடி வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், ஞாயிற்று கிழமை அப்பம்பிட்கும்படியாக கூடிவந்தார்கள் என அறிகிறோம். இப்படியாக கர்த்தருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, தேவனை தொழுதுகொண்டு, இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார் என்று அப்போஸ்தலர்2:47–ல் வாசிக்கிறோம். மேலும், ''வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்'' என்று பவுல் கொலோசெ சபைக்கு எழுதுகிறார் (கொலோ.3:17). நாம் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அப்படிச் செய்வதே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது. நம்முடைய சுயஇஷ்டப்படி எப்படிவேண்டுமானாலும் தொழுது கொள்ளலாம் என அநேகர் நினைக்கின்றனர். இது தவறான கருத்து. அவருடைய நாமத்திற்கு விரோதமாக எந்த ஒரு காரியத்தையும் நாம் செய்யலாகாது. ''இவர் தேவதூதரைப்பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? மேலும், தமது முதற்பேறானவரை உலகத்தில் பிரவேசிக்கச்செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுது கொள்ளக்கடவர்கள் என்றார்'' (எபி.1:4–7). இப்படிப்பட்ட வல்லமையுள்ள நாமத்தை மறுதலிக்கலாமா? நாங்கள் எங்கே மறுதலிக்கிறோம் என்று அநேகர் கேட்கக்கூடும். ஆதிசீஷர்கள் கிறிஸ்துவின் நாமத்தினால்



கூடிவந்தார்கள். அவர்களுக்கு முதல் முதல் அந்தியோகியாவிலே கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டதாக அப்போஸ்தலநடபடிகள் 11:26–ல் வாசிக்கிறோம். இன்று சீஷர்கள் என்று சொல்லிக்கொள்ளும் கிறிஸ்தவர்களில் பலர் கிறிஸ்தவர்கள் என்ற வார்த்தைக்கு முன்பாக நாங்கள் இன்ன கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகின்றனர். அவர்கள் கூடிவரக்கூடிய சபைக்கு தங்கள் இஷ்டப்படி ஏதோ ஒரு நாமத்தை தரிக்க விரும்புகின்றனர். இதெல்லாம் வேதாகமத்திற்கு ஒத்தவிஷயங்களா? இல்லையே! ஆகையால் தான் கர்த்தர் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து ஒரு நாளில் அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன் என்கிறார். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே நீ கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல மனந்திரும்பவேண்டும் என்று கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். நீ மனந்திரும்பு, அவருக்குரிய மகிமையைச் செலுத்து, அவர் ஒருபோதும் உன்னைக் கைவிடார்.

''பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்தப் பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிடவேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரேதரம் செய்து முடித்தார். நியாயப்பிரமாணமானது பெலவீனமுள்ள மனுஷர்களைப் பிரதான ஆசாரியராக ஏற்படுத்துகிறது; நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு உண்டான ஆணையோடே விளங்கின வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது'' (எபி.7:26–28). கிறிஸ்துவானவர் உலகத்தில் ஏற்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியர்களைப்போல இல்லை. அவர்கள் பாவமுள்ள பிரதான ஆசாரியராக இருந்தார்கள். ஆனால் இவரோ பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறவர் என வாசிக்கிறோம். இப்படிப்பட்ட மகா பிரதானஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார். ஆனபடியால், பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை தெரிந்துகொண்டார். இவர் நித்தியமான ஆசாரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பிரதான ஆசாரியன் மரித்தபின்பு வேறொரு பிரதான ஆசாரியன் ஏற்படுத்தப்படுவான். நமக்கு பரலோகத்தின் தேவன் அல்பாவும் ஒமெகாவுமாயிருக்கிற ஆண்டவர் இயேசுவை பிரதான ஆசாரியராக ஏற்படுத்தியிருக்கிறார். அவரே முதலும் முடிவும் என்று நாம்

வெளிப்படுத்தின விசேஷபுத்தகத்தில் வாசிக்கிறோம். “இவரோ விசேஷித்த வாக்குத்தத்தங்களின்பேரில் ஸ்தாபிக்கப்பட்ட விசேஷித்த உடன்படிக்கைக்கு எப்படி மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அப்படியே முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்” (எபி.8:6). மேலும் பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது, சட்டதிட்டங்களாகிய நியாயப்பிரமாணத்தைத் தம்முடைய மாம்சத்தினாலே ஒழித்து, இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவையினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாக தேவனுக்கு ஒப்புரவாக்கி, விசேஷித்த உடன்படிக்கையாகிய புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை ஏற்படுத்தினார். ஆகையால் முக்கியமான ஆசாரிய ஊழியத்தையும் பெற்றிருக்கிறார்.

இவர் பிரதான ஆசாரியராகிறதற்குத் தம்மைத்தாமே உயர்த்தவில்லை; “நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்று அவரோடே சொன்னவரே அவரை உயர்த்தினார். அப்படியே வேறொரு இடத்திலும்: நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லியிருக்கிறார். அவர் மாம்சத்திலிருந்த நாட்களில், தம்மை மரணத்தினின்று இரட்சிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல்செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரானபின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணராகி, மெல்கிசேதேக்கின் முறைமையின்படியான பிரதான ஆசாரியர் என்று தேவனாலே நாமம் தரிக்கப்பட்டார்” (எபி.5:5–10). தேவனால் ஏற்படுத்தப்பட்ட பிரதான ஆசாரியராகிய இயேசுவைப்பற்றிக்கொண்டு அவருக்குக் கீழ்ப்படியும்படியாக உங்களை ஒப்புக்கொடுங்கள். இவர்மூலமாகவே நித்தியமான இரட்சிப்பை சுதந்தரித்துக்கொள்ளமுடியும். பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டும் உலகங்களையும் உண்டாக்கினார். எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ யாரை நம்பிக்கொண்டு இருக்கின்றாய்? உன்னை வழிநடத்துகிற ஒரு மனிதன் உன்னை இரட்சிக்க முடியாது. கிறிஸ்து உனக்காக பிதாவிடம் பரிந்து பேசும் பிரதான ஆசாரியராக வீற்றிருக்கிறார்.



அவரிடம் உன்னை ஒப்புக்கொடு அப்பொழுது இரட்சிக்கப்படுவாய். உனக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி நேரம்**

**ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், எதுவும் மாற்றப்படவேண்டியதாகும்?**

நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும். “நியாயப்பிரமாணத்திற்குப்பின்பு உண்டான ஆணையோடே விளங்கின வசனமோ என்றென்றைக்கும் பூரணரான குமாரனை ஏற்படுத்துகிறது” (எபி.7:28). ஆகையால் “தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார்” (எபி.10:9). அப்படியென்றால், இயேசுகிறிஸ்துவினுடைய சரீரம் ஒரேதரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். மேலும் புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள் பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது. முந்தின கட்டளை பெலவீனமுள்ளதும் பயனற்றதுமாயிருந்ததினிமித்தம் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப்படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம். அந்த நம்பிக்கையை வருவிப்பது விசுவாசத்தின் பிரமாணம். அது உங்களுக்கும் யாவருக்குள்ளும் நிலைத்திருக்கிறது. அது அன்பின்பிரமாணம், சுயாதீனப்பிரமாணம், ராஜரிகபிரமாணம். ஆகையால் “ஆசாரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமேயானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்படவேண்டியதாகும்” (எபி.7:12).

## 25. இயேசு எதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்?

## Why Did Jesus Give Himself?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சிலுவையில் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இயேசு எதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்? Why did Jesus give Himself?

என்ற கேள்வி அநேகருக்குள் எழும்புகிறது. இதற்கு விளக்கம் தேட நாம் சுயமுற்சியில் ஈடுபடக்கூடாது. மாறாக, தேவன் உலகத்திற்கு அருட்கொடையாக தந்துள்ள பரிசுத்த வேதாகமத்திற்குச் சென்று விடைகாணலாம். அப்போஸ்தலனாகிய பவுல் தீத்துவுக்கு எழுதின கடிதத்தில்; "அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்" என தீத்து2:14–ல் குறிப்பிடுகிறார். இதிலிருந்து நமக்குப் புரிவது என்ன? அவர் ஒரு மத ஸ்தாபகர் அல்ல. தேவ சமுகத்தை விட்டு விலகி பாவத்திற்கு அடிமையாகிவிட்ட மனுமக்களை மீட்டு தேவனோடு ஒப்புரவாக்கவே ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என புரிகிறது. ஒப்புரவாக்குதல் என்பது ஒரு சாதாரண காரியமல்ல. முதலாவது கெட்டுப்போன ஒரு நபரை பழைய நிலைக்குக் கொண்டுவருவது. அதாவது சேற்றில் விழுந்த ஒரு நபரைக் கழுவி எடுப்பதுபோல, நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். மேலும் "கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்" (எபே.5:27).

கெட்டுப்போனதை ஒருவரும் விரும்பமாட்டார்கள். ஆனால் மனுஷகுமாரன் கெட்டுப்போனதை ரட்சிக்க வந்தார். அவர் தம்முடைய உவமையில் இப்படியாக கேட்டார். "உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது? ஒரு மனுஷனுக்கு நூறு ஆடுகளிருக்க, அவைகளில் ஒன்று சிதறிப்போனால், அவன் மற்றத் தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் மலைகளில் விட்டுப்போய்ச் சிதறிப்போனதைத் தேடாமலிருப்பானோ? அவன் அதைக் கண்டுபிடித்தால், சிதறிப்போகாத தொண்ணூற்றொன்பது ஆடுகளைக்குறித்துச் சந்தோஷப்படுகிறதைப்பார்க்கிலும், அதைக்குறித்து அதிகமாய்ச் சந்தோஷப்படுவான் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். இவ்விதமாக, இந்தச் சிறியரில் ஒருவனாகிலும் கெட்டுப்போவது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவின் சித்தமல்ல" என்றார் (மத்.18:11–14). ஒரு மேய்ப்பன் ஒரு ஆட்டிற்காக மற்ற ஆடுகளையெல்லாம் விட்டுவிட்டு தேடிப்போவதைப்போல ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து காணமற்போன ஆடுகளைத் தேடிவந்தார். பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில் பிரதான



பாவி நான் என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். அவர் வந்ததன் நோக்கம் பாவிகளை இரட்சிக்க அதாவது காப்பாற்ற. ஒருவேளை நான் என்ன பாவம் செய்தேன் என்று நீங்கள் நினைக்கலாம். ஆதாமின் மீறுதலினால் பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது. ஆகையால் எல்லாரும் பாவிகளானோம். மேலும் நமக்குள் பாவம் இல்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். சத்தியம் நமக்குள் இராது. தேவனை அறியாதவர்களும் தேவனைவிட்டு பிரிந்துபோனவர்களும் பாவத்திலே நிலைத்திருக்கிறார்கள். மனந்திரும்பிய மைந்தன் சம்பவத்தில் இளையமகன் "புத்தி தெளிந்தபோது, அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்" (லூக்.15:17–20). அவனுடைய தகப்பன் அவனை ஏற்றுக்கொண்டான். எனக்கு அன்பானவர்களே, இந்த இளையகுமாரனைப்போல மனந்திரும்பவேண்டும். அப்பொழுது பரலோகத்தில் இருக்கிற பிதாவாகிய தேவன் உங்களை ஏற்றுக்கொள்வார்.

மனிதனை சகல அக்கிரமங்களினின்றும் மீட்டு, அவனை அப்படியே விட்டுவிடாமல், தேவன் மனிதனை நேசித்தபடியால்; தமக்குரிய சொந்த ஜனங்களாகவும் வைத்துக்கொள்ள விரும்பினார். ஆகையால் கிறிஸ்துவின் மூலமாய் ஒரு கூட்ட பரிசுத்த ஜாதியைப் பிரித்தெடுக்கிறார். இவர்கள்தான் இன்று கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். எல்லாரும் கிறிஸ்தவர்கள் அல்ல. கிறிஸ்துவை உடையவர்களே கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாத, அவரை தரித்துக்கொள்ளாத, அநேக கிறிஸ்தவர்கள் உண்டு அவர்கள் வெறும் பெயர் கிறிஸ்தவர்களே. பேதுரு சொல்கிறார்: "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் (1பேது.2:9). கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மூலமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் பரிசுத்தவான்கள். ஆகையால் தான் நிருபங்கள்தோறும் பவுல் எழுதும்போது

பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது என்கிறார். ஆக, இப்படி அழைக்கப்படுகிற ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்டவனாயிருக்கவேண்டும்? 1பேதுரு1:23–ன்படி ''அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்க வேண்டும்''. ஒவ்வொருவரும் அழிவில்லாத வசனமாகிய வித்தினாலே உருவாக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படியென்றால் வசனத்தைக் கேட்டு குணமாக்கப்பட்டு பாவத்திலிருந்து விடுதலையடையும்படியாக ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்து, புதிய மனுஷனைத் தரித்திருக்கவேண்டும். இதுவே மறுபடியும் பிறத்தலைக்குறிக்கும். இப்படிப்பட்டவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின. ''நீ இனி அடிமையாயிராமல் புத்திரனாயிருக்கிறாய்; நீ புத்திரனேயானால் கிறிஸ்து மூலமாய் தேவனுடைய சுதந்திரனாயுமிருக்கிறாய்'' (கலா.4:7). இப்படிப்பட்டவர்கள் பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு கிறிஸ்துவின் மூலமாக தேவனுடைய சுதந்திரனாயுமிருக்கிறோம். ஆகையால் பவுல் சொல்லுகிறார்; ''உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்'' (1கொரி.6:19,20).

இயேசுகிறிஸ்துவுக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவரையும் தேவன் நற்கிரியைகளை செய்யப்பழக் குவிக்கிறார். ''ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்'' (எபே.2:10). ஆண்டவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார். அவரைப்போல அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட வர்களும் அவ்விதமாகவே இருக்கும்படியாக பிதாவாகிய தேவன் முன்குறித்திருக்கிறார். ஆகையால் ''நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்'' (கலா.6:9,10). நன்மை செய்கிறதில் தளர்ந்துபோகாதிருக்க கைமாறு கருதாமல் கொடுத்து உதவ



வேண்டும். அவர்கள் ஒன்று செய்தால், நான் ஒன்று செய்வேன் என்று இருப்போமானால் அது நன்மையல்ல. கொடுக்கல் வாங்கல் போன்றதாகிவிடும். நல்லோர் மேலும் தீயோர்மேலும் நீதியின் சூரியனை உதிக்கச்செய்கிற தேவன் அனைவருக்கும் மழையை வருஷிக்கப்பண்ணுகிறார். அவர் எல்லோருக்கும் நல்லதே செய்கிறார். அவரை பின்பற்றுகிற தேவனுடைய பிள்ளை அதாவது கிறிஸ்தவன் நன்மைசெய்கிறவனாயிருக்கவேண்டும். குறிப்பாக விசுவாசகுடும்பத்தாருக்கு நன்மைசெய்யவேண்டும் என வேதம் போதிக்கிறது. அவர்கள் கர்த்தரையே தஞ்சமாக கொண்டிருக்கிறார்கள். இவர்களுக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று சொல்லுகிறார். ஆனபடியால் அப்படிப்பட்டவர்களுக்கு கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம் நாம் நன்மைசெய்யவேண்டியவர்களாகயிருக்கிறோம். பொதுவாக நாம் எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யக்கற்றுக்கொள்ளவேண்டும். அநியாஞ்செய்கிறவன் தான் செய்த அநியாயத்துக்கேற்ற பலனை அடைவான்; பட்சபாதமே இல்லை. நாம் சோர்ந்துபோகாமல் நன்மைசெய்தால் ஏற்றகாலத்திலே அறுப்போம்.

மனிதன் தேவனைத் தொழுதுகொள்ளவும், அவருடைய கட்டளைகளின்படி நடக்கவும், தொடர்ந்து அவனிருக்கும் காலமளவும் நன்மை செய்யவுமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறான். இதை இன்றைய மானிடம் மறந்துபோய் தான்தோன்றித்தனமாக வாழ்க்கைப் பயணத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறது. பிரியமான சகோதரனே, சகோதரியே, நீ எப்படி வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? மற்றவர்களுக்கு நன்மை செய்து கொண்டிருக்கிறாயா? அப்போஸ்தலர் 9:36–41 முடிய உள்ள வசனப்பகுதியில் தொற்காள் என்று அர்த்தங்கொள்ளும் தபீத்தாள் என்னும் பேருள்ள ஒரு சீஷி இருந்தாள்; அவள் நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாய்ச் செய்துகொண்டுவந்தாள் என்று வாசிக்கிறோம். உங்களுடைய தானதருமமானது எந்த அளவுக்கு இருக்கிறது. உங்கள் குடும்பஅளவில் செய்துகொண்டுவருகின்றீர்களா, அல்லது உறவினர் அளவில் செய்துகொண்டுவருகின்றீர்களா? நன்மைசெய்கிறவர்களுக்கே நாமும் நன்மைசெய்தால் அது தானதர்மமாகாது. இந்த தொற்காள் யோப்பாபட்டணம் முழுவதும் அறியப்பட்டவள் அவளுடைய தானதர்மம் அந்த அளவிற்கு இருந்தது. மிகுதியாய் செய்துகொண்டுவந்தாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, விதவைகளை நேசித்து அங்கிகளையும் வஸ்திரங்களையும் கொடுத்திருக்கிறாள். விதவைகள் என்றாளே ஒரு

வித்தியாசமான கண்ணோட்டத்தில் பார்ப்பார்கள். இவளைப்பார்த்தாலே போகிற காரியம் கைகூடிவராது இவளுடைய முகத்தில் விழிக்கக்கூடாது என்று சொல்லி ஒரம்கட்டுவார்கள். அப்படி அநேக ஜனங்களால் அவமதிக்கப்படக்கூடிய விதவைப்பெண்களை அவள் நேசித்து வஸ்திரங்களைக் கொடுத்து ஆதரித்திருக்கிறாள். எனக்கு அன்பான தேவ ஜனமே நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? இந்த தெற்காளை மாதிரியாக நோக்குங்கள். பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்வதைப்போல ‘‘நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்கு கட்டளையிடு’’ என்று எழுதுகிறார் (1தீமோ.6:18,19). இவ்வுலகத்தில் ஐசுவரியத்தில் நிறைந்திருக்கவே அநேகர் விரும்புகின்றனர். ஆனால் வேதம் நற்கிரியைகளில் வளரவேண்டுமென வலியுருத்துகிறது. இவைகளில் நாம் உறுதியாக இருந்தால் ஏற்றகாலத்தில் அறுவடைசெய்வோம். பிரியமானவர்களே, இயேசு எதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார் என்ற சத்தியத்தை இதன் மூலம் நீங்கள் தெரிந்திருப்பீர்கள் என நம்புகிறோம்.

**கேள்வி நேரம்**

**இயேசு, கிறிஸ்தவர்களுக்காக மட்டுமே தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தாரா?**

இல்லை. ‘‘இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி’’ என்று இவரைக்குறித்து யோவான் குறிப்பிடுகிறார் (யோவா.1:29). சர்வத்தையும் உண்டாக்கின கர்த்தர் சர்வலோகத்தின் பாவத்தை போக்கும் பலியாக சிலுவையில் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். பிதாவாகிய தேவன் குமாரனை உலகரட்சகராக அனுப்பினாரென்று நாங்கள் கண்டு சாட்சியிடுகிறோம் என்று அப்போஸ்தலனாகிய யோவான் எழுதுகிறார். மேலும் ‘‘அவர் சிலுவையில் சிந்தின இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கி, பூலோகத்திலுள்ளவைகள் பரலோகத்திலுள்ளவைகள் யாவையும் அவர் மூலமாய்த் தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ளவும் அவருக்குப் பிரியமாயிற்று’’ (கொலோ.1:20). ஆனபடியால் அன்பானவர்களே, அவர் ஒரு குறிப்பிட்ட ஜனங்களுக்காக ஒப்புக்கொடுத்திருப்பாரேயானால், அந்த ஜனங்கள் அவரை சிலுவையில் அறையவிடாமல் போராடியிருப்பார்களே. இயேசுகிறிஸ்து கர்த்தாதி கர்த்தா, ராஜாதி ராஜா அவர் சகல ஜனங்களையும் பரலோகத்தில் சேர்க்கும்படியாக தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். இரத்தம் சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பு மனிதனுக்கு இல்லை ஆகவே அவர் மரிக்கவேண்டியதாயிருந்தது.



## 26. ஒற்றுமை
## Unity

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் அனைவரும் ஒன்றாயிருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்ட ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஒற்றுமை. Unity. அருமையான தேவனுடைய ஜனங்களே, நாம் வாழும் இன்றைய நாட்களிலும் உலகத்திலும், தேவனுடைய சபைகளிலும் ஒற்றுமையில்லாததைக் காணமுடிகிறது. இதை தேவன் விரும்புவாரா? என்ற கேள்வியை எழுப்புவோமானால் அதற்கு விடையை பரிசுத்த வேதாகமத்தில் நாம் காணலாம். ஆண்டவர் ஜெபிக்கும்போது; ‘‘பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்’’ என்று ஜெபித்தார் (யோவா.17:11). இந்த ஜெபம் வீணாய்ப்போயிற்றா? எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே ஆண்டவருடைய இந்த உருக்கமான ஜெபத்திற்கு நீ செவிகொடுப்பாயா? பிதா குமாரன் பரிசுத்தஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் பிரிந்திருக்கவில்லை. ஆகையால்தான் நம்மைபோல ஒன்றாயிருக்கும்படி என்று சொல்லி ஜெபிக்கிறார். அவருடைய சிந்தை உனக்குள் இருக்குமானால் நீயும் இப்படியாகத்தான் இருக்கவேண்டும். ஒற்றுமையை தேவன் என்றும் விரும்புகிறார். அதுவே அவருடைய சித்தமாயிருக்கிறது. எபிரெய பாஷையில் ஒற்றுமைக்கு ‘Yachad’ என்ற சொல் வழங்கப்படுகிறது. அதற்கு ‘Together’ at one’ என்பது பொருளாகும். ஒன்றுசேரும்போது ஐக்கியம் ஏற்படுகிறது.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். தாவீது குறிப்பிடும்போது, ‘‘இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது? அது ஆரோனுடைய சிரசின்மேல் ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கிகளின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும், எர்மோன்மேலும், சீயோன் பர்வதங்கள்மேலும் இறங்கும் பனிக்கும் ஒப்பாயிருக்கிறது; அங்கே கர்த்தர் என்றென்றைக்கும் ஆசீர்வாதத்தையும் ஜீவனையும் கட்டளையிடுகிறார்’’ (சங்.133:1–3). ஒற்றுமையாக இருந்து

செயல்படும்போது கர்த்தருடைய நாமத்தினாலே பெரிய காரியங்களைச் செய்யமுடியும். அங்கேதான் கர்த்தரின் ஆசீர்வாதமும் உண்டு. நெகேமியாவின் காலத்தில் அலங்கத்தைக் கட்டும்போது 'வாருங்கள் எழுந்து கட்டுவோம்' என்று ஒருவரோடொருவர் சொல்லிக் கொண்டு உற்சாகமாகக் கட்ட ஆரம்பித்தார்கள். அங்கு ஒருமனமிருந்ததால் 52 நாட்களுக்குள்ளாக கட்டி முடித்தார்கள். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே இது நமக்கு திருஷ்டாந்தமாக இருக்கிறது. நீ கிறிஸ்து இயேசுவைப் பின்பற்றுவாயானால் உன் சகோதரனையோ அல்லது உன் சகோதரியையோ ஏன் வெறுக்கிறாய்? நீங்கள் ஒன்றாயிருந்து தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றினால் தேவன் சந்தோஷப்படுவார். நமது ஆண்டவர் ஜெபித்த ஜெபமும் நிறைவேறும். ஒருவேளை நீ பிரிவினையை உண்டாக்குவாயானால் கிறிஸ்துவுக்கு விரோதமாக பாவம் செய்கிறவனாயிருப்பாய். தேவனிடத்தில் அன்புகூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்? ஆண்டவர் ஒரு உவமையிலே லூக்கா 18:9–14–ல் சொல்லும்போது; இரண்டுபேர் ஜெபிக்கும்படியாக தேவாலயத்துக்கு போனார்கள் ஒருவன் பரிசேயன் மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று: தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷனைப்போலவும், இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன் என்று சொல்லி, தன்னைக்குறித்து அடுக்கிக்கொண்டேபோனான். ஆயக்காரனோ தூரத்திலே நின்று, தன் கன்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று ஜெபித்தான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்றார். அநேகருடைய ஜெபம் இப்படியே இருக்கிறது. தங்களை நீதிமான்களாக நினைத்துக்கொண்டு மற்றவர்களை அற்றபமாய் எண்ணுவார்கள். ஒற்றுமை ஏற்படவேண்டுமானால் மற்றவர்களுக்காவும் வேண்டிக்கொள்ள வேண்டும்.

ஒற்றுமை ஏற்பட மனத்தாழ்மை மிக அவசியம். பவுல் எபேசியருக்கு எழுதும்போது; "மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்" என்று எழுதுகிறார் (எபே.4:2,3). ஆவிக்குரிய சபையை கட்டக்கூடிய அருமையான தேவபிள்ளையே ஆவியின் ஒருமையைக்



காத்துக்கொள்வதற்கு மிகுந்த மனத்தாழ்மையினால் பொறுமையாயிருந்து அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள். அப்பொழுது ஐக்கியத்தை பலப்படுத்தமுடியும். ஐக்கியம் பலம்படும்போது கர்த்தருடைய ஆசீர்வாதத்தை பெற்று அநுபவிக்கமுடியும். நீங்கள் ஒருவரையொருவர் கடித்துப் பட்சிப்பீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவராலொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று கலாத்திய சபைக்கு ஆலோசனை சொல்லுகிறார். அன்பர்களே இந்த பவுலின் ஆலோசனைகளை கேட்ட முதல் நூற்றாண்டு சபை ஆவியில் பெலன் கொண்டு வளர்ச்சியடைந்தது. இன்றைக்கு அநேக சபைகளில் வளர்ச்சியில்லை இதற்கு என்ன காரணம்? ஐக்கிய குறைபாடு என்றே சொல்லவேண்டும். மனத்தாழ்மை நமக்குள் வருமானால் ஒருவரிலொருவர் பூரணமாக அன்புகூருவோம். பவுல் மேலும் சொல்லுகிறார் "நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" என்கிறார் (1கொரி.9:19). மற்றவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ள முதலாவது நம்மை நாமே அடிமையாக்கிக்கொள்ளவேண்டியது அவசியம். நம்மை சரிசெய்யாமல் மற்றவர்களை சரிசெய்யமுடியாது. அநேகர் தன்மீது உள்ள குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மற்றவர்கள் மீது குற்றம் சுமத்தவே விரும்புவார்கள். இப்படிப்பட்டவர்கள் பரிசேயனைப்போல ஜெபிப்பவர்கள். இவர்களுடைய ஜெபத்தை தேவன் அங்கிகரியார். "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி, கிறிஸ்து நமக்காகத் தம்மை தேவனுக்குச் சுகந்த வாசனையான காணிக்கையாகவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பிலே நடந்துகொள்ளுங்கள். மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள்; ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே" (எபே.5:1–5). கிறிஸ்தவ ஜீவியத்திற்கு தடைகற்களாக இருக்கிற இவைகளை களைந்து அன்பிலே நிலைத்திருந்து கிறிஸ்துவைப்போல சுகந்த வாசனையாக உங்களை ஒப்புக்கொடுங்கள். மேலும் "கிறிஸ்துவுக்குள்

யாதொரு ஆறுதலும், அன்பினாலே யாதொரு தேறுதலும், ஆவியின் யாதொரு ஐக்கியமும், யாதொரு உருக்கமான பட்சமும் இரக்கங்களும் உண்டானால், நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமை யினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக. கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது'' (பிலி.2:1–5). ஏக சிந்தையும் ஏக அன்பும் நிலைவரப்படும்போது ஐக்கியம் ஏற்படும். அங்கே கர்த்தர் ஆசீர்வாதத்தை அருளுவார். ஆண்டவரிடம் எந்த விதமான சிந்தை இருந்தது? இன்றைக்கு ஊழியருக்கு ஊழியத்தை கட்டவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறது. அதே விதமாக எல்லாவிசுவாசிகளும் இருப்பார்களே யானால், ஊழியம் சிறப்பாக கட்டப்படும். அநேகர் அதன்மூலமாக கர்த்தரை அறிந்துகொண்டு இரட்சிக்கப்படுவார்கள். தேவனுடைய திருசித்தமும் நிறைவேறும். ஆண்டவருக்கு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதே போஜனமாக இருந்தது. நாமும் அழிந்து போகிற போஜனத்திற்காக கிரியை நடப்பிக்காமல் அழியாத போஜனத்திற்காக கிரியைநடப்பிக்கிறவர்களாக இருப்போம். ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' (பிலி.2:6–8). உன்னதத்தின் தேவகுமாரன் மனிதனை மீட்கும்படியாக தம்மைத்தாமே இவ்வளவு தூரம் தாழ்த்தியிருக்கும்போது நாம் நம்மை தாழ்த்துவது அதிக அவசியமல்லவா? அதுபோல நாமும் தாழ்த்தி ஐக்கியத்தை பலப்படுத்துவோம்.

ஐக்கியமாயிருப்பவர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ளவேண்டும். எல்லாரோடும் ஐக்கியமாக இருக்கமுடியாது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். யோவான் சொல்லுகிறார்: ''நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது'' (1யோவா.1:3). உங்களுடைய ஐக்கியம் யாரோடு இருக்கிறது? விபச்சாரக்காரரையும் வேசிமார்க்கத்தாரையும் கர்த்தர் அருவருக்கிறார்.



''அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே'' (2கொரி.6:14–16). ஆகையால் பிரியமானவர்களே, உங்களுடைய ஐக்கியம் தேவனுடைய ஜனங்களோடே இருக்கட்டும். அதற்காக மற்றவர்களை பகைக்கவேண்டாம். அவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ''அன்றியும், பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு நீ விலகியோடி, சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசவாசத்தையும் அன்பையும் சமாதானத்தையும் அடையும்படி நாடு'' என்று தீமோத்தேயுவுக்கு பவுல் ஆலோசனை சொல்லுகிறார். அப்படிப்பட்ட இடத்திலே தான் அன்பு குடிகொள்ளும். பிரிவினை என்பது எல்லா நிர்வாகத்திலும் வந்ததுபோல, இன்று சபைகளிலும் வந்து ஆடிக்கொண்டிருக்கிறது. பிரிந்துபோகிறவர்களைப் பற்றி வேதம்; ''பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான்'' (நீதி.18:1) என வேதம் கூறுகிறது. பிசாசு பிரிவினையை உண்டாக்குகிறான். யூதாஸ் பணத்திற்கு ஆசைப்பட்டு பிரிந்துபோய் இயேசுவைக் காட்டிக்கொடுத்து நான்றுகொண்டு செத்தான். ஆதாமும் ஏவாளும் சர்ப்பத்தின் வார்த்தைக்கு செவிகொடுத்து, பிரிந்துபோய் விலக்கப்பட்ட கனியைப் பறித்து புசித்து சாபத்திற்குள்ளானார்கள். இவைகள் எல்லாம் நமக்கு திருஷ்டாந்தங்களாக இருக்கிறது. ஐக்கியத்தை பலப்படுத்த ஆண்டவரைப்போல ஒருமனமுள்ளவர்களாக இருந்து ஜெபியுங்கள். ஐக்கியம் அன்பைக் கொண்டுவரும். ஒருமனம் உயர்வைக்கொண்டுவரும். கர்த்தர் உங்களை ஐக்கியத்தில் பெலப்படுத்த நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## கேள்வி நேரம்

**ஒற்றுமைக்கு விரோதமாக இருப்பது எது?**

பல காரியங்களைச் சொல்லலாம். அதில் குறிப்பாக சொல்லவேண்டுமானால் பிரிவினை. இந்த பிரிவினையே ஒன்றுமைக்கு விரோதமாக இருக்கிறது. இந்த பிரிவினையை தகர்க்க ஆதிசீஷர்களும் முழுமுயற்சி எடுத்ததை நாம் வேதத்திலிருந்து தெரிந்துகொள்கிறோம். ''கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச்

சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்?'' (1கொரி.1:13). இக்கடிதத்தை எழுதுவதே பவுல்தான் ஆனாலும் அவர் தன்னையும் அதில் இனைத்துக்கொண்டு பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? என்று கேள்வி எழுப்புகிறார். ஆக பவுல் பிரிவினையை விரும்பவில்லை. ஏனென்றால் கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா! இல்லையே. பிரியாத கிறிஸ்துவை நாம் பிரிப்பது நியாயமா? அன்பானவர்களே, நாம் இங்கே சிந்திக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். அப்போஸ்தலர்கள் பிரிவினையை விரும்பவில்லை. ஆதிகிறிஸ்தவர்கள் பிரிவினையை விரும்பவில்லை. ஆனாலும் அவர்கள் மத்தியில் பிரிவினை இருந்தது. அது இன்றும் நீடிக்கிறது. இதை தேவன் அனுமதியார். ஆகையால் ஒற்றுமைக்கு விரோதமாக இருக்கிற இந்த பிரிவினையை தகர்த்து ஒற்றுமைக்காக பாடுபடுவோம். ஆண்டவர் ஜெபித்ததைப்போல ஒற்றுமைக்காக ஜெபிப்போம். அப்பொழுது பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் ஐக்கியமுள்ளவர்களாகயிருப்போம்.

## 27. செவிகொடுங்கள்
## Hear

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும், செவியை உண்டாக்கின ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். செவிகொடுங்கள்– Hear. இவ்வுலகில் வாழ்கின்ற நீங்கள் யாருக்கு செவிகொடுக்கின்றீர்கள்? கணவன் மனைவிக்கு செவிகொடுக்க வேண்டும். மனைவி கணவனுக்கு செவிகொடுக்கவேண்டும். பிள்ளைகள் பெற்றொருக்கு செவிகொடுக்கவேண்டும். ஒட்டுமொத்தத்தில் குடும்பமுழுவதும் நம்மை உண்டாக்கிய தேவனுக்கு செவிகொடுக்கவேண்டும். சபையானது கிறிஸ்துவுக்கு செவிகொடுக்கவேண்டும். சாலொமோன் ராஜா எழுதின நீதிமொழிகளில் வாசிக்கிறோம், ''எனக்குச் செவிகொடுக்கிறவன் எவனோ, அவன் விக்கினமின்றி வாசம்பண்ணி, ஆபத்திற்குப் பயப்படாமல் அமைதியாயிருப்பான்'' (நீதி.1:33). நீங்கள் தேவனுக்கு செவிகொடுப்பீர்கள் என்றால், பயமில்லாத வாழ்வை பெற்றுக்கொள்வீர்கள். பயம் யாருக்கு வருகிறது? பாவம் செய்கிறவர்களுக்கும், மாம்சபெலவீனமுள்ளவர்களுக்கும்



வருகிறது. சிறு குழந்தையைப் பாருங்கள் அக் குழந்தை எதற்கும் பயப்படுவதில்லை. ஏன்? அதற்கு எதைப்பற்றியும் தெரியாது, எதைக்குறித்தும் கவலைகொள்வதில்லை. ஆகையால் தான் நமதாண்டவர் சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொன்னார். அன்பானவர்களே, கர்த்தருக்கு செவிகொடுக்கும்போது தேவன் நம்மை பெலப்படுத்துவார். இன்றைய சமுதாயத்தில் பயத்தினால் அநேகருக்கு நிம்மதியில்லை. நிம்மதியான வாழ்வை பெற்றுக்கொள்ள சாமுவேல் தீர்க்கதரிசியைப்போல, சொல்லும் அடியேன் கேட்கிறேன் என்று சொல்லி தேவனுக்கு செவிகொடுங்கள். அப்பொழுது தேவன் தம்முடைய வார்த்தைகளினால் உங்களோடு பேசுவார். ஆதியிலே தேவனாகிய கர்த்தர் ஆதாமோடு நேரடியாக பேசினார்: ''ஆதாமைக் கூப்பிட்டு; நீ எங்கே இருக்கிறாய் என்றார்'' (ஆதி.3:9). அதற்கு பின்பதாக தீர்க்கதரிசிகளின் காலத்தில் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாக பேசினார். சவுல் சாமுவேல் தீர்க்கதரிசியை பார்த்து: ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்; மற்றவைகளை முற்றிலும் அழித்துப்போட்டோம் என்றான். அதற்கு சாமுவேல்: சவுலை எச்சரித்து ''கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப்பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்'' என்றார் (1சாமு.15:22). ஜனங்கள் பொதுவாக பலி சடங்காச்சாரங்களில் விருப்பமுற்று அவைகளை தேவனுக்கு ஏறெடுக்கவே விரும்புகின்றனர். ஆனால் தேவன் தம்முடைய விருப்பத்தை தீர்க்கதரிசிகள் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறதை நாம் சாமுவேல் புத்தகத்தில் படிக்கிறோம். ஆனபடியால் பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம். நீங்கள் தேவனுக்குச் செவிகொடுப்பீர்களா?

நம்முடைய முற்பிதாக்களோடும், தீர்க்கதரிசிகளோடும் பேசிவந்த தேவன் இந்தக் கடைசிநாட்களில் குமாரன் மூலமாக திருவுளம்பற்றினார்.

இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். ''மோசே பிதாக்களை நோக்கி: உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உங்களுக்காக உங்கள் சகோதரரிலிருந்து எழும்பப்பண்ணுவார்; அவர் உங்களுக்குச் சொல்லும் எல்லாவற்றிலும் அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெவனோ, அவன் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுவான். சாமுவேல் முதற்கொண்டு, எத்தனைபேர் தீர்க்கதரிசனம் உரைத்தார்களோ, அத்தனைபேரும் இந்த நாட்களைமுன்னறிவித்தார்கள்'' (அப்.3:22–24). புதியஏற்பாட்டு காலத்தின் துவக்கத்தில் அப்போஸ்தலருக்கு இயேசுவை வெளிப்படுத்துகையில் ''இவர் என்னுடைய நேசகுமாரன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாயிற்று'' (லூக்.9:35). அந்தச் சத்தம் உண்டாகையில் இயேசு ஒருவரே காணப்பட்டார். நாம் இங்கே சிந்திக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். அந்நாளின் துவக்கத்தில் பெரிய தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானகன் இருந்தார், இயேசுவை பெற்றெடுத்த மரியாள் இருந்தாள், இவர்களுக்கெல்லாம் செவிகொடுக்கும்படியாக சொல்லாமல் இயேசுவுக்கு மட்டும் செவிகொடுக்க சொல்லியதன் காரணம் என்ன? அவர் ஒருவரே பிதாவாகிய தேவனுக்கு நேசகுமாரன். அவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். அவரே மனிதனுடைய பாவத்தை போக்கும் பலியாக தேவனால் முன்குறிக்கப்பட்டவர். இன்றைக்கு மரியாளைநோக்கி: கோடிக்கணக்கான ஜனங்கள் வேண்டிக்கொள்கின்றனர். இந்த மரியாள் ஒருமுறை கானாவூர் கலியாணவீட்டில் திராட்சரசங்குறைவுபட்டபோது, அதை இயேசுவுக்கு தெரியப்படுத்தினாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். பின்பதாக மரியாள் அங்குள்ள வேலைக்காரரை நோக்கி: ''அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்'' (யோவா.2:5). அங்கே மரியாள் அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதின்படி செய்யுங்கள் என்று வேலைக்காரரை அனுப்புவதை நாம் வாசிக்கிறோம். அவளுக்கு சகல அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், அவள் இயேசுவினிடத்தில்



வேலைக்காரரை அனுப்பியிருக்கமாட்டாள். தானே அந்த அற்புதத்தை செய்திருப்பாள். அவளுக்கு அப்படிப்பட்ட அதிகாரத்தை பிதாவாகிய தேவன் கொடுக்கவில்லை. மாறாக இயேசுவை பெற்றெடுக்க மட்டுமே தெரிந்துகொண்டார் என நாம் பரிசுத்தவேதாகமத்தின் மூலம் அறிகிறோம். நீங்கள் யாருக்கு செவிகொடுக்கிறீர்கள்? இயேசுவுக்கா, மரியாளுக்கா? உங்களுடைய ஜெபம் கேட்கப்படவேண்டுமானால், தேவனை நோக்கி இயேசுவின் மூலமாக வேண்டிக்கொள்ளுங்கள். இயேசு சொல்கிறார் ''நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளையல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்'' (யோவா.10: 14–16). நீங்கள் இவருக்கு செவிகொடுத்து அந்த மந்தையின் ஆடுகளாயிருக்கிறீர்களா? நீங்கள் மந்தையின் ஆடுகளாயிராவிட்டால் உங்களுக்கு ஆபத்து உண்டு. அவர் மந்தைக்காக தம்முடைய ஜீவனையே கொடுத்திருக்கிறார். நீங்கள் மந்தையின் ஆடுகளாயிராதிருந்தால் இந்த மந்தையின் ஆடுகளாக மாற, ஆண்டவரின் சத்தத்துக்கு செவிகொடுங்கள். மேலும் அவர் சொல்லுகிறார் ''என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதியனவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்''

(லூக்.6:46–49). நீங்கள் ஒரு புத்தியுள்ள மகனாக, மகளாக இருப்பீர்கள் என்றால் கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, புத்தியுள்ள மனுஷனைப்போல கன்மலையாகிய கிறிஸ்துமீது நீங்கள் அஸ்திபாரமிட்டு உங்கள் வாழ்க்கையைத் துவக்குங்கள். அப்பொழுது உங்களுக்கு வரக்கூடிய சோதனைகளிலிருந்து காக்கப்படுவீர்கள். இன்று இயேசுவை நோக்கி: ஆண்டவரே, ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கதறுகிறார்கள். ஆனால் ஆண்டவருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து அதன்படியாக நடப்பதில்லை. ஆகையால் தான் ஆண்டவர் இந்தவிதமான உதாரணத்தின் மூலம் நம்மோடு பேசுகிறார்.

நாம் ஆண்டவருக்கு செவிகொடுப்பதால் அநேக ஆசீர்வாதங்கள் வருகிறது. ‘‘ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்’’ (யோவா.14:23). தேவன் நமக்கு உதவி செய்யவேண்டுமென்று அநேக வேளைகளில் நாம் நினைக்கிறோம். அதேவேளையில் நாம் அவருடைய வசனங்களைக் கைக்கொள்ளுகிறோமா! என்பதை சிந்திக்கவேண்டும். நாம் அவருடைய வசனங்களைக் கைக்கொள்ளும்போது ஆண்டவர் சொன்னபடி பிதாவாகிய தேவன் நம்மில் அன்பாயிருப்பார் அதுமாத்திரமல்ல அவர்கள் நம்மோடு வாசம்பண்ணுவார்கள். பிதாவாகிய தேவனும் ஆண்டவராகிய இயேசுவும் பரிசுத்த ஆவியானவரும் நம்மோடு வாசம்பண்ணினாள் எப்படியிருக்கும் என்பதை நிணைத்துப்பாருங்கள். அந்த அற்புதமான வாழ்வை பெற்றுக்கொள்ள நாம் முதலாவது செய்யவேண்டியது என்ன? அவருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, இந்த மண்ணான சரீரத்தில் அவருடைய வார்த்தைகளைக் கைக்கொண்டு சாட்சியுள்ள தேவனுடைய பிள்ளையாக வாழவேண்டும். இயேசு சொல்லுகிறார்: ‘‘நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்’’ என்றார் (யோவா.15:7,8). நாம் ஆண்டவருக்கு சீஷராயிருக்க வேண்டுமானால் அவருடைய வார்த்தைகள் உங்களில்



நிலைத்திருக்கவேண்டும். நிலைத்திருக்கவேண்டுமென்றால் அந்த வசனத்தின்படியாக வாழவேண்டும். இதை அநேக கிறிஸ்தவர்கள் செய்வதில்லை. பெயரளவில் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பாரம்பரிய கிறிஸ்தவர்களுக்கு கர்த்தருடைய வசனத்தின் ருசி தெரிவதில்லை. ஆனால் புறஜாதிமார்க்கத்திலிருந்து வருகிறவர்கள் மற்றமார்க்கங்களுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசத்தை புரிந்துகொள்வதால் அதனுடைய ருசியை அறிகிறார்கள். அன்பானவர்களே! நீங்கள் ஆண்டவருக்கு சீஷர்களா? மேலான ஆசீர்வாதங்களை ஆண்டவருடைய சீஷர்கள் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்கள். ‘‘குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்’’ (யோவா.3:36). மேலும் ‘‘நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்’’ (யோவா.10:9). நீங்கள் ஆண்டவருக்கு செவிகொடுத்து இந்தவிதமான ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளத்தக்கதாக முயற்சியுங்கள்.

## கேள்வி நேரம்

**பாவிகளுக்கு தேவன் செவி கொடுப்பாரா?**

‘‘பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்கு செவிகொடுப்பார்’’ (யோவா.9:31). ஆண்டவருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, தேவனுடைய திருசித்தத்தை புரிந்துகொண்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவனுள்ளமார்க்கத்தில் தன்னை எவன் இணைத்துக்கொள்கிறானோ, அப்படிப்பட்டவனுக்கு கர்த்தர் செவிகொடுப்பார். மற்றபடி பாவத்தில் நீடித்திருக்கிற எந்த ஒரு மனிதனுக்கும் ஆண்டவர் செவிகொடார். ‘‘பாவஞ்செய்கிற எவனும் நியாயப்பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம். அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவமில்லை. அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற

எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை'' (1யோவா.3:4–6). நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 28. ஆவிக்குரிய கனிகள்
## Spiritual fruits

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஆவி ஆத்துமா சரீரத்தை உண்டாக்கின ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆவிக்குரிய கனிகள் Spiritual - fruits. கனிகள் இல்லாத வாழ்க்கை கால்அளவு வாழ்க்கை என்று சொல்லலாம். முழுமையான வாழ்க்கை வாழவேண்டுமானால் நாம் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கவேண்டும். பலவகையான மரங்களைப் பார்க்கிறோம். அதில் நல்ல பலனைக் கொடுக்கிற மரங்களை நன்கு கொத்தி எருப்போட்டு அது அதிக கனிகளைக் கொடுக்கும்படியாக முயற்சிப்பார்கள். பலன் குறைவாக இருக்கிற மரங்களை எந்த தோட்டக்காரனும் விரும்பமாட்டான். அதைப்போல நம்மை உண்டாக்கின தேவன் நற்பலனை நம்மில் எதிர்பார்க்கிறார். கர்த்தர் எரேமியா தீர்க்கன் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களைப் பார்த்து சொல்லும்போது ''நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?'' என்றார் (எரே.2:21). தேவன், மனிதனை ஏதேன் தோட்டத்தில் வைக்கும்போது அவனை தம்முடைய சாயலில் சிருஷ்டித்து உயர்வானவனாக வைத்தார். தேவன் சகலத்தையும் சிருஷ்டித்து அது நல்லது என்று கண்டார். அதேவேளையில் தேவன் மனிதனை மட்டும் தன்னுடைய சாயலாக சிருஷ்டித்தார். இப்படி சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் இக்காலத்தில் அநேக உபாயதந்திரங்களைத் தேடிக்கொண்டான். நல்ல உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டப்பட்ட மனிதன் ஆகாத காட்டுச்செடியாக போய்விட்டான். இன்று மனிதர்களில் சிலர் மிருகமாக மாறிவிட்டார்கள். அப்படியென்றால் மிருக குணமுடையவர்களாக போய்விட்டார்கள். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே நீ என்னிலைமையில் இருக்கிறாய்.



உன்னை உண்டாக்கின தேவன் உன்னிடத்தில் நற்கனியை எதிர்பார்க்கிறார். ஆண்டவர் இயேசுவும் அவருடைய சீஷர்களும் பெத்தானியாவுக்கு சென்று, பின்பு திரும்பி வருகையில் அவருக்குப் பசியுண்டாயிற்று. ''அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதினிடத்தில் வந்தபோது அதில் இலைகளையல்லாமல், வேறொன்றையும் காணவில்லை'' (மாற்.11:12,13). இந்த அத்திரமரத்தை உண்டாக்கின ஆண்டவர் அதில் கனியைத் தேடினார். அதில் இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. ஏன், அது அத்திப்பழக்காலமாயிராதபடியால் பழங்கள் இல்லை. ஆண்டவருடைய எதிர்பார்ப்பு என்ன? எல்லா காலத்திலும் பலன் கொடுக்கவேண்டும். அதற்காகத்தான் மனிதனை உண்டாக்கினார். ஒவ்வொருவரும் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கவேண்டும். இல்லையேல், இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்று அந்த அத்திமரத்துக்கு சொல்லியதைப்போலாகிவிடும்.

இயேசு தம்முடைய சீஷர்களைப் பார்த்துச்சொன்னார்: ''நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்; நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன்'' (யோவா.15:16). ஆண்டவர் எதற்காக பன்னிரெண்டு சீஷர்களைத் தெரிந்துகொண்டார். அவர்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவிக்கவும், சாட்சியுள்ளவர்களாக இருந்து கனிகொடுக்கவும் அந்த கனிகொடுத்தலிலே நிலைத்திருக்கவும் அவர்களை தெரிந்துகொண்டு அவர்களுக்கு அப்போஸ்தலர்கள் என்ற பட்டத்தைக் கொடுத்தார். அவர்கள் அந்தப்படியாக உலகமென்றும் சென்று ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்து சாட்சியுள்ளவர்களாக வாழ்ந்தனர். யூதாசை தவிர மற்றஅனைவரும் பிதாவுக்கு ஏற்றவர்களாக கனிகொடுத்தனர். நம்முடைய முற்பிதாவாகிய ஆதாமும் ஏவாளும் தேவனால் விலக்கப்பட்ட விலக்கப்பட்ட கனியைப் புசித்து

பாவத்திற்குள்ளானார்கள். ஆகையால் அவர்கள் ஆவியில் மரித்து ஆவிக்குரிய கனிளை கர்த்தருடைய சமுகத்தில் கொடாமற்போனார்கள். அன்பானவர்களே, தேவன் உங்களை நற்கனிகொடுக்கத்தக்கதாக வைத்திருக்கிறார். ஆவிக்குரிய கனிகளைக் கொடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

''ஆவிக்குரியவன் எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்'' (1கொரி.2:15). நீங்கள் ஆவிக்குரியவர்களாக இருந்தால் இவைகளை ஆராய்ந்து பார்ப்பீர்கள். பெரோயா பட்டணத்தார்கள் தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினாலே தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள். அதைப்போல நீங்களும் ஆராய்ந்துபாருங்கள். ''ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். கர்த்தருக்கு பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள். கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்'' (எபே.5:9–11). ஆவிக்குரியவன் ஆவிக்குரிய கனிகளைக் கொடுப்பான். அதினாலே நாம் ஆவிக்குரியவர்கள் இன்னாரென்றும் மாம்சத்துக்குரியவர்கள் இன்னாரென்றும் அறிந்துகொள்ளலாம். ஆவிக்குரிய கனிகளை நாம் கலாத்தியர் புத்தகத்தில் வாசிக்கிறோம். ''அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை'' (கலா.22,23). இந்த ஒன்பதுவிதமான கனிகள் ஒவ்வொரு கிறிஸ்தவனுடைய வாழ்க்கையிலும் காணப்படவேண்டும். இதை பிதாவாகிய தேவன் எதிர்பார்க்கிறார். மனிதனுடைய பிறப்பும், இறப்பும் ஒருமுறை மட்டுமே நிகழ்கின்ற காரியம். ஆகையால் இவ்வுலகத்தில் பிறந்த நாம் காலத்தைப் பிரயோஜனப்படுத்த இன்றே ஒரு தீர்மானம் செய்வோம். நேற்றுவரை போனது போகட்டும். இன்று முதல் நான் ஒரு உண்மை கிறிஸ்தவனாக ஆவிக்குரிய கனிகள் நிறைந்த கிறிஸ்தவனாக, பிதாவாகிய தேவனுக்குப்பிரியமானவனாக வாழ்ந்து மரிக்க ஆசைப்படுகிறேன் என்ற ஒரு தீர்மானத்தை எடுங்கள். உங்கள் முயற்சியைக் கர்த்தர் ஆசீர்வதிப்பார்.



யோசேப்பை நீங்கள் அறிவீர்கள். அவனுடைய சகோதரர்கள் அவன்மீது பொறாமை கொண்டு அவனை தூக்கி இஸ்மவேலரிடத்தில் விற்றுப்போட்டார்கள். யோசேப்பை தெரிந்துகொண்ட கர்த்தர் அவனோடு இருந்தார். அவனுடைய காரியங்களை வாய்க்கச்செய்தார். எகிப்திலே பார்வோனுடைய சமுகத்தில் உயர்த்தப்பட்டான். அவனுடைய சகோதரர்களை பஞ்சகாலத்தில் போஷிக்கிற மகனாக மாற்றப்பட்டான். எத்தனை அருமையான காரியம்! திராட்சச் செடி அநேகரை திருப்தி செய்யக்கூடிய திராட்சப் பழங்களைக் கொடுக்கிறது ஆகையால் இயேசு நானே மெய்யான திராட்சச்செடி என்றார். இப்போர்பட்ட ஆசீர்வாதத்துக்கு பாத்திரவானாக மாற்றப்பட்டான் யோசேப்பு. அவனுடைய தகப்பனாகிய யாக்கோபு அந்தியகாலங்களில் அவனை ஆசீர்வதிக்கும்போது ''யோசேப்பு கனிதரும் செடி; அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும் செடி; அதின் கொடிகள் சுவரின்மேல் படரும்'' என்று சொல்லி ஆசீர்வதித்தான் (ஆதி.49:22). ஆம் அன்பானவர்களே, நீங்கள் இந்த யோசேப்பைப்போல மாறவேண்டும். ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கவேண்டும்.

கனி கொடாதவர்களின் நிலைமை என்ன? அவர்களின் நிலைமை எப்படிப்பட்டதாக இருக்கும் என்று நாம் தியானிக்கும்போது, ''நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்.7:19). நல்ல கனிகொடாதவர்களை நாம் அவர்களுடைய கனிகள் மூலமாக அறிந்துகொள்ளலாம். முட்செடிகளில் திராட்சப்பழங்களைப் பறிப்பதுமில்லை, முட்பூண்டுகளில் அத்திப்பழங்களைப் பறிப்பதுமில்லை. கெட்டமரம் நல்ல கனியைக் கொடாது. அதைப்போல நாம் திராட்சத்தோட்டத்தை கெடுக்கிற குள்ளநரிகளை அறிகிறோம். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்திக்கொண்டு வரக்கூடிய ஓநாய்கள். அவர்கள் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கமாட்டார்கள். அவர்களுக்காக அக்கினி ஆயத்தமாக்கப்பட்டுள்ளது அதில் வெட்டுண்டு தள்ளப்படுவார்கள். ஒரு உவமையிலே ஆண்டவர் சொல்லும்; ''ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நாட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் அந்த அத்திமரத்திலே கனியைத்

தேடிவருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்றார்'' (லூக்.13:6–,7–9). இந்த உவமையின் கருத்தைப் புரிந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். உங்களுக்கு ஒரு தருணமானது கூட்டி வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் கனிகொடுக்கத்தக்கதாக போய் நிலைத்திருந்து கனிகொடுங்கள் எஜமான் வருமட்டாக கனிகொடாதிருந்தால் அவர் வரும் நாளிலே நீங்கள் வெட்டுண்டு அக்கினியில் போடப்படுவீர்கள். சவுல் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியால் அவனை ராஜாவாயிராதபடி தேவன் புறக்கணித்தார் என்பதை நீங்கள் வேதத்தில் வாசித்திருப்பீர்கள். அவனுக்குப்பின் இளவயதிலிருந்தே கர்த்தருக்கு பயந்து நடந்து ஆடுகளைமேய்த்து வந்த தாவீதை தேவன் தெரிந்துகொண்டார்.

ஆவிக்குரிய கனிகள் உங்கள் வாழ்க்கையை மாற்றும். எனக்குள் **அன்பு** இருக்கும்வரை என்னை யாரும் அசைக்கமுடியாது. எனக்குள் **சந்தோஷம்** இருக்கும்வரை என்னை யாரும் சங்கடப்படுத்த முடியாது. எனக்குள் **சமாதானம்** இருக்கும்வரை என்னுடன் யாரும் சண்டையிடமுடியாது. எனக்குள் நீடியபொறுமை இருக்கும்வரை என்னை யாரும் பொறுமையிழக்க செய்துவிடமுடியாது. எனக்குள் **தயவு** இருக்கும்வரை என்னை யாரும் தடுக்கமுடியாது. எனக்குள் **நற்குணம்** இருக்கும்வரை என்னில் யாரும் துர்க்குணம் உருவாக்கமுடியாது. எனக்குள் **விசுவாசம்** இருக்கும்வரை என் நம்பிக்கையை யாரும் இழக்கச்செய்யமுடியாது. எனக்குள் **சாந்தம்** இருக்கும்வரை எனக்குள் சச்சரவுகளைக் கொண்டுவரமுடியாது. எனக்குள் **இச்சையடக்கம்** இருக்கும்வரை எதிராளியாகிய பிசாசு என்னில் இச்சையைத் தூண்டமுடியாது. இந்தவிதமான நம்பிக்கை உங்களுக்கு உண்டா? அன்பானவர்களே, ஆவிக்குரிய கனிகள் நம்மை ஆனந்தத்திற்குள் கொண்டுசெல்லும். ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிறவர்கள் ஆவியினால் பிறந்தவர்கள். அவர்கள் பாவத்திற்கு விலகினவர்கள். பாவத்திற்கு செத்தவர்கள் நீதிக்கு பிழைத்தவர்கள். அவர்களில் கிறிஸ்து



வாசமாயிருப்பார். அவர்கள் தேவனால் பிரித்தெடுக்கப்பட்டவர்கள், தேவனுடைய வார்த்தைக்கு செவிகொடுக்கிறவர்கள். அவர்களுக்காக நித்தியஜீவன் வைக்கப்பட்டிருக்கிறது. கர்த்தர் அந்நாளில் அவர்களுக்கு அதைக் கொடுப்பார். தேவனோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தை அவர்கள் பெறுவார்கள். அதை நீங்களும் பெறவேண்டுமா? ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்க, கர்த்தருடைய வல்லமையுள்ள வசனங்களுக்கு நீங்களும் கீழ்ப்படிந்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**நம்மில் எவைகள் பெருகினால், வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவெட்டாது?**

“விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும், தேவபக்தியோடே சகோதரசிநேகத்தையும், சகோதரசிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது'' என்று பேதுரு மிகத்தெளிவாக குறிப்பிடுகிறார் (2பேது.1:5–8). மேலும் “நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், என்கும் சீஷர்களாயிருப்பீர்கள்'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவா.15:8). உங்களுக்கு இருக்கிற விசுவாசத்தோடே இவைகளைக் கூட்டிக்கொள்ளுங்கள். அப்பொழுது நீங்கள் வீணராய் போய்விடாதபடி ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கிறவர்களாக மாற்றப்படுவீர்கள்.

## 29. கிரியைகளில்லாத விசுவாசம் எப்படிப்பட்டது?

## How is faith without works?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நற்கிரியைகளை

நம்மில் உண்டுபண்ணுகிற ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். கிரியைகளில்லாத விசுவாசம் எப்படிப்பட்டது? How is faith without works? செத்தது என பரிசுத்த வேதாகமம் பதிலளிக்கிறது. யாக்கோபு சொல்கிறார்: ''என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப் பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா? ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும் அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, உங்களில் ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள், குளிர்காய்ந்து பசியாறுங்கள் என்று சொல்லியும், சரீரத்திற்கு வேண்டியவைகளை அவர்களுக்குக் கொடாவிட்டால் பிரயோஜனமென்ன? அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்'' (யாக்.2:14–17). இன்றைக்கு அநேகரிடத்தில் விசுவாசம் இருக்கிறது ஆனால் கிரியைகள் இல்லை. இப்படிப்பட்ட விசுவாசம் செத்தது. அநேகருக்கு மனமிருக்கிறது கொடுக்க கை நீளவில்லையே என்பர். அதைத்தான் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும் என்று வசனம் போதிக்கிறது. ராஜரிகப் பிரமாணத்தை உற்று நோக்குவோமேயானால் ஒருவரும் சாக்குப் போக்குச் சொல்ல முடியாது. ''உன்னிடத்தில் நீ அன்பு கூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்'' (யாக்.2:8). இப்பிரமாணத்தை ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் கைக்கொள்ளுவார்களேயானால் இன்று பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்து காணப்படும். முழுவேதாகமும் அன்பின் பிரமாணத்தினால் அடக்கப்பட்டுள்ளது. அன்பு ஒருவருக்கு இருக்கும் பட்சத்தில் அவர் தேவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுவார். அன்பு இல்லாதவர்கள் தேவனை அறியாதவர்கள் என்று வேதம் சொல்லுகிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆகையால் தான் கிரியை செய்கிற கிறிஸ்தவர்களாக நாம் வாழவேண்டும்.

''ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு;



கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக்காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. தேவன் ஒருவர் உண்டென்று விசுவசிக்கிறாய், அப்படிச் செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன. வீணான மனுஷனே, கிரியைகளில்லாத விசவாசம் செத்ததென்று நீ அறியவேண்டுமோ? நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரன் ஈசாக்கைப் பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதிமானாக்கப்பட்டான்? விசவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சிசெய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று காண்கிறாயே. அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது என்கிற வேதவாக்கியம் நிறைவேறிற்று; அவன் தேவனுடைய சிநேகிதனென்னப்பட்டான். ஆதலால், மனுஷன் விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேயும் நீதிமானாக்கப்படுகிறானென்று நீங்கள் காண்கிறீர்களே. அந்தப்படி ராகாப் என்னும் வேசியும் தூதர்களை ஏற்றுக்கொண்டு வேறுவழியாய் அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்? அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது'' (யாக்.2:18–26). செத்துப்போன சரீரத்தினால் ஒன்றும் செய்ய இயலாது அப்படியே ஆவியில்லாத சரீரமும் இருக்கிறது. நீங்களும் நானும் ஆவிக்குரியவர்கள், ஜீவனுள்ளவர்கள் என்று சொன்னால் கிரியை செய்ய வேண்டும். ''நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்'' (எபே.2:10).

கிரியை அழிந்துபோகிற போஜனத்திற்காக இருக்கக்கூடாது. இயேசுவை திரளான ஜனங்கள் பின்பற்றினார்கள். என்னகாரணம்? அவருடைய அற்புதங்களை கண்ட ஜனங்கள் ஆச்சரியப்படவும், அற்புதங்களைக்கண்ட ஜனங்கள் தேவனை துதிக்கவும் செய்தார்கள். ஒரு

கூட்டத்தார் அப்பம் புசித்து திருப்தியடைந்ததினால் இயேசுவை பின்தொடர்ந்தார்கள். நாம் சில விசுவாசிகளைப் பார்க்கிறோம். எங்கே கூட்டம் வைத்தாலும் போவார்கள். மூன்றுவேளை நல்லஉணவு கிடைக்கிறது. தங்குவதற்கு நல்ல சிறப்பான ஏற்பாடுகள் செய்து கொடுக்கிறார்கள். மேலும் புத்தகங்கள், நோட்டு, பேனா போன்றவற்றையும் வாங்கிக்கொடுக்கிறார். இதற்காகவே ஒரு சிலர் போகின்றார்கள். சத்தியத்தை கற்கவேண்டும் அவைகளில் நிலைத்திருக்கவேண்டும். ஆண்டவருடைய வசனம் என்ன சொல்லுகிறது என்ற கவணத்தோடு கேட்கும்படியாக செல்லக்கூடிய ஜனங்கள் சொற்ப ஜனங்களாக இருக்கிறார்கள். ஆகையால் தான் ஆண்டவர் தம்மை பின்தொடர்ந்து வந்த ஜனங்களைப் பார்த்து "அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்; அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார்; அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார்" என்றார் (யோவா.6:27). அன்பானவர்களே, கர்த்தர் சபையை போஷிக்க அறிந்திருக்கிறார். இஸ்ரவேலை அழைத்த தேவன் அவர்களை நாற்பது வருஷம் வனாந்தரத்தில் போஷித்தார். அவர்களில் அநேக அவிசுவாசிகள் இருக்கத்தான் செய்தார்கள். அதைப்போல இயேசுவின் நாட்களில் போஜனத்திற்காக போனகூட்டம் இருந்ததாக வாசிக்கிறோம். இன்றும் இந்நிலை நீடிக்கிறது. தாவீது சொல்கிறார்: "சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது" (சங்.34:10). காட்டுக்கு ராஜாவாக வலம் வரும் சிங்கங்களின்குட்டிகள் கூட பட்டினியாயிருக்கும் ஆனால் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது. ஆனபடியால் ஒருவேளை போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரை நிலைநிற்கிற போஜனமாகிய அவருடைய வசனத்தின்படி கிரியை நடப்பிக்கிறவர்களாக இருக்கவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுல் கலாத்திய சபைக்கு எழுதும்போது "கிறிஸ்துஇயேசுவினிடத்தில் விருத்தசேதனமும் விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்" (கலா.5:6). பாரம்பரியங்கள் ஒருவனை



காப்பாற்றாது. பரிசேயர் சதுசேயர் வேதபாரகர் போன்றோர் தேவஅன்பை விட்டுவிட்டார்கள். ஆகையால் ஆண்டவர் அப்படிப்பட்டவர்களைப் பார்த்து: பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசமபாகம் கொடுத்து, நியாயத்தையும் தேவஅன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும் அவைகளையும் விடாதிருக்கவேண்டுமே என்றார். அன்பானவர்களே அநேக சடங்குகளை சரியாக செய்கிறார்கள். ஆனால் கிரியை செய்கிற அன்பின் கற்பனையை அநேகர் விட்டுவிடுகிறார்கள். இப்படிப்பட்டவர்கள் முதன்மையான ஆசனங்களையும் சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறார்கள். "அநேகர் விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும்; அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். கிரேத்தாதீவார் ஓயாப்பொய்யர் துஷ்டமிருகங்கள், பெருவயிற்றுச் சோம்பேறிகள் என்று அவர்களிலொருவனாகிய அவர்கள் தீர்க்கதரிசியானவனே சொல்லியிருக்கிறான்" (தீத்து1:10–12). வயிற்றுக்கு ஊழியஞ்செய்கிற கூட்டத்தையும், போஜனத்திற்காக கிரியை நடப்பிக்கிற கூட்டத்தையும், மாய்மாலம் பண்ணுகிற கூட்டத்தையும், முதன்மையை விரும்புகிற கூட்டத்தையும் நாம் அநுதின ஜீவியத்தில் காண்கிறோம். இயேசு சொல்கிறார்: "ஜீவ அப்பம் நானே. உங்கள் பிதாக்கள் வனாந்தரத்திலே மன்னாவைப் புசித்திருந்தும் மரித்தார்கள் இதிலே புசிக்கிறவன் மரியாமலிருக்கும்படி வானத்திலிருந்திறங்கின அப்பமே இதுவே. நானே வானத்திலிருந்திறங்கின ஜீவஅப்பம்; அந்த அப்பத்தைப் புசிக்கிறவன் என்றென்றைக்கும் பிழைப்பான்; நான் கொடுக்கும் அப்பம் உலகத்தின் ஜீவனுக்காக நான் கொடுக்கும் என் மாம்சமே என்றார்" (யோவா.6:48–51). ஆண்டவர் கொடுக்கும் அவருடைய மாம்சத்தையும் இரத்தத்தையும் நினைவுகூர்ந்து கிரியை நடப்பிக்கிறவர்களாக மாறுங்கள். அவரை பிதாவாகிய தேவன் முன்குறித்திருக்கிறார்.

நம்முடைய காரியங்களை கர்த்தர் அறிவார். ஒருவேளை நாம்

செய்கிற காரியங்களை மற்றவர்கள் அறியார்கள். ஆனால், சகலத்தையும் அறிந்த கர்த்தருக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை. யோவானுக்கு வெளிப்படுத்தும்போது ஏழு சபைகளிலுள்ள குறைபாடுகளையும், அந்த சபைகளின் கிரியைகளையும் அறிந்திருக்கிறேன் என்று எழுதுகிறார். சர்தை சபைக்கு எழுதும்போது: "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய் நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" என்று எழுதுகிறார் (வெளி.3:2,3). இன்றைக்கு உயிருள்ளவனாயிருந்தும் செத்தவனாக இருக்கிற அநேகரை நாம் காண்கிறோம். சரிவர சபைக்கு வராமல் ஆராதனைகளை புறம்பே தள்ளுகிறவர்கள் ஆவியில் செத்தவர்கள். இப்படிப்பட்டவர்களுடைய கிரியைகளை தேவன் அறிகிறார். நீ மனந்திரும்பு இல்லாவிட்டால் திருடனைப்போல் உன்மேல் வருவேன் என்கிறார். பிலதெல்பியா சபைக்கு எழுதும்போது; "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்கிறார் (வெளி.3:8). இந்த சபை வசனத்தை கைக்கொண்ட சபையாக இருந்து செயல்பட்டதை அறிகிறோம். ஆகையால் திறந்தவாசல் வைக்கப்பட்டுள்ளது. லவோதிக்கேயா சபைக்கு எழுதும்போது; "நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்" என்கிறார் (வெளி.3:16). இப்படிப்பட்ட சபைகள் அதிகமாக இருக்கிறது. அநேகர் இப்படிப்பட்ட வாழ்க்கையை விரும்புகின்றனர். ஆனால் கர்த்தருடைய வார்த்தை இப்படிப்பட்டவர்களை வாந்திபண்ணிப்போடுவேன் என்பதே. தேவன் வாந்தி பண்ணிப்போடுமுன் மனந்திரும்பி குணப்படுங்கள். "என்னத்தினாலெனில், ஒருவன் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாதவனானால், கண்ணாடியிலே தன் சுபாவமுகத்தைப் பார்க்கிற மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்; அவன் தன்னைத்தானே பார்த்து, அவ்விடம்விட்டுப் போனவுடனே, தன் சாயல்



இன்னதென்பதை மறந்துவிடுவான். சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானயிருப்பான்" (யாக்.1:23–26). நீங்களும் இந்தவிதமான பாக்கியத்தை பெற முயற்சியுங்கள்.

**கேள்வி நேரம்**

**நியாயப்பிரமாண கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட முடியுமா?**

"நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே எந்த மனுஷனும் நீதிமானாக்கப்படுவதில்லையே" (கலா.2:16). ஆகையால், நாம் புறஜாதியாரில் பிறந்த பாவிகளாயிராமல், சுபாவத்தின்படி யூதராயிருக்கிற நாமும் இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலேயன்றி, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே மனுஷன் நீதிமானாக்கப்படுவதில்லையென்று அறிந்து, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலல்ல, கிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்படும்படிக்குக் கிறிஸ்து இயேசுவின்மேல் விசுவாசிகளானோம். மேலும் "நியாயப்பிரமாணமோ விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான். மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்" (கலா.3:12,13).

## 30. நீங்கள் உங்களை எதற்குப் பழக்குவிக்கிறீர்கள்

## For what you trainup yourself?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய சிருஷ்டிகராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். நீங்கள் உங்களை எதற்குப் பழக்குவிக்கிறீர்கள் - For what you train up yourself? பூமியிலே ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையான காரியங்களுக்கு தங்களை பழக்குவிக்கிறார்கள்.

மாணவர்களை நம்நாடு பலவிதமான வேலைகளுக்கு பயிற்சி கொடுக்கிறது. அதினால் நாடு முன்னேற்றமடைகிறது. மனிதர்கள் தங்களை நற்காரியங்களுக்கு பயன்படுத்தினால் நாடும் வீடும் பயனடையும். துர்க்காரியங்களுக்கு தங்களை பயிற்றுவித்தால் நாடும் வீடும் மிகப்பெரிய பாதிப்பை சந்திக்கும். எனக்கு அன்பானவர்களே, உங்களை எதற்கு பழக்குவிக்கின்றீர்கள்? வேதம் சொல்லுகிறது; “நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்” (எபே.2:2,3). நாமெல்லாரும் ஒரு காலத்தில் தேவனை அறியாமல் இருந்தபோது, கீழ்ப்படியாதவர்களாகவும் தேவனுக்கு சத்துருக்களாகவும் இருந்தோம். ஆகையால் நம்முடைய மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்து தேவனுடைய பார்வையில் குற்றவாளிகளாக காணப்பட்டோம். இந்த காலம் அறியாமையின் காலம் என்றே சொல்லவேண்டும். இவ்வுலகத்தின் அதிபதி அப்பொழுது நம்முடைய கண்களை குருடாக்கிவைத்திருந்தான். “அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்” (எபே.2:12). குறிப்பாக சொல்லவேண்டுமானால் அந்நியரும் நம்பிக்கையில்லாதவர்களுமாயிருந்தோம். நமக்கு அநேகர் போதித்தார்கள் அந்த போதனையை நாம் உடனே ஏற்றுக்கொள்ளவில்லை, அவிசுவாசமான வார்த்தைகளால் அவர்களை எதிர்த்துநின்று பேசினோம் என்பதை நினைவுகூருங்கள். ஆனபடியால் அக்காலத்தில் கிறிஸ்துவை சேராதவர்களாயிருந்தோம். காரணம் முன்னே பாவத்திற்கு அடிமைகளாயிருந்தோம். பாவம் நம்மை ஆண்டுகொண்டது. ஆதாமின் மீறுதலுக்கொப்பாய் பாவம் செய்யாதவர்களையும் பாவம் ஆண்டுகொண்டது.



ஆகையால் எல்லோரும் பாவிகளானோம். நீதிமான் ஒருவனாகிலும் இல்லை.

“முன்னே தேவனுடைய ஜனங்களாயிருக்கவில்லை, இப்பொழுதோ அவருடைய ஜனங்களாயிருக்கிறீர்கள்; முன்னே நீங்கள் இரக்கம் பெறாதவர்களாயிருந்தீர்கள், இப்பொழுதோ, இரக்கம் பெற்றவர்களாயிருக்கிறீர்கள்” (1பேது.2:10). ஆகையால் அன்பானவர்களே உங்களை எதற்கு பழக்குவிக்கிறீர்கள். “விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின்பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்தபோது, அவைகளைச் செய்துகொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள்” (கொலோ.3:5–8). சரீரத்திலே அழிக்கவேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. அப்படி அழிக்காத பட்சத்தில் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும் என்று எச்சரிக்கப்படுகிறோம். உங்களை இந்தவிதமான காரியங்களுக்கு தொடர்ந்து பழக்குவிப்பீர்கள் என்றால் மாம்சமும் மனதும் விரும்பினதை செய்கிறீர்கள். இது தேவனுடைய பார்வையில் மிகப்பெரிய குற்றமாகக் கருதப்படும். ஆசீர்வாதமான வார்த்தைகள் வரவேண்டிய வாயில் சாபவார்த்தைகள் சரமாரியாக வருகிறது. என்ன காரணம்? அங்கே தேவஆவியானவர் இல்லை. பிசாசின் ஆதிக்கம் குடிகொள்கிறது. “ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக் காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப்பின்தொடரக்கடவன். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது” (1பேது.3:10–12). அன்பானவர்களே, இப்பொழுது நாம் விலகவேண்டிய காரியங்களுக்கு விலகி நம்மை காத்துக்கொள்ளவேண்டியது மிக அவசியம்.

பொல்லாங்காய் தோன்றுகிற யாவற்றையும் விட்டு விசுவாசத்தை துவக்கினவரும் அதை முடிக்கிறவருமாகிய இயேசுவை நோக்கி தொடர் ஓட்டத்தில் பொறுமையோடு ஓடவேண்டும். நாம் பின்னிட்டு பார்ப்போமானால் அவிசுவாசத்தினால் பின்னிட்டுப்பார்த்து உப்புத்தூணாக மாறின லோத்தின் மனைவியைப்போல மாறிவிடுவோம். ஆகையால் பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப்போராடவேண்டும். அதற்காக உங்களை பழக்குவிக்கவேண்டும். பந்தையத்திற்கு போராடுகிறவர்கள் தங்களை பழக்குவிக்கிறார்கள். நித்திய நித்தியமான ராஜ்யத்தை அடைய பிரயாசப்படுகிற நீங்கள் உங்களுடைய ஆவிக்கு விரோதமாக இருக்கிற உங்களுடைய மாம்சத்தில் பேராடவேண்டியது எத்தனை அவசியம். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது ''நல்லபோராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்ன மாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' என்று எழுதுகிறார் (2தீமோ.4:7,8). இந்தப் பவுலைப்போல நல்லபோராட்டத்தை போராட உங்களை பழக்குவிக்குகிறீர்களா? எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என்று எழுதுகிறார். உங்களுக்கு அந்தவிதமான நம்பிக்கை இருக்கிறதா? இந்தவிதமான பரிசுத்தத்திற்கு அழைக்கப்பட்ட நீங்கள் ''ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்'' என்கிறார் பவுல் (2தெச.3:6). இன்றைக்கு ஒழுங்கற்று நடக்கிற சகோதரர்களை விட்டு விலகாமல் அப்படிப்பட்டவர்களோடு சேர்ந்துகொண்டு குடித்து கும்மாளம் போடுகிற சகோதர்களை நாம் காண்கிறோம். சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்கபலனை பெறும்படிக்கு நாமெல்லாரும் கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக நிற்கவேண்டும் என்ற போதனையை அறியாத கிறிஸ்தவ



சகோதரர்கள் இருக்கமுடியாது என்று எண்ணுகிறேன். இப்படியிருக்கிறபடியால் பயத்தோடும் நடுக்கத்தோடும் நம்முடைய இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படவேண்டும். வேதாகமம் எச்சரித்து புத்திசொல்லுகிறதான காரியங்களை ஏற்றுக்கொண்டு உயிருக்கு உயிரான சகோதரனாக இருந்தாலும் சரி அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு புறம்பாகபோகும் பட்சத்தில் அவர்களை விட்டு விலகவேண்டும். மேலும் பவுல் சொல்கிறார்: ''உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்'' (ரோம.6:19). நீங்கள் எதற்கு அடிமைகளாக ஒப்புக்கொடுக்கின்றீர்களோ, அதற்கே அடிமைகளாகி இருக்கின்றீர்கள் என்பதை அறியீர்களா? ஆம் எனக்கு அன்பானவர்களே, பாவத்திற்கு அடிமைகளாக இருந்த நாம் இப்பொழுது நீதியை நடப்பிக்கும்படி நம்முடைய ஆவி ஆத்துமா சரீரத்தை பரிசுத்தத்தை நடப்பிக்கும்படி அடிமைகளாக ஒப்புக்கொடுக்கக்கடவோம்.

தங்களை ஜீவனுள்ளமார்க்கத்திற்கு அர்ப்பனித்த அல்லது பழைய நிலைமையிலிருந்து புதிதான வழிக்கு திரும்பின சில தேவதாசர்களைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். ''விசுவாசத்தினாலே மோசே தான் பெரியவனானபோது பார்வோனுடைய குமாரத்தியின் மகன் என்னப்படுவதை வெறுத்து, அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப்பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அநுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்'' (எபி.11:24–26). தன்னை இந்தவிதமான துன்பம் நிறைந்த வாழ்க்கைக்கு அர்ப்பணித்தான். மோசே நினைத்திருந்தால் எகிப்து முழுமைக்கும் அதிபதியாக மாறியிருக்க முடியும். ஏனெனில் இராஜ அரண்மனையில் வளர்க்கப்பட்டவன். ஆனால் அவனோ இனிவரும்

பலன்மேல் நோக்கமாயிருந்து கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமாக கருதினான். ஆகையால் கர்த்தர் அவனோடு பேசி நியாயப்பிரமாணத்தை கொடுத்து இஸ்ரவேலை வழிநடத்தினார். இரண்டாவதாக புதியஏற்பாட்டில் அப்போஸ்தலனாகிய பவுலைக்குறித்து படிக்கிறோம். ‘‘நான் யூதன், சிலிசியாநாட்டிலுள்ள தர்சுபட்டணத்திலே பிறந்து, இந்த நகரத்திலே கமாலியேலின் பாதத்தருகே வளர்ந்து, முன்னோர்களுடைய வேதப்பிரமாணத்தின்படியே திட்டமாய்ப் போதிக்கப்பட்டு, இன்றையத்தினம் நீங்களெல்லாரும் தேவனைக்குறித்து வைராக்கியமுள்ளவர்களாயிருக்கிறதுபோல நானும் வைராக்கியமுள்ளவனாயிருந்தேன். நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி, சிறைச்சாலைகளில் ஒப்புவித்து, மரணபரியந்தம் துன்பப்படுத்தினேன்’’ என்கிறான் (அப்.22:3,4). இப்படியிருந்த இந்த பவுலை கர்த்தர் சந்தித்து முள்ளில் உதைக்கிறது உனக்குக் கடினமாம் என்றார். அவனோ அன்றைய நாளில் ஆண்டவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவனுள்ள மார்க்கத்தில் இணைக்கப்பட்டு இயேசுவே கிறிஸ்து என்று ஆசியாமுழுமைக்கும் பிரசங்கித்தான். அவன் சொல்லுகிறான்; ‘‘நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்’’ என்கிறான் (1கொரி.9:19). இச்செய்தியை கேட்கிற நீங்கள் உங்களை எதற்கு ஒப்புக்கொடுக்கப்போகிறீர்கள். முன்னே பிரயோஜனமில்லாத ஒநேசிமு பின்பு பிரயோஜனமுள்ளவனாக மாற்றப்படுகிறான். மாயவித்தைக்காரர்கள் மனந்திரும்பி தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, ‘‘எல்லாருக்கும் முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள்’’ (அப்.19:19). இவர்களெல்லாம் தவறான காரியங்களிலிருந்து தங்களை சரியான காரியத்திற்கு பழக்குவித்தார்கள். அதைப்போல மாறுங்கள்.

**கேள்வி நேரம்**

**நற்காரியங்களுக்கு நம்மை பழக்குவிக்காமலிருந்தால் என்ன நடக்கும்?**

‘‘தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென். இதினிமித்தம் தேவன் அவர்களை இழிவான இச்சைரோகங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்; அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அநுபோகத்தைச் சுபாவத்துக்கு விரோதமான அநுபோகமாக மாற்றினார்கள். அப்படியே ஆண்களும் பெண்களைச் சுபாவப்படி அநுபவியாமல், ஒருவர்மேலொருவர் விரகதாபத்தினாலே பொங்கி, ஆணோடே ஆண் அவலட்சணமானதை நடப்பித்து, தங்கள் தப்பிதத்திற்குத் தகுதியான பலனைத் தங்களுக்குள்ளே அடைந்தார்கள். தேவனை அறியும் அறிவைப் பற்றிக்கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடானசிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்’’ (ரோம.1:25–28). தங்களை நற்காரியங்களுக்கு பழக்குவிக்காமல் அசுத்தத்திற்கு அடிமையாக இருந்தால் இவ்விதமாக தேவன் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுப்பார்.

## 31. கிறிஸ்துவின் சுவிசேஷம்
## The Gospel of Christ

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வேதவாக்கியங்களின் படி நமது பாவத்திற்காக அடக்கம்பண்ணப்பட்டு வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். கிறிஸ்துவின் சுவிசேஷம் - The gospel of Christ. கிறிஸ்துவின் சுவிசேஷம் இவ்வுலகிற்குக் கிடைத்த ஓர் நற்செய்தியாகும். ‘‘கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்’’ (1கொரி.15:3,4). இச்சுவிசேஷத்தின் வழியாகவே ஒவ்வொருவரும் இரட்சிக்கப்படமுடியும். இந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாருக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. ஆண்டவர் தம்முடைய சீஷர்களுக்கு கட்டளை கொடுத்து அனுப்பும்போது, ‘‘நீங்கள்

புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்'' (மத்.28:19,20). இந்த கட்டளையை உலகமெங்கும் சீஷர்கள் எடுத்துச் சென்று சவிசேஷத்தின் நற்செய்தியை சகல தேசத்தாருக்கும் பிரசங்கித்தார்கள். இந்த சுவிசேஷம், எப்பிராத்தா என்னப்பட்ட பெத்லகேம் யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு வருவார் என்கிற தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலின்படி ஆரம்பிக்கப்பட்டது. இச்சுவிசேஷத்தின் வழியாகவே நீங்களும் நானும் இரட்சிக்கப்படுகிறோம். இச்சுவிசேஷம் இல்லையேல் மனிதனுக்கு இரட்சிப்பு இல்லை. ''தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்'' என யோவான்3:16–ல் வாசிக்கிறோம். இச்சுவிசேஷம் உன்னை பாவத்தினின்று விடுதலையாக்கி நித்திய ஜீவனுக்கு நேரே வழி நடத்தும். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுக்குச் சித்தமல்ல. தேவன் தாம் உண்டாக்கின மனுஷனை அழிக்க அல்ல, அவனை இரட்சிக்கவே தமது குமாரனாகிய இயேசுவை இவ்வுலகிற்கு அனுப்பினார். ஒரு மனிதனுக்கு கிடைத்த மாபெரும் சந்தோஷம் எதுவென்றால்? 'கிறிஸ்துவின் சுவிசேஷம்'. இந்த சுவிசேஷத்தை ஒருவன் ஏற்றுக்கொள்ளாமல் தன் விருப்பப்படி வாழ்ந்து, அரிய பெரிய காரியங்களை நடப்பித்தாலும், உலகத்தால் புகழ்ந்து புகழாரம் சூட்டப்பட்டாலும் அது புல்லின் பூவைப்போல ஒழிந்துபோகக்கூடிய ஒன்றுதான். மனிதனுக்கு தேவையான உண்மையான சந்தோஷம், சமாதானம், நீடிய வாழ்வு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் அடங்கியிருக்கிறது. இந்த சுவிசேஷத்தினால் தாகம் தீர்க்கப்பட்டோர் அநேகர்.

''உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; தங்களிலுள்ள



கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். தங்கள் நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது; பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக்கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்'' என்று பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.1:10–12). அநேகர் இந்த சுவிசேஷம் எத்தகையது என்பதை மனதார அறியாமல் இருக்கிறார்கள். ஆனால் இதைக்குறித்து தீர்க்கதரிசனம் சொன்ன தேவதூதர்கள் முதற்கொண்டு இந்த சுவிசேஷத்தை உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள். இந்த சுவிசேஷத்தின் நற்செய்தி முதல் நூற்றாண்டு ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட அப்போஸ்தலர்கள் மற்றும் சிதறிப்போன சீஷர்கள் எங்கும் திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள் என்று அப்.8:4–ல் வாசிக்கிறோம்.

இந்த சுவிசேஷத்தை கேள்விப்படுகிற நீங்கள் இந்த சுவிசேஷவசனத்திற்கு உங்களை ஒப்புக்கொடுத்திருக்கிறீர்களா? எப்பொழுது உங்களை ஒப்புக்கொடுக்கின்றீர்களோ அது முதல் பலன்கொடுக்கிறதாயிருக்கிறது என்று பவுல் கொலோசெ சபையாருக்கு எழுதுகிறார். ''அந்த நம்பிக்கையைக்குறித்து, நீங்கள் முன்னமே சத்தியவசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிபலன்தருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் அதைக் கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்து கொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது'' (கொலோ.1:6). சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள் முதற்கொண்டு என்ற ஒரு வாசகத்தைப் பார்க்கிறோம். இன்று சுவிசேஷத்தை கேள்விப்படுகிறார்கள். அதை சத்தியத்தின்படி பற்றிக்கொள்ளுகிற மக்கள் குறைவாக இருக்கிறார்கள். ஆகையால் தான் இரட்சிக்கப்படுகிறவர்கள் சிலர் என்று வசனம் சொல்லுகிறது. அவர்கள் சுவிசேஷத்தை கேள்விப்பட்ட

நாள் முதற்கொண்டு அதை சத்தியத்தின்படி தேடாமல் ஆதாயத்திற்காக தேடுகிறபடியால் அந்த பலனை பெற்றுக்கொள்ளாமல் இருக்கிறார்கள். அப்பத்திற்காக இயேசுவை பின்பற்றின திரளான ஜனங்களை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். ஆகையால் கர்த்தர் அவர்களைப் பார்த்து; நீங்கள் அப்பம் புசித்து திருப்தியானதினால் என்னைத் தேடுகிறீர்கள் என்றார். இன்றைக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ எதற்காக சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்திருக்கிறாய்? உன்னுடைய உலக தேவைகளுக்காகவா, அல்லது பணத்திற்காகவா, சுவிசேஷத்தின் வல்லமை உன்னை முதலாவது பாவத்திலிருந்து விடுதலையாக்குகிறது. இதை நீ அறிவாயா? நீ சத்தியத்தின்படி என்று அறிந்துகொள்கிறாயோ அது முதல் அந்த சுவிசேஷம் உனக்கு பலன் கொடுக்கும். மற்றபடி உன்னுடைய விசுவாசம் விருதாக போய்விடும். மேலும் ‘‘நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள். அவருக்குச் சொந்தமானவர்கள் அவருடைய மகிமைக்குப் புகழ்ச்சியாக மீட்கப்படுவார்கள் என்பதற்கு ஆவியானவர் நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்’’ (எபே.1:13,14). நீங்கள் என்று சுவிசேஷத்தை கேட்டு விசுவாசிகளாக மாற்றப்படுகிறீர்களோ, அன்றே நீங்கள் ஆவியானவரால் அவருக்கு சொந்தமானவர்கள் என்று முத்திரை போடப்படுகிறீர்கள். இது மறுபிறப்பிற்கு அடையாளமாயிருக்கிறது. ‘‘அழிவுள்ள வித்தினாலே அல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும் ஜீவனுள்ளதுமான தேவவசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே’’ என்று பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.1:23). ஒவ்வொருவரும் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தை கேட்டு அந்த அழியாத வித்தினாலே மறுபடியும் பிறந்திருக்கவேண்டும். இதுவே மெய்யான பிறப்பு. எல்லோரும் பிறந்தநாளை மிகவும் ஆனந்தத்துடன் கொண்டாடுகிறார்கள். அந்நாளிலே கேக் வெட்டியும், இனிப்புகள் வழங்கியும், வாழ்த்து சொல்லியும், புத்தாடைகளை உடுத்தியும் மிகவும் சந்தோஷமாக கொண்டாடுகிறதை நாம் உலகஅளவில் காண்கிறோம். ஒரு உண்மை கிறிஸ்தவனுக்கு பிறப்பு அதுவல்ல. என்று சத்தியவசனத்தை கேட்டு விசுவாசமுள்ளவனாகி



திருமுழுக்கு பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுகிறானோ, அதுவே உண்மையான பிறந்தநாள். அன்றுமுதல் அழியாத வாழ்க்கைக்கு நியமிக்கப்படுகிறான். மாம்சம் மண்ணுக்குரியது, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பும். ஆவிக்குரிய பிறப்பைப் பெற்றவன் தேவனோடு நித்தியநித்தியமாக வாழும் பாக்கியத்தை சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு கீழ்ப்படிவதன் மூலம் பெற்றுக்கொள்கிறான். அப்போஸ்தலனாகிய பவுல் இந்த சுவிசேஷத்தைப்பற்றி பேசுகையில் : ‘‘ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைச் செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன்’’ என்று சொல்லுகிறார் (1கொரி.9:19). இந்த சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் தங்களுடைய வீடுகளை ஆராதனைகூடங்களாக மாற்றினார்கள். இன்னும் அநேகர் இப்பணியில் ஈடுபடும்படியாக தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். இன்னும் சிலர் உக்கிராணப்பொறுப்பாக நினைத்து பவுலைப்போல செலவில்லாமல் சுவிசேஷம் அறிவிக்கப்படும்படியாக சொந்தக் கைகளினால் வேலைசெய்து சுவிசேஷம் ஊழியம் செய்தனர். இப்படிப்பட்ட சுவிசேஷத்தில் உங்களுடைய பங்கு என்ன?

ஒருவரையும் புறம்பே தள்ளாத ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சீஷர்களை நோக்கி: ‘‘நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்’’ என்று சொல்லி அனுப்பினார் (மாற்.16:16). இந்த சுவிசேஷம் எல்லோருக்கும் அறிவிக்கப்படவேண்டியது. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்வேண்டும் என்று நம்மில் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். அவருடைய நீடிய பொறுமையை இரட்சிப்பு என்று எண்ணி சுவிசேஷத்தை விசுவாசியாதிருந்தால் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளுங்கள். ‘‘எங்கள் சுவிசேஷம் மறைபொருளாயிருந்தால், கெட்டுப்போகிறவர்களுக்கே அது மறைபொருளாயிருக்கும். தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப்

பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்'' (2கொரி.4:3,4). இந்த சுவிசேஷம் யாருக்கும் மறைபொருளாயிராமல் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் சிலர் பார்க்கமுடியாமல் அவதிப்படுவதற்கு என்ன காரணம்? இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய பிசாசு அவர்களுடைய மனதைக் குருடாக்கி வைத்திருக்கிறான். ஆகையால் அவர்களால் இதைப்பார்க்க முடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு நாம் சாந்தமாக இந்த சுவிசேஷத்தை எடுத்துச்சொல்லி அவர்களுடைய மனக்கண்களை திறக்கவேண்டியது அவசியம். மேலும் ''அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்'' (1தீமோ.3:16). இதை அறியாதவர்கள் உலகத்தில் யாரும் இருக்கமுடியாது. இந்த சுவிசேஷத்திற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**இந்த சுவிசேஷத்தையல்லாது வேறொரு சுவிசேஷம் உண்டா?**

''உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப்பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன்; வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக்கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்'' என்கிறார் பவுல் (கலா.1:6–9). இந்த சுவிசேஷத்தை நான் ஒரு மனுஷனால் பெற்றதுமில்லை,



மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுதினார் என்கிறார். ஆக, ஒரே ஒரு சுவிசேஷம் அது இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதல். இதுவே நற்செய்தி. மனிதனுடைய பாவத்தைப்போக்கும் ஒரே வழி.

## 32. இளைப்பாறுதல்
## Rest

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் இளைப்பாறுதலைக் கொடுக்கக்கூடிய ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இளைப்பாறுதல் Rest. ஒவ்வொருவருக்கும் இளைப்பாறுதல் மிக அவசியம். மனிதன் இரவு பகலாக கண்ணுறக்கமில்லாமல் பிரயாசப்பட்டு பலன் என்ன? ஒன்றுமேயில்லை. தேவன் இரவு பகலை உண்டாக்கி மனிதனுக்கு இரவுவேளையில் ஓய்வு எடுக்கும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார். இதில் சிலர் தங்களுடைய வசதிக்கேற்ப ஓய்வு நேரத்தை மாற்றியமைத்துக்கொள்கிறார்கள். ஆனால் மனிதன் எப்படி ஓய்வெடுத்தாலும் அவனது மனதில் இளைப்பாறுதல் இல்லை, சமாதானமில்லை, தூக்கமில்லை இப்படித் தவிக்கும் அநேகரை நம் அநுதின வாழ்க்கையில் சந்திக்கமுடிகிறது. சிலர் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் மறுநாளே அவர்களை கவலை ஆட்கொண்டுவிடும். ஒரு புறம் எல்லா பிள்ளைகளையும் கரைசேர்த்துவிட்டோம் என்று பெருமூச்சோடு அமருவார்கள் அப்பொழுதுதான் பெரிய பெரிய பிரச்சனைகள் எதிர்வரும். இவையாவும் ஒவ்வொருவரையும் கவலைக்குள்ளாக்கிவிடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருக்கிற ஒவ்வொரு மனிதனையும் பார்த்து கர்த்தர் சொல்லுகிற காரியம் என்னவென்றால், ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைபாறுதல் தருவேன். நான் சாந்தமும், மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாக்களுக்கு

இளைப்பாறுதல் கிடைக்கும் என் நுகம்மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது'' என்கிறார் (மத்.11:28–30). இந்த உலகத்தில் வருத்தப்படாதவர்களே இல்லை. எல்லோரும் ஏதோ ஒரு வகையில் வருத்தத்தை அனுபவிக்கிறோம். இப்படி வருத்தத்தை அனுபவிக்கிற ஜனங்களைப்பார்த்து கர்த்தர் தம்முடைய அன்பின் வார்தைகளால் அழைக்கிறார். அவர் ஒருவரையும் புறம்பே தள்ளுவதில்லை. ''பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு, தனக்கு உண்டானவைகளையெல்லாம் செலவழித்தும், சற்றாகிலும் குணமடையாமல் அதிக வருத்தப்படுகிறபொழுது, இயேசுவைக்குறித்துக் கேள்விப்பட்டு: நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று சொல்லி, ஜனக்கூட்டத்துக்குள்ளே அவருக்குப் பின்னாக வந்து, அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள். உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள். உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து, ஜனக்கூட்டத்துக்குள்ளே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டது யார் என்று கேட்டார். அவருடைய சீஷர்கள் அவரைநோக்கி: திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக்கொண்டிருக்கிறதை நீர் கண்டும், என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே என்றார்கள். இதைச் செய்தவளைக் காணும்படிக்கு அவர் சுற்றிலும் பார்த்தார். தன்னிடத்திலே சம்பவித்ததை அறிந்த அந்த ஸ்திரீயானவள் பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள்'' (மாற்.5:25–33). தன்னுடைய ஆஸ்தியெல்லாம் செலவுசெய்தும், ஒருவராலும் சுகமாக்கக்கூடாதிருந்த இந்த பெரும்பாடுள்ள ஸ்திரீயானவள் அநுதின வாழ்க்கையிலே எவ்வளவாய் வருத்தப்பட்டு துன்பத்தை அனுபவித்திருந்திருப்பாள் என்பதை எண்ணிப்பாருங்கள். அவள் தன்னுடைய இருதயத்தில் அவரை விசுவாசித்து, திரளான கூட்டத்தின் மத்தியிலும் அவருடைய வஸ்திரங்களின் ஓரத்தின் நுனியையாவது தொடவேண்டும் என்று எண்ணி தொட்டாள். அவளுடைய விசுவாசத்தின்படியாக அவளுடைய உதிரபோக்கு நின்றுபோனது. அநுதினமும் வருத்தப்பட்டு துன்பத்தை



அனுபவித்த இந்த ஸ்திரீயானவள் இளைப்பாறுதல் கொடுக்கும் இயேசுவிடம் சென்று சுகமாக்கப்பட்டாள். இச்செய்தியை கேட்கிற அருமையான தேவ ஜனமே நீ வருத்தத்தோடு ஒவ்வொருநாளையும் கழித்துக்கொண்டு இருக்கின்றாயா? கவலைப்படாதே, உன் இரட்சகரை சந்திக்க ஆயத்தப்படு. உன் வழிகளை அவருக்கு ஒப்புக்கொடு, அவர் உன் வேதனையை நீக்கி உனக்கு இளைப்பாறுதலைக்கொடுப்பார்.

அதே வசனத்தில் என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக்கொண்டு என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். நுகம் என்றால் பாரம். அதாவது வண்டிமாடுகள் பூட்டும்போது மாட்டின் மேல் நுகத்தடியை வைப்பார்கள். அந்த நுகத்தடியில் வண்டியின் பாரம் அழுத்தும். அதை சுமந்து கொண்டு மாடுகள் இழுத்துச் செல்லும். பிரியமானவர்களே, கர்த்தர் நம் மீது வைக்கும் நுகம் அவ்வளவு பாரம் நிறைந்தவையல்ல. அவருடைய உபதேசம் நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கிறது. அந்த உபதேசத்தை நாம் கற்றுக்கொண்டு, அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருந்து ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கவேண்டும். மரியாள், மார்த்தாளைப் பற்றி வேதத்தில் படிக்கிறோம். இவ்விருவரில் ''மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டுவந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய். தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார்'' (லூக்.10:40–42). இன்றைக்கு அநேகர் தேவையான காரியங்களை விட்டு தேவையற்ற உலகப்பிரகாரமான காரியங்களை நினைத்து கவலைகொள்கின்றனர். அதைபோல இந்த மார்த்தாள் கவலை கொண்டாள். மரியாளோ தேவையானது ஒன்றுதான் ஆண்டவருடைய சமுகத்தில் உட்கார்ந்து அவர்சொல்வதைக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று நினைத்து அமர்ந்திருந்தாள். எனக்கு அன்பானவர்களே, நீங்களும் ஆண்டவருடைய சமுகத்திற்கு வந்து அவர் கொடுக்கிறதான ஆவிக்குரிய வசனங்களைக் கற்றுக்கொள்ளுங்கள். எந்த

ஒரு தகப்பனும் தன்பிள்ளையின் மீது சுமக்கமுடியாத சுமையை சுமத்தமாட்டான். மிகவும் கனமான சுமையை தான் சுமந்துகொண்டு மிகவும் லேசான சுமையை பிள்ளைக்கு கொடுப்பான். அதைப்போல நம் பரமபிதாவாகிய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஆண்டவர் இயேசுகிறிஸ்து நம்முடைய பாவச்சுமையை தாம் ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேசமாகிய சுமையை நமக்குக்கொடுக்கிறார் அது பாரமான ஒன்றல்ல. அதை கவனிக்கும்படி நம்முடைய இருதயத்தை அதற்கு ஒப்புக்கொடுப்போம். பவுலுடைய ஊழியத்தின் நாட்களில் அவர் சொல்லுகிறார்: ''ஓய்வுநாளில் நாங்கள் பட்டணத்துக்கு வெளியே போய், ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம்பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து, அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம். அப்பொழுது தியத்தீரா ஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளும் தேவனை வணங்குகிறவளுமாகிய லீதியாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள்; பவுல் சொல்லியவைகளைக் கவனிக்கும்படி கர்த்தர் அவள் இருதயத்தைத் திறந்தருளினார். அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு, அவள் எங்களை நோக்கி: நீங்கள் என்னைக் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவளென்று எண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்கள் என்று எங்களை வருந்திக் கேட்டுக்கொண்டாள்'' என்கிறார் (அப்.16:13–15). இயேசுவினால் தெரிந்து கொள்ளப்பட்ட அப்போஸ்தலருடைய வார்த்தைகளை கவனிக்கும்படியாக கூடிவந்த ஸ்திரீகளில் லீதியாளும் ஒருவள். அவளுடைய இருதயத்தை அறிந்த கர்த்தர் அவளுடைய இருதயக்கதவை திறந்தார். கர்த்தருடைய திருவசனத்தை போதித்த பவுலுடைய வார்த்தைகளை அவள் கவனித்துக்கேட்டாள். அதனால் அவளும் அவள் வீட்டாரும் திருமுழுக்கு பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டு ஆன்மீக இளைப்பாறுதலைப்பெற்றுக்கொண்டார்கள். ஆண்டவருடைய வசனங்களைக் கற்றுக்கொள்ளும்போதே இவ்விதமான இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளமுடியும். பணம் இருந்தால் மருந்து மாத்திரைகளை போட்டு ஓய்வு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் ஆன்மீக இளைப்பாறுதலைப் பெறவேண்டுமானால் கர்த்தருடைய வசனங்களை கேட்டு, அவைகளைக் கற்றுக்கொள்ளும்போது மெய்யான இளைப்பாறுதலை அவர்மூலமாக



பெற்றுக்கொள்ளமுடியும்.

அன்பானவர்களே, இந்த லீதியாளைப்போல உங்கள் இருதயக்கதவை தட்டும் கர்த்தருடைய சத்தம் கேட்டு திறவுங்கள். அப்பொழுது மெய்யான இளைப்பாறுதலைப்பெற்றுக்கொள்வீர்கள். இன்றைக்கு அநேகர் வசனத்தைக் கேட்கிறார்கள் ஆனால் அதற்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறதில்லை. முட்டையிட்டு அவயம்காத்து குஞ்சுபொறிக்காமற்போகிற கவுதாரியைப்போல பறந்துபோய்விடுகிறார்கள். விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். சிறைச்சாலைக்காரன் கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்கள் என்று பயந்துபோய் தன்னைக்கொலைசெய்து கொள்ளப்போனான். ''பவுல் மிகுந்த சத்தமிட்டு: நீ உனக்குக் கெடுதி ஒன்றுஞ் செய்துகொள்ளாதே; நாங்கள் எல்லாரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான். அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடு நடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து; ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி, அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள். மேலும் இராத்திரியில் அந்நேரத்திலேதானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டுபோய், அவர்களுடைய காயங்களைக் கழுவினான். அவனும் அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள். பின்பு அவன் அவர்களைத் தன் வீட்டிற்குக் கூட்டிக்கொண்டுபோய், அவர்களுக்கு போஜனங்கொடுத்து, தன் வீட்டார் அனைவரோடுங்கூட தேவனிடத்தில் விசுவாசமுள்ளவனாகி மனமகிழ்ச்சியாயிருந்தான்'' (அப்.16:28–34). இந்த சிறைச்சாலைக்காரனுக்கு எப்பொழுது மனமகிழ்ச்சி வந்தது? அவன் கர்த்தருடைய வசனத்தை கேட்டு திருமுழுக்கு பெற்றவுடன் மனமகிழ்வைப் பெற்றான். அன்பானவர்களே, கர்த்தருடைய வசனத்தைக் கேட்டு கற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படியும்போது ஆத்துமாவிற்கு இளைப்பாறுதலைப்பெற்றுக்கொள்கிறோம். இவ்விதமான இளைப்பாறுதலை

இயேசுவைக்குறித்து கேள்விப்பட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அவரை அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படியும்போது பெற்றுக்கொள்ளமுடியும். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்ப்போய்விடும். எத்தியோப்பிய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியாக இருந்தவன் ஏசாயா புஸ்தகத்தை வாசிக்கிறவனாக இருந்தான். ஆனால் அதனுடைய கருத்து இன்னதென்று அவனுக்கு தெரியவில்லை. பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். அவன் அதற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றான். பிலிப்புவினுடைய பிரசங்கத்தை கேள்விப்பட்டு அத்தோடு அவன் நிற்காமல். இயேசுவினால் கொடுக்கப்படும் மெய்யான இளைப்பாறுதலைப் பெற்றுக்கொண்டு, மந்திரி அப்புறம் அவனைக்காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான் என்று அப்.8:39–ல் வாசிக்கிறோம். ஆண்டவருடைய நுகம் மெதுவாயும் அவருடைய சுமை இலகுவாயும் இருக்கிறது. இன்றே இளைப்பாறுதலைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறதா?**

ஆம், "தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனிவருகிறதாயிருக்கிறது. ஏனெனில், அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசித்தவன், தேவன் தம்முடைய கிரியைகளை முடித்து ஓய்ந்ததுபோல, தானும் தன் கிரியைகளை முடித்து ஓய்ந்திருப்பான். ஆகையால், அந்தத் திருஷ்டாந்தத்தின்படி, ஒருவனாகிலும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் பிரவேசிக்க ஜாக்கிரதையாயிருக்கக்கடவோம்" (எபி.4:9–11). இது பரம இளைப்பாறுதலைக் குறிக்கிறது. இந்த இளைப்பாறுதலை பெற்றுக்கொள்கிறவன் பரிசுத்தவானும், தேவனுடைய சுதந்தரனுமாயிருக்கிறான். பரம இளைப்பாறுதல் நமக்கிருக்கிறபடியால், இப்பூமியில் இளைப்படையாமல் ஆண்டவருக்காக உழைப்போம். அவரோடுகூட பாடுபட்டால் அவரோடுகூட ஆளுகையும் செய்வோம்.



## 33. உடன்படிக்கையின் ஆசீர்வாதம்

13.6.07

## Blessing of The Covenant

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் விலையேறப்பெற்ற நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். உடன்படிக்கையின் ஆசீர்வாதம் Blessing of the covenant. தேவஆசீர்வாதத்திற்காக காத்திருக்கும் சகோதரனே சகோதரியே உடன்படிக்கையின் மூலம் கிடைக்கும் நிலையான ஆசீர்வாதத்தைக் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அன்றும் சரி, இன்றும் சரி உடன்படிக்கையின் கீழ் வாழ்கின்ற அனைவரும் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்று நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணைகொண்டு அறிகிறோம். உடன்படிக்கை என்றால், தேவன் மனிதனோடு செய்த ஒப்பந்தமாகும். இந்த உடன்படிக்கையின் மூலம் தேவனோடு உள்ள உறவு மேம்படுகிறது. நம்முடைய முற்பிதாக்களை எகிப்திலிருந்து அழைத்து வந்தபோது சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளை மோசே மூலம் கொடுத்து இஸ்ரவேல் மக்களோடு ஒப்பந்தம் செய்தார். அதை அவர்கள் கைக்கொள்ளவில்லை. ஆகையால் எகிப்திலே புறப்பட்டவர்களில் யோசுவாவும், காலேபும் தவிர வேறொருவரும் கானானுக்குள் பிரவேசிக்கவில்லை. தேவன் தாம் செய்த உடன்படிக்கையின்படி இஸ்ரவேல் மக்களை நாற்பது வருஷம் குறைவில்லாமல் போஷித்தார். அவர்களோ கடிவாளமில்லாத குதிரைகளைப்போல மனம்போன போக்கிலே சென்று தேவனுக்கு வருத்தத்தை உண்டாக்கினார்கள். அத்தோடு கானானின் ஆசீர்வாதத்தை அநுபவிக்க முடியாமற்போனார்கள். தாவீது ஒரு முறை உடன்படிக்கைப் பெட்டியை தமது நகரத்திற்கு கொண்டுவரும்போது மாடுகள் மிரண்டதால் பெட்டியை பிடித்த ஊசா மரித்துப்போனான். இதையறிந்த தாவீது பயந்துபோய் உடன்படிக்கைப் பெட்டியை ஓபேத் ஏதோம் வீட்டில் கொண்டு

போய் வைத்தான். உடன்படிக்கைப் பெட்டியை ஏற்றுக்கொண்ட ஓபேத் ஏதோம் வீடு மூன்று மாதமாக ஆசீர்வதிக்கப்பட்டது 2சாமு.6:11,12 வசனங்கள். தேவன் பெட்டியினிமித்தம் ஓபேத் ஏதோம் வீட்டை ஆசீர்வதிக்கிறார் என்று அறிந்த தாவீது தமது நகரத்திற்கு கொண்டு சென்றான். அன்பானவர்களே, இஸ்ரவேலை வெற்றிசிறக்கப்பண்ணினதே இந்த உடன்படிக்கை பெட்டிதான். இந்த உடன்படிக்கையை மோசே இரவும் பகலும் 40 நாட்கள் அப்பம் புசியாமலும் தண்ணீர்குடியாமலும் தேவ பர்வதத்தில் இருந்து பெற்றுக்கொண்டான். எஸ்றாவைக் குறித்து படிக்கிறோம் "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் அருளிய மோசேயின் நியாயப்பிரமாணத்திலே தேறின வேதபாரகனாயிருந்தான்; அவனுடைய தேவனாகிய கர்த்தருடைய கரம் அவன்மேல் இருந்ததினால், அவன் கேட்டவைகளையெல்லாம் ராஜா அவனுக்குக்கொடுத்தான்" (எஸ்.7:6). இந்த எஸ்றா கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதின்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதிநியாயங்களையும் உபதேசிக்கவும், தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். தேவனுடைய ஆசீர்வாதமான கரம் அவனோடு இருந்ததால், அவன் வேதத்தை ஆராய்ந்து பார்க்கவும் அதின்படி செய்யவும் தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான். உங்களில் எத்தனைபேர் இவ்விதமாக இருக்கின்றீர்கள். உடன்படிக்கையை மாற்றாமல் போதிக்கவும், அதின்படி செய்யவும் கவனமுள்ளவர்களாக இருக்கும்போது தேவனுடைய பாதுகாப்பின் கரம் நம்மோடு இருக்கும். அன்பானவர்களே, இப்படியாக நம்முடைய முற்பிதாக்களாகிய இஸ்ரவேலைக் காத்து நடத்திய தேவன் இன்றும் நம்மோடிருக்கிறார். இஸ்ரவேலைக்காக்கிற தேவன் உறங்குவதுமில்லை தூங்குவதுமில்லை.

அவர் புதிய ஏற்பாட்டு காலத்தில் கூறுவதை கவனியுங்கள்: "இவர் என்னுடைய நேச குமாரன் இவருக்குச் செவி கொடுங்களென்று மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (லூக்.9:35). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இயேசு சொல்கிறார்: "நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோவா.10:9). வாசல்



என்றால் நுழைவாயில் என்று நாம் அறிவோம். பரலோகத்திற்கு செல்ல ஒரே ஒரு வாசல்தான் உண்டு. அது கிறிஸ்துவின் வாசல். இவர் வழியாய் ஒருவன் உட்பிரவேசிக்கப் பிரயாசப்பட்டால் அவன் காக்கப்படுவான். இவர் இல்லாமல் ஒருவன் காக்கப்படமுடியாது. உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் என்று சொல்லும்போது; ஆடுகளை மேய்க்கிறவர்கள் வெளியே சென்று ஆடுகளை மேய்த்து வருகிறார்கள். பின்பதாக தொழுவத்திலும் ஆடுகளுக்கு தேவையானவற்றை போட்டுவைக்கிறார்கள். அவைகள் வெளியிலும் சென்று மேய்ச்சலைக் கண்டடைகிறது, உள்ளும் மேய்ச்சலைக்கண்டடைகிறது. அதைப்போல ஒருவன் இயேசுவின் வழியாய் பிரவேசிக்கும்போது இந்த விதமான ஆசீர்வாதங்களைப்பெற்று அநுபவிக்கிறான். "நல்லமேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்ற யோவா.10:11–ன் படி நமக்கா இயேசு தமது ஜீவனையே சிலுவையில் கொடுத்தார். பிரியமான சகோதரனே, சகோதரியே கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையின்படி இன்று நீங்கள் ஜீவிக்கின்றீர்களா? அப்படியில்லையென்றால், இன்றே அவரை ஏற்றுக்கொண்டு அவர் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள். அவர் உங்களுக்காக சிலுவையில் இரத்தஞ்சிந்தி புதுஉடன்படிக்கையை ஏற்படுத்தியுள்ளார். "இது பாவமன்னிப்பு உண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார் (மத்.26:28). இந்த உடன்படிக்கையின் மூலமாகவே தேவனிடத்தில் சேர முடியும். "என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்கிறார். நீங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவை உங்களுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாமல் வாழ்வதால், தேவன் உங்களோடு, அவருடைய குமாரன் மூலமாக செய்த ஒப்பந்தத்தை அறியாமற்போய்விடுவீர்கள். புது உடன்படிக்கையின்படி ஒரு உண்மையுள்ள கிறிஸ்தவனாக நீங்கள் மாற்றப்பட்டு வாழும்போது நிறைவான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வீர்கள்.

ஆண்டவரை ஏற்றுக்கொண்ட சகேயு அவரை அன்புடன் தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச்சென்றான். அத்தோடு அவன் நின்றுவிடாமல் தான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய்

வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது என்றார். அன்பானவர்களே, கர்த்தருடைய உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளும் வீடும் அந்த ஜனங்களும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். உங்களுடைய வீட்டில் கர்த்தருடைய வசனங்கள் அடங்கிய உடன்படிக்கையின் வேதாகமம் இருக்கிறதா? அப்படிஇல்லையென்றால் உடனே ஒரு பரிசுத்த வேதாகமத்தை வாங்குங்கள். அதை வாசியுங்கள் கர்த்தர் உங்களோடு செய்துள்ள உடன்படிக்கையை தெரிந்துகொண்டு, பின்பு அதற்கு கீழ்ப்படியுங்கள். "அன்றியும், முதலாம் உடன்படிக்கையானது ஆராதனைக்கேற்ற முறைமைகளும் பூமிக்குரிய பரிசுத்த ஸ்தமும் உடையதாயிருந்தது. எப்படியெனில், ஒரு கூடாரம் உண்டாக்கப்பட்டிருந்தது; அதின் முந்தின பாகத்தில் குத்துவிளக்கும், மேஜையும், தேவசமுகத்தப்பங்களும் இருந்தன; அது பரிசுத்த ஸ்தலமென்னப்படும். இரண்டாந் திரைக்குள்ளே மகா பரிசுத்த ஸ்தலமென்னப்பட்ட கூடாரம் இருந்தது. அதிலே பொன்னாற்செய்த தூபகலசமும், முழுவதும் பொற்றகடு பொதிந்திருக்கப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன; அந்தப் பெட்டியிலே மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய தளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன... இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம்வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவித ஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல. கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி.9:1–12). "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும்பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை



அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்" (எபி.9:15). புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய அவரையும் அவருடைய உடன்படிக்கையையும் நாம் நினைவு கூரவேண்டியவர்களாக இருக்கிறோம். இது உங்கள் பிதாக்கள் புசித்த மன்னாவைப்போலல்ல, அவர்கள் மரித்தார்களே; இந்த அப்பத்தைப் புசிக்கிறவனோ என்றென்றைக்கும் பிழைப்பான் என்கிறார். அன்பானவர்களே, "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்" என்று எபிரெய ஆசிரியர் குறிப்பிடுகிறார் (எபி.10:28,29). புது உடன்படிக்கை ஒரு மனிதனை புதிய சிருஷ்டியாக்குகிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதிய சிருஷ்டியாயிருக்கிறான் பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின. இவ்விதமாக புதிதாக்கப்பட்டவன் தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்று கருதலாமா? அப்படி ஒருவன் கருதுவானேயானால் அவனுடைய நிலைமை எப்படியிருக்கும். இன்றைக்கு இந்த புது உடன்படிக்கையின் இரத்தத்தைக் குறித்து அக்கரையில்லாதவர்களாக இருக்கிறார்கள். அதை வாரந்தோறும் நினைவு கூர மறந்துவிடுகிறார்கள் அல்லது அலட்சியம் செய்துவிடுகிறார்கள். பவுல் கொரிந்து சபைக்கு இது குறித்து எழுதும்போது; "என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம்பண்ணுகிறான். இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள். நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்" (1கொரி.11:29–31).

அன்பானவர்களே உடன்படிக்கையின்படி நடக்கிறவர்களுக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்களைக்குறித்து நாம் தியானித்தோம். ஆண்டவர்

அன்றுமுதல் இன்றுவரை மனிதனை நேசிக்கிறபடியால் அவனோடே உடன்படிக்கை செய்து அதன்படியாக அவன் நடக்கவேண்டும் என்று விரும்புகிறார். நாட்டிலே ஒரு சட்டம் அமுலுக்கு வந்தால் அதை அந்நாட்டு குடிமக்கள் ஏற்று நடக்கும்போது நாட்டிற்கும் குடிமக்களுக்கும் அது பிரயோஜனமாக இருக்கிறது. அன்பானவர்களே தேவனாகிய கர்த்தர் ஒரு உடன்படிக்கையை மனிதனோடு செய்திருக்கிறார் என்றால் அது எத்தனை நன்மையானது! அந்த உடன்படிக்கையை நாம் உயர்த்தும்போது நாமும் உயர்த்தப்படுவோம். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட உடன்படிக்கையின்படி நடக்கபிரயாசப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**இப்பொழுது நாம் எந்த உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம்?**

புது உடன்படிக்கையின் கீழ் இருக்கிறோம். ஏனென்றால் "அவர்களுடைய பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டுவரும்படிக்கு நான் அவர்களுடைய கையைப் பிடித்த நாளிலே அவர்களோடு பண்ணின உடன்படிக்கையைப்போல இது இருப்பதில்லை; அந்த உடன்படிக்கையிலே அவர்கள் நிலைநிற்கவில்லையே, நானும் அவர்களைப் புறக்கணித்தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எபி.8:9). மேலும் "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபித்திருக்கிறது" (எபி.8:13). ஆகையால் அழிந்துபோன அல்லது அழிந்துபோகக்கூடிய நம் முற்பிதாக்களுக்கு கொடுக்கப்பட்ட அக்கட்டளைகளுக்கு நாம் திரும்பவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு ஏற்படுத்தியிருக்கிறார். அந்த மார்க்கத்தின் வழியாக போவதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்கு தைரியமுண்டாயிருக்கிறது.

## 34. திருப்தி
## Satisfaction

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும்



திருப்தியளிக்கக்கூடிய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். திருப்தி Satisfaction. திருப்தி என்ற வார்த்தையைக் கேட்டவுடன் உங்களுக்கு திருப்தியாக இருக்கிறதா? இருக்காது. இச்செய்தியை முழுமையாக கேளுங்கள் அப்பொழுது திருப்தியாவீர்கள். மனிதன் தன்னுடைய வாழ்நாட்களில் திருப்தியுடன் இருக்க பிரயாசப்படுகிறான். ஆனால் அவனால் திருப்தியுடன் இருக்க முடியவில்லை. வேதம் சொல்லுகிறது "மனிதன் படும் பிரயாசமெல்லாம் அவன் வாய்க்காகத்தானே; அவன் மனதுக்கோ திருப்தியில்லை" (பிர.6:7). உண்மைதானே! என்னதான் பிரயாசப்பட்டு கண்குளிரப்பார்த்தாலும், புசித்தாலும் அது அவன் ஆத்துமாவிற்கு திருப்தியளிப்பதில்லை. காரணம் மனிதன் இருக்கவேண்டிய இடத்தில் இல்லாமல் தேவனை விட்டு வெகுதூரம் சென்றுவிட்டான், ஆகையால் ஆசை அவனை அநுதினமும் வாட்டுகிறது. அவன் மனதுக்கோ திருப்தியில்லை. இப்படி திருப்தியில்லாமல் அங்குமிங்கும் அலைந்தோடும் மானிட வர்க்கத்தைப் பார்த்து, ஆண்டவர் ஒரு முறை மலைப்பிரசங்கத்தில் குறிப்பிடும் போது; "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்" என்றார் (மத்.5:6). திருப்தி செய்யாத பொருளுக்காக நீங்கள் பணத்தை ஏன் செலவு செய்வானேன். நீதிக்காக பாடுபடுங்கள், நீதிக்காக போராடுங்கள், நீதியின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயும், வாஞ்சையுள்ளவர்களாயும் இருங்கள் அப்பொழுது திருப்தியாவீர்கள். இன்றைக்கு மனிதன் பலவிதமான உபாய தந்திரங்களைத்தேடி தானே வலையில் அகப்பட்டுக்கொள்கிறான். துன்மார்க்கம் என்றும் நிலைத்திராது. நீதியோ மரணத்துக்கு தப்புவிக்கும். தன் ஜீவியத்தில் தனக்குப் பசியாயிருக்கும்போது தன் வயிற்றை நிரப்ப எப்படி பிரயாசப்படுகிறானோ, அதைப்போல தேவன் வைத்துள்ள நீதியின் மேல் பசிதாகமுள்ளவனயிருக்கவேண்டும். அன்பானவர்களே, "பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை; அதுபோல மனுஷனுடைய கண்களும் திருப்தியாகிறதில்லை" (நீதி.27:20). கேட்டின் வாசல் வழியாக செல்லக்கூடியவர்கள் அதிகம். அப்படியிருந்தும் பாதாளம் திருப்தியாகிறதில்லை. நெருப்பினாலோ அல்லது தண்ணீராலோ

அழிவைப்பார்க்கிறோம் அது எவ்வளவு தூரம் பற்றிக்கொண்டாலும் அழித்துக்கொண்டே செல்கிறது, திருப்தியுடன் அது நிற்பதில்லை. எடுத்துக்காட்டாக பாருங்கள் மார்க்கெட்டுக்கு போகிறோம் எதையாவது ஒன்றைவாங்கிவிட்டு திருப்தியுடன் வீடு திரும்புகிறோமா? அதைவாங்கினால் நன்றாயிருக்கும் இதைவாங்கினால் நன்றாயிருக்கும். ஐயோ அந்தக்கடையில் வாங்கிவிட்டேனே இந்தக்கடையில் மிக நன்றாக வைத்திருக்கிறார்கள் என்று மனம் அங்குமிங்கும் அலைபாய்கிறது. இப்படியே செல்வதால் கண்களின் இச்சைக்கு மனிதன் அடிபணிந்துவிடுகிறான். இதன்மூலமாக மாம்சஇச்சையை பிசாசு தூண்டுவான். இப்படி அலைபாயும் கண்களை பெற்ற நீங்கள் திருப்தியுடனிருக்க கர்த்தருடைய வசனத்தை முதலாவது நோக்குங்கள், அப்பொழுது திருப்தியாவீர்கள். திருப்தியுடனிருக்க நம்முடைய முற்பிதாக்களின் நடக்கைகளையும் நாம் கவனித்துப்பார்க்கவேண்டும். ஆபிரகாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான் அவனை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். ஒரு முறை அவன் ‘‘சோதோமின் ராஜாவை பார்த்து ஆபிரகாமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று, வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்’’ என்றான் (ஆதி.14:22,23). பிறனுக்குள்ள ஒரு சரட்டை கூட ஆபிரகாம் இச்சிக்கவில்லை. தன் தேவைகளுக்கு கர்த்தருக்கு நேராக தன் கையை உயர்த்தினான் என்று வாசிக்கிறோம். இன்று நீங்களும் நானும் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிறோம். ஆனால் ஆபிரகாமின் கிரியைகள் நம்மிடம் உண்டா என்று பார்க்கவேண்டும். நாமும் இந்த ஆபிரகாமைப்போல தேவனை நோக்கி தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டியவர்களாகயிருக்கிறோம். அதை விடுத்து பிறனுக்குள்ள ஒன்றை இச்சித்து எடுப்பதினால் நாம் திருப்தியடையப்போவதில்லை. ஆபிரகாமை திருப்தி செய்த கர்த்தர் இன்றும் ஜீவிக்கிறார். வாக்குதத்தம் செய்த கர்த்தர் மாறாதவராகவேயிருக்கிறார்.



தேவனாகிய கர்த்தர் ஆபிரகாமைப் பார்த்து வானத்து நட்சத்திரங்களைப் போல உன் சந்ததியை பெருகப்பண்ணுவேன் என்றார். நாம் பார்க்கிற இந்த நட்சத்திரங்கள் சுமார் 6,500 மில்லியன் ஒளியின் வேகத்திற்கு அப்பால் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஒளியின் வேகத்தில் நாம் பயணம் செய்தால் சந்திரனை1.5 செகன்டில் சென்றடையலாம். அப்படியானால் நட்சத்திரத்தை அடைய எத்தனை ஆண்டுகளாகும் என்று பார்த்தீர்களா? தேவன் எவ்வளவு பெரியவர்! அவர் நம்மை நேசிக்கிறபடியால், ‘‘விடிவெள்ளி நட்சத்திரத்தையும் அவனுக்கு கொடுப்பேன்’’ என்கிறார் (வெளி.2:28). ஆபிரகாமுக்கு வாக்குப்பண்ணினபடி அவனை ஆசீர்வதித்தார். நமக்கு கொடுப்பேன் என்று சொன்னவர் கொடாமலிருப்பாரா? அநேகருக்கு பணம் இருந்தால் போதும் திருப்தியாக வாழலாம் என நினைக்கிறார்கள் அது தவறாகும். ‘‘பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே’’ என்று பிரசங்கி சொல்லுகிறான் (பிர.5:10). ஆம் அன்பானவர்களே பணம்படைத்த பணக்காரர்களை நாம் வாழும் பூமியில் காண்கிறோம். அவர்கள் அதனால் திருப்தியாக வாழமுடியவில்லை. பல பிரச்சனைகளினால் அவர்கள் நித்திரையற்று வாழ்க்கையில் துவண்டு காணப்படுகின்றனர். அநுதின கூலிவேலைபார்க்கிறவனுடைய நித்திரை அவனுக்கு இன்பமாக இருக்கிறது. அவனுக்கு எதைக்குறித்தும் கவலையில்லை ஏனெனில் அவனிடத்தில் ஒன்றுமில்லை. வசதிபடைத்தவனுக்கோ பல காரியங்களைக்குறித்த, குடும்பத்தைக்குறித்த கவலை அவனை அநுதினமும் கொல்லும். பண ஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது என வேதம் போதிக்கிறது. யூதாஸ் பண ஆசைக்கு அடிபணிந்து குற்றமற்ற ஆண்டவரை 30 வெள்ளிக்காசுக்கு காட்டிக்கொடுத்தான். அவன் அப்பணத்தை வாங்கி திருப்தியுடன் வாழ்ந்தானா? நான்று கொண்டுசெத்தான். பாவத்தின் சம்பளம் மரணம் என்ற வசனத்திற்கேற்ப அவனுக்கு சம்பவித்தது. எனக்கு அன்பானவர்களே ஒரு மனிதனுக்கு பணத்தினால் ஒருக்காலும் திருப்தி வராது. அனனியா சப்பிராள் முதல் நூற்றாண்டு சபையில் இருந்த விசுவாசிகள். இவர்களை அப்போஸ்தலர்கள் கானியாட்சிகளை விற்று கொண்டுவரும்படி

சொன்னபோது ஒரு பங்கை வஞ்சித்து வைத்து பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொன்னார்கள். அவர்களுடைய நிலைமை என்னவானது! இருவரும் மரித்தார்கள். இன்றைக்கு இந்தவிதமாக மரிப்பார்களேயானால் எத்தனைபேர் சபையில் இருப்பார்கள் என்று தெரியவில்லை. பிரியமானவர்களே, பொய்யை களைந்து மற்றவர்களுடயே மெய்யைப்பேச வேண்டும். அப்பொழுது திருப்திசெய்யக்கூடிய ஆண்டவரின் ஆசீர்வாதமான கரம் நம்மோடு இருக்கும். நாம் கையிட்டு செய்கிற வேலைகளையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார். ஒரு முறை ''கானா ஊரில் கல்யாணம் நடந்தது; இயேசுவின் தாயும் அங்கேயிருந்தாள். இயேசுவும் அவருடைய சீஷரும் அந்தக் கலியாணத்துக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். திராட்சரசங்குறைவுபட்டபோது, இயேசுவின் தாய் அவரை நோக்கி: அவர்களுக்குத் திராட்சரசம் இல்லையென்றாள். அதற்கு இயேசு: ஸ்திரீயே, எனக்கும் உனக்கும் என்ன, என் வேளை இன்னும் வரவில்லை என்றார். அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள். யூதர்கள் தங்களைச் சுத்திகரிக்கும் முறைமையின்படியே, ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளத்தக்க ஆறு கற்சாடிகள் அங்கே வைத்திருந்தது. இயேசு வேலைக்காரரை நோக்கி: ஜாடிகளிலே தண்ணீர் நிரப்புங்கள் என்றார்; அவர்கள் அவைகளை நிறைய நிரப்பினார்கள். அவர் அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனிடத்தில் கொண்டுபோங்கள் என்றார். அவர்கள் கொண்டுபோனார்கள். அந்தத் திராட்சரசம் எங்கேயிருந்து வந்ததென்று தண்ணீரை மொண்ட வேலைக்காரருக்குத் தெரிந்ததேயன்றி பந்திவிசாரிப்புக்காரனுக்குத் தெரியாததினால், அவன் திராட்சரசமாய் மாறின தண்ணீரை ருசிபார்த்தபோது, மணவாளனை அழைத்து: எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து, ஜனங்கள் திருப்தியடையந்தபின்பு, ருசிகுறைந்ததைக் கொடுப்பான், நீரோ நல்ல ரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான்'' (யோவா.2:1–10). அன்பானவர்களே இந்த முதலாம் அற்புதத்தை ஆண்டவர் கானாவூர் கலியாணவீட்டில் செய்தார். தண்ணீரை திராட்சரசமாக மாற்றி ருசியுள்ள



திராட்சைரசத்தைக்கொடுத்தார். பந்திவிசாரிப்புக்காரனுக்கு அது தெரியாதபடியால் மணவாளனை அழைத்து, எந்த மனுஷனும் முன்பு நல்ல திராட்சரசத்தைக் கொடுத்து ஜனங்கள் திருப்தியடைந்தபின்பு ருசிகுறைந்ததைக் கொடுப்பான் நீரோ நல்லரசத்தை இதுவரைக்கும் வைத்திருந்தீரே என்றான். அவ்வளவு திருப்தி தரக்கூடிய ருசிநிறைந்த திராட்சரசத்தைக் கர்த்தர் அந்த கலியாணவீட்டில் கொடுத்தார். மேலும் மற்றொரு சம்பவத்தில் 5அப்பத்தையும் 2மீன்களையும் ஆசீர்வதித்துக் கொடுத்தபோது அதை சாப்பிட்ட புருஷர் ஏறக்குறைய 5000 பேராயிருந்தார்கள். அவர்கள் எல்லாரும் சாப்பிட்டு திருப்தியடைந்தார்கள் என நாம் வாசிக்கிறோம் கர்த்தர் திருப்தியடைகிற அளவுக்கு ஜனங்களைப் போஷித்தார். கர்த்தருடைய கரமே ஒரு மனிதனை திருப்திசெய்யும்.

''திருப்தியடைந்தவன் தேன்கூட்டையும் மிதிப்பான்'' (நீதி.27:7) என்ற வசனத்தின்படி அந்த நாட்களில் ராஜாவின் மதுபானத்தினால் தங்களை தீட்டுப்படுத்தாத நான்குபேரைக்குறித்து தானியேல் புஸ்தகத்தில் வாசிக்கின்றோம். இவர்கள் பிரதானிகளின் தலைவனை நோக்கி எங்களுக்கு புசிக்க பருப்பு முதலான மரக்கறிகளையும், குடிக்க தண்ணீரையும் கொடுத்து பத்துநாள் எங்களை சோதித்துப்பாரும் என்றார்கள். அவன் அப்படியே சோதித்து பார்த்தபோது இவர்கள் முகம் களையுள்ளதாயும் சரீரம் புஷ்டியுள்ளதாயும் இருக்கக் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டான். அந்த நான்கு புருஷரும் தேவனுக்குப் பயந்து மதுபானத்தை விலக்கிவிட்டு மரக்கறிகளை புசித்து திருப்தியடைந்தார்கள். ''கர்த்தருக்கு பயப்படுதல் ஜீவனுக்கு கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது'' (நீதி.19:23). கர்த்தருக்கு பயப்படும் பயம் ஒருவனுக்குள் வந்துவிட்டால் அனைத்து ஆசீர்வாதங்களும் அவனைத்தேடி வரும். இதை கர்த்தருக்குப் பயந்தவர்கள் பெற்று அனுபவிக்கிறார்கள். அன்பானவர்களே, தாவீது கர்த்தருக்கு பயப்பட்டான் அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். அதேபோல் தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போன்றோரும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். இவர்கள் கர்த்தருக்காக வைராக்கிய முள்ளவர்களாக, உள்ளவைகள் போதும் என்று திருப்தியுடன் நிலைத்திருந்தனர் தீமை இவர்களை அணுகவில்லை. இவ்வுலகத்திலே

ஜீவிக்கிற ஒவ்வொருவரும் திருப்தியுள்ளவர்களாக மாறவேண்டுமென்பதே தேவனுடைய விருப்பம் அதை நிறைவேற்ற மேற்கண்ட வசனங்களின்படி வாழ்ந்து, திருப்தி செய்யாத இவ்வுலகத்தின் ஆசைகளை களைந்து மேற்கண்ட வசனங்களின்படி வாழ்ந்து, திருப்தி செய்யும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவுக்கு நம்மை முழுவதும் அர்ப்பணிப்போம்.

**கேள்வி நேரம்**

**எவனைப் பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்று பிரசங்கி சொல்லுகிறான்?**

''ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று, அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்குப் பிரேதக்கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப்பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி என்கிறேன்'' (பிர6:3). ஆபிரகாம் முதல் கொண்டு சில முக்கியமான தலைமுறையினர் மட்டும் தன் ஜனத்தாரோடே சேர்க்கப்பட்டனர் என்று வேதத்தில் வாசிக்கிறோம். தீர்க்காயுசு உள்ளவனாக மரித்து தன் ஜனத்தாரோடு சேர்க்கப்படுவது ஒரு மிகப்பெரிய பாக்கியம் என்றே சொல்லவேண்டும். அந்தக் கல்லறை முதற்கொண்டு இல்லாமற்போகுமானால் கருவழிந்த பிண்டமே வாசி என்கிறான் பிரசங்கி. தீர்க்காயுசு உள்ளவர்களாக மரித்து தம் ஜனத்தாரோடு சேர்க்கப்படும் திருப்தியை நமக்கு கொடுக்கிற கர்த்தருடைய வசனத்தைப் பற்றிக்கொள்ளுங்கள்.

## 35. மேட்டிமை
## Pride

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நேற்றும் இன்றும் என்று மாறாதவராயிருக்கிற இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேட்டிமை Pride. தேவனுக்கு அருவருப்பானவைகளில் ஒன்று மேட்டிமை. இந்த மேட்டிமை ஒரு மனிதனுக்குள் இருக்குமேயானால் அதுவே அவனை வீழ்த்தும் ஆயுதமாக



இருக்கும். அநேக தேவபிள்ளைகளும் மனமேட்டிமை கொண்டு ஆவியில் வீழ்ச்சியடைகின்றார்கள். Pride goes before destruction. அழிவுக்கு முன்னானது அகந்தை என காண்கிறோம். ''மனமேட்டிமையுள்ளவனெவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்'' என (நீதி.16:5). மனமேட்டிமையுள்ள எந்த மனிதனையும் கர்த்தர் நேசிக்கமாட்டார். அப்படிப்பட்டவர்கள் தேவனுக்கு அருவருப்பானவர்கள் என பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். நாம் பார்க்கிற வானமும் பூமியும் தேவனுடைய கரத்தினால் சிருஷ்டிக்கப்பட்டது. நாமும் அவரால் உண்டாக்கப்பட்டு உள்ளோம். இதில் நாம் மேட்டிமை கொள்வதற்கு என்ன இருக்கிறது? தேவன் கோணலாக்கினதை நம்மால் நேராக்க முடியுமா? அதைப்போல இரவு பகலை உண்டாக்கினார் அதை நம்மால் மாற்றியமைக்க முடியுமா? ஒன்று செய்வோம் தேவன் உண்டாக்கினவற்றிலிருந்து நாம் ஒரு புதிய காரியத்தை செய்ய அறிந்திருக்கிறோம். மற்றபடி நாம் மண்ணாயிருக்கிறோம் மண்ணுக்கு திரும்புவோம் ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பும். யோபு சொல்கிறார் நான் நிர்வாணியாய் வந்தேன் நிர்வாணியாய் போவேன். அதைப்போலவே ஒவ்வொருவருக்கும் சம்பவிக்கும். அப்படியிருக்கும்போது நாம் ஏன் மேட்டிமை கொள்ளவேண்டும். மேட்டிமை கொண்டு வாழ்ந்த அநேகர் இருந்த இடம் தெரியாமல்போய்விட்டார்கள் என்பதை நாம் நினைப்போமானால் நாமும் மேட்டிகொள்ள மாட்டோம். மேட்டிமையானது ஒருவனுக்குள் எப்படி வருகிறதென்றால் அவனுடைய புகழ்ச்சி, அந்தஸ்து, படிப்பு, உயர்வு போன்ற காரியங்கள் அவனை மேட்டிமைக்குள்ளாக மாற்றுகிறது. தன்னை சிருஷ்டித்த கர்த்தரை மறந்து அவருக்குமேலாக தன்னை உயர்த்தவிரும்புகிறான். பணம் பத்தும் செய்யும் என்பார்கள். இவைகள் அவனுக்கு இருப்பதாலே நான் எதையும் செய்திடுவேன் எதையும் சாதித்துவிடுவேன் என்றுகூறி மேட்டிமைகொள்ள ஆரம்பிக்கிறான். நாளைக்கு நடப்பதை அறியாத ஒரு மனிதன் இவ்விதமாக மேட்டிமை கொள்வதை தேவன் விரும்பவில்லை.

நம் முற்பிதாக்களின் காலத்தில் வாழ்ந்த ராஜாவாகிய எசேக்கியா யூத ராஜாக்களிலே மிகவும் பெயர் பெற்றவனாக விளங்கினான். ''இஸ்ரேலின் தேவனாகிய கர்த்தர்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும்

அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிளெல்லாம் அவனைப் போல் ஒருவனும் இருந்ததில்லை'' என 2இரா.18:5–ல் வாசிக்கின்றோம். இந்த ராஜா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான். அப்பொழுது அவன் கர்த்தரை நோக்கி ஜெபம் பண்ணும் போது அவர் அவனுக்கு வாக்குதத்தம்பண்ணி ஒரு அற்புதத்தைக் கட்டளையிட்டார். பரலோகத்தின் தேவன் அவனுக்கு இரங்கினார் காரணம் என்ன? அவனுடைய நற்காரியங்களை தேவன் பார்த்தார். அவன் மேடைகளை அகற்றி, சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத்தோப்புகளைவெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப்போட்டான்; அந்நாட்கள்மட்டும் இஸ்ரவேல் புத்திரர் அதற்குத் தூபங்காட்டி வந்தார்கள்; அதற்கு நிகுஸ்தான் என்று பேரிட்டான். அவன் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின்மேல் வைத்த நம்பிக்கையிலே, அவனுக்குப் பின்னும் அவனுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை. அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான். இப்படியிருந்த இந்த எசேக்கியா ராஜா ''தனக்குச் செய்யப்பட்ட உபகாரத்திற்குத்தக்கதாய் நடவாமல் மனமேட்டிமையானான்; ஆகையால் அவன்மேலும், யூதாவின்மேலும், எருசலேமின்மேலும் கடுங்கோபம்முண்டது. எசேக்கியாவின் மனமேட்டிமையினிமித்தம் அவனும் எருசலேமின் குடிகளும் தங்களைத் தாழ்த்தினபடியினால், கர்த்தருடைய கடுங்கோபம் எசேக்கியாவின் நாட்களிலே அவர்கள்மேல் வரவில்லை'' என்று 2நாளா.32:25,26 வசனங்களில் படிக்கிறோம். இவ்வளவு தேவஆசீர்வாதத்தைப்பெற்ற இந்த எசேக்கியா ராஜாவும் மேட்டிமைகொள்ள ஆரம்பித்தான். மனமேட்டிமை ஒருவனையும் விட்டுவைக்கவில்லை. பின்பதாக இவன் தன்னை தாழ்த்தினபோது கர்த்தருடைய கோபத்திற்கு தப்பினான். அன்பானவர்களே, மனமேட்டிமை நம்மை உண்டாக்கினவருக்கு விரோதமான காரியங்களை செய்யத்தூண்டும். அதினாலே அநேக தேவதாசர்கள் வீழ்ந்துபோனார்கள் என்று நாம் அறிகிறோம்.

''விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை'' என்று சாலொமோன் நீதி.16:18–ல் கூறுகிறார். ஒரு மனிதன் வீழ்ச்சியடைகிறான் என்றால் அவனது



வாழ்வில் ஏதோ மேட்டிமை கொண்டுள்ளான் என்று அர்த்தம். மேற்கண்ட வசனத்தின்படி விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமையாக இருக்கிறது. எங்களுடைய வாழ்க்கையிலும் அது நடைபெற்றது அதை எங்களால் மரக்கமுடியவில்லை, அது மரக்கமுடியாத தழும்பாகிவிட்டது. அதற்கு அடையாளமாக என் வலது கை எலும்பு முறிந்துவிட்டது. நாங்கள் மேட்டிமை கொண்ட சில மணிதுளிகளிலே இரண்டு சக்கர வாகனத்திலிருந்து விழுந்தோம். நாம் கர்த்தருடைய பிள்ளைகள் என்பதை சிலவேளைகளில் மறந்துவிடுகிறோம். துன்மார்க்கர் மீது நம்மை ஒப்பிட்டுப்பார்ப்பதோ, அல்லது அவர்களுக்குமேலாக நாம் போகவேண்டும் என்று எண்ணுவதோ கர்த்தருடைய பார்வையில் குற்றமாகயிருக்கிறது. இந்தவிதமான எண்ணம் நம்மில் உருவாகும்போது நாம் வீழ்ச்சியடைகிறோம். நமக்கு தேவன் கொடுத்த பெலத்தின்படி நாம் நடக்கக்கற்றுக்கொள்ளும்போது தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம். உலகத்திலே துன்மார்க்கரையும், அக்கிரமக்காரரையும், சன்மார்க்கரையும் தேவன் அனுமதிக்கிறார் என்றால் அது அவருடைய சித்தம். அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவனுக்கு அவன் கனக்குகொடுக்கவேண்டும். நாமோ அநுதினமும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருக்கவேண்டும். சிலர் தங்களைத்தாங்களே மெச்சிக்கொண்டு மனமேட்டிமையடைவார்கள். என் சுய பெலத்தினாலே இவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளேன் எனக்கு யாரும் உதவிசெய்யவில்லை என்றெல்லாம் சொல்லி தன்னைத்தானே புகழ்ந்துகொள்வார்கள். ''தன்னைத்தான் புகழுகிறவன் உத்தமனல்ல, கர்த்தரால் புகழப்படுகிறவனே உத்தமன்'' என்று 2கொரி.10:18–ல் வாசிக்கிறோம்.

''ஆறு காரியங்களைக் கர்த்தர் வெறுக்கிறார், ஏழும் அவருக்கு அருவருப்பானவைகள் அவைகளில் ஒன்று மேட்டிமையான கண்''...(நீதி.6:16–19). இந்த மேட்டிமையான கண்கொண்டு அலைகிறவர்கள் அநேகர். ஒரு விதமான அலட்சியப்பார்வையோடு பார்த்து தங்களை தாங்களே மெச்சிக் கொண்டு மேட்டிமையாகச் செல்வதை நாம் அநுதின வாழ்வில் காண்கிறோம். தேவன் நமக்கு கண்களை கொடுத்திருக்கிறார் என்றால் அது எதற்காக? நலமான காரியங்களைப்பார்க்கவும் அநேகருக்கு

நல்லவைகளைச் செய்யவும் தான் கொடுத்திருக்கிறார். ஒரு பிறவிக்குருடனையோ அல்லது பார்வையிழந்த ஒரு நபரையோ பார்த்து பேட்டிகாண்போம் என்றால் அவர்கள் சொல்லுவார்கள் எனக்கு கண்பார்வைமட்டும் கிடைத்துவிட்டால் போதும் நாம் அதைச் செய்வேன் இதைச்செய்வேன் என்று சந்தோஷத்தின் மிகுதியினால் அநேக காரியங்களைச் சொல்லஆரம்பிப்பார்கள். அன்பானவர்களே, கண்ணை உண்டாக்கினவர் காண்கிறார். ஒருவரும் அவருடைய பார்வைக்கு தப்பமுடியாது. இன்றைய நாட்களில் அதிகமான ஜனங்களை வஞ்சித்துக்கொண்டிருப்பது இந்த மேட்டிமையான கண்கள். இந்த கண்களாலே கர்த்தரை நோக்கிப்பார்ப்போம். தேவன் மனிதனுக்கு ஒளியாக கண்களை படைத்துள்ளார். இக்கண்கள் மனிதனுக்கு நன்மை பயக்கவே ஒழிய மேட்டிமை கொள்ள அல்ல. பரிசுத்த வேதாகமத்தின் வழி, யாவரும் ஏற்று நடக்கவேண்டிய வழியே அதன் மூலம் அநேகருக்கு நன்மை செய்யமுடியும். நம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவும் பிதாவின் சித்தத்தை செய்து நமக்கு மாதிரியை வைத்து சென்று உள்ளார். அம்மாதிரியை நாம் பின்பற்றி மேட்டிமைக் கண்களை களைந்து கிறிஸ்துவுக்கேற்ற சிந்தையிலே "ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்" பிலி.2:3–ன் படி எண்ணுங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களை கிறிஸ்துஇயேசுவுக்குள் காத்து, வழிநடத்தும். தீரு பட்டணம் மேட்டிமை கொண்டு தேவனுக்கு விரோதமாக கொக்கரித்துக்கொண்டிருந்தது. காரணம் துறைமுகத்தின் மூலம் கிடைத்த வருவாய், கொடுக்கல் வாங்களில் வளர்ச்சி, வியாபாரிகள் சகலவித இரத்தினக்கற்களையும், பொன்னையும் சகலவித உயர்ந்த சரக்குகளையும் கொண்டு வியாபாரம் பண்ணினார்கள். இன்றைய நாட்களிலே கொடுக்கல் வாங்களில் வியாபாரம் பெருகிவிட்டால் கர்த்தரை எப்படி மறக்கின்றார்களோ அதே போல் அன்றும் இந்த தீரு பட்டணம் கர்த்தரை மறந்து மேட்டிமை கொள்ள ஆரம்பித்தது. அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எசேக்கியேல் தீர்க்கனுக்கு உண்டாகி; "மனுபுத்திரனே, நீ தீருவின் அதிபதியை நோக்கி:



கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், உன் இருதயம் மேட்டிமை கொண்டு: நான் சமுத்திரத்தின் நடுவே தேவாசனத்தில் வீற்றிருக்கிறேன் என்று நீ சொல்லி, உன் இருதயத்தைத் தேவனின் இருதயத்தைப்போல் ஆக்கினாலும் நீ மனுஷனேயல்லாமல் தேவனல்ல" என்று உரைத்தார் (எசே.28:2). வாழ்க்கையில் கொஞ்சம் வளர்ச்சியடைந்தவுடன் மனிதன் முன் நிலையை மறந்து விடுகிறான். இன்றைக்கு அநேக கடற்கரை பட்டணங்கள் அழிந்துபோவதற்கு என்ன காரணம் என்று நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ஒன்று அங்கே விபசாரம் அதிகரிக்கும் அல்லது தேவனுக்கு விரோதமான மேட்டிமை அதிகரிக்கும். எனக்கு அன்பானவர்களே இந்த தீருபட்டணத்திற்கு அந்த விதமாக சம்பவித்தது. பொதுவாக தீவுகளை பார்க்கும்போது அது மிக அழகாக இருக்கும். அதற்காக அதை உண்டாக்கின கர்த்தரை துதிக்கவேண்டும் அவருடைய நாமத்தை அங்கே மகிமைப்படுத்தவேண்டும். அதை விட்டு அதன் பொருளாதாரத்தையும் மற்றகாரியங்களையும் குறித்து மேன்மையாக மேட்டிமைகொள்வோமானால். அது தேவனுக்கு விரோதமான பாவமாகும். ஆகையால் பிரியமான, சகோதரனே, சகோதரியே இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற அருமையான நேயரே, உன்னில் உள்ள மனமேட்டிமையையும், மேட்டிமையான கண்களையும் இன்றே எடுத்துப்போடுங்கள். கர்த்தர் இவைகளை அருவருக்கிறார். தேவன் அவருவருக்கிற காரியத்தை நீங்கள் தொடர்ந்து செய்யலாமா? அவற்றை முற்றிலும் அழித்துப்போடுங்கள். நாம் மேட்டிமை கொள்வதற்கு என்னயிருக்கிறது. சற்று யோசித்துப்பாருங்கள். ஒன்றுமில்லை. ஆகையால் "மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன்" என்ற 2கொரி.10:17–ன் படி கர்த்தரைக் குறித்தே மேன்மை பாராட்டுவோமாக. Boast not about yourself,Boast about the Lord. விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை என்ற தேவவசனத்தை மறவாது இருப்போம்.

**கேள்வி நேரம்**

**நமக்குள் எழும்பும் மனமேட்டிமையை மேற்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்?**

நாம் ஒன்றுமில்லை என்பதை முதலாவது நினைவுகூரவேண்டும். மற்றவர்களை பார்க்கும்போதெல்லாம் அவர்களை தங்களிலும் மேலானவர்களாக கருதவேண்டும். வேதமும் அவ்வாறே போதிக்கிறது. ‘‘ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்’’ (பிலி.2:3). இந்த விதமான சிந்தை உங்களுக்கு வருமானால் உங்களில் எழும்பும் மனமேட்டிமை உங்களை மேற்கொள்ளமுடியாது. அநேக வேளைகளில் தாழ்மை வருவதில்லை. நான் அவனுக்கு எந்தவகையில் குறைந்தவன். அவன் நேற்று முளைத்த காளான் என்று மற்றவர்களை இழிவாக நினைப்பது, மற்றும் குறைவாக மதிப்பிடுவது. ஒவ்வொரு நாளும் இதுபோன்ற பலவிதமான சம்பவங்களைப்பார்க்கிறோம். பாமர ஏழை பணக்காரனாக மாறுகிறான். பரம்பரை பணக்காரன் பரம ஏழையாகிறான். தேவன் இவைகளை அறிகிறார். கர்த்தருடைய வசனங்களைக் கைக்கொள்ளும்போது நமக்குள் எழும்பும் மனமேட்டிமையை தவிர்க்கலாம். கர்த்தர் அதற்கு வேண்டிய ஞானத்தை உங்களுக்கு கொடுக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

## 36. விசுவாச கப்பல்
## Faith Ship

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். விசுவாச கப்பல் - Faith Ship. உலகத்திலே யாவரும் மறக்கமுடியாத ஒரு சம்பவம் எதுவென்றால் அது டைட்டானிக் கப்பல். அதை வடிவமைத்தவர்கள் அது ஒருக்காலும் மூழ்காது என்ற நம்பிக்கையுடனிருந்தனர். ஆனால் அக்கப்பல் பனிப்பாறையில் மோதி முற்றிலும் மூழ்கிப்போனது. அது மனிதர்களால் உருவாக்கப்பட்டது. அன்பானவர்களே, தேவன் ஒரு கப்பலை ஏற்படுத்தியுள்ளார் அதைக்குறித்து உங்களோடு பகிர்ந்துகொள்ளவிரும்புகிறேன். அது விசுவாசக்கப்பல். அது



எங்கிருக்கிறது? அதில் பயணம்செய்ய பணம் எவ்வளவு என்ற கேள்வி உங்களுக்கு எழும்பும். அதைக்குறித்து பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். ‘‘விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்: ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்’’ என்று எபி.11:6–ல் வாசிக்கிறோம். இவ்வுலகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு மனுஷனுக்குள்ளும் விசுவாசம் என்ற நம்பிக்கை இருக்கவேண்டும். அப்படியில்லாமலிருந்து கொண்டு நானும் தேவனுடைய மனுஷன் என்று சொல்லிக்கொள்வதில் அர்த்தமில்லை. ஒருவனுக்குள் இருக்கும் அந்த விசுவாசத்தை அவன் தன்னை உண்டாக்கிய தேவன் மீது வைக்கவேண்டும். விசுவாசத்தை இயற்கை மீது அல்ல, இயற்கையை படைத்த தேவன் மீது வைக்க வேண்டும். முற்காலத்தில் நோவா என்ற ஒரு தேவ மனிதன் இருந்தான். அவனது காலத்தில் உலகம் ஜலப்பிரளயத்தினால் அழிந்தது. அவனோ கர்த்தருடைய பார்வையில் நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அவனைக் கர்த்தர் தெரிந்துகொண்டு நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என்றார். அவன் அந்தப்படியே ஒரு பேழையை உண்டாக்கினான். அதில் நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்த சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன் என்றார். அந்தப்படியே நோவாவும் அவன் வீட்டில் இருந்த எட்டுப்பேரும் பேழையில் பிரவேசித்து உலக அழிவில் இருந்து காக்கப்பட்டனர். இது ஒரு கதையல்ல, உண்மையிலே நடந்த சம்பவம். அவர்கள் மூலம் உண்டான புதிய உலகத்தின் சந்ததியாக இன்று நாம் இருக்கிறோம். இந்த நோவா தேவ எச்சரிப்பு பெற்று, தேவன் மீது தன் விசுவாசத்தை வைத்து, தேவ கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, மறுப்புச் சொல்லாமல் பேழையை கட்டிமுடித்தான். அவனைப் பார்த்து அநேகர் ஏளனம் செய்து இருக்கக்கூடும். இந்த நோவாவுக்கு என்ன புத்தி கெட்டுப்போய்விட்டதா? மழை பெய்து வெள்ளத்தால் இந்த உலகம் அழியப்போகின்றதாமே! மழைபெய்து இந்த உலகம் முழுவதும் அழியுமா என்ன? என்று அவனுடைய விசுவாசத்தை கெடுக்கும் அநேக வார்த்தைகளை சொல்லியிருப்பார்கள். ஆனால் அவனோ, தன்

விசுவாசத்தில் உறுதியுடனிருந்து தன் குடும்பத்தை உலக அழிவிலிருந்து காப்பாற்றினான். நோவா பேழையில் பிரவேசித்து ஏழுநாள்கழித்து மழைபெய்ய ஆரம்பித்தது. அந்த ஏழுநாளும் அவனுடைய விசுவாசம் அந்த பேழையில் எப்படியிருந்திருக்கும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அவனுக்கு கடுகளவும் சந்தேகம் ஏற்படவில்லை. தன்னுடைய குடும்பத்தை பேழையில் பிரவேசிக்க செய்த தேவன் மீது முழுநம்பிக்கையை வைத்திருந்தான். ‘‘நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்’’ என்று அப்போஸ்தலனாகிய பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார் (ரோம.8:25). நம்பிக்கை என்பது காணாத ஒன்று அதை நாம் பெற்றுக்கொள்ளும்வரை பொறுமையுடன் காத்திருக்கவேண்டும். இந்த நோவா காத்திருந்து அழிவிலிருந்து காக்கப்பட்டதை நாம் வாசிக்கிறோம்.

அன்றும் சரி, இன்றும் சரி விசுவாசமார்க்கத்தார்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. நோவாவின் மூலமாக அன்றைய உலகத்தை இரட்சித்த தேவன் இன்று அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்து மூலம் இரட்சிப்பை கட்டளையிட்டு இருக்கிறார். ‘‘இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார், இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்’’ (எபி.1:2). இச்செய்தியை கேட்கிற அன்பான நேயரே, உன் விசுவாசத்தை எங்கு வைத்திருக்கிறாய்? உன் விசுவாசம் எத்தகையது? உன் விசுவாசத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீது வை. ‘‘கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறதாவது: இதோ, அஸ்திபாரமாக ஒரு கல்லை நான் சீயோனிலே வைக்கிறேன்: அது பரீட்சிக்கப்பட்டதும், விலையேறப்பெற்றதும், திட அஸ்திபாரமுள்ளதுமான மூலைக்கல்லாயிருக்கும், விசுவாசிக்கிறவன் பதறான்’’ என்ற ஏசா.28:16–ன்படி ஆண்டவராகிய இயேசு பரீட்சிக்கப்பட்ட கல்லாக, எருசலேமில் நமக்காக, நம்முடைய பாவத்தை போக்கும் பலியாக, சிலுவையில் இரத்தம் சிந்தினார். இந்த அஸ்திபாரக் கல்லாகிய கிறிஸ்துவின் மீது உன் விசுவாசத்தை துவக்குவாயானால் உன் ஆத்துமா இரட்சிக்கப்படும். இவரிலே விசுவாசமாயிருக்கிறவன் பதறான். ‘‘அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு



வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை’’ (அப்.4:12). இந்த நாமத்தில் விசுவாசமுள்ளவர்கள், விசுவாசமார்க்கத்தார்கள் என்றழைக்கப்படுகிறார்கள். ஒரே ஒரு நாமமே வானத்தின் கீழெங்கும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. வேறொரு நாமம் சொல்லப்படவில்லை. அப்படி வேறொரு நாமம் சொல்லப்பட்டிருக்குமேயானால் அது சத்தியத்திற்கு விரோதமான நாமம் அந்த நாமத்தில் இரட்சிப்பு இல்லை. நாம் வஞ்சிக்கப்பட்டுப்போகாதிருக்க வானத்திலிருந்து சொல்லப்பட்ட இந்த நாமத்தை பற்றிக்கொள்ளவேண்டும். ஆண்டவர் இயேசு தம்முடைய சீஷர்களோடு இருக்கையில், இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது. இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று. சீஷர்கள் அதைக் கேட்டு, முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள். அன்பானவர்களே, பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரன் இயேசுவை தெரிந்துகொண்டார். ஆகையால் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்றார். இன்றைக்கு நீங்கள் யாருக்கு செவிகொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்? உலகத்தையே இரட்சிக்கும் இயேசுவுக்கு செவிகொடுப்பீர்கள் என்றால் நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள்.

நோவாவின் பேழையில் அன்று நோவாவின் வீட்டாருக்கு இரட்சிப்பு கிடைத்தது. அதுபோல் இன்று கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்தவர்களுக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. கிறிஸ்துவானவர் ‘‘இந்த கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன், பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை’’ என்றார் (மத்.16:18). இயேசுகிறிஸ்து ஒரே ஒருசபையைத்தான் கட்டினார். அந்த சபை முதலாவது எருசலேமிலே ஆரம்பிக்கப்பட்டது. அவர்களுக்கு கிறிஸ்தவர்கள் என்கிற பெயரும் வழங்கப்பட்டது. ஏன் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவதால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டனர். அதைப்போல கிறிஸ்து ஒரு சபையைக் கட்டியிருப்பாரேயானால் அது எந்த சபையாக இருக்கவேண்டும்? கிறிஸ்துவின் சபையாகத்தான் இருக்கவேண்டும். உலகமெங்கும் கிறிஸ்தவர்கள் இருக்கிறார்கள். ஆனால்

கிறிஸ்துவின் பெயரால் சபைகள் அதிகமாக அழைக்கப்படுவதில்லை. நோவா கட்டிய பேழையை நோவாவின் பேழை என்று தான் அழைக்கிறோம். அந்தப்படியாக கிறிஸ்து சபையைக் கட்டியிருக்கும்போது அது கிறிஸ்துவின் சபை என்றே அழைக்கப்படவேண்டும். அது ஒரு விசுவாசபேழையாக இருக்கிறது. விசுவாசமுள்ளவர்கள் மட்டுமே அந்த பேழையில் இருக்கமுடியும். அதற்கு தலைவராகவும், மூலைக்கல்லாகவும் கிறிஸ்து ஒருவரே இருக்கிறார். பவுல் எபேசு சபைக்கு எழுதும்போது; "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும் (அதாவது சபை) என்று எபே.4:4–ல் வாசிக்கிறோம். அன்று ஒரே பேழை மூலமே இரட்சிப்பு. அதைப்போல இன்று ஒரே சபையின் மூலமே இரட்சிப்பு. பல சபைகள் இருக்கமுடியாது. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? இல்லையே, பிரியாத கிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும் பிரிக்கிறவர்களை தேவன் தண்டியாமல் விடார். வேதம் போதிக்கிறபடி இந்த கிறிஸ்துவின் விசுவாசப்பேழையில் நீங்கள் சுவிசேஷத்தைக் கேள்விப்பட்டு, அதைவிசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவை தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று வாயினால் அறிக்கையிட்டு, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று இருக்கிறீர்களா? அப்படிப்பெற்றுக்கொண்டவர்களையே கர்த்தர் தமது சபையில் சேர்க்கிறார் என்று அப்.2:47–ல் வாசிக்கிறோம். அப்படியில்லையென்றால் வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, அவருடைய விசவாசக் கப்பலில் ஏற பிரயாசப்படுங்கள். நோவாவின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்த அவனுடைய குடும்பம் அந்தப் பேழை மூலமாக காப்பற்றப்பட்டது. இன்று கிறிஸ்துவின் வசனத்திற்கு செவிகொடுத்து அவருடைய குடும்பத்தில் அங்கமாகி இரட்சிக்கப்பட அவர் ஏற்படுத்தின மெய்யான சபையை நாடுங்கள். நோவா காலத்தில் அந்த பேழையை அசட்டை செய்த எல்லாரும் அழிக்கப்பட்டார்கள். அதைப்போல கிறிஸ்துவின் மூலமாக ஏற்படுத்தப்பட்ட சபையை அந்த விசுவாசக் கப்பலை அசட்டை செய்கிறவர்களும் ஒருநாளில் அழிக்கப்படுவார்கள்.

"நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்"



(1யோவா.5:4). விசுவாசத்தினால் நம்முடைய முற்பிதாக்கள் இராஜ்யங்களை ஜெயித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். நாமும் விசுவாசத்தின் மூலமாகவே இரட்சிக்கப்படுகிறோம். இயேசு ஒரு முறை தமது சீஷர்களோடு படகில் அக்கரைக்குப்போகும்போது "அவர் நித்திரையாயிருந்தார். அப்பொழுது கடலிலே சுழல்காற்றுண்டானதால், அவர்கள் மோசமடையத்தக்கதாய் படவு ஜலத்தினால் நிறைந்தது. அவர்கள் அவரிடத்தில் வந்து, ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்றுபோய், அமைதலுண்டாயிற்று. அவர் அவர்களை நோக்கி: உங்கள் விசுவாசம் எங்கே என்றார்" (லூக்.8:23–25). அன்று சீஷர்கள் பயப்பட்டதுபோல இன்றும் அநேக சமயங்களில் நம்தேவைகள் சந்திக்கப்படாதிருக்கும்போதும், உலகத்தால் தள்ளப்படும்போதும், ஏமாற்றப்படும்போதும், வியாதிகள் தீராதிருக்கும்போதும், கவலைகள் கடலலைகள்போல எழும்பும்போதும், பணப்பற்றாக்குறை சுழல்காற்றைப்போல வந்து நம்மை பயப்படுத்தும்போதும் பயமடைகிறோம். அப்படிப்பட்ட வேளைகளில் நம்தேவன் நம்மோடிருக்கிறார் என்ற எண்ணம் நம்மைவிட்டு வெகுதூரம் சென்றுவிடுகிறது. வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் உண்மையுள்ளவராயிருக்கிறார். விசுவாச கப்பலில் பயணம் செய்யும் நீங்கள் எப்பொழுதும் விசுவாசத்துடன் இருக்கவேண்டும். ஒரு முறை விசுவாசித்தால் மட்டும்போதாது மரணபரியந்தமும் விசுவாசமுள்ளவர்களாயிருக்கவேண்டும். உங்கள் விசுவாசத்தை குறைந்து போகப்பண்ணுகிறவர்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள். உங்களில் சுவாசம் இருக்கும்வரை உங்கள் விசுவாசத்தை விட்டுவிடாதிருங்கள்.

**கேள்வி நேரம்**

**இந்த விசுவாச கப்பலை சேதப்படுத்துகிறவர்களை நாம் என்ன செய்யவேண்டும்?**

அப்படிப்பட்டவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டும் என்று பவுல் எழுதுகிறார். "இந்த நல்மனச்சாட்சியை சிலர் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள். இமெனேயும் அலெக்சந்தரும் அப்படிப்பட்டவர்கள்;

அவர்கள் தூஷியாதபடி சிட்சிக்கப்பட அவர்களை சாத்தானிடத்தில் ஒப்புக்கொடுத்தேன்” என்று பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார் (1தீமோ.1:19,20). மேலும் ஆண்டவர் சொல்லும்போது; “என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக்கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்” என்கிறார் (மத்.18:6). இந்த விசுவாசமான கப்பலை சேதப்படுத்தாமல், அதற்கு உறுதுணையாக இருந்து. விசுவாச கப்பல் நித்திய இராஜ்யத்திற்கு சென்றடையும் வரை அதற்கு உதவியாயிருங்கள். நாங்கள் உங்கள் விசுவாசம் வளரவும், விருத்தியடையவும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 37. கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி
## Perfect in Christ Jesus

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் உன்னதர் இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி – Perfect in Christ Jesus. இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் ஒவ்வொருவகையில் தேர்ச்சியடைய விரும்புகின்றனர். பொதுவாக எந்த ஒரு வேலைக்கும் நன்கு தேர்ச்சியடைந்த ஒரு நபரையே தேர்வு செய்கின்றார்கள். ஏனெனில் அப்பொழுதுதான் அந்த பணி மிகசிறப்பாக நடைபெறும். இது இவ்வுலகிற்கு உதவகூடிய ஒரு தேர்வாக இருக்கிறது. ஆனால் பரிசுத்த வேதாகமம் குறிப்பிடும் தேர்ச்சி இம்மைக்கும், மறுமைக்கும் உரியதாயிருக்கிறது. இந்த தேர்வு கிறிஸ்து இயேசுவுக்குள் நடைபெறுகிறது. இதைக்குறித்து பவுல் எழுதும்போது “எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்” என்று கொலோ.1:28–ல் குறிப்பிடுகிறார். ஒரு மனிதன் ஆவிக்குரிய வளர்ச்சியடைய கிறிஸ்துவையும், அவருடைய உபதேசத்தையும், முதலாவது அவனுக்கு அறிவித்து எல்லா ஞானத்தோடும் போதிக்க நாம்



பிரயாசம் எடுக்கவேண்டும். அப்பொழுது அந்த ஆத்மா கிறிஸ்து இயேசுவுக்குள் முழுவளர்ச்சியைக் கண்டடையும். அதைத் தவிர்த்துவிட்டு நம்முடைய சுய ஆலோசனைகளையோ, அல்லது சுயகருத்துக் களையோ அவர்களுக்கு போதிப்போம் என்றால் அவர்களை இரட்டிப்பான மரணத்தின் மகனாக மாற்றுகிறோம். ஆண்டவர் சீஷர்களுக்கு கடைசி கட்டளையைக் கொடுக்கும்போது “நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்” என்றார் (மத்.28:20). இதை கேட்ட சீஷர்கள் அந்தப்படியாகவே கிறிஸ்துவின் உபதேசத்திற்கு நேரே வழிநடத்தினார்கள். யூதர்கள் அடையாளத்தையும், கிரேக்கர் ஞானத்தையும், தேடக்கூடிய அந்நாட்களிலே, அவர்கள் கிறிஸ்துவின் கட்டளைகளை போதிப்பதில் மிகவும் கவனமாக இருந்தனர். அவர் சொல்லிய உபதேசங்களை ஒவ்வொருவருக்கும் பூரணமாக எடுத்துச் சொல்லி அவர்களை கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக நிறுத்த பிரயாசப்பட்டனர். மாணவர்களை, ஒரு ஆசிரியர் தேர்வுக்கு எப்படி ஆயத்தப்படுத்த பயிற்றுவிக்கிறாரோ, அதைப்போல கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் பண்மடங்கு முயற்சி எடுத்து ஒவ்வொருவரையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக நிறுத்தும்படி, அவரையும், அவருடைய உபதேசத்தையும் அறிவித்து, அவர்களுக்காக எப்பொழுதும் மன்றாட வேண்டும்.

ஒவ்வொருவரும் கிறிஸ்து இயேசுவுக்குள் வளர்ந்து தேர்ச்சியடைய வேண்டுமென்பது தேவனுடைய அநாதி தீர்மானமாயிருக்கிறது. “தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக, இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாக காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது” (எபே.3:9–11). தேவனுடைய அநந்த ஞானமானது

இப்பொழுது சபையின் மூலமாகவே அறிவிக்கப்பட்டு வருகிறது. பொதுவாக ஒரு மனிதன் தானாகவே வளர்ந்துவிட முடியாது. அவன் திருச்சபையோடு சேர்ந்து கர்த்தருக்குள் வளர்ச்சியடைய வேண்டும். வேதமும் அதையே போதிக்கிறது. சபைகூடிவருதலை விட்டுவிடாமல் ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லவேண்டும்.''இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது'' (கொலோ.1:13,14). உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்த பொல்லாத இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுவித்து, தமது குமாரனுடைய ராஜ்யம் (சபை) அதாவது கிறிஸ்துவின் சபையில் நம்மைச் சேர்த்துள்ளார். கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பின் நிச்சயம் நமக்கு கிடைத்துள்ளது. இதை அறியாத அநேகர் சுயமகிமையைத்தேட விரும்புகிறார்கள். பவுலைப்பாருங்கள் அவன் பிரசங்கிக்கும்போது ''நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்'' என்கிறார் (2கொரி.4:5). இன்று அநேக பிரிவினை சபையார்கள் எங்கு பார்த்தாலும் அவர்களுடைய பெயர் பிரஸ்தாபத்தையே விரும்புகிறார்கள். பத்திரிக்கையாக இருக்கட்டும், சுவரொட்டிகளாக இருக்கட்டும், சபை கூடுமிடமாக இருக்கட்டும், தொலைக்காட்சியாக இருக்கட்டும், தன்பெயர் வெளி வரவேண்டுமென கருதுகின்றனர். ஆனால் பவுலோ நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம் என்கிறார். நம்முடைய முயற்சியினாலோ, அல்லது நம்முடைய பக்தியினாலோ, இரக்கத்தினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை ''தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பித்தார். கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மிடத்தில் வைத்த தயவினாலே, தம்முடைய



கிருபையின் மகா மேன்மையான ஐசுவரியத்தை வருங்காலங்களில் விளங்கச் செய்வதற்காக கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல இது தேவனுடைய ஈவு (எபே.2:4–8). தேவன் நம்மை மீட்கும்படியாக எவ்வளவு பெரியதிட்டத்தை வைத்திருக்கிறார் பார்த்தீர்களா? கிறிஸ்து இயேசுவுக்குள் அவர் நம்மேல் வைத்த தயவினாலும், கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை உயிரோடு எழுப்பினதாலும் நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம். இது தேவனுடைய இரக்கம். கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்ட நாம் பல விதமான அந்நியபோதனைகளில் சிக்கிக்கொள்ளாமல் பரிசுத்தவேதாகமம் எதிர் பார்க்கிற வளர்ச்சியை உடையவர்களாக காணப்படவேண்டும். ''நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாகயிருக்கும்படியாக அப்படிச்செய்தார்'' என பவுல் எபேசு சபைக்கு எழுதுகிறார் (எபே.4:14,15). நாம் கிறிஸ்துவுக்குள் பிறக்கும்போது புதிதாய் பிறந்த குழந்தைகளாகவே இருக்கிறோம். அதேவேளையில் அப்படியே இருந்துவிடவும் கூடாது ஆவிக்குரிய வளர்ச்சியடையவேண்டும். ஆகையினாலே நாம் இனி குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்களுக்கு மிகவும் எச்சரிப்பாக இருக்கவேண்டும். இந்த விதமான எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருந்தபோதும் ஆதாமும் ஏவாளும் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டார்கள் என்று நாம் அறிகிறோம். இன்றைக்கும் இந்த விதமான போதனைகள் மக்களை வஞ்சித்துக்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட போதனைகளை கொடுக்கிறவர்களும் பிசாசினால் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாம் சாந்தத்தோடும், வணக்கத்தோடும், வேதவசனங்களை எடுத்துச்சொல்லி குருடாக்கப்பட்ட அவர்களுடைய மனக்கண்களை திறக்கவேண்டியுள்ளது. இன்றைய

கிறிஸ்தவர்களில் பலர் பெயருக்குத்தான் கிறிஸ்தவர்கள், ஆனால் வளர்ச்சி முழுவதும் உலகத்துக்கு ஒத்தாற்போல் இருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் நாம் வளர்ந்து கனிகொடுக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள்" என்று நமதாண்டவர் இயேசு சொல்கிறார் (யோவா.13:35). அன்பு, ஆவிக்குரிய கனிகளில் ஒன்று. இந்த அன்பு ஒருவனுக்குள் இருக்கும்போது அவன் கிறிஸ்துவினுடைய சீஷனாயிருக்கிறான். அன்பில்லாதவன் தேவனை அறியான். ஏனென்றால் தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவதிட்டத்தின்படி நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின. எல்லாம் புதிதாயின" என்ற 2கொரி.5:17–ன்படி ஒருவன் கிறிஸ்துவுக்குள் வந்தபிறகு அவன் புதுசிருஷ்டியாக மாற்றப்படுகிறான். ஆகையால் புதிதாய் பிறந்த ஒரு குழந்தையைப்போல அவன் திருவனசமாகிய கலங்கமில்லா ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும். பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின என்றால், பழைய சுபாவம், கெட்ட நடக்கை, மாய்மாலம், பக்தியில்லாமை எல்லாம் ஒழிந்து புதிதாக பிறந்த குழந்தையைப்போல மாற்றப்படுவது. இப்படி மாற்றப்பட்ட புது சிருஷ்டி கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படவேண்டும். "நீங்கள் கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களு மாயிருக்கவும் வேண்டுதல் செய்கிறேன்" என்கிறார் பவுல் (பிலி.1:11). ஒருவரும் கிறிஸ்துவுக்குள் வராமல் அவர்களாகவே ஆவிக்குரிய வளர்ச்சியடைய முடியாது. மேலும் பிதாவுக்கு (தேவனுக்கு) ஏற்றவர்களாக மாறவும் முடியாது. ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடும்போது "ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்கிறார் (யோவா.15:5). கிறிஸ்து இயேசுவுக்குள் வராமல் இரட்சிப்பு இல்லை, ஆசீர்வாதமுமில்லை. இவ்வுலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தேவனுடைய அநாதி தீர்மானங்களை தெரிந்து



கொள்ளவேண்டியது மிகஅவசியமானவைகளுக்கெல்லாம் மேலான ஒன்றாக இருக்கிறது. இதை ஒரு மனிதன் இவ்வுலகத்தில் அறியாது போவதை விட அவன் இவ்வுலகில் பிறவாதிருந்தால் நலமாயிருக்கும். மனிதன் எதை வேண்டுமானாலும் இழக்கலாம், ஆனால் அவன் தன்னை உண்டாக்கின தேவனையே இழந்துவிட்டால் அவனுக்கு லாபம் என்ன? ஒன்றுமேயில்லை. தேவன், கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை தெரிந்து கொள்ளும்படியாக அழைத்திருக்கிறார். "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தையப்பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்" என்கிறார் பவுல் (பிலி.3:14). நாமும் இந்த அழைப்பை ஏற்று கிறிஸ்து இயேசுவுக்குள் ஓடுவோம். அத்தோடு "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்" (எபே.3:16–19). பிதாவாகிய தேவன் உங்களை கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய செய்வாராக.

**கேள்வி நேரம்**

**இந்த விஷயத்தில் மனிதனுடைய தேர்வு பெய்யாகி விடுமா?**

ஆம், பொய்யாகி விடும். "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா.55:8). மேலும் கர்த்தர் சாமுவேல் தீர்க்கதரிசியினிடத்தில் பேசும்போது; "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1சாமு.16:7). மனிதன் முகத்தைப்பார்த்து தேர்வுசெய்வான். ஆனால் கர்த்தரோ அப்படியல்ல. ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்று அவருடைய குமாரன் இயேசுவின் மூலமே

நம்மை தெரிந்துகொள்கிறார். ஆகையால் அவரை சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். அவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார். இன்று நீங்களும் நானும் அவர் மூலமாகவே இரட்சிக்கப்பட முடியும். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து, இயேசுவுக்குள் தேர்ச்சியடையுங்கள்.

## 38. இருதயம்

## Heart

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இருதயம் – Heart. மனிதனுடைய சரீரத்தில் இருதயம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. தேவனாகிய கர்த்தர் மனிதனை நேர்த்தியாக சிருஷ்டித்து பாதுகாப்பான இடத்தில் இருதயத்தை அமைத்து இருக்கிறார். கர்த்தர் எல்லோருக்கும் நல்ல இருதயத்தைத்தான் கொடுத்திருக்கிறார். சில மனிதர்கள் மட்டுமே தன்னை உண்டாக்கின தேவனுக்கு முதலிடம் கொடுக்கின்றார்கள். பலர் தங்களுடைய இருதயத்தில் பொல்லாத பிசாசுக்கு இடங்கொடுத்து, தங்களை தாங்களே அழித்துக்கொள்ளுகிறார்கள். பரிசுத்த வேதம் இதைக்குறித்து குறிப்பிடும்போது, ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?'' என்ற கேள்வியை எழுப்புகிறது (எரே.17:9). மனிதன் மற்றொரு மனிதனுடைய முகத்தைத்தான் அறியமுடியும். ஆனால் இருதயத்தை அறியத்தக்கவர் தேவன் ஒருவரே. ''இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்'' என்று எரேமியா தீர்க்க தரிசிமூலம் உரைக்கிறார். ஒரு மனிதனுடைய இருதயம் ஆண்டொன்றுக்கு எந்தவித ஓய்வு இல்லாமல் 40 மில்லியன் தடவை துடிப்பதாக மருத்தவ ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டு உள்ளனர். இப்படி அற்புதவிதமாக உருவாக்கப்பட்ட இருதயத்தில், நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்கிறோமா?



அல்லது உலகத்திற்கு முதலிடம் கொடுக்கிறோமா? சற்று சிந்தித்து பார்ப்போம். ''மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை'' என நீதி.17:20–ல் வாசிக்கிறோம். ஒரு மனிதனுடைய இருதயம் எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான். துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திற்கு ஏற்ற காரியங்களை தன்னுடைய இருதயத்தில் சிந்திக்கிறான். நலமான காரியங்களை தன்னுடைய இருதயத்தில் சிந்தியான். முதலாவது ஒவ்வொருவரும் தன்னை உண்டாக்கின தேவனை நினைக்க வேண்டும். நாம் எப்படி வந்தோம், நாம் என்ன செய்கிறோம், நாம் எங்கே போவோம் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்குள்ளும் எழும்பவேண்டும். இதை சிந்திக்காது தன் இருதயத்தில் நினைக்கிறபடியெல்லாம் சுகபோகமாய் வாழ்ந்து திரிந்து தாறுமாறாய் ஓடுகிற பெண் ஒட்டகத்தைப் போல இருந்தால், அப்படிப்பட்ட மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை என்ற வசனத்தின்படி நன்மையைக் கண்டடையாமல் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவான்.

ஞானி சாலமோன் கூறுவதைக் கவனியுங்கள்: ''தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்'' (நீதி.28:26). நமக்கு என்ன தான் தெரியும் யோசித்துப்பாருங்கள். எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லுகிறவர்களை பார்த்து இருப்பீர்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஒன்றும் தெரியாது என்பதுதான் உண்மை. நாம் ஒன்றும் அறியாதவர்கள், நம்மில் நாமே மேட்டிமை கொண்டால் அது வீண். ஒரு தாலந்தை வாங்கினவன் தன் இருதயத்தின்படி எஜமானுக்கு உத்தரவு சொன்னான் அவனுடைய எஜமான் அவனை பொல்லாதவனும் சோம்பலுமான ஊழியக்காரனே என்றான். அதைப்போல, தன் இருதயத்தை நம்புகிறவனும் மூடனாயிருப்பான். ''என் மகனே என் வார்த்தைகளைக் கவனி, என் வசனங்களுக்கு உன் செவியைச்சாய் அவைகள் உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக. இவைகளைக் கண்டுபிடிக்கிவர்களுக்கு அவைகள் ஜீவனும், அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம். எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதினிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்'' (நீதி.4:20–23). இன்றைய மனிதர்கள் எவைகளைக் கவனிக்கவேண்டும், எவைகளுக்குச் செவிகொடுக்கவேண்டும், எவைகளைக்

கண்டுகொள்ளவேண்டும், எவைகளைக் காக்கவேண்டும் என்றில்லாமல் தேவையற்ற காரியங்களுக்குச் செவிகொடுத்தும், காணல் நீரைத் தேடியும், முட்டையிட்டு அவயம் காத்து குஞ்சுபொறிக்காமற்போகிற கௌதாரியைப்போல போகிறார்கள். இந்நிலைமாற வேண்டும் என்பதற்காகவே என் மகனே என் வார்த்தைகளைக் கவனி என்கிறார். அநேகர் வார்த்தைகளைக் கவனி என்றால் வருவது வரட்டும் என்பார்கள். வேதாகமத்தில் இல்லாத ஒரு கதை சொன்னால் மிக ஆவலாக கேட்பார்கள். கர்த்தருடைய வார்த்தைகளை கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின் படியே சொல்லாவிட்டால் அவனுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை என்று படிக்கிறோம். நீங்கள் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளைக் கருத்தாய் கவனிக்கவேண்டும். அவைகள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியத்தையும், மன தைரியத்தையும், உற்சாகத்தையும் கொண்டுவரும். இருதயத்தை எல்லாக் காவலோடும் காத்துக்கொள்ள வேண்டியது ஏன் அவசியமாயிருக்கிறது? ஏனென்றால், பிசாசானவன் இருதயத்தில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடுவான், வழியருகே விதைக்கப்பட்டவர்கள் வசனத்தை கேட்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் விசுவாசித்து இரட்சிக்கப்படாதபடிக்கு பிசாசானவன் வந்து அவ்வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்து எடுத்துப்போடுகிறான்'' (லூக்.8:12). பார்த்தீர்களா? வசனத்தை கேட்டு அதை இருதயத்துக்குள்ளே எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ளாத பட்சத்தில், பிசாசு அவ்வசனத்தை எடுத்துப்போடுவான். ஆனால் ''நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன் கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்'' என்று லூக்.8:15–ல் வாசிக்கிறோம். மலைப்பிரசங்கத்தில் நமது ஆண்டவர் இயேசு கூறுவதைக் கவனியுங்கள்: ''இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்'' என்றார் (மத்.5:8). ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு, எல்லாவிதமான அசுத்தத்தையும் களைந்து, இருதயத்தை சுத்தப்படுத்தும்போது அவன் பாக்கியவானாயிருப்பான். இருதயம் சுத்தமாயிருந்தால் சரீரம் முழுவதும் சுத்தமாயிருக்கும். இருதயம் பொல்லாததாயிருந்தால் சரீரம் முழுவதும்



அசுத்தமாயிருக்கும். ஏனென்றால் ''இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்சாட்சிகளும், தூஷணங்களும் புறப்பட்டு வரும்'' (மத்.15:19). இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். ஒரு மனிதன் நன்மையானாலும், தீமையானாலும் தன் இருதயத்திலே முதலாவது, சிந்திக்கிறான், திட்டமிடுகிறான். அதை நிறைவேற்ற பிரயாசப்படுகிறான். ''என் மகனே நீ செவி கொடுத்து ஞானமடைந்து, உன் இருதயத்தை நல்வழியிலே நடத்து'' (நீதி.23:19). ஒரு கப்பலை சுக்கானாலே திருப்புகிற பக்கமெல்லாம் அது போவதைப்போல, இருதயத்தை முழுமையாக கர்த்தருக்கு நேராக திருப்பும்போது அது சீர்ப்பட்டு, தேவனுடைய ஆலயமாக மாறுகிறது. பிரதான கட்டளையும் இதைத்தான் சொல்லுகிறது: ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழுஇருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுமனதோடும் அன்புகூருவாயாக'' (மத்.22:37). முழுமை என்று சொல்லும்போது அவருக்கு முதலிடம் கொடுப்பது, அவரைக்காட்டிலும் மற்றவைகளை அதிகம் நேசியாதிருப்பது, முழுமனதுடன் கொடுப்பது போன்றவைகள். இவ்விதமாக நாம் தேவனிடத்தில் முதலாவது அன்புகூரவேண்டும்.

மேலும், விசவாசம் இருதயத்திலிருந்தே வரவேண்டும் என வேதம் போதிக்கிறது. ''கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்தில் விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்'' (ரோம.10:9,10). நம்முடைய இருதயத்திலே கிறிஸ்து எனக்காக மரித்தார், பின்பு உயிர்த்தார் என்று விசுவாசித்தால் இரட்சிப்பு கிடைக்கும். பிலிப்பு மந்திரி சம்பவத்தை கவனித்துப்பாருங்கள்: மந்திரி, பிலிப்புவின் விசுவாசத்தைக் கண்டு; ''நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான்'' (அப்.8:37). அப்பொழுது இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள் பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவன் இரட்சிக்கப்பட்டு சந்தோஷத்தோடே தன் வழியே போனான். அதைப்போல நாம் தேவனை நோக்கி ஏறெடுக்கும் ஜெபமும் இருதயத்தில் இருந்தே

வரவேண்டும். அன்னாளை பாருங்கள்: ‘‘நான் கர்த்தருடைய சந்தியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்’’ என்றாள் (1சாமு.1:15). இப்படி இருதயத்தை ஊற்றி ஜெபிக்கும்போது தேவ ஆசீர்வாதத்தை நிச்சயம் பெறுவோம். தேவனுக்கு மறைவான பொருள் ஒன்றுமில்லை, அவர் நம்முடைய இருதயத்தை ஆராய்ந்து அறிகிற தேவனாயிருக்கிறார். அவருடைய சமுகத்திலே அன்னாளைப்போல இருதயத்தை ஊற்றி ஜெபியுங்கள். அதைப்போல நாம் தேவனை துதித்துப்பாடுவதும் இருதயத்திலிருந்தே வரவேண்டும். ‘‘உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி’’ என வாசிக்கிறோம் (கொலோ.3:16). உதட்டளவில் பாடுவது தேவனை மகிமைப்படுத்துவதாக இருக்காது. உயிரற்ற வாத்திய கருவிகளை களைந்து, இருதயத்திலிருந்து பக்தியுடன் பாடவேண்டும். பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் கட்டுண்டவர்களாக பக்தியுடன் இருதயத்திலிருந்து பாடும்போது தேவசமூகத்தில் கேட்கப்பட்டு சிறைச்சாலையின் கதவுகள் திரவுண்டன. அவ்விதமாக கருத்தோடும், பக்தியோடும் துதித்துப் பாடவேண்டும். ஆண்டவரும் அவருடைய சீஷர்களும் ஒலிவமலையில் அந்தப்படியாகவே ஸ்தோத்திரப்பாடலைப் பாடினார்கள். அதைப்போல காணிக்கை கொடுத்தலிலும் வெளிப்பிரகாரமான காணிக்கையை தேவன் அங்கிகரியார். இருதயத்திலிருந்து கொடுக்கவேண்டும். இரண்டு காசு போட்ட ஏழை விதவைப் பெண்ணை பார்த்த ஆண்டவர்: இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள் என்றார். ஏனென்றால் அவளோ தன் வறுமையிலிருந்து தன் ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் போட்டுவிட்டாள். மனிதன் முகத்தைப் பார்க்கிறான் ஆனால் தேவனோ இருதயத்தைப் பார்க்கிறார். ‘‘அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக் கடவன்’’ என்ற (2கொரி.9:7) வசனத்தின்படி மனதிலே அதாவது (இருதயத்திலே) தீர்மானித்தபடி கொடுக்க வேண்டும். மற்றவர்கள் பார்க்கவேண்டும் என்பதற்காக அல்ல. இருதயத்தில் நியமித்தபடி வரவுக்குத் தக்கதாக கொடுக்கவேண்டும். பிரியமான நேயரே காலம் கடந்து போய்க்கொண்டு இருக்கிறது, உங்கள் இருதயம் எப்படியிருக்கிறது? சற்று யோசித்துப்பாருங்கள்! இன்னும் ஆண்டவருக்கு உங்கள் இருதயத்தில் இடம்



கொடுக்கவில்லையென்றால், இன்றே முழுமையாக ஒப்புக்கொடுங்கள். ‘‘இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில், கோபமூட்டுதலில் நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்’’ என்று எபிரெய ஆசான் சொல்லியதைப்போல உங்கள் இருதயத்தைக் கடினப்படத்தாதிருங்கள் (எபி.3:15). மேலும் ‘‘ஜீவனுள்ள தேவனை விட்டு விலகுவதற்கேதுவான அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களில் ஒருவனுக்குள்ளும் இராபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கள்’’ (எபி.3:12). இச்செய்தியானது உங்கள் இருதயத்திற்கு ஏற்றதாயிருக்கும் என்று நம்புகிறோம். இயேசு கிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.

### கேள்வி நேரம்

**மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் எப்படிப்பட்டவர்கள்?**

சரீர உறுப்புகளில் சில உறுப்புகளை தேவன் இரண்டு இரண்டாக உண்டாக்கியிருக்கிறார். ஆனால் இருதயத்தை மட்டும் ஒரே இருதயமாக படைத்திருக்கிறார். மனிதன் ஒன்றாயிருக்கவேண்டும், ஒரே காரியத்தை சிந்திக்கவேண்டும், ஒன்றான ஆண்டவருக்கு அந்த இருதயத்தை முழுமையுமாக கொடுக்கவேண்டும் என்பதற்காகவே. இந்த தேவன் மாறாதவராயிருக்கிறார், அவருடைய வாக்குத்தத்தங்கள் மாறாதவைகளாயிருக்கிறது, இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார். ஆனால் மனிதர்களில் அநேகர் மாறிமாறி பேசுவதை நாம் காண்கிறோம். இப்படிப்பட்டவர்கள் மேல் தேவன் பிரியமாயிருப்பதில்லை. உத்தம மார்க்கத்தாரோ அவருக்குப் பிரியமானவர்கள். ‘‘மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு அருவருப்பானவர்கள்’’ என்று நீதி.11:20–ல் வாசிக்கிறோம். மேலும் மாறுபாடான இருதயமுள்ளவன் நன்மையைக் கண்டடைவதில்லை. நீங்கள் எப்படிப்பட்ட இருயதமுடையவர்கள்? உங்கள் இருதயம் நல்லவையாக இருக்கட்டும்.நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

# 3 9 . ஆ கா த வை க ள்

## Bad Things

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆகாதவைகள் – Bad Things. ஆகாதவைகளைக் குறித்துப் பேசுவதற்கு அநேகர் விரும்பமாட்டார்கள். காரணம்! ஆகாதவைகளைப் பேசி என்ன ஆகப்போகிறது, ஆக வேண்டியதைப் பார்ப்போம் என்பார்கள், உண்மைதான். ஆனால், ஆகாதவைகளாகப் போய்விடாததற்கு முன்பு அதைக்குறித்து சிந்திப்பது நல்லதுதான். ஆகாதவைகளின் முடிவை குறித்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடும்போது: ‘‘பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. அது நிறைந்த போது, அதைக் கரையில் இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள். இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும் தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து, அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்’’ (மத்.13:47–50). ஆகாதவர்களின் முடிவைக்குறித்து, அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார். கற்பனைகளைப் பெற்றுக்கொண்ட அநேக இஸ்ரவேலர்கள் கற்பனையின்படி நடக்க தவறிவிட்டனர். தாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று சொல்லிக்கொண்டனர் ஆனால் ஆபிரகாமின் கிரியைகள் இவர்களிடம் காணப்படவில்லை. ஆகையால், இயேசுவுக்கு முன்னோடியாக வந்த யோவான்ஸ்நானகன்: ‘‘மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது என்று பிரசங்கம் பண்ணினான்’’ மத்.3:2–4:17 வரை உள்ள வசனங்களில் இதை வாசிக்கிறோம். இங்கு பரலோகராஜ்யமாகிய கர்த்தருடைய சபையைப் பற்றி பிரசங்கிக்க ஆரம்பித்தான். கிறிஸ்துவின் உயிர்தெழுதலுக்கு பின்பு வந்த



முதல் பெந்தெகொஸ்தே நாள் அன்று உருவாக்கப்பட்டதுதான் அவருடைய சபை. ‘இச்சபையை பாதளத்தின் வாசல்கள் மேற்கொள்ளுவதில்லை’. சபையானது உலகத்திலே பிரசங்கிக்கப்பட்டு சகல ஜனங்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது. வலையில் மீன் நிறைந்தவுடன் அதை இழுத்து, உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவார்கள். அழைக்கப்பட்டவர்கள் அநேகர் தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ சிலர். ஆகையால் ‘‘எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்று நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்’’ என்கிறார் பேதுரு (அப்.10:35). உலகத்தின் முடிவிலே தேவன் நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து அக்கினிச் சூளையிலே போடுவார். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். எனக்கு அன்பான சகோதரா! உன் நிலைமை எப்படி உள்ளது? நீ சபையாகிய வலைக்குள்ளே எப்படிப்பட்ட ஆத்துமாவாக உள்ளாய், நீ ஆகாத மீனைப்போல இருந்தாயானால் உன் நிலைமை என்னவாகும் என்பதை சிந்தித்துப்பார்! உன்னை மாற்றியமைத்துக் கொள்ள இதுவே சந்தர்ப்பம். உன் காலத்துக்குள்ளே உன்னை நீ சரி செய்துகொள். நாளையதினம் நம்முடையதல்ல இன்றே இரட்சணியநாள். ‘‘மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லத்தொடங்காதிருங்கள்’’ என்று யோவான் குறிப்பிடுகிறார் (லூக்.3:8). இன்றைக்கு அநேகர் இப்படித்தான் என் தாத்தா ஒரு போதகர், நாங்கள் யாவரும் ஆதி முதல் கிறிஸ்தவர்கள், எங்கள் பரம்பரையே ஆண்டவருக்குச் சேவை செய்கிறது என்று சொல்லி ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுக்க மறுக்கிறார்கள். பிரியமானவர்களே, நீங்கள் இப்படியே சொல்லி ஆகாதவைகளைப்போல எறியுண்டு போய்விடாதிருங்கள்.

இன்றைய நாட்களில் ஒரு சில கிறிஸ்தவ சபைகள் ஆள்சேர்ப்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறது. மனந்திரும்புகிறார்களோ, இல்லையோ அவர்களை முதலாவது ஞானஸ்நானப்படுத்திவிட்டு உற்சாக வார்த்தைகளை சொல்லிவிட்டு, ஒரு ஆத்துமாவை கிறிஸ்துவுக்குள் கொண்டு வந்து விட்டோம் என்ற சுயதிருப்தியோடு சென்று விடுகிறார்கள்.

ஒரு செடி நட்டுவிட்டால் அதுதானாய் கனிகொடாது. முதலாவது கிறிஸ்துவிலிருந்து வளர்ந்து, கொடிகளாய் சென்று கனிகொடுக்க வேண்டும். அதுவே உயர்குலைகளைக் கொடுக்க முடியும். எப்படியென்றால், கிறிஸ்துவே செடியாக இருக்கிறார் நாம் அனைவரும் கொடிகளாயிருக்கிறோம். "அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச்செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை" (லூக்.6:44). இப்படியிருக்க இன்று அநேகர் முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறோம், நெருஞ்சிச்செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறோம் என்று சொல்லி, மனந்திரும்பாமல் பாவத்தில் நிலைத்திருக்கிற ஆத்துமாக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து ஆகாத ஆத்துமாக்களால் சபையை நிரப்புகிறார்கள். ஆண்டவருடைய பிரசங்கத்தின் முதல் வசனமே 'மனந்திரும்புங்கள் பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது' என்பதே. அதைப்போல பேதுருவின் முதல் பிரசங்கம் 'நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்' என்பதே. இவ்வசனத்தின்படி மனந்திரும்பாத ஒருவரின் முடிவு என்னவாகும்? ஊழியனே! நீ கர்த்தருக்கு ஊழியம் செய்கிறாயா? அல்லது மனிதர்களை பிரியப்படுத்தும்படி ஊழியம் செய்கிறாயா? சற்று சிந்தித்துப்பார்! உலகத்தின் முடிவிலே ஆகாதவர்களாய்போகும் ஆத்துமாக்களை நீ இன்று அலைந்துதிரிந்து சேர்த்துக்கொண்டு வருகிறாயா? நல்லவைகளை சேர்க்கப்பிரயாசப்படு, ஆகாதவைகளை கடிந்துகொண்டு, கண்டனம்பண்ணி புத்திசொல்லி உன் ஊழியத்தை நிறைவேற்ற பிரயாசப்படு. "அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும்; நாளானது அதைவிளங்கப்பண்ணும். ஏனெனில் அது அக்கினியினாலே வெளிப்படுத்தப்படும்; அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின்மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனல், அவன் நஷ்டமடைவான்; அவனோ இரட்சிக்கப்படுவான்; அதுவும் அக்கினியிலகப்பட்டு தப்பினதுபோலிருக்கும்" (1கொ.3:13–15). உன்னுடைய வேலைப்பாடு எத்தகையது? நல்லது உத்தமும்



உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்று கர்த்தர் உன்னை அழைக்கத்தக்கதாக உன்வேலையானது இருக்கட்டும். ஆகாதவைகளை சேர்த்து நீயும் ஆகாதவைகளாய் போய்விடாதே. அவிசுவாசிகளோடு இருக்க விரும்பாதே. உன் ஊழியத்தை நிறைவேற்ற பிரயாசப்படு. நம்முற்பிதாக்களை பார்த்ததேவன்: "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச் செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?" என்று எரே.2:21–ல் ஏரேமியா தீர்க்கதரிசியைக் கொண்டு தமது ஜனமாகிய இஸ்ரவேலரை எச்சரித்தார். தேவன் மனிதனை தமது சாயலில் சிருஷ்டித்து சகலத்தையும் ஆண்டு கொள்ளும்படியான அதிகாரத்தையும் கொடுத்தார். மனிதன் சகலவற்றைப் பார்க்கிலும் விசேஷித்தவனாக படைக்கப்பட்டிருந்தான். ஆகையால் தான் நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச் செடியாக நாட்டினேன் என்கிறார். மனிதனோ! ஆதாம் முதல் இன்று வரை தேவ சித்தத்தை அறியாது இச்சைகளுக்கு இடங்கொடுத்து தேவனை விட்டு வழி விலகி காட்டுத் திராட்சச் செடியைப் போல ஆகாத கொடிகளாய் மாறிக்கொண்டிருக்கிறான். தேவனுக்குத்தான் எவ்வளவு மனவேதனையிருக்கும்! சற்று யோசித்துப் பாருங்கள். நாம் விலையுயர்ந்த பூச்செடியை வாங்கி நம் வீட்டு முன் வைத்து, பல வருடங்களாக பராமரித்து, அது ஒரு காட்டு செடியைப்போல காணப்பட்டால் நமக்கு எவ்வளவு தூரம் எரிச்சல் உண்டாகும்! நான் பட்ட பிரயாசமெல்லாம் வீணாய்ப்போயிற்றே என்று கவலைகொள்வோம் அல்லவா? அதைப்போலவே ஆண்டவர் நம்மீது கவலைகொள்கிறார். தேவனுடைய சித்தத்தை அறிந்து, அவர் விரும்புகிறபடி கனிகொடுக்கிற கிறிஸ்தவர்களாக மாறவேண்டும். பாவத்திலே நிலைத்திருந்து, அநேக, தான தர்மங்களை செய்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று சொல்லி நம்மைநாமே ஏமாற்றிக் கொண்டால், அது பாவநிவர்த்தியாகி விடாது. நண்பா, "நீ உன்னை உவர்மண்ணினால் கழுவி, அதிக சவுக்காரத்தை கையாடினாலும் உன் அக்கிரமத்தின் கறைகள் எனக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" (எரே.2:22). சர்வலோகத்தின் பாவத்தையும் சுமந்துதீர்க்கிறவர் தேவ ஆட்டுக்குட்டியாகிய 'இயேசு ஒருவரே' அவராலேயன்றி வேறொருவராலும்

இரட்சிப்பு இல்லை. நாம் அவரிடம் திரும்பி, அவர் கொடுக்கும் வார்த்தைகளைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பெறும் போது இரட்சிப்பைப் பெறுவோம். அவருடைய இரத்தமே நம்மை பாவமற கழுவுகிறதாகயிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளாது உங்கள் சுயமுயற்சியில் ஈடுபட்டால் பிரயோஜனமில்லை. நீங்கள் அதிக சவுக்காரத்தைக் கையாடினாலும் உங்கள் அக்கிரமத்தின் கறைகள் ஆண்டவருக்கு முன்பாக இருக்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். ‘‘உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது’’ (மத்.5:13). பூமியிலே உப்பாயிருக்க வேண்டிய நீங்கள் சாரமற்றுப் போகாதிருங்கள்.

நீங்கள் ஒரு விசுவாசியாக, போதகராக, சபை மூப்பராக, உதவிக்காரராக அல்லது சபையில் மற்ற பணிகளில் ஈடுபடுபவராக இருக்கலாம். யாராக இருந்தாலும் பரவாயில்லை. உங்களுடைய அழைப்பிலே உறுதியாக இருந்துகொண்டு அதற்கு பாத்திரவானாக நடந்துகொள்ளுங்கள். பாவத்தை வெறுத்து நீதியை பற்றிக்கொண்டு கிறிஸ்துவை பின்தொடருங்கள். பாவம் ஒருநாளில் அழிக்கப்படும். அந்த நாள் மிகசமீபமாயிருக்கிறது. ‘‘களைகளைச் சேர்த்து அக்கினியால் சுட்டெரிக்கிறது போல இவ்வுலகத்தின் முடிவிலே நடக்கும்’’ மத்.13:40–ம் வசனப்படி ஆகாதவைகளை விதைத்த பிசாசையும், அவனுடைய புத்திரராகிய களைகளையும் தேவன் சுட்டெரிப்பார். நீங்கள் இப்பூமியில் ஆகாதவைகளாக இருந்து கொண்டு அழுகையும் பற்கடிப்புமான இடத்திற்கு போகப்போகிறீர்களா? அல்லது கிறிஸ்துவின் வார்த்தைகளைக் கேட்டு கீழ்ப்படிந்து அவைகளின்படி நடந்து நீதிமான்களாக பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப்போலப் பிரகாசிக்கப்போகிறீர்களா? மோசேயைப் பாருங்கள் ‘‘அநித்தியமான பாவசந்தோஷங்களை அநுபவிப்பதைப் பார்க்கிலும் தேவனுடைய ஜனங்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்து கொண்டு இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து எகிப்திலுள்ள பொக்கிஷங்களிலும் கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தையை அதிக பாக்கியமென்று எண்ணினான்’’ (எபி.11:25,26). இந்த மோசேயைப் போல



உங்களை நெருக்கி நிற்கிற அநித்தியமான, ஆகாத பாவசந்தோஷங்களை தள்ளி விட்டு இனிவரும் பலனாகிய நித்திய ஜீவனை நோக்கி உங்கள் விசுவாச ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுங்கள். ஆகாதவைகளாய் போகாதிருங்கள்.

**கேள்வி நேரம்**

**ஆகாதவன் என்று கர்த்தர் மனிதனை நிராகரிப்பாரா?**

‘‘பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்’’ என்று 1தீமோ.1:15–ல் வாசிக்கிறோம். தம்மிடத்தில் வருகிறவர்களை கர்த்தர் ஒருபோதும் புறம்பே தள்ளுவதில்லை. அதேவேளையில், ‘‘ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்’’ என்கிறார் எபிரெய ஆசிரியர் (எபி.6:4–6). அதே ஆசான் மேலும் ஒரு உதாரணத்தை சொல்லுகிறார் ‘‘ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்திற்காகத் தன்சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போல சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்’’ (எபி.12:16,17). கழுவப்பட்ட ஒரு பாவி பாவத்திலே நீடித்திருப்பானேயானால், அவனை கர்த்தர் நிராகரிப்பார்.

## 40. நீங்கள் உங்களை எதற்குப் பழக்குவிக்கிறீர்கள்?

## For What you train up yourself?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நற்கிரியைகளைச் செய்யும் நமது ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில்

வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். நீங்கள் உங்களை எதற்குப் பழக்குவிக்கிறீர்கள்? For What you train up yourself? நற்காரியங்களுக்கா அல்லது துர்ச்செய்கைகளுக்கா? நற்காரியங்களுக்கு உங்களை பழக்குவித்தால் முடிவில் நித்திய ஜீவனைப் பெறுவீர்கள். துர்ச்செய்கைகளுக்குளுக்கு உங்களை பழக்குவித்தால் முடிவிலே அழிவாகிய நித்திய தண்டனையை அடைவீர்கள். இதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. இன்றைய மானிட வர்க்கம் மாம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து விபசாரத்திற்கும், வேசித்தனத்திற்கும், ஆடம்பரவாழ்க்கைக்கும் மனதின் இச்சைகளுக்கும் தங்களைப் பழக்குவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஓ! தேவனுடைய மனிதனே, நீயோ ''சகலதுர்குணத்தையும், சகலவித கபடத்தையும், வஞ்சகங்களையும், பொறாமைகளையும், சகலவித புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு, நீங்கள் வளரும்படி புதிதாய் பிறந்த குழந்தையைப்போல திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்'' என 1பேது.2:2,3–ல் வாசிக்கிறோம். புதிதாய் பிறந்த குழந்தைகள் எப்படி பாலின்மேல் வாஞ்சையாயிருக்கிறதோ அதைப்போல கிறிஸ்துவுக்குள் பிறந்த ஒவ்வொருவரும் களங்கமில்லா திருவசனத்தின்மேல் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அப்படி வசனத்தின்மேல் வாஞ்சையாயிருக்கும்போது ஆவிக்குரிய வளர்ச்சியை பெறமுடியும். மாம்சத்திற்கு விரோதமாக எழும்பக்கூடிய துர்இச்சைகளை ஜெயிக்கமுடியும். உங்களுக்கு அனுதினமும் வேதம் வாசிக்கும் பழக்கமுண்டா? அப்படியில்லையேல் உங்களைப் பழக்கப்படுத்திக்கொள்ளுங்கள். எங்கே, வேதாகமத்தை எடுத்தாலே தூக்கம் தான் வருகிறது என்கிறீர்களா? ஆம், அநேகர் இப்படித்தான் சொல்லுகிறார்கள். நமது சரீரபலவீனங்களை நாமே மாற்றியமைக்காவிட்டால் வேறு யாரால் முடியும்? நாம் நீச்சல் பழகவும், சைக்கிள் ஓட்டவும் நம்மைப் பழக்குவிக்கும்போது எவ்வளவோ கஷ்டப்படுகிறோம். அப்பொழுது எனக்கு தூக்கம் வருகிறது என்று சொல்லுகிறோமா? எப்படியாவது நீச்சல் பழகிவிடவேண்டும், சைக்கிள் ஓட்டியாக வேண்டும் என்ற வாஞ்சையில் இரவு பகலாக விழித்திருந்து கற்றுக்கொண்டு முடிவில் எனக்கு நன்றாக நீச்சல் தெரியும், சைக்கிள் மிகவும்



நன்றாக ஓட்டுவேன் என்று சொல்லிக்கொள்கிறோம். நம்முடைய வாழ்வில் ஒரு விதமான திருப்தி ஏற்படுகிறது. மனிதனுக்கு இரண்டு காரியங்கள் தெரிந்திருக்கவேண்டும். ஒன்று நீச்சல் மற்றொன்று சைக்கிள் ஓட்ட தெரிந்திருக்கவேண்டும். இந்த இரண்டையும் என் வாழ்வில் கற்றுவிட்டேன் என்ற மனநிறைவு ஏற்படுகிறது. எனக்கு அன்பானவர்களே, இந்தவிதமான மனநிறைவை எப்பொழுது பெற்றுக்கொள்கிறோம் முறைப்படி பழகியவுடன் அடைகிறோம். அதைப்போல இரவு பகலாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். தாவீது என்ற அரசன் தமது சங்கீதத்தில் இப்படியாக குறிப்பிடுகிறான் ''துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும், கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய்நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பான்; அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்'' (சங்.1:1–3). இந்த அரசன் இந்தவிதமாக கர்த்தருடைய வேதத்தில் தியனமாயிருந்து அநேக நன்மைகளை பெற்று அனுபவித்தவன். இன்றைக்கு நீங்கள் இந்தவிதமாக இரவுபகலாக வேதாகமத்தை ஆராய்ந்து படித்து, அதன்படி நடக்க உங்களை பழக்குவித்துக்கொள்வீர்கள் என்றால் நீங்கள் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப்போலிருப்பீர்கள். நீங்கள் செய்வதெல்லாவற்றையும் கர்த்தர் வாய்க்கச்செய்வார். உங்களை வேதத்தின் வழியே நடக்க பழக்குவிப்பீர்களா? அதற்காக காலத்தை கடத்தாதபடி இன்றே அந்த வேளையை செய்யுங்கள்.

உங்களுக்கு வாரந்தோறும் சபை ஆராதனைக்கு போகும் பழக்கமுண்டா? அப்படியில்லையென்றால் வாரந்தோறும் சபைக்கு போகும் பழக்கத்தை முதலாவது ஏற்படுத்துங்கள். அது அநேக நன்மைகளை உங்கள் வாழ்வில் கொண்டுவரும். இதனால் ஒன்று தேவனுடைய கட்டளையை நிறைவேற்றுகிறீர்கள். மற்றொன்று உங்களுடைய வாழ்க்கையில் எல்லையில்லா மகிழ்ச்சியை பெறுவீர்கள். அநேகருடைய கேள்வி சபைக்கு

வாரந்தோறும் போகவேண்டும் என்று எங்காவது வேதத்தில் சொல்லியிருக்கிறதா? ஆம், சொல்லியிருக்கிது. எபிரெய ஆசான் சொல்லும்போது; ‘‘சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்’’ என்று குறிப்பிடுகிறார் (எபி.10:25). முதல் நூற்றாண்டு சபையார் சபைகூடிவருதை விட்டுவிடாதிருந்தனர். அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தனர். வாரத்தின் முதல் நாளிலே சபை கூடிவந்திருக்கும்போது பவுல் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தான் என்று அப்.20:7–ல் வாசிக்கிறோம். ஆக, சபையாக கூடிவரவேண்டியது மிக அவசியம் என்பதை புரிந்துகொள்கிறோம். நமது ஆண்டவர் இயேசுவும் இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்கிறார். நாம் கூடிவருவது அவருடைய நாமத்தினாலே கூடிவரவேண்டும். அவருடைய நாமமே நம்மை ஒன்றுசேர்க்கிறது. அவருடைய நாமத்திலே நாம் இரட்சிக்கப்படுகிறோம். அவருடைய இரத்தமே நம்மை பாவமறகழுவுகிறது. இந்த விதமாக நம்மை காப்பாற்றின அந்த நாமத்தினாலே கூடிவருகிற சபைக்கு போகும்படி உங்களை பழக்குவிக்கிறீர்களா? அப்படியில்லையேல் உங்களைப் பழக்குவித்துக்கொள்ளுங்கள். எங்கே, சபைக்குப்போனால் பிரசங்கியார் என்னைத்தான் சாடுகிறார் என்கிறீர்களா? அநேகருடைய எண்ணமும் இப்படித்தான் இருக்கிறது. அவர் உங்களை சாடவில்லை வேதாகமத்தை எடுத்துப்போதிக்கிறார். அவர் எடுத்துப்போதிக்கக்கூடிய வசனம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் என்பதை நீங்கள் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். பொதுவாக பட்டயத்தை எடுத்து வெட்டுகிறவர்கள் முதலாவது தம்பக்கம் இழுப்பார்கள் பின்பு தான் எதிர்பக்கம் இருக்கும் பொருளை வெட்டுவார்கள். அதைப்போல முதலாவது வேதவசனமாகிய பட்டயத்தை எடுத்து பிரசங்கிப்பவர்களை அது தாக்குகிறது பின்பு எதிர் அமர்ந்துஇருப்பவர்களை தாக்குகிறது. பிரசங்கிக்கக்கூடிய அவருக்கும் அந்த வசனம்



பொருந்தக்கூடியதாக இருக்கிறது. எதற்கெடுத்தாலும் அவர் என்னைத்தான் சொல்லுகிறார் என்ற பேச்சைவிட்டுவிடுங்கள். கர்த்தருடைய வார்த்தை நம்மை சரிசெய்கிறது என்று அறிந்து அதற்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். பேதுருவுடைய பிரசங்கத்தை கேட்ட ஜனங்கள் இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள் (அப்.2:37). இப்படியாக வசனத்தினாலே குத்தப்பட்ட அவர்கள் மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று 3000பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட்டார்கள். எனக்கு அன்பான சகோதரனே சகோதரியே உன்னைக் குற்றப்படுத்தவேண்டும் என்று எந்த ஒரு போதகனும் போதிக்க மாட்டான் அதற்கு ஆவியானவரும் அனுமதிகொடுக்கமாட்டார். ‘‘வேதவாக்கியங்கள் எல்லாம் தேவஆவியினாலே அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும் சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது’’ என்று 2தீமோ.3:16,17–ல் வாசிக்கிறோம். வேதாகமத்தை எப்பக்கம் திறந்து படித்தாலும் அது நம்மைச் சரிசெய்யக் கூடியதாக இருக்கிறது. உதாரணத்திற்கு பாருங்கள்: ‘‘கனியற்ற அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் அவைகளைக் கடிந்து கொள்ளுங்கள்’’ என இவ்வசனம் நம்மைப் பார்த்து எச்சரிக்கிறது. ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? அந்தகார கிரியைகளுக்கு உடன்படாமல் ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்கவேண்டும். இது பிதாவாகிய தேவனுடைய விருப்பமாயிருக்கிறது. அப்படி கனிகொடுக்கும்போது அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி அதைச்சுற்றிலுங்கொத்தி எருப்போடுவார்.

‘‘நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து சுபாவத்தினாலே மற்றவர்களைப் போல கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்’’ (எபே.2:3). எடுத்துக்காட்டாக முன்னே மாம்சத்திற்கு அடிமைப்பட்டு இருந்தநாட்களிலே குடிபழக்கத்திற்கு

அடிமையாக இருந்தாக வைத்துக்கொள்ளுங்கள். இப்பொழுதும் அப்படியே இருக்கலாமா? கூடாதே. முன்னே நாம் மாம்சத்திற்கு அடிமையானவர்கள். மாம்சம் விரும்பினவைகளைச் செய்து கோபாக்கினையின் பிள்ளைகளாக அதாவது தேவனுக்கு சத்துருக்களாக இருந்தோம். இப்பொழுது நீதிக்கு அடிமையானவர்கள். ஆகையால் "தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2கொரி.10:5). சிறைப்படுத்துதல் என்பது நமது மாம்சத்திலே எழும்புகிற மேட்மையான எண்ணங்களை மேற்கொள்வது. எப்படி மேற்கொள்ளமுடியும் என்று கேட்கிறீர்கள்? முதலாவது நம்மை நாமே அடிமைகளாக ஒப்புக்கொடுக்க வேண்டும். பவுல் தன்னைக்குறித்து சொல்லும்போது; "நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்" என்று கொரிந்துசபையாருக்கு எழுதுகிறார் (1கொரி.9:19). ஒரு கிறிஸ்தவன் முதலாவது நான் என்ற அகம்பாவத்தை தள்ளி எல்லாருக்கும் எல்லாமாக மாறவேண்டும். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் என்ற பவுலின் வார்த்தையின்படி மனத்தாழ்மையை அணிந்துகொண்டு, தேவனுக்கு முதலிடம் கொடுத்து அவைகளை மேற்கொள்ளவேண்டும். ஆகையால் எனக்கு அன்பானவர்களே, மாம்சத்தில் எழும்புகிறதான எல்லாவிதமான மேட்டிமைகளையும் அழித்துப்போட்டு தேவனுக்கு முதலிடம் கொடுக்க உங்களை பழக்குவியுங்கள். நல்ல பழக்கவழக்கங்கள் உங்களுடைய வாழ்க்கையில் நல்ல கனிகளைக் கொண்டுவரும். கெட்ட பழக்க வழக்கங்கள் உங்களுடைய வாழ்க்கையை கெடுத்துப்போடும். உங்களை நற்கிரியைகளுக்கு பழக்குவிக்கும்படி ஒப்புக்கொடுங்கள் நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**கேள்வி நேரம்**

**மனிதனுக்கு எந்த ஒரு பழக்கமும் பிறவியிலே வருகிறதா அல்லது இடைப்பட்ட காலங்களில் வருகிறதா?**



பழக்கவழக்கங்கள் ஒரு மனிதனுடைய வளர்ச்சிப்பாதையில் ஏற்படுகின்ற ஒன்று. அவனுடைய இருப்பிடம், சுற்றுச்சூழல், குடும்பம், நண்பர்கள் இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். இவைகளினால் அவனுடைய பழக்கவழக்கங்கள் மாறுபடுகிறது, புதிதாகவும் அநேக பழக்கத்தைக் கற்றுக்கொள்ளவும் செய்கிறான். பரிசுத்த வேதாகமம் ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்குகிறது. பரிசுத்தத்திற்கு நேரே அவனை வழிநடத்துகிறது. பரிசுத்த சிந்தை அவனுக்குள் ஏற்படுகிறது. அவன் சமுதாயத்தில் நல்ல காரியங்களை செய்யக்கூடிய மனிதனாக மாற்றப்படுகிறான். இது அவனது இடைப்பட்ட காலங்களில் ஏற்படுகிற ஒரு நிகழ்வு. குடிகாரருக்கு பிறந்த குழந்தை நல்ல பிள்ளையாக மாற்றப்படுவதை நாம் காண்கிறோம். குடிகாரருடைய பிள்ளை ஒரு குடிகாரனாகவே போய்விடுவதில்லை. அவன் இடைப்பட்ட காலங்களில் அதாவது வளர்ச்சிப்பாதையில் சரியானதை தேர்வுசெய்கிறான். அவன் சரியானதை தேர்வு செய்ய பரிசுத்த வேதாகமம் அவனுக்கு உதவுகிறது. சாலையோரங்களில் வேலை நடந்து கொண்டிருந்தால் மாற்றுப்பாதையில் செல்லவும் என்ற ஒரு எச்சரிக்கை போர்டு வைக்கப்பட்டிருப்பதை பார்த்திருப்பீர்கள். அதைப்போல வேதாகமம் ஒரு எச்சரிக்கை போர்டாக இருக்கிறது அதைக்கவனித்து செல்லுங்கள். அப்பொழுது போய்சேரவேண்டிய இடத்திற்கு பத்திரமாகபோய்சேருவீர்கள்.

## 41. தேவனோடே ஒப்புரவாகுங்கள்
## Be ye reconciled to God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தேவனுக்கும் மனிதருக்கும் மத்தியஸ்தராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். தேவனோடே ஒப்புரவாகுங்கள் – Be ye reconciled to God. பாவத்தின் விளைவாக மனிதன் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான். பாவம் மனிதனுடைய இச்சையினால் அவனை ஆண்டுகொண்டது. தேவனாகிய கர்த்தர் பாவம் செய்த மனிதனை அப்படியே விட்டுவிடாமல், பாவத்திலிருந்து மீட்டு, அவனை தம்மோடு

ஒப்புரவாக்கிக் கொள்ள அவருக்கு பிரியமாயிற்று. ''அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்'' என பவுல் கொரிந்துசபைக்கு எழுதுகிறார் (2கொ.5:19). இந்த ஒப்புரவாகுதலின் உபதேசம் என்ன என்பதை நாம் தெரிந்துகொள்ளவேண்டும். நாம் அதைதெரிந்துகொள்ளாமல் தேவனோடு ஒப்புரவாக முடியாது. ''தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்'' (ஆதி.2:7). இப்படி தேவனால் அவரது சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதன் தன் இச்சையினால் பாவம் செய்து தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டான் என்பதை நாம் எல்லோரும் நன்கு அறிவோம். இங்கே தேவசாயலில் உண்டாக்கப்பட்ட மனிதனை பிரித்தது பாவம் என்ற பிசாசு. இந்த பாவத்தை முழுவதுமாக போக்கிடவும், தம்மோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக உலகத்தாருடைய பாவத்தை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள் அவர்களை தமக்கு ஒப்புரவாக்கிக்கொள்ள இயேசுவை பாவத்தைப்போக்கும் பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அநேகருக்கு இது சரிவர புரிவதில்லை. நம்முடைய பாவத்தைப்போக்க ஏன் இயேசுவை சிலுவையில் ஒப்புக்கொடுக்கவேண்டும்? என நினைக்கின்றனர். ''நியாயப்பிரமாணத் தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' என்று எபி.8:22–ல் வாசிக்கிறோம். ஆகையால் பாவத்தில் வீழ்ந்த நம்மை அவருடைய குமாரனுடைய பரிசுத்த இரத்தம் கொண்டு தம்மோடு ஒப்புரவாக்கினார். நாம் தேவனோடு ஒப்புரவாக ஒரு வழிதேவை அந்த வழியை அவருடைய குமாரன் மூலமாக ஏற்படுத்தியுள்ளார். நம்முடைய முற்பிதாக்களின் காலத்தில் தமக்கு விரோதமாக பாவம் செய்த இஸ்ரவேல் மக்களை காப்பாற்ற கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஒரு கொள்ளிவாய்ச் சர்ப்பத்தின் உருவத்தைச் செய்து, அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவை; கடிக்கப்பட்டவன் எவனோ அவன் அதை நோக்கிப் பார்த்தால் பிழைப்பான் என்றார். அப்படி என்ன பாவம் செய்தார்கள் என்று நீங்கள் கேட்கலாம் ''தேவனுக்கும் மோசேக்கும்



விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வெறுப்பாயிருக்கிறது என்றார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார்; அவைகள் ஜனங்களைக் கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள். அதினால் ஜனங்கள் மோசேயினிடத்தில் போய்: நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம்; சர்ப்பங்கள் எங்களை விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணவேண்டும் என்றார்கள்; மோசே ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணினான்'' (எண்.21:5–7). அன்று இஸ்ரவேலை அழைத்ததேவன் அவர்களுடைய முறுமுறுப்புக்களை அறிந்து கொள்ளிவாய்சர்ப்பங்களை அனுப்பினார். அந்த பாவத்தின் விளைவாக அநேகர் மாண்டுபோனார்கள். மீண்டும் மோசேயின் விண்ணப்பத்தைக்கேட்டு அவர்களை கொள்ளிவாய்சர்ப்பத்தின் கடியிலிருந்து விடுவித்தார். ஒவ்வொருநாளும் மனிதன் அவருக்கு விரோதமாக பேசி பாவத்தின்கீழ் வீழ்ந்துபோய்க்கொண்டே இருக்கிறான். ''அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை; தேவனைத்தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப்போனார்கள்; நன்மைசெய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை'' என்று வேதம் திட்டமாக போதிக்கிறது (ரோம.3:10–12). அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள் என்ற வார்த்தையின்படியே தம்முடைய குமாரனை ஒப்புக்கொடுத்தார்.

அன்று மோசேயின் மூலமாக, கொள்ளிவாய்சர்ப்பத்தினால் கடிபட்ட மக்களை காப்பாற்ற வெண்கலசர்ப்பத்தை செய்து அதை ஒரு கம்பத்தின்மேல் தூக்கிவைக்கும்படியாகவும், கடிபட்டவன் அதை நோக்கிப்பார்த்து பிழைக்கும்படியாகவும் அறிவுறுத்தப்பட்டான். இன்று தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை உலகத்தின் பாவத்தைப்போக்கும் உன்னதபலியாக சிலுவையில்

ஒப்புக்கொடுத்து, அவரை சிலுவையின்மேல் வெற்றிசிறக்கப்பண்ணினார். பாவத்தில் மூழ்கியிருக்கிற ஒவ்வொருவரும் அவரை நோக்கிபார்த்து பிழைக்கும்படியாக சிலுவையிலே ஒப்புக்கொடுத்தார். அவரை நீங்களும் நானும் நோக்கிபார்த்து அவர் மூலமாக பாவமறகழுவப்பட்டு தேவனோடு ஒப்புரவாக வேண்டும். நம்முடைய முற்பிதாக்கள் மோசேயினிடத்தில் போய்; நாங்கள் கர்த்தருக்கும் உமக்கும் விரோதமாய்ப் பேசினதினால் பாவஞ்செய்தோம் என்று அறிக்கையிட்டு பாவங்களின் நிமித்தம் ஒப்புரவானார்கள். இன்று அநேகருக்கு தாங்கள் செய்வது தவறு என்று அறிந்து அதனைப்போக்க, அதற்கான பரிகாரங்களை பல வகையில் தேடுகிறார்கள். அப்படி மேற்கொள்ளும் முயற்சி எல்லாம் மன திருப்தியே ஒழிய வேறொன்றுமில்லை. மனிதனுக்கு விரோதமாக பாவம் செய்திருந்தால் மனிதனிடத்தில் போய் ஒப்புரவாகவேண்டும். தேவனுக்கு விரோதமாக பாவம் செய்திருந்தால் தேவனோடு ஒப்புரவாகவேண்டும். மனிதனோடு ஒப்புரவாக கை குலுக்கிக் கொள்கிறோம். தேவனோடு ஒப்புரவாக அவர் வைத்துள்ள நியதி என்ன என்று நாம் பார்க்கும்போது; ‘‘அவர் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்’’என பவுல் எழுதுகிறார் (2கொ.5:18). நீங்கள் தேவனோடே ஒப்புரவாக ஒரே வழி இயேசுவின் இரத்தம் மட்டுமே. ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பாவத்தைப் போக்கும் பலியாக வந்தார். உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் நன்கு அறிவோம். இப்படி பாவத்தின் வஞ்சனையினால் பிடிபட்டுள்ள உலகத்தை மீட்கவும், நாம் மீண்டும் அவரைப்போல் பரிசுத்தம் அடையவும், ‘‘நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்’’ (2கொ.5:21). அப்படியென்றால் கிறிஸ்து பாவம் செய்தாரா? ‘‘அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார் நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால்



குணமானீர்கள்’’ (1பேது.2:22–24). நாம் பிழைக்கத்தக்கதாக, நம்முடைய பாவங்களை இயேசுதாமே தமது சரீரத்திலே ஏற்று சிலுவையின்மேல் சுமந்து தீர்த்தார். நாம் அடிக்கப்பட வேண்டிய இடத்தில் அவர் அடிக்கப்பட்டார். அவர் சிந்தின இரத்தத்தை நீங்கள் விசுவாசித்து, மனந்திரும்பவேண்டும். மனந்திரும்புதல் என்றால் தான் செய்தகாரியம் முற்றிலும் தவறு என்பதை நினைத்து, தேவனிடமாக திரும்புதல். இதைக்குறித்த ஒரு உவமையிலே ஆண்டவர் சொல்வதைக் கவனியுங்கள்; ‘‘ஒரு மனுஷனுக்கு இரண்டு குமாரர் இருந்தார்கள். அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கி: தகப்பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கை எனக்குத் தரவேண்டும் என்று சொல்லி வாங்கி புறப்பட்டு தூரதேசத்துக்குப்போய் துன்மார்க்கமாய் ஜீவனம் பண்ணி தன் ஆஸ்தியை அழித்துப்போட்டான். பின்பு அவன் குறைவுபடத் தொடங்கியபோது பன்றிகளை மேய்க்கும்படி வேலைசெய்ய சென்றான். அவனுக்கோ பன்றிகள் தின்னும் தவிடுகூட கிடைக்காமல் பசியினால் காய்ந்தான். அப்பொழுது அவனுக்குப் புத்தி தெளிந்து, நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப்போய்: தகப்பனே பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன் என்பேன் என்று சொல்லி தன் தகப்பனிடம் வந்தான். அவன் தகப்பன் அவனை கண்டு மனதுருகி ஒடி வந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தஞ்செய்தான் (லூக்.15:11–20). பார்த்தீர்களா! எப்படிப்பட்ட மனந்திரும்புதலென்று. நாம் செய்த பாவங்களுக்காக மனந்திரும்பி, கீழ்ப்படிந்து, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெறும்போது தேவனோடு இணைக்கப்படுவோம்.

‘‘ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று, கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்கிறோம்’’ என்கிறார் பவுல் (2கொ.5:20). கிறிஸ்து ஏன் பிரசங்கிக்கப்படுகிறார் என்றால், நீங்கள் தேவனோடு ஒப்புரவாகவேண்டும் என்பதற்காகத்தான். ஒருவேளை நீங்கள் சொல்லலாம் நான் தேவனோடு ஒப்புரவாகமாட்டேன் நடப்பது நடக்கட்டும் வருவது வரட்டும் என்று, பிரிய நண்பா! ‘‘பாவத்தின் சம்பளம் மரணம்’’ என வேதம் மிக தெளிவாகபோதிக்கிறது (ரோம.6:23). இந்த அருமையான

தருணத்தை பயன்படுத்திக்கொண்டு தேவனோடு ஒப்புரவாகு. இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தை உடைய நாங்கள் சோர்ந்துபோகிறதில்லை. எல்லோரும் இயேசுகிறிஸ்துவின் மூலமாக பிதாவோடு ஒப்புரவாகவேண்டும். இதை ஒரு மனிதன் நிராகரிப்பானேயானால் பாவம் அவனை ஆண்டுகொள்ளும். பாவம் பூரணமாகும்போது மரணம் சம்பவிக்கும். இந்த மரணபிடியிலிருந்து காப்பாற்றப்பட தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று உங்களை வேண்டிக்கொள்கிறோம். இச்செய்தியை கேட்கும் அன்பு சகோதரனே, சகோதரியே நீ தேவனோடு ஒப்புரவாகி உள்ளாயா? அப்படியில்லை என்றால் இன்றே உன் பாவங்களுக்காக மனந்திரும்பு, ‘‘கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்’’ (ரோ.10:9). இதற்காக நீ உலகத்தின் கடை கோடிக்கு போகவேண்டிய அவசியமில்லை. நீ இருக்குமிடத்தில் பரிசுத்த வேதாகமத்தை தினமும் வாசித்து, அதை அறிந்து கொண்டு தேவனோடு ஒப்புரவாக்கப்பட்டால், நீ தேவனோடு நித்திய வாசஸ்தலமாகிய பரலோகத்தில் என்றென்றுமாய் ஜீவிப்பாய். கர்த்தர் தாமே உங்களை இயேசுகிறிஸ்து மூலமாய் ஒப்புரவாக்குவாராக!

**கேள்வி நேரம்**

**மனிதன் தேவனோடு ஒப்புரவாக வேறுவழி உண்டா?**

‘‘அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை’’ (அப்.4:12). வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே ஒரே ஒரு நாமமே கட்டளை இடப்பட்டுள்ளது. அது இயேசுவின் நாமமே. இந்த நாமத்திற்கு கீழ்ப்படிந்தால் மட்டுமே தேவனோடு ஒப்புரவாக முடியும். இயேசு சொல்கிறார்: ‘‘நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்’’ என்றார் (யோவா.14:6). அவர் தேவனுடைய சமுகத்திற்கு செல்லக்கூடிய வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருக்கிறார். பேதுரு சொல்லும்போது நாங்கள் யாரிடத்திலே போவோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே



என்கிறான். ஆம் அவரிடத்தில் ஒப்புரவாக்குதலின் உபதேசம் இருக்கிறது, அது ஜீவனுள்ள வசனங்கள். அந்த வசனத்திற்கு ஒருமனிதன் செவிகொடுக்கும்போது அவனுடைய ஆத்துமா ஜீவனடைகிறது. மேலும் ஒருவன் இந்த உபதேசத்திற்கு செவிகொடுக்கும்போது அவன் உள்ளும் புறம்பும்சென்று மேய்ச்சலைக் கண்டடைவான். கிறிஸ்துவினுடைய உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஆகையால் தேவனோடு ஒப்புரவாகும் வழியை பற்றிக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 42. மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள்

## Profitable unto Men

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் போதுமானவராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம். **மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள் –** Profitable unto men. மனுஷருக்குப் பிரியோஜனமானவைகள் உலகத்திலே அநேகம் இருக்கிறது. ஆனால் இம்மைக்கும் மறுமைக்கும் பிரயோஜனமானவைகளைக் குறித்து நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். ‘‘சரீரமுயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவபக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது’’ (1தீமோ.4:8). இன்றைய உலகத்தில் ஜனங்கள் சரீரமுயற்சிக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். சரீரமுயற்சி வெளிப்பிரகாரமான பக்தியை உண்டாக்கும். அதனால் நாம் தேவனுக்கு பிரியமாக இருக்கமுடியாது. மனிதன் இவ்வுலகத்தில் நடக்க வேண்டிய வழியையும், கீழ்ப்படிய வேண்டிய கட்டளைகளையும், அவனுக்கு பிரயோஜனமானவைகளையும் தேவன் தமது பரிசுத்த வேதாகமத்தின் மூலமே அறிவித்துள்ளார். அவைகளே மனுஷருக்குப்

பிரயோஜனமானவைகளாகவும், போதுமானவைகளாகவும் இருக்கிறது. நாம் தேவனை அறியாதிருந்த நாட்களில் ‘‘புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழி தப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம் பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்’’ என (தீத்து3:3–5)–ல் வாசிக்கிறோம். நமது முற்கால வாழ்க்கையை எண்ணிப் பார்க்கும்போது பகைக்கப்படத்தக்கவர்களும், தேவனுக்கு விரோதிகளாகவும், சத்துருக்களாகவும் ஜீவித்திருக்கிறோம். அப்படியிருந்த நம்மை அவருடைய இரக்கத்தினாலே இரட்சித்து, மற்றவர்களுக்கும் பிரயோஜனமுள்ளவர்களாய் இருக்கும்படியாக நம்மை மாற்றியமைத்திருக்கிறார். இப்படி அவருடைய இரக்கத்தினாலே இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் அவருடைய வார்த்தையின்படி ஜீவிக்க வேண்டியது எவ்வளவு அவசியமாயிருக்கிறது.

**மனுஷருக்குப் பிரயோஜனமானவைகளிலே ஒன்று அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்திருப்பது:** கிறிஸ்து இயேசுவைத் தரித்துக்கொண்ட ஒவ்வொருவரும் தேவனாலே ஏற்படுத்தப்பட்ட சகல அதிகாரங்களுக்கும் கீழ்ப்படிந்திருக்கவேண்டுமென பரிசுத்த வேதாகமம் நமக்கு போதிக்கிறது. ‘‘மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமை செய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மை செய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்’’ (1பேது.2:14). நீங்கள் கீழ்ப்படிகின்றீர்களா? மேலும் ‘‘எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன், ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்து நிற்கிறான்; அப்படி எதிர்த்து



நிற்கிறவர்கள் தங்களுக்குத் தாங்களே ஆக்கினையை வருவித்துக்கொள்ளுகிறார்கள்’’ (ரோம.13:1,2). அதிகாரங்கள் எல்லாமே தேவனாலே ஏற்படுத்தப்படுகிறது என்பதை நாம் ஒருக்காலும் மறந்துவிடக்கூடாது. தேவனை அறியாத மக்கள் நம்மை ஆளுவதா? அவர்களுடைய ஆளுகையின் கீழ் நாம் நடப்பதா? என்று சொல்லுகிறவர்கள் அதிகம். நம்முடைய முற்பிதாக்களாகிய இஸ்ரவேல் புத்திரை கவனித்துப் பாருங்கள் அவர்கள் ‘‘எகிப்திலே குடியிருந்த காலம் நானூற்று முப்பது வருஷம்’’ (யாத்.12:40). அக்காலங்களில் அந்நிய பிடியில் இருந்தார்கள். நம்முடைய தேவனாகிய கர்த்தர் அவர்களை அவ்விதமாக ஒப்புக்கொடுத்திருந்தார். ‘‘என்னாலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியாயாதிபதிகளும் ஆளுகை செய்து வருகிறார்கள்’’ (நீதி.8:16). கர்த்தராலே மேலான அதிகாரங்கள் யாவும் நியமிக்கப்படுகிறது. எனவே இவைகளுக்கு நாம் கீழ்ப்படியவும், இந்த அதிகாரங்களுக்காக நாம் ஜெபிக்கவும் கடமைப்பட்டவர்களாயிருக்கிறோம். ‘‘நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளயாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும்’’ (1தீமோ.2:2).

**மனுஷருக்குப் பிரயோஜனமானவைகளிலே மற்றொன்று சகலவிதமான நற்கிரியைகளையுஞ் செய்வது:** ‘‘நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்’’ (எபே.2:10). நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பது நன்மை செய்யவும், தானதர்மம்பண்ணவுமே. இங்கே யோசிப்பதற்கு ஒன்றுமில்லை நம்மிடம் உள்ள அனைத்தும் நம்முடைய பிதாவாகிய தேவன் கொடுத்ததுதான். நாம் பிறக்கும்போது என்னத்தை கொண்டுவந்தோம், என்னத்தைக் கொண்டுபோகப்போகிறோம். தேவனுடைய திருசித்தம் செய்ய முதலாவது ஆண்டவராகிய இயேசுவை கவனித்துப்பாருங்கள். அவர் நன்மைசெய்கிறவராய் எங்கும் சுற்றித்திரிந்தார் என காண்கிறோம். ஆகையால், நீங்களும் ஒவ்வொரு நாளும் நற்கிரியைகளைச் செய்வதில் சோர்ந்துபோகாதிருங்கள். ‘‘நீங்கள் நன்மை

செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது'' (1பேது.2:15) என்ற வார்த்தைக்கேற்ப, யோசேப்பு அவன் சகோதரர்களால் இஸ்மவேலர்கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்கப்பட்டும், அவன் தன் சகோதரர்களை நேசித்து, அவர்கள் பஞ்சத்தினால் தானியம் கொள்ள எகிப்திற்கு வந்தபோது அவர்களுக்கு நல்லதே செய்தான். இந்த யோசேப்பை போல நாம் நன்மை செய்து புத்தியீனருடைய அறியாமையை மாற்றி தேவனுடைய திருச்சித்தம் செய்வோம். இன்றைக்கு தேவனுடைய சித்தம் செய்யவேண்டும் என்று மாதக்கணக்கில் நாம் காத்திருக்கவேண்டுவதில்லை. அவருடைய வார்த்தையின்படி நன்மை செய்வதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அதை இன்றே செய், உடனே செய்.

**மனுஷருக்குப் பிரயோஜனமானவைகளிலே மற்றொன்று ஒருவனையும் தூஷியாதிருக்கவேண்டும்:** எங்கு பார்த்தாலும் மக்கள் மத்தியில் தூஷணவார்த்தை பெருகியிருக்கிறது. மேலும் இக்கால கட்டத்தில் தூஷணவார்த்தை என்பது சர்வசாதாரணமாகிவிட்டது. கிறிஸ்தவர்கள் மத்தியிலும் இவை தலைவிரித்தாடுகிறது. இதைக் குறித்து யாக்கோபு குறிப்பிடும்போது ''துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே இப்படியிருக்கலாகாது'' (யாக்.3:10). அதனாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம். மேலும் அதனாலே தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை சபிக்கிறோம். பிரதான தூதனாகிய மிகாவேல் ''மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்'' (யூதா 9). நமக்கு எதிராளி பிசாசு ஒருவனே. அவனையே தேவதூதன் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல் இருக்கும் போது நாம் தேவசாயலில் உண்டாக்கப்பட்ட ஒரு மனுஷனை தூஷிக்கலாமா? தீத்து3:2–ல் சொல்லப்பட்டபடி ஒருவனையும் தூஷியாதிருப்போம்.

**மனுஷருக்குப் பிரயோஜனமானவைகளிலே மற்றொன்று சண்டை பண்ணாதிருக்கவேண்டும்:** சண்டை இல்லாத வீடும், நாடும் இல்லை என்றே சொல்லவேண்டும். ''சண்டைக்காரியோடே ஒரு பெரிய



வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும், வீட்டின் மேல் ஒரு மூலையில் தங்குவதே நலம்'' என்று நீதி.25:24–ல் சாலமோன் குறிப்பிடுகிறார். சண்டையினால் கோடிக்கணக்கான மக்கள் அழிந்து போயிருக்கிறார்கள். சண்டையிடுவதால் வீட்டிற்கும் லாபமில்லை நாட்டிற்கும் லாபமில்லை. நாம் சமாதானமாயிருக்கும்படியே அழைக்கப்பட்டுள்ளோம். ''கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்'' ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமை செய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்றயாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்'' (1தெச.5:15). இங்கு பவுலின் ஜீவியத்தைக் கவனியுங்கள். கன்னானாகிய அலெக்சந்தர் என்பவன் பவுலுக்கு வெகு தீமைசெய்தான். ஆனால் பவுலோ, அவனுக்கு பதில் ஒன்றும் செய்யாமல் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக என்றான். நீங்களும் இந்த பவுலைப்போல சண்டைபண்ணாமல் கர்த்தருடைய சமூகத்தில் ஒப்படைத்து விட்டு சமாதானமாயிருக்க நாடுங்கள். மேலும் பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்த குணத்தை காண்பியுங்கள்; நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து மலைப் பிரசங்கத்தில் ''சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்'' என்றார் (மத்.5:5). சாந்தகுணமுள்ளவர்களா யிருக்கும்போது அநேகரிடத்தில் தயவையும் நீடித்த ஆயுளையும் பெற்று இப்பூமியில் சமாதானத்தோடு வாழும் பாக்கியத்தைப் பெறுவோம். ''உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிறயாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்'' 1பேது.3:15–ன் படி சாந்தத்தோடு மற்றவர்களுக்கு உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருக்க நம்மை பழக்குவித்துக்கொள்ள வேண்டும். பொறுத்து, பொறுத்து பொறுமையை இழந்துவிட்டேன் என்று அநேகர் சொல்ல கேள்விப்பட்டு இருக்கிறோம். தேவமனிதனாகிய ''யோபின் பொறுமையைக் குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்த்தருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறார்'' (யாக்.5:11). இந்த யோபுவைப்போல

தேவசமுகத்தில் பொறுமையோடு காத்திருந்து எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தை காண்பியுங்கள் அப்பொழுது நிறைவான ஆசீர்வாதங்களை கர்த்தராலே பெறுவீர்கள். அன்பானவர்களே, நாம் கேட்ட அனைத்து காரியங்களும் நமது ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மிக முக்கியமானவைகள் என்று எண்ணுகிறேன். இவைகளை உங்களது ஜீவியத்தில் ஏற்று இருதயமாகிய பலகையில் எழுதிக்கொண்டு, அனுதின ஜீவியத்தில் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக, நற்சாட்சியுள்ள மக்களாக வாழ பிரயாசப்படுங்கள். ‘‘இந்த வார்த்தை உண்மையுள்ளது தேவனிடத்தில் விசுவாசமானவர்கள் நற்கிரியைகளைச் செய்ய ஜாக்கிரதையாயிருக்கும்படி நீ இவைகளைக் குறித்து திட்டமாய்ப் போதிக்க வேண்டுமென்று விரும்புகிறேன் இவைகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோஜனமானவைகள்’’ என்று பவுல் குறிப்பிடுகிறார் (தீத்.3:8). பிரயோஜனமுமான இவைகளைச் செய்ய கர்த்தர் உங்களை பெலப்படுத்துவாராக!

**கேள்வி நேரம்**

**மனிதனுக்கு பிரயோஜனப்படாத ஒன்று ஏதாவது இருக்கிறதா?**

மனிதனுக்கு பிரயோஜனப்படாத ஒன்று என்றால் அது அவனுடைய பாவமே. ஒரு மனிதனுடைய பாவம் எந்த வகையிலும் அவனுக்கு பிரயோஜனப்படாது. உப்பானது சாரமற்றுப்போனால், எதினால் சாரமாக்கப்படும்? வெளியே கொட்டப்படுவதற்கும், மனுஷரால் மிதிக்கப்படுவதற்குமே ஒழிய வேறொன்றுக்கும் உதவாது. அதைப்போல பாவம் செய்கிற ஆத்துமா ஒன்றுக்கும் உதவாமற்போகும். மனிதனுடைய ஆத்துமா விலையேறப்பெற்றது. அந்த ஆத்துமாவைக்குறித்த கரிசனையில்லாமல் அநேகர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். உள்ளம் சுத்தமாக இருந்தால் இல்லம் சுத்தமாகயிருக்கும். உள்ளம் அசுத்தமாக இருக்கும்போது இல்லமும் அசுத்தமாகயிருக்கும், பாவகாரியங்களை சிந்திக்கும், பாவத்தைச் செய்யத்தூண்டும். ‘‘இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தை பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும்’’ என்று யாக்.1:15–ல் வாசிக்கிறோம். இந்த பாவத்தின் விளைவாக மனிதன் நித்தியமான மரணத்திற்கு தள்ளப்படுகிறான். இவைகளிலிருந்து விடுபட நலமானவைகளைச் செய்யுங்கள். நாங்கள்



உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 43. நல்ல போராட்டம்

22.8.07

## A Good Fight

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். நல்ல போராட்டம் – A good fight. இந்த உலகத்தில் எத்தனையோ விதமான போராட்டங்களைக் குறித்து நாம் கேள்விப்படுகிறோம். அவைகளை நமது அநுதினஜீவியத்திலும் காண்கிறோம். இப்படிப்பட்ட போராட்டங்கள் எல்லாம் வன்முறையை தூண்டவும், அநேகரை தவறான பாதையிலும் இழுத்துச்செல்கிறது. இவைகளால் மனிதனுக்கு எந்த விதத்திலும் நன்மைகிடைக்கப் போவதில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுவதைக் கவனியுங்கள்; ‘‘நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்’’ என்கிறார் (2தீமோ.4:7,8). பவுல் நிச்சயமற்ற ஒரு மனிதனைப்போல இல்லாமல் நல்ல போராட்டத்தை போராடினேன் என்று குறிப்பிடுகிறார். இந்நாட்களிலே இந்த பவுலைப்போல நீங்கள் நல்லபோராட்டத்தை போராடுகிறீர்களா? சற்று சிந்தித்துப்பாருங்கள். நம்முடைய போராட்டமானது நம்பக்கையுள்ளதாகவும், இச்சையடக்கம் நிறைந்ததாயும் காணப்படவேண்டும். ஏனென்றால் ‘‘பந்தயசாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள், ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள். பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கமாயிருப்பார்கள், அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ

அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்'' (1கொ.9:24,25). உலகப்பிரகாரமான பந்தயத்திற்குப் போராடுகிறவர்களே எல்லாவற்றிலும் இச்சையடக்கமாயிருக்கும்போது அழிவில்லாத வாடாத கிரீடத்தைப் பெறப்போகிற நமக்கு எவ்வளவு இச்சையடக்கம் இருக்க வேண்டியது அவசியம். யோசேப்பைக் கவனித்துப்பாருங்கள்; போத்திபாரின் மனைவி யோசேப்பின்மேல் கண்போட்டு, தன்னோடே சந்தோஷமாக இருக்கும்படி நித்தம் அவனை பலவந்தப்படுத்திக் கொண்டு வந்தாள். அவனோ! தன் எஜமானுடைய மனைவியின் சொல்லுக்கு இணங்காமல், அவளை நோக்கி: ''நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்'' (ஆதி.39:9). இச்செய்தியைக் கேட்கும் அன்பான நேயரே, நியாயப்பிரமாணமாகிய பத்துக் கட்டளை கொடுக்கப்படுவதற்கு முன்பு வாழ்ந்த இந்த யோசேப்பு பிறனுக்குள்ள யாதொன்றையும் குறிப்பாக பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக என்ற கற்பனையை அன்றே கடைபிடித்துள்ளான் என்று நாம் படிக்கிறோம். பூரணமான கட்டளைகளைப் பெற்றுள்ள நாம் இன்று எவ்வாறு அவைகளைக் கைக்கொள்ளுகிறோம்? ''பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே'' என்ற எபி.12:14–ம் வசனத்தை நாம் அவ்வப்போது நினைவு கூரவேண்டியவர்களாயிருக்கிறோம். தேவனுக்கு பயந்து பாவத்திற்கு விலகி தன்னைக் காத்துக்கொண்ட யோசேப்பைப்போல நாமும் தேவனுக்கு பயந்து அவர் கற்பனைகளின்படி நடப்போம்.

**நம்முடைய போராட்டமானது பாவத்திற்கு விரோதமானதாக இருக்கவேண்டும்:** ஆற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடும் மீன்களைப்போல பாவத்தை எதிர்க்கிறதாக இருக்கவேண்டும். வசனம் சொல்லுகிறது; ''பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே'' (எபி.12:4). ஆம்! ஸ்தேவான், பவுல் போன்றோரெல்லாம் கிறிஸ்துவின் வசனத்தினிமித்தம் கல்லெறியுண்டார்கள், சவுக்கால் அடிக்கப்பட்டார்கள். மேலும் நம் முற்பிதாக்களும் ''மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள், வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும்



அனுபவித்தார்கள்'' (எபி.11:35,36). இக்காலத்தில் வாழ்கின்ற நாம் எவ்விதமான போராட்டத்தை அனுபவிக்கிறோம். இவர்கள் அனுபவித்த துன்பங்களில் சிறிதளவுகூட நாம் இதுவரை அனுபவியாமல் இருக்கிறோம் என்பதுதான் உண்மை. அநேக விஷயங்களில் பாவத்திற்கு பங்காளர்களாயிருக்கிறோம். ''நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தினிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருக்க அந்த ராஜ்யத்திற்கு நீங்கள் பாத்திரரென்றெண்ணப்படும்படிக்கு, தேவன் நியாயமான தீர்ப்புச் செய்கிறவரென்பதற்கு அதுவே அத்தாட்சியாயிருக்கிறது'' (2தெச.1:5). ஆகையால் எனக்கு அன்பானவர்களே, நீங்கள் தேவனுடைய ராஜ்யமாகிய சபையின் நிமித்தம் பாடு அநுபவிக்கிறவர்களாயிருந்தால் அவைகளை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளுங்கள். ஏனென்றால் அந்தப்பாடுகளே நமக்கு அத்தாட்சியாயிருக்கிறது. தோமா என்ற சீஷன் இயேசுவின் உயிர்த்தெழுதலை நம்பாமலிருந்தபடியால் கர்த்தர் அவனிடத்தில் ஆணிகள் அடிக்கப்பட்ட காயத்தை காண்பித்தார். இன்று உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் மாறாத காயம் உங்களுடைய வாழ்க்கையில் கிறிஸ்துவுக்காக பட்டபோராட்டத்திற்கு அடையாளமாக அல்லது அந்த ராஜ்யத்தின் நிமித்தமாக நீங்கள் பாடுஅநுபவித்திருக்கிறீர்கள் என்பதற்கு அதுவே அத்தாட்சியாக இருக்கிறது. நாம் ''அவரோடேகூடப்பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார் (2தீமோ.2:12).

**நம்முடைய போராட்டமானது சட்டத்தின்படி இருக்கவேண்டும்.** ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும் சட்டத்தின்படி பண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். பிரயாசப்பட்டு பயிரிடுகிறவன் பலனில் முந்திப்பங்கடைய வேண்டும்'' (2தீமோ.2:5,6) என்ற பவுலின் வார்த்தைப்படி ஆவிக்குரிய பட்டயமாகிய வேத வசனத்தை எடுத்துக்கொண்டு அதன்படி போராடவேண்டும். நமது ஆண்டவர் பிசாசுடன் போராடும் போது; ''அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே'' என்று போராடினார் (மத்.4:10). ஆகையால் அன்பானவர்களே உங்களுடைய போராட்டம் எப்படியிருக்கிறது. ''நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தின் நிமித்தம்

நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனெனில் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார். உங்களாலே மகிமைப்படுகிறார். ஆதலால் உங்களில் ஒருவனும் கொலை பாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது அந்நிய காரியங்களில் தலையிட்டுக் கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக் கூடாது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்'' 1பேது.4:4–16 சட்டத்தின்படி போராடும்போது தேவநாமம் மகிமைப்படக்கூடியதாக யிருக்கிறது. ''தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால் நன்மை செய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்'' என்ற 1பேது.3:17–ன்படி பாடுகளுக்கு ஒப்புக்கொடுங்கள்.

**நம்முடைய போராட்டத்தின் ஆயுதமானது வசனத்தின்படி இருக்கவேண்டும்.** ''நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகாரலோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாயும் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களை யெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின்பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள் எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி



அதன் பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்'' (எபே.6:11–18). நீங்கள் இப்படிப்பட்ட ஆயுதத்தை தரித்திருக்கிறீர்களா? உங்களுடைய போராட்டத்துக்கு வேண்டிய ஆயுதமானது மேற்கண்ட வேதவசனத்தின்படி சத்தியத்தை நீங்கள் உடுப்பாக தரித்து உண்மையின் பிரதிபலிப்பாகவும், ஒருக்காலும் பொய்யுரையாத தேவனுடைய வழியில் இருக்கிற நீங்கள் நீதியை மார்க்கவசத்தைப்போல தரித்தும், எங்குசென்றாலும் பாதரட்சையை தொடுத்துக்கொள்வதுபோல சுவிசேஷத்தை எல்லா இடங்களிலும் எடுத்துச்செல்கிறவர்களாகவும், பிசாசினுடைய காரியங்களை முற்றிலும் அழித்துப்போட ஆபிரகாமுடைய விசுவாசத்தைப் பற்றிக் கொண்டும், ஞானஸ்நானத்திற்கு பின்பு கிடைக்கப்பெற்ற அந்த இரட்சிப்பை தலையைக் காக்கும் கவசத்தைப்போல பாதுகாத்து, வேதவசனமாகிய ஆவியின் பட்டயத்தை எந்தச் சமயத்திலும் எடுத்துக்கொண்டு, ஜெபத்தோடும், வேண்டுதலோடும் விழித்திருங்கள். இப்படிச் செய்தால் பிசாசு உங்களை விட்டு ஓடிப்போவான். நீங்களும் கிறிஸ்துவுக்கேற்ற ஒரு நல்ல போர்ச்சேவகனாயிருப்பீர்கள். இப்படியில்லாது, உங்களுடைய பேராட்டமானது உலகமக்களுடைய போராட்டத்தைப்போல தேவசமூகத்தில் காணப்பட்டால். அவர் ''நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்''என்கிறார் (மத்.7:23). பிரியமானவர்களே, உங்களுடைய போராட்டமானது எப்படியுள்ளது? நல்ல போராட்டத்தை போராடி நம்முடைய ஓட்டத்தை முடித்து, விசுவாசத்தைக் காத்துக்கொண்டால், நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே நமக்கு நீதியின் கிரீடத்தைக் கொடுப்பார். இக்கிரீடத்தைப் பெற்றுக்கொள்ள இன்றே தீர்மானம் செய்வீர்களா? மனதளவில் தீர்மானித்து அதை கனவாக்கிவிடாதீர்கள். பவுல் கூறும்போது ''நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம்பண்ணேன், மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்'' என்கிறார் (1கொ.9:26,27). ஆகாயத்திலே சிலம்பம்பண்ணினால் பிரயோஜனமில்லை.

பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நின்று மாம்ச இச்சைகளுக்கு அடிபணியாமல் நல்ல போராட்டம்பண்ண உங்களை ஒப்புக்கொடுங்கள்.

**கேள்வி நேரம்**

**போராட்டம் எல்லோருக்கும் உண்டா?**

மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் போராடியே ஆகவேண்டும். போராட்டமில்லாத வாழ்க்கையில்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகையில் போராட்டமானது இருக்கிறது. இந்த போராட்டத்தை மேற்கொள்ள ஆவியின் பட்டயமாகிய வேதவசனத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். தேவதூதனுக்கும் பிசாசுக்கும் கூட போராட்டமானது இருந்ததாக நாம் வேதத்தில் வாசிக்கிறோம். ‘‘பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூஷணமாய்க் குற்றப்படுத்தத் துணியாமல்; கர்த்தர் உன்னைக் கடிந்துகொள்வாராக என்று சொன்னான்’’ (யூதா9). தேவதூதனே பிசாசுடன் போராடியிருக்கும்போது மனிதர்களாகிய நமக்கு போராட்டமில்லாமல் இருக்குமா? ஒவ்வொருவருக்கும் பூமியிலே போராட்டம் உண்டு. ஆனால் இந்தப் போராட்டத்தில் வெற்றிபெறுவது தேவனுடைய ஜனங்களே. ஏனெனில் அவர்கள் கர்த்தருடைய வசனத்தை எடுத்துக்கொண்டு போராடுகிறார்கள். அவர்கள் பிசாசுகொண்டு வருகிற அனைத்து காரியங்களிலிருந்தும் அவனை வெற்றிகொள்வார்கள். நீங்களும் வெற்றியடைய கர்த்தருடைய ஆவியின் பட்டயத்தை எடுத்துக்கொள்ளுங்கள், அப்பொழுது பிசாசையும் அவனுடைய கூட்டாளிகளையும் ஜெயிப்பீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 44. நாம் எதற்காகத் தேவனை தொழுது கொள்கிறோம்?

## Why do we worship God?

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நம்முடைய ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். நாம் எதற்காக தேவனை



தொழுது கொள்கிறோம்? – Why do we worship God? என்ற கேள்வி உங்களில் அநேகருக்கு இருக்கும். இதற்கான விடையை பரிசுத்த வேதாகமம் மிக தெளிவாக நமக்கு விளக்கிக் காட்டுகிறது. மனிதனுடைய கருத்துக்களை கண்ணோக்குவோமானால் பலர் பலவிதமான கருத்துக்களை கொடுப்பார்கள். அவையெல்லாம் ஒருவேளை கேட்பதற்கு நலமாக இருக்கும். ஆனால் அது உண்மைக்கு புறம்பானதே. தேவனுடைய தன்மையையும் அவருடைய விருப்பத்தையும் நமக்கு வெளிப்படுத்தியவர் இயேசு கிறிஸ்து ஒருவரே அவரே தேவனிடமிருந்து வந்தவர். ‘‘தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே (இயேசுவே) அவரை வெளிப்படுத்தினார்’’ (யோவா.1:18). மேலும் ‘‘தம்மைத் தொழுது கொள்கிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்’’ என்றார் (யோவா.4:23,24). இவ்விதமாக நீங்கள் தேவனை அவருடைய விருப்பப்படி தொழுது கொண்டுவருகிறீர்களா? அப்படியில்லை என்றால் நிகழ்ச்சியை தொடர்ந்து கேளுங்கள். அதன்படியாக தேவனை தொழுதுகொள்ளுங்கள்.

**நாம் ஏன் அவரை தொழுது கொள்ளவேண்டும் என்றால் அவர் நமது சிருஷ்டிகர்:** இந்த உலகத்திலே நாம் காண்கிற எல்லாவற்றையும் தேவனாகிய கர்த்தர் சிருஷ்டித்தார் என பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். இவை எல்லாவற்றையும் ஆண்டு கொள்ளும்படியாக மனிதனை; ‘‘தேவன் தம்முடைய சாயலாகவே சிருஷ்டித்தார். ஆணும், பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்’’ என ஆதி.1:27 கூறுகிறது. நாம் தேவசாயலில் உண்டாக்கப்பட்டபடியால் நம்மை மற்ற ஜீவசந்துக்கள் ஆண்டுகொள்வதில்லை. நாம்தான் அவைகளை ஆண்டு கொள்கிறோம். இது தேவனுடைய நியதியாகவும் இருக்கிறது. இப்படிப்பட்ட அதிகாரத்தையும், வல்லமையையும் கொடுத்த நம் தேவனை தொழுதுகொள்ளவேண்டியது எவ்வளவு அவசியம்! அநேகர் தாய் தகப்பன் தான் நமக்கு முதல் கடவுள் அவர்கள் தான் நம்மை பெற்றார்கள் என்று வாதிடுவர். உண்மைதான் அவர்கள் தான் நம்மை பெற்றார்கள். அவர்களை பெற்றது யார்? என்று

கேட்டுக்கொண்டே போவோமேயானால், முதல் மனிதனாகிய ஆதாமை சிருஷ்டித்தவர் தேவனே என்று முடிவுக்கு வருவோம். தேவனாகிய கர்த்தர் 10 கட்டளைகளை மோசேக்கு கொடுக்கும்போது அதில் ஐந்தாவது கட்டளையில் ‘‘உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக’’ என்ற கட்டளையைப் கொடுத்தார் (யாத்.20:12). தகப்பனையும் தாயையும் கனம் பண்ணவேண்டும் என்ற போதனையைக் கொடுத்தாரே தவிர அவர்களை நமஸ்கரிக்கவேண்டும் என்று சொல்லவில்லலை. மேலும் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடும்போது; ‘‘தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல, மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல’’ என்றார் (மத்.10:37). அப்படியிருக்கும்போது நாம் தேவனுக்கு முன்பாக தாய் தகப்பனையோ அல்லது பிள்ளைகளையோ மேன்மைப்படுத்தி நேசிக்கவோ அல்லது அவர்களை படம் வைத்து தொழுது கொள்ளவோ செய்வோமென்றால் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்கிறவர்களாயிருப்போம். சிருஷ்டிகரை தொழுதுசேவியாமல் சிருஷ்டிப்புகளை சேவிக்கிறவர்களாயிருப்போம்.

**மேலும் நாம் எதற்காக தேவனை தொழுது கொள்ளவேண்டுமென்றால்? அவர் நம்மை பாவத்திலிருந்து மீட்டவர்:** மனிதன் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டும் கீழ்ப்படியாமையினால் பாவத்திற்கு அடிமையானான். அவனை பாவத்திலிருந்து மீட்கவே தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து வெளிப்பட்டார். ‘‘பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது அவர்களில் பிரதான பாவி நான்’’என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (1தீமோ.1:15). ஆதாமுடைய கீழ்ப்படியாமையினாலே பாவம் செய்யாதவர்களையும் மோசேயின் நியாயப்பிரமாணம் வரை பாவம் ஆண்டுகொண்டது. பாவத்தின் கீழ்அடைபட்ட நம்மை மீட்க பாவமில்லாதவர் ஒருவர் தேவை. அதற்காக இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாக இவ்வுலகத்தில் அவதரித்தார். ‘‘அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவர் மூலமாய் உண்டாயிற்று உலகமோ அவரை அறியவில்லை (யோவா.1:10). இந்த ஆண்டவராகிய இயேசுவை



இன்றும் மானிட வர்க்கம் ஒரு மதபோதகராகவே பார்க்கிறது. அவரிடமாக மனந்திரும்பவேண்டும். இயேசுசொல்கிறார்; ‘‘அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்’’ என்றார் (லூக்.13:3). நாம் மனந்திரும்பி ஆண்டவராகிய இயேசுவை உலக இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது மெய்யான சந்தோஷத்தையும், சமாதானத்தையும் பாவமன்னிப்பின் நிச்சயத்தையும் அடைய முடியும். ‘‘பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும் என்று சொல்லி, திமிர்வாதக்காரனை நோக்கி: நீ எழுந்து உன்படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போ என்றார்’’ (லூக்.9:6). அதைக் கண்ட ஜனங்கள் ஆச்சரியப்பட்டு இப்படிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்தவராகிய தேவனை மகிமைப்படுத்தினார்கள். அதைப்போல கிறிஸ்துவின் மூலமாக பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெற்ற, பெறப்போகிற நீங்களும் தேவனை தொழுதுகொள்ளவேண்டியவர்களாயிருக்கிறீர்கள். அவர் நம் பாவங்களை மன்னிப்பவர் மட்டுமல்ல, **நம்தேவைகளை சந்திப்பவருங்கூட**. ‘‘கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன்மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா? ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்.7:7–11). ஆம் பிரியமானவர்களே! நம் பிள்ளைகளுக்கு நாம் எப்படி இறங்குகிறோமோ அதைப் பார்க்கிலும் நம்முடைய பரமபிதாவாகிய தேவன் நம்யாவருக்கும் இரக்கம் செய்கிறார். ஆதியிலே மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் பூமியிலே முளைக்கப்பண்ணினார். தேவனுடைய வார்த்தைக்கு இயற்கை தாவரங்கள்

கட்டுப்பட்டு இன்றுவரை மனிதனுக்கு பலன் கொடுத்துக்கொண்டேயிருக்கிறது. இவையாவையும் படைத்த தேவனை தொழுது கொள்ளவேண்டுமல்லவா? ஒருமுறை இயேசு தம்மைப்பின்பற்றி வந்த திரளான ஜனங்களைக் கண்டு இவர்களுக்காக பரிதபிக்கிறேன். ''இவர்கள் என்னிடத்தில் மூன்றுநாள் தங்கியிருந்து சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள். இவர்களைப்பட்டினியாய் அனுப்பிவிட எனக்கு மனதில்லை. வழியில் சோர்ந்துபோவார்களே'' என்று சொல்லி அவர்களுக்கு திருப்தியான உணவுகளை கொடுத்து அனுப்பியதை மத்.15:32–ல் வாசிக்கிறோம். அன்றுமட்டுமல்ல இன்றும் என்றும் நம்மை போஷிக்கிறவராயிருக்கிறார். ''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையுங் குறைவுபடாது என்று தாவீது சங்.34:10–ல் பாடியுள்ளார். சிங்கம் காட்டிற்கே ராஜாவாக இருந்தும் அதனுடைய குட்டிகள் கூட தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் ஆனால் கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது என்கிறார். நமது ஆண்டவர் கூறும்போது; ''ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப்பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை; அவைகளையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்கள் அல்லவா?'' (மத்.6:26). அன்பானவர்களே, பூமியில் உள்ளவைகளையும் ஆகாயத்துப் பட்சிகளையும் போஷிக்கிறவர் கர்த்தர் ஒருவரே. ஆகையால் இவையாவும் கர்த்தரை நன்றியோடு ஒவ்வொரு நாளும் துதிக்கிறது. அவைகளைப்போலவே நாமும் கர்த்தரால் போஷிக்கப்படுகிறோம். அப்படிபோஷிக்கப்படுகிற நாமும் கர்த்தரை துதிக்கவேண்டாமா?

**அவர் நம்மை நித்திய நித்தியமாக காக்கும் தேவன் ஆகையால் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்:** மனிதனை தேவன் நல்நோக்கத்தோடு சிருஷ்டித்தார். ஆனால் மனிதனோ பாவத்திற்கு அடிமையாகி தேவ சமுகத்திலிருந்து விலக்கப்பட்டான். அவனை மீண்டும் தேவன் நேசித்து. பாவத்திலிருந்து மீட்டு போஷித்து வருகிறார். அதுமட்டுமல்ல அவனை தம்மோடு நித்திய நித்திய காலமாக



வைத்துக்கொள்ளும்படியாகவும் திட்டமிட்டுள்ளார். ஆகையால் தான் இயேசு சொல்கிறார்; ''நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடே கூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவ னெவனொ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடே கூட உட்காரும்படி;கது அருள்செய்வேன்'' என்கிறார் (வெளி.3:21). அவர் மரித்து உயிர்த்தெழுந்ததைப்போல நம்மையும் உயிர்பித்து நித்தியமான ராஜ்யத்தில் பிரவேசிக்கச்செய்வார். யோவானுடைய தரிசனத்தில் மூப்பர்களில் ஒருவன் ''வெள்ளை அங்கிகளைத்தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான் அதற்கு நான்: ஆண்டவரே அது உமக்கே தெரியும் என்றேன்; அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுகுட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள் ஆனபடியால் இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள் சிங்காசத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை. வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை'' என்றான் (வெளி.7:13–16). இப்படிப்பட்டதான நிலையான ஆசீர்வாதத்தை பெறப்போகிற நாம் இவ்வுலகத்திலே கொஞ்சகாலம் பாடு அனுபவிக்கிறவர்களாயிருக்கிறோம். இப்படிப்பட்டதான பாடுகளோடு தேவனை தொழுதுகொள்வோம். பிரியமானவர்களே! நாம் எதற்காக தேவனை தொழுது கொள்கிறோம் என்ற கேள்விக்கு வேதவசனத்தின்படியான உண்மையை புரிந்து இருப்பீர்கள் என்று நம்புகிறோம். பிதாவாகிய தேவன் விரும்புகிறபடி அவரைத் தொழுகொண்டு நித்தியமான ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவனை தொழுதுகொள்ளும்போது நாம் செய்யவேண்டுவதென்ன?**

முதலாவது ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு

ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை'' (மாற்.12:30,31). தனிப்பட்ட விதத்தில் ஜெபிக்கவும், சபையாககூடிவந்து தேவனை ஆராதிக்கவும் வேண்டும், வாரத்தின் முதல் நாளில் அவரை ஆராதிக்கும்படியாக கூடிவரும்போது கிறிஸ்துவின் மரணத்தை நினைவுகூர்ந்து, வரவுக்கு தகுந்த நம்முடைய காணிக்கைகளை அந்நாளிலே சேர்க்கவேண்டும். கர்த்தருடைய வார்த்தைகளை தியானித்து, பாடலின் வாயிலாக தேவனை துதித்து ஒருவருக்கொருவர் போதித்து புத்திசொல்லி தேவனை ஆராதிக்கவேண்டும். நற்சாட்சியுள்ள தேவனுடைய மக்களாக இருந்துகொண்டு, சமுதாயத்தின் மத்தியில் கர்த்தருடைய நாமத்தை எடுத்துச்சொல்லி நற்கிரியைகளையும், தானதர்மங்களையும் மிகுதியாக செய்து, நாமே தேவனுடைய ஆலயமாக இருந்து செயல்படவேண்டும். இப்படிச் செய்யும்போது தேவன் நம்முடைய தொழுகையை அங்கிகரிப்பார். நாமும் ஆவி ஆத்துமா சரீரத்தில் பெலனைப் பெற்றுக்கொள்ளமுடியும். இவ்விதமான தொழுகையை தேவனுக்கு ஏறெடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 45. நன்மை செய்யப் படியுங்கள்

## Learn to do well

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் நன்மைசெய்கிற நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்மை செய்யப் படியுங்கள் – Learn to do well. நம்முடைய முற்பிதாக்களின் காலத்திலும் சரி, இன்றும் சரி மக்கள் அதிகமாக படிக்கவேண்டும் என்று சொல்லி படிப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். படிப்பு மிகவும் அவசியமான ஒன்றே. ஆனால் நாம் எதைப்படிக்கிறோம், படித்தபிறகு நாம் என்ன செய்கிறோம் என்பது மிகவும் கவனிக்கத்தக்கது. I.A.S படித்த ஒருவர் தனது இருக்கையில் அமர்ந்திருக்கும் போது தன்னிடம் வரும் ஒரு சிறுவிவசாயியின்



கோரிக்கையை நிறைவேற்ற தவறும்போது அவர் படித்த படிப்பிற்கு அர்த்தமில்லாமல் போகிறது. அதைப்போல அதிகம் படித்திருந்தும் நன்மை செய்யப் படிக்கவில்லையென்றால் பிரயோஜனமில்லை. நம்முற்பிதாக்களுக்கு பலிசெலுத்துவதும், காணிக்கை செலுத்துவதும், மாதப்பிறப்பையும், ஓய்வுநாளையும், பண்டிகைகளையும், அநுசரிப்பதுமே சரியாய்பட்டது. ஆனால் அவர்களில் அதிகமானோர் வேதத்துக்குச் செவி கொடுக்கவில்லை. ஆகையால் யூதராஜாக்களின் நாட்களில் கர்த்தர் ஏசாயா தீர்க்கதரிசி மூலம் தமது ஜனத்தை எச்சரித்து: ''நீங்கள் உங்கள் கைகளை விரித்தாலும் என் கண்களை உங்களை விட்டு மறைக்கிறேன்; நீங்கள் மிகுதியாய் ஜெபம் பண்ணினாலும் கேளேன்; உங்கள் கைகள் இரத்தத்தினால் நிறைந்திருக்கிறது. உங்களைக் கழுவிச் சுத்திகரியுங்கள்; உங்கள் கிரியைகளின் பொல்லாப்பை என் கண்களுக்கு மறைவாக அகற்றிவிட்டு, தீமை செய்தலை விட்டு ஓயுங்கள், நன்மை செய்யப் படியுங்கள்; நியாயத்தை தேடுங்கள்; ஒடுக்கப்பட்டவனை ஆதரித்து, திக்கற்ற பிள்ளையின் நியாயத்தையும், விதவையின் வழக்கையும் விசாரியுங்கள்'' (ஏசா.1:15–17) என்கிறார். தேவ வார்த்தைக்கு செவிகொடாமல் முழங்காலில் இருந்து முழு இரவும் ஜெபித்து பிரயோஜனமென்ன? ''நீங்கள் மனம்பொருந்திச் செவி கொடுத்தால், தேசத்தின் நன்மையைப் புசிப்பீர்கள், மாட்டோம் என்று எதிர்த்து நிற்பீர்களாகில் பட்டயத்துக்கு இரையாவீர்கள்; கர்த்தரின் வாய் இதைச் சொல்லிற்று'' என்று ஏசா.1:19,20–ல் வாசிக்கிறோம்.

நன்மை செய்ய வேண்டுமென்ற போதனையை நம்முற்பிதாக்களுக்கு மட்டுமல்ல நமக்கும் கொடுத்திருக்கிறார். ''அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக் கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்திவைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்'' (தீத்து2:14). அது மட்டுமல்ல ''நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார் என்று எபே.2:10–ல் படிக்கிறோம். இப்படி கிறிஸ்து இயேசுவுக்குள்

சிருஷ்டிக்கப்பட்ட நீங்கள் நற்கிரியைகளை செய்து கொண்டிருக்கிறீர்களா? ‘‘நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது’’ என்கிறார் பேதுரு (1பேது.2:15). உலகத்தில் அநேகர் தேவனை அறியாதும், அவருடைய சித்தத்தை அறியாதுமிருக்கிறார்கள். இப்படி அறியாதிருக்கிற மக்கள் மத்தியில் தேவனுடைய அன்பையும், அவருடைய இரட்சிப்பின் திட்டத்தையும் நாம் நன்மை செய்திறதின் மூலம் அறிவிக்க முடியும். ஆகையால் ‘‘நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம்’’ என்கிறார் பவுல் (கலா.6:9).

நன்மை செய்வது என்பது அநேகருக்கு கசப்பாயிருக்கிறது. காரணம் என்னவென்றால், இவர்களிடம் நன்மையை பெற்றவர்கள் இவர்களுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டிருப்பார்கள். ஆகையால் இனிமேல் யாருக்கும் நன்மையே செய்யக்கூடாது என்று முடிக்கு வந்திருப்பார்கள். பிரியமானவர்களே! அப்படியிருக்கக்கூடாது, ஆண்டவர் சொல்வதைக் கவனியுங்கள்; ‘‘... உங்களுக்குச் சொல்லுகிறேன்; உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களை துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படி செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்குப் புத்திரராயிருப்பீர்கள்; அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார்’’ (மத்.5:44,45). வானத்தையும், பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கிய தேவனாகிய கர்த்தரை மறந்து அனுதினமும் கர்த்தருக்கு விரோதமாக நடக்கிற கோடான கோடி மக்களை அவர் நேசித்து, தீயோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, மழையைப் பெய்யப்பண்ணுகிறார். அவரால் உருவாக்கப்பட்ட நாம், இயேசுகிறிஸ்துவை தரித்துக்கொண்ட ஒவ்வொருவரும் அவரைப்போல எண்ணம் கொண்டு, அவரைப்போல வாழ்ந்திடவேண்டாமா? சற்றே சிந்தியுங்கள். இயேசுவுக்கு அன்றும் சரி, இன்றும் சரி சத்துருக்களே இல்லை. அப்படி இருந்திருந்தால்



என்றோ, நாம் சோதோம், கோமோரா பட்டணங்களில் உள்ளவர்களைப் போல அழிந்து போயிருப்போம். அவர் இன்றும் நம்மை நேசிப்பதினாலே சுகமாக இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச்செய்தியை கேட்கிற என் அன்பு சகோதரனே, சகோதரியே அவருடைய நாமத்தை தரித்த உனக்கு சத்துருவாகிய பிசாசைத் தவிர வேறே சத்துருக்கள் உண்டா? அப்படி நீ சத்துருவாக நினைக்கக்கூடிய மகனுக்காக, மகளுக்காக ஜெபி. இப்படி செய்வதினால் நீங்கள் தேவனுக்குப் பிள்ளைகளாவீர்கள். ‘‘ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்றயாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாடுங்கள்’’ 1தெச.5:15–ல் சொல்லப்பட்ட பவுலின் இந்த வார்த்தைக்கு ஏற்றார் போல வாழ்ந்தவன் யோசேப்பு. இந்த யோசேப்பை அவனுடைய சகோதரர்கள் பொறாமையினால் இஸ்மவேலர் கையில் இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டார்கள். இஸ்மவேலர் கைகளில் விற்கப்பட்ட யோசேப்புக்கோ, எகிப்திலே பார்வோனுடைய கண்களில் தயை கிடைத்தது. ஆகையால் அவன் எகிப்து முழுமைக்கும், பார்வோனுடைய வீட்டுக்கும் அதிகாரியானான். அப்பொழுது தேசம் எங்கும் ஏழு வருஷம் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. ஆனால் யோசேப்பின் யோசனைப்படி எகிப்திலோ தானியம் இருப்பு வைக்கப்பட்டிருந்தது. இதை அறிந்த யோசேப்பின் சகோதரர் தானியம்கொள்ள எகிப்திற்கு வந்தார்கள். அதை அறிந்த யோசேப்பு அவர்கள் தனக்கு செய்த துரோகத்திற்கு மாறாக நன்மையே செய்தான். ஆனால் இன்றைக்கு இருக்கிறவர்களில் சிலர் அவன் எனக்கு குழிவெட்டினான். நானோ அவனை அதே குழியில் தள்ளிவிட்டேன் என்று சொல்லி பெருமையடித்துக்கொள்வார்கள். அன்பானவர்களே! நாமோ, இந்த யோசேப்பைப்போல மாறுவோம். ரோமர்2:7–ன்படி ‘‘சோர்ந்துபோகாமல் நற்கிரியைகளைச் செய்து, மகிமையையும், கனத்தையும் அழியாமையையும் தேடுகிறவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார்’’ என்ற வசனத்தின்படியாக, நாம் சோர்ந்து போகாமல் எப்பொழுதும் நன்மை செய்வோம்.

நன்மை செய்கிறவர்களை நாடே போற்றும் என்பார்கள். அந்தப்படியே நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நன்மைசெய்கிறவராய் எங்கும் சுற்றித் திரிந்து ‘‘நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து

வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்'' (1பேது.2:21). இக்காலத்தில் வாழ்கின்ற நீங்களும் நானும் அந்த அடிச்சுவடுகளின் மாதிரியை எடுத்துக்கொண்டு அவைகளின்படி ஒவ்வொரு நாளும் நடக்க படிக்கவேண்டும். அவர் சிலுவை வரை தம்மை தாழ்த்தி நன்மை செய்கிறவராகவே இருந்தார். அதேபோல நாமும் அவருடைய இரண்டாம் வருகை மட்டும் நற்கிரியை செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். மேலும் ''நன்மைசெய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காக தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு'' என்கிறார் பவுல் (1தீமோ.6:18,19). அந்த நித்திய வாழ்க்கைக்காக இப்பூமியிலே நாம் தொடர்ந்து நன்மை செய்யவேண்டியது அவசியமாயிருக்கிறது. மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். மேலும் ''ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்'' என்கிறான் பிசங்கி (பிர.12:14). ''நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்'' என்கிறார் பவுல் (ரோம.16:19). இந்த பவுலின் கூற்றுக்கு ஏற்ப நாம் நன்மை செய்வதில் சாலமோனைப்போல ஞானிகளாக மாறவேண்டும். அதே வேளையில் தீமையை அறியாத ஆண்டவராகிய இயேசுவைப் போலவும் இருக்கவேண்டும். ஒரு பழமொழி ஞாபகத்திற்கு வருகிறது ''களவும் கற்று மற'' என்பது நம் நாட்டாரின் பழமொழி தேவனுடைய பிரமாணமோ ''களவு செய்யாதிருப்பாயாக'' என்கிறது (யாத்.20:15). எவ்வளவு வித்தியாசம் பார்த்தீர்களா? பொய்க்கும், மெய்க்கும் உள்ள தூரத்தைப்போலதுதான், உலக பழமொழிக்கும், தேவ வசனத்துக்கும் உள்ள தூரம். ''அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ்செய்கிறதில்லை; பாவஞ்செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை'' (1யோவா.3:6).

நீங்கள் நன்மை செய்ய நாட வேண்டும். அதேவேளையில், நீங்கள் செய்யும் நன்மை தூஷிக்கப்படாதபடி பார்த்துக்கொள்ளவும் வேண்டும். ''ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச்



செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்'' (யாக்.4:17). பசியோடு வந்திருக்கும் ஒருவனுக்கு நீங்கள் ஒருவேளை போஜனங்கொடுத்து அவன் திருப்தியடைந்த பிறகு, அவன் மனது புண்படும்படி பேசினால், நீங்கள் செய்த நன்மையை அவன் உதாசினம் செய்வான் அல்லவா? ஆகையால் ''உங்கள் நன்மை தூஷிக்கப்பட இடங்கொடாதிருங்கள்'' என்கிறார் பவுல் (ரோ.14:16). நம்முடைய முற்பிதாக்களில் சிலர் நன்மை செய்ததினால் அறியாமல் தேவதூதரையும் உபசரித்ததுண்டு. ஆகையால், பசியாயிருக்கிறவர்களுக்கு ஆகாரத்தையும், வஸ்திரமில்லாதவர்களுக்கு உடையையும் கொடுக்கமறவாதிருங்கள். அன்றியும் நன்மை செய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின் மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்'' என்று எபி.13:16–ல் வாசிக்கிறோம். நாம் படிக்கவேண்டிய பாடம் நிறைய உண்டு. இந்தவிதமான பாடங்களை படித்து கற்றுத்தேறும் போது நித்திய ஜீவனை பெற்றுக்கொள்வோம். உலகப் பிரகாரமான அதிகபடிப்பு உடலுக்கு இளைப்பு. ஆனால் ஆவி ஆத்துமா சரீரத்திற்கு வேண்டிய படிப்பை பரிசுத்தவேதாகமம் கற்றுத்தருகிறது. இதைக் கற்று நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்.

## கேள்வி நேரம்

**நாம் ஏன் நன்மை செய்யவேண்டும்?**

நாம் எதைச் செய்தாலும் ஒரு நோக்கம் இருக்கவேண்டும். ஆகாயத்திலே சிலம்பம்பண்ணுகிறவர்களாக இருக்கக்கூடாது. வசனம் சொல்லுகிறது; ''ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பைவிட்டு நீங்கி, நன்மைசெய்து, சமாதானத்தைத் தேடி, அதைப் பின்தொடரக்கடவன்'' (1பேது.3:10,11). நாம் அழிவுக்கு போகிறவர்கள் அல்ல, நிலையான ஜீவனை அதாவது நீத்திய ஜீவனை சுதந்தரிக்கப்போகிறோம் ஆகையினால் பொல்லாப்புக்கு நாவையும் கபடத்துக்கு உதடுகளையும் விலக்கவேண்டும். ஏனெனில் ''தீமைசெய்து பாடநுபவிப்பதிலும், தேவனுக்குச் சித்தமானால், நன்மைசெய்து பாடநுபவிப்பதே மேன்மையாயிருக்கும்'' (1பேது.3:17).

இயேசுவும் நன்மைசெய்து பாடநுபவித்தார். இயேசுவை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இந்தவிதமான பாடுகள் வைக்கப்பட்டிருக்கிறது. அவைகளை சுமந்துகொண்டுதான் பரலோகம் செல்லவேண்டும். பரமஇளைப்பாறுதலில் பிரவேசிக்க நன்மைசெய்து பாடுபடவேண்டும். பாடுபடுகிறவர்களுக்குத்தான் பரலோகம் வைக்கப்பட்டிருக்கிறது. ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன் என்ற வசனத்தின்படி நன்மைசெய்து பாடுபட்டு தேவனைமகிமைப்படுத்துங்கள்.

## 46. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல்

## Repentance unto life

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் இயேசுவின் வல்லமையுள்ள நாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதல் – Repentance unto life. இப்புவியில் பிறந்த ஒவ்வொருவரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களானோம். எனவே பாவமன்னிப்பை பெற ஒவ்வொருவரும் மனந்திரும்ப வேண்டியது அவசியமாயிருக்கிறது. நான் மனந்திரும்பாமல் போனால் என்ன நடக்கும்? என்ற ஒரு கேள்வி உங்கள் மனதில் எழலாம். இதைக்குறித்து சத்தியவேதம் ‘‘நீங்கள் மனந்திரும்பாமல் போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள்’’என்று லூக்.13:3–ல் எச்சரிக்கிறது. யோவான் ஸ்நானனுடைய பிரசங்கத்தை தொடர்ந்து இயேசுவும் ‘‘தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்’’ என்று பிரசங்கித்தார் (மாற்.1:15). ஆண்டவருடைய பிரசங்கத்தின் முதல் செய்தியானது மனந்திரும்புங்கள் என்பதே. இன்றைய நாட்களில் ஜீவிக்கிற நமக்கும் இச்செய்தி பொருத்தமானதாகவே இருக்கிறது. இயேசுவின் சீஷர்களில் ஒருவனாகிய பேதுருவை பற்றி கேள்விப்படாதவர்களே இருக்க முடியாது என்றே சொல்லலாம். முதல் நூற்றாண்டில் அதிக வல்லமையாக எடுத்துப் பயன்படுத்தப்பட்டவன் இந்த



பேதுரு. இவனுடைய முதல் செய்தியும் மனந்திரும்புதலை பற்றியதே. ‘‘நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தை பெற்றுக்கொள்வீர்கள்’’ என்றான் (அப்.2:38). அன்றைய நாளிலே இச்செய்தியை கேட்ட ஏறக்குறைய மூவாயிரம்பேர் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள். அதைப்போல நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட நாமும் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டியது மிகவும் அவசியம். மேலும் பேதுரு தன்னுடையசெய்தியில் ‘‘உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள் என்றார் (அப்.3:20). மனந்திரும்புங்கள் என்ற செய்தியானது மனுமக்களுக்கு பரமபிதாவாகிய தேவன் இட்ட கட்டளை. அவரால் உண்டாக்கப்பட்ட நாம் இதை ஏற்று மனந்திரும்பியே ஆக வேண்டும். ‘‘என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்’’ என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லியிருந்தார் (லூக்.24:49). ஏனென்றால் ‘‘மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகலதேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது’’ (லூக்.24:47). ஆகையால் சீஷர்கள் உன்னதத்தின் பெலனைப் பெற்றுக் கொள்ள பெந்தெகொஸ்தே என்னும் நாளில் எருசலேமில் காத்திருந்தனர். அதன்பின்பு அவர்கள் மனந்திரும்புதலைப்பற்றியும் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பற்றியும் எருசலேம் தொடங்கி சகலதேசத்தாருக்கும் இயேசுவின் நாமத்தினாலே பிரசங்கிக்க ஆரம்பித்தனர். அதன் வாயிலாக இன்று நீங்களும் நானும் இயேசுவை உலக இரட்சகராக ஏற்று மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும் போது, பாவமன்னிப்பின் நிச்சயத்தை பெறுகிறோம்.

இந்த மனந்திரும்புதலானது ஒரு சாதாரண மனமாற்றமாயிருக்க கூடாது. ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலாக காணப்படவேண்டும். முதல் நூற்றாண்டில் சீஷர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தினால் சிதறப்பட்டவர்கள் சுவிசேஷ வசனத்தை யூதர்களுக்கேயன்றி மற்ற ஒருவருக்கும் அறிவியாமல் இருந்தார்கள். அத்தருணத்தில் கர்த்தர் பேதுருவை ஒரு தரிசனத்தின் மூலம்

உணர்த்தினார். அவனோ அவைகளின் கருத்தை புரிந்துகொண்டு “ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலைத் தேவன் புறஜாதியாருக்கும் அருளிச் செய்தார் என்று சொல்லி” அவர்களோடு சேர்ந்து தேவனை மகிமைப்படுத்தினான் (அப்.11:18). உலகப்பிரகாரமாகவோ அல்லது உலகத்தில் நம்தேவைகள் சந்திக்கப்படவேண்டியோ நாம் மனந்திரும்புவதில் பிரயோஜனமில்லை “நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள்” என்ற அப்.13:48–ன் படி நித்திய ஜீவனுக்கு ஏதுவாக நமது மனந்திரும்புதலானது இருக்கவேண்டும். தேவனுடைய கிருபையை இழந்த ஏசாவை நீங்கள் நன்கு அறிவீர்கள். அவன் ஒருவேளைப் போஜனத்துக்காக தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்டான். “பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்திரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள். அவன் கண்ணீர்விட்டு கவலையோடே தேடியும் மனம்மாறுதலைக் காணமாற்போனான் (எபி.12:17). அதைப்போல இயேசுவை 30 வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்டு காட்டிக் கொடுத்த யூதாசும் மனஸ்தாபப்பட்டு ஜீவனுக்கேதுவாக மனந்திரும்பாமல் “பாவத்தின் சம்பளம் மரணம்” என்ற வசனத்திற்கேற்ப நான்று கொண்டு செத்தான். இவைகளெல்லாம் நமக்கு திருஷ்டாந்தகளாயிருக்கின்றன. இவர்கள் எல்லாம் ஒரு காலகட்டத்தில் நல்லவர்களாக இருந்தவர்கள்தான், பின்பு பாவத்துக்கு அடிமைப்பட்டு ஜீவனுக்கேதுவான மனமாறுதலைக் காணாமற்போனார்கள் என்று வேதம் சொல்லுகிறது. “ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டு, பரமஈவை ருசிபார்த்தும் மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்” என்று வசனம் மிகத்தெளிவாக போதிக்கிறது (எபி.6:4–6). இன்றும் அந்தப்படியே நடந்து வருகிறது. இயேசுவை மறுதலித்தப்போனவர்களும், சபையை உதாசினம் செய்துவிட்டு போனவர்களும் புதுப்பிக்கக்கூடாமற்போய்விடுகிறார்கள். அதேவேளையில், மனந்திரும்புதலின் செய்தியை கேட்டு குணப்பட்டவர்கள் அதிகமிருக்கிறார்கள். “யோனாவின் பிரசங்கத்தை கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள். இதோ யோனாவிலும் பெரியவர் இங்கே



இருக்கிறார்” என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார் (லூக்.11:32). சிலுவையில் தொங்கிய கள்ளர்களில் ஒருவன் இயேசுவைப்பற்றியும் அவருடைய உபதேசத்தைக் குறித்தும் கேள்விப்பட்டிருக்கக் கூடும். ஆகவே அவன் “ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்” (லூக்.23:42). இயேசு அவனுடைய ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை அறிந்து “இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” என்றார் (லூக்23:43). மாயவித்தைகளினால் ஜனங்களை பிரமிக்கப்பண்ணிக்கொண்டிருந்த சீமோன் பிலிப்புவின் பிரசங்கத்தை கேட்டு மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டான். அதன்பின்பு பேதுருவின் மூலம் பரிசுத்த ஆவி தந்தருளப்படுகிறதாக கண்டு அந்த வரத்தை பணத்தினாலே சம்பாதித்து கொள்ளலாம் என்று நினைத்தான். ஆகையால் பேதுரு சீமோனை பார்த்து, நீ உன் துர்க்குணத்தை விட்டு மனந்திரும்பி தேவனை நோக்கி வேண்டிக்கொள், ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம் என்றான் (அப்.8:22). இதை அறிந்த மாயவித்தைக்காரனாகிய சீமோன் ஜீவனுக்கேதுவாக மனந்திரும்பி, “நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு, நேரிடாதபடிக்கு எனக்காக கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள்” என்றான் (அப்.8:24). இன்றைய நாட்களில் இந்த சீமோனைப்போல ஞானஸ்நானம் பெற்று அதன் பின்பு பாவம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். பேதுரு சீமோனின் தவறை உணர்த்தும்போது, அவன் மனந்திரும்பி எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள் என்றான். இன்றைக்கு இருக்கிறவர்கள் நான் ஒன்றும் அப்படி செய்யவில்லை என்று சொல்லி தன் பாவத்தை மறைக்க முயற்சிப்பார்கள். அனனியா சப்பீராளைப்போல குற்றத்தை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். இதைக்குறித்து வேதம் “தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்” என்கிறது (நீதி.28:13).

பவுல் தன்னுடைய செய்தியில்: “தமஸ்குவிலும் எருசலேமிலும் யூதேயா தேசமெங்குமுள்ளவர்களிடத்திலும் பின்பு புறஜாதியாரிடத்திலும்

நான் போய் அவர்கள் தேவனிடத்திற்கு மனந்திரும்பிக் குணப்படவும் மனந்திரும்புதலுக்கேற்ற கிரியைகளைச் செய்யவும் வேண்டுமென்று அறிவித்தேன் என்கிறான் (அப்.26:20). மனந்திரும்புதலுக்கேற்ற கிரியை இன்றைய சபைகளில் காணப்படவேண்டும். நாள் பார்க்கிறார்கள், குறிகேட்கிறார்கள், பிறருடைய பொருளை இச்சிக்கிறார்கள், இன்னும் அநேக பாவங்களைச் செய்துகொண்டு மனந்திரும்பி விட்டோம் என்றால் அது சரியான மனந்திரும்புதல் ஆகுமா? கர்த்தர் ஒரு உவமையின் மூலம் விளக்குகிறார்: தன் ஆஸ்திகளை அழித்துப்போட்ட இளயமகன் "தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று" மனந்திரும்பி தகப்பனிடம் வந்து அறிக்கையிட்டான் (லூக்.15:21). இப்படிப்பட்ட மனந்திரும்புதலுக்கேற்ற கிரியை சபைகளில் எழும்பவேண்டும். அன்பான சகோதரனே, சகோதரியே "ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2பேது.3:9). ஒரு வேளை இன்று கர்த்தருடைய வருகை இருக்குமானால் உன் நிலை என்னவாகும்? சற்று சிந்தித்துப்பார். எல்லாரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். தேவன் உங்களுக்கு நாட்களை கூட்டி வழங்கியிருக்கிறார். ஆகையால் மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள். "மனந்திரும்ப அவசியமில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைக் குறித்துச் சந்தோஷம் உண்டாகிறதைப் பார்க்கிலும் மனந்திரும்புகிற ஒரே பாவயினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்கிறார் நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து (லூக்.15:7). இவ்வசனம் சரியான மனந்திரும்புதலைப் பற்றி பேசுகிறது. அப்படிப்பட்ட மனந்திரும்புதல் இப்பூமியில் உண்டாகும் போது பரலோகமே சந்தோஷப்படுகிறது. அங்குள்ள தூதர்களும் சந்தோஷப்படுகிறார்கள். பிதாவாகிய தேவன், ஒரு ஆத்துமா பாவத்தை விட்டு மனந்திரும்பிவிட்டதே என்ற சந்தோஷம் அடைகிறார். இவ்வளவு பரந்து விரிந்த உலகத்தில் ஒரு ஆத்துமா மனந்திரும்பும்படியாக பரலோகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. அன்பானவர்களே, உங்களுடைய பாவங்களுக்காக



மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது கர்த்தரால் சபையில் சேர்க்கப்படுவீர்கள். சர்தை சபைக்கு கர்த்தர் கூறும் வசனத்தைப் படியுங்கள்; "நீ கேட்டு பெற்றுக் கொண்ட வகையை நினைவு கூர்ந்து, அதைக் கைக்கொண்டு மனந்திரும்பு நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல உன்மேல் வருவேன், நான் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய்" (வெளி.3:3). ஆம் பிரியமானவர்களே, கர்த்தரின் வருகையை நாம் அறியோம் நாம் கேள்விப்பட்ட காரியத்தில் நம்மை சரி செய்துகொண்டு, அவருடைய அடிச்சுவடுகளின் மாதிரியை பின் தொடர்ந்து, விழித்திருந்து, நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளப்போகிற நாம் ஜீவனுக்கேதுவான மனந்திரும்புதலை கிரியைகளின் மூலம் அநுதினமும் காண்பிப்போம்.

**கேள்வி நேரம்**

**மனமாறுதலில் என்ன நடைபெறுகிறது?**

ஒரு பாவியினுடைய வாழ்வில் அநேக மாற்றம் ஏற்படுகிறது. ஒன்று பாவத்திலிருந்து இயேசுவின் இரத்தத்தினால் விடுவிக்கப்படுகிறான். பாவத்திற்கு அடிமையாக இருந்த அவன் இப்பொழுது நீதிக்கு அடிமையாகிறான். மற்றொன்று நற்கிரியைகளைச் செய்யத்தக்கதாக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்படுகிறான். மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ள மனகனாக மாற்றப்படுகிறான். பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்கிறார் (ரோம.12:2). மனம் புதிதாகும்போது ஜீவியம் மாறுகிறது. அங்கே கிறிஸ்து வாசம் பண்ணுகிறார். கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை இருக்கிறது. நாளுக்கு நாள் அந்த ஆத்துமா மறுரூபமாகிறது. முழுவதுமாக பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படும்போது இவ்விதமான நிகழ்வு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட மனமாறுதலை ஒவ்வொருவரும் அடையவேண்டும். இதற்காகவே இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இப்படிப்பட்ட மனமாறுதலைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் அவரைப்போல மறுரூபமாக்கப்படுகிறார்கள் என்பதே உண்மை.

# 47. தேவனுடைய சித்தம்

## Will of God

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்றிய நமது ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். தேவனுடைய சித்தம் – Will of God. இந்த உலகத்திலே வாழ்கின்ற ஒவ்வொருவரும் தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளவேண்டியது மிகவும் அவசியமாயிருக்கிறது. ஒருவர் தேவனுடைய சித்தத்தை அறியாமல் அவருடைய வழியில் நடக்கிறேன் என்று சொல்லி அவருடைய சித்தம் செய்யாதிருந்தால் பிரயோஜனமில்லை. தேவன் தம்முடைய சித்தத்தை வேதாகமத்தின் மூலமாகவும், அவரால் அனுப்பப்பட்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும் வெளிப்படுத்தியிருக்கிறார். தேவனுடைய சித்தத்தை எபிரெயு கிரேக்கு பாஷையில் 'Thelema of Elah' என்று படிக்கிறோம். நாம் பார்க்கிற எல்லாவற்றையும் தேவனாகிய கர்த்தர் தம்முடைய விருப்பத்தின்படியாக சிருஷ்டித்திருக்கிறார். அவர் சிருஷ்டித்த ஒன்றை மாற்றியமைக்கவோ அல்லது திருத்தியமைக்கவோ ஒருவருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. ''தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங்கூடாது; மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்து வருகிறார்'' என்று பிரசங்கி சொல்லுகிறான் (பிர.3:14). ஆகவே தேவனுக்குப் பயந்து அவருடைய விருப்பத்தை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாயிருக்கிறோம். மனிதன் தேவசாயலில் சிருஷ்டிக்கப்பட்டபடியினால் தேவனாகிய கர்த்தர் அவனில் அன்பு கூர்ந்து அதாவது, ''கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத் தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்'' என்ற அப்.17:27–ம் வசனப்படி



மனுமக்களாகிய நாம் அவரை எப்படியாகிலும் தேடி கண்டுபிடிக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவராயிருக்கிறார். இன்றைய மானிட வர்க்கம் தங்கள் விருப்பத்தின்படியாக ஊறும் பிராணிகள், காட்டு மிருகங்கள், நாட்டு மிருகங்கள் போன்றவைகளுக்கு ஒப்பாக தேவனை உருவாக்கி தொழுது கொண்டு வருகிறார்கள். தேவனை ஒரு மிருகத்திற்கு ஒப்பாக மாற்றி தொழுது கொள்ளும் இம்மானிடவர்க்கத்தின் தொழுகையில் தேவன் விருப்பமுள்ளவராயிருப்பாரா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுவதைக் கவனியுங்கள். ''நீங்கள் அறியாததைத் தொழுது கொள்ளுகிறீர்கள்; நாங்கள் அறிந்திருக்கிறதைத் தொழுது கொள்கிறோம். உண்மையாய் தொழுது கொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளும் காலம் வரும், அது இப்பொழுதே வந்திருக்கிறது. தம்மை தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் என்றார்'' (யோவா.4:22–24). இங்கு தமது விருப்பத்தையோ அல்லது நம்முடைய விருப்பத்தையோ அவர் குறிப்பிடவில்லை. பிதாவின் விருப்பத்தை இயேசு குறிப்பிடுகிறார். மேலும், ''உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக'' என்று மத்.6:10–ல் தம்முடைய சீஷர்களுக்கு ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். அதில் 'உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல' என்ற ஒரு வாசகத்தைப் படிக்கிறோம். அப்படியென்றால் பரலோகத்திலே செய்யப்படுகிற தொழுகைக்கு ஒப்பானதாக நாம் செய்யும் தொழுகையும், செயல்பாடுகளும் அமையவேண்டும்.

இன்றைய சபைகளில் உலகத்தால் உண்டான எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு தேவனை தொழுது கொள்ளுகிறார்கள். அது ஆவிக்குரிய தொழுகையல்ல, ஆவிக்குரிய தொழுகைக்கு, தேவன் நமக்குத் தந்தருளின புதிதான ஆவியும், உண்மையுள்ள சத்தியமும் போதுமானதாக இருக்கிறது. ஆவியோடு என்றால் குதித்தும், கூச்சலிட்டும் தொழுது கொள்வது என்று கருதுகிறார்கள். ஆவி அமைதலுள்ளது. அசுத்த ஆவிகள்

தான் குதித்து கூச்சலிட்டன என வேதத்தில் பார்க்கிறோம். மேலும் உயிரில்லாத வாத்தியக் கருவிகளின் இசையையோ அல்லது மனிதக் கைகளினால் செய்யப்படும் பணிவிடைகளையோ, கைதட்டலையோ தேவன் ஏற்றுக் கொள்வதில்லை. தேவனுடைய விருப்பமெல்லாம் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டுமென்பதே! ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கெத்சமனே என்னப்பட்டட இடத்தில் ஜெபிக்கும்போது ''முகங்குப்புற விழுந்து: என் பிதாவே, இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்'' (மத்.6:39). சகல அதிகாரமும் ஆண்டவராகிய இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் அவரோ உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்றார். ஒருமுறை சீஷர்களோடு படவில் சென்று கொண்டிருக்கும்போது படவு காற்றினாலும், கடல் கொந்தளிப்பினாலும் அலைவுபட்டபோது காற்றைப் பார்த்து இரையாதே அமைதலாயிரு என்றார். அந்தப்படியே அமைதல் உண்டாயிற்று திமிர்வாதக்காரனைப் பார்த்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு போ என்றார். அந்தப்படியே எழுந்து போனான். மேலும் மரித்துப்போன லாசருவின் கல்லறையைப் பார்த்து லாசருவே வெளியே வா என்றார். மரித்து நான்கு நாட்களாகி அடக்கம் செய்யப்பட்ட லாசரு வெளியே வந்தான். இன்னும் எத்தனை எத்தனையோ அற்புதங்களைச் செய்த ஆண்டவராகிய இயேசு அவருக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரத்தை (பாடுகளை) நிறைவேற்றத்தக்கதாக மேலுள்ள வசனத்தில் 'இந்தப் பாத்திரம்' என்னை விட்டு நீங்கக் கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று மூன்று முறை ஜெபித்ததை நாம் வாசிக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் தேவனுடைய திருசித்தத்தை நிறைவேற்ற அப்பா, நான் என்ன செய்ய சித்தமாயிருக்கிறீர் என்று ஜெபிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஜெபித்து, அவருடைய திருசித்தத்தை வேதாகமத்தின் வாயிலாக புரிந்து ஒவ்வொரு நாளும் நிறைவேற்ற பிரயாசப்படவேண்டும்.

நம்மில் அநேகர் ஆசீர்வாதம் கிடைக்க கிடைக்க என்னை



மென்மேலும் தேவன் ஆசீர்வதிக்கிறார். இது அவருடைய சித்தம் என்று சொல்லி பலருக்கு பறைசாற்றுவார்கள். ஆனால் கஷ்டங்களோ, கவலைகளோ, வேதனைகளோ வந்தவுடன் தேவன் எங்களைக் கைவிட்டார் என்று சொல்லி தேவனை தூஷிக்கிற அளவுக்கு மாறி விடுகிறார்கள். கஷ்டம் வந்தவுடன் யோபுவின் மனைவி வாயிலிருந்து வந்த வார்த்தையும் இப்படித்தானிருந்தது. ''நீர் இன்னம் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரோ? தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள்'' (யோபு2:9). ஆனால் உத்தமனாகிய யோபுவோ அப்படிச் செய்யவில்லை; ''நீ பைத்தியக்காரி பேசுகிறதுபோல பேசுகிறாய்; தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான்; இவையெல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை'' (யோபு2:10). யோபு தனக்கு வந்த இழப்பையும், கஷ்டத்தையும் நோயையும் பொருட்படுத்தாமல் தேவசித்தத்திற்கு தன்னை ஒப்புவித்து பொறுமையுடன் காத்திருந்து இரட்டிப்பான நன்மையைப் பெற்றுக்கொண்டான். இந்த யோபுவைப்போல தேவசித்தத்திற்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். தாவீது தேவனுக்கேற்ற தாசனாக இருந்தபடியால், சவுலுடைய ராஜ்யபாரத்தைப் பிடுங்கி தாவீதுக்குக் கொடுத்தார். இப்படிச் செய்வது தேவனுக்கு ஏற்றதாய் இருந்தது. அவனுடைய ராஜ்யபாரத்தில் சவுலின் வம்சத்தானாகிய சீமேயி என்பவன் தாவீதுக்கு விரோதமாக தூஷித்து, தாவீது மேலும் அவனுடைய ஊழியக்காரர் மேலும் கற்களை எறிந்தார்கள். இதைக் கண்ட ''அபிசாய் ராஜாவை நோக்கி: அந்த செத்த நாய் ராஜாவாகிய என் ஆண்டவனை தூஷிப்பானேன்? நான் போய் அவன் தலையை வாங்கிப் போடட்டும் என்றான். அதற்கு ராஜா அவன் என்னைத் தூஷிக்கட்டும்; தாவீதைக் தூஷிக்க வேண்டும் என்று கர்த்தர் அவனுக்குச் சொன்னார்'' என்றான் (2சாமு.16:9–10). தாவீது தான் ஒரு ராஜாவாகவும், சகல அதிகாரமுடையவனாகவும் இருந்தும் இந்த இடத்திலே தேவசித்தத்திற்குத் தன்னை அர்ப்பணித்து நடப்பதெல்லாம் தேவனுடைய அனுமதியின் பேரிலே நடக்கிறது என்று தன்னுடையவர்களுக்குச் சொன்னான். நீங்கள் இங்கே சிந்திக்கவேண்டும். உங்களை யாராவது தூஷித்து அல்லது துன்பப்படுத்தும்போது தேவன் அவர்களுக்கு அனுமதி

கொடுத்தார் என்று நீங்கள் அமைதலோடு இருந்திருக்கிறீர்களா? நிச்சயமாக இருந்திருக்கமாட்டீர்கள்! பழிக்குப் பழி வாங்கியிருப்பீர்கள். ''பழிவாங்குதல் எனக்குரியது நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடம் கொடுங்கள். அன்றியும் உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங்கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் அலையின்மேல் குவிப்பாய். நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு'' (ரோம.12:19–21).

அன்பானவர்களே, தேவன் தம்முடைய சித்தத்தை கிறிஸ்தவர்கள் மூலம் செயல்படுத்திவருகிறார் என்பதை அறிவீர்களா? ''நீங்கள் நன்மை செய்கிறதினாலே புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது'' (1பேது.2:15). ஆகையினாலே நாம் நன்மை செய்யவும், நற்கிரியைகளைச் செய்யவும் போதிக்கப்படுகிறோம். ''ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்'' (எபே.2:10). நாம் புதிய மனுஷனாக கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டதின் நோக்கம்: நற்கிரியைகளைச் செய்வதற்கே ஒழிய மற்றொன்றிற்கல்ல. இன்றைய உலகம் கிறிஸ்தவர்களை ஏளனமாகப் பார்க்கிறது. காரணம், அதிலுள்ள ஆசீர்வாதங்களை ருசிபார்க்காததே! இந்தச்சிறியரில் ஒருவனையும் அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்திலே என் பரம பிதாவின் சமூகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' என்றார் (மத்.18:10). பெற்ற தாயும் தகப்பனும் தன் பிள்ளைகளை மறக்கலாம். ஆனால் அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோகத்தில் உண்டு. ''ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆகிலும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல் அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது'' என்கிறார் நமது ஆண்டவர்



(மத்.10:29,30). அநேக விஷயங்களில் நம்மைக் குறித்து நாமே அறியாதவர்களாயிருக்கிறோம். ஆனால் தேவன் நம்மைக் குறித்து கரிசனையுள்ளவராயிருக்கிறார். அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்கும்போது அவருக்கு உகந்தவர்களாக மாறுவோம். ''தேவனே தம்முடைய தயையுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராய் இருக்கிறார்'' (பிலி.2:12,13). ஆகவே அவருடைய விருப்பத்தையும் செய்கையையும் வேதாகமத்தின் துணைகொண்டு புரிந்துகொள்ளுங்கள்.

**கேள்வி நேரம்**

**தேவ சித்தம் செய்யாதவர்களின் ஜெபம் நிராகரிக்கப்படுமா?**

இயேசு சொல்கிறார்: ''பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'' என்று மிக தெளிவாக சொல்லியிருக்கிறார் (மத்.7:21). ஜெபிக்கிறவர்கள் முதலாவது நாம் வேதவாக்கியத்தின்படி ஜீவிக்கிறோமா? என்பதுதான் முக்கியம். பசியாயிருக்கிற ஒருவனை பார்த்துவிட்டு கண்டுகொள்ளாமல் வழக்கம்போல் ஏறெடுக்கும் ஜெபத்தை சொல்லிக்கொண்டே இருந்தால் அவரை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று கூப்பிடுகிறவர்களாகவே இருப்பீர்கள். ஆக நாம் செய்யவேண்டுவதென்ன? ''உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்'' (யாக்.2:8). இதை நீங்கள் செய்கிறீர்களா? அப்படிச்செய்தால் பிரமாணத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்பீர்கள், தேவனுடைய சித்தமும் நிறைவேற்றப்படும். அப்பொழுது உங்களுடைய ஜெபமும் தேவசமுகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

## 48. பெருமை

## Pride

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கும் நமது ஆண்டவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். பெருமை – Pride. மனுஷனை தீட்டுப்படுத்தும் பாவங்களில் பெருமையும் ஒன்று. உலகத்தில் வாழ்கின்ற ஜனங்களில் தொண்ணூறு சதவிகிதத்தினர், பெருமையுடன் வாழவே விரும்புகின்றனர். காரணம் மற்றவர்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, அவர்களை விட மேலான நிலைக்கு வரவேண்டும் என்று ஒவ்வொரு நாளும் மனிதன் பிரயாசப்படுகிறான். இந்த எண்ணம் சரியானதுதானா? என்று அவன் சற்றும் சிந்திப்பதில்லை. அநேக கிறிஸ்தவர்களும் பெருமைக்கு அடிமையாகிவிடுகின்றனர். பெருமையானது மனிதனுடைய இருதயத்தில் வளர்ந்து, ஆலமரமாக விழுதுவிட்டு காலப்போக்கில் போட்டியை ஏற்படுத்தி விடுகிறது. போட்டி தலைதூக்கும்போது வன்முறைகளும், கொலைகளும் ஏற்படுகின்றன. ''பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும்'' என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து குறிப்பிடுகிறார் (மாற்.7:23). முதலாவது நாம் வாழ்கின்ற வாழ்க்கை கர்த்தருக்குப் பிரியமானதாக இருக்கிறதா என்பதை சீர்தூக்கிப்பார்க்கவேண்டும். ''ஏனென்றால் பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்'' (1பேது.5:5). தன்னைத்தான் பெருமை பாராட்டிக் கொண்டோ அல்லது மற்றவர்களால் புகழப்படும் வீண் புகழ்ச்சியை ஏற்றுக்கொண்டோ நாம் வாழும்போது தேவன் நமக்கு எதிர்த்து நிற்கிறார் என்பதை நாம் ஒருநாளும் மறந்துபோகக்கூடாது. ''ஏரோது ராஜவஸ்திரம் தரித்துக்கொண்டு, சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்து, அவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினான். அப்பொழுது ஜனங்கள் இது மனுஷசத்தமல்ல, இது தேவசத்தம் என்று ஆர்ப்பரித்தார்கள். அவன் தேவனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினால் உடனே கர்த்தருடைய தூதன் அவனை அடித்தான். அவன் புழு புழுத்து இறந்தான்'' என அப்.12:21–23–ல் வாசிக்கிறோம். இவனுடைய மரணத்துக்குக் காரணம் என்ன? ஜனங்கள் தன்னை புகழுகிற புகழ்ச்சியை அவன் பெருமையுடன் ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு மகிமையை



செலுத்தாதபடியால் புழு புழுத்து இறந்தான். ''மனுஷனுக்கு அவனுக்கு உண்டாகும் புகழ்ச்சியே சோதனை'' என்ற நீதி.27:21–ன்படி ஏரோது ராஜாவுக்கு நடந்தேறியது. ஒருவேளை நாமும் இந்த வீணான புகழ்ச்சியை விரும்புவோமானால் நமக்கும் அவ்விதமாகவே சம்பவிக்கும். குடி குடியைக் கெடுக்கும் என்ற வாசகத்தை அநுதினமும் வாசித்துக்கொண்டே குடிக்கிறவர்களை பார்த்து இருப்பீர்கள். அதைப்போல வேதவசனங்களை பலமுறை வாசித்தும் பெருமை அடித்துக்கொண்டு வாழ்கிறவர்கள் ஏராளம். குடிபழக்கத்தை எப்படி தேவன் ஏற்படுத்தவில்லையோ, அப்படியே பெருமையையும் தேவன் ஏற்படுத்தவில்லை. இவைகளெல்லாம் பிசாசினாலுண்டானவைகள் என வேத வசனம் சொல்லுகிறது. ''மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும் ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள் உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான் (1யோவா.2:16,17). சத்துரு உலகத்தில் களைகளை விதைக்கிறான் இவைகளின் முடிவோ சுட்டெரிக்கப்படவது. இந்த உலகத்தில் ஆதிக்கம் செய்யும் பிசாசையும் அவனுடைய கிரியைகளையும் அழிக்கும்படிக்கு அவர் சிலுவையிலே வெற்றி சிறந்தார். ''மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார்'' (எபி.2:14,15). ஆண்டவராகிய இயேசு இந்த உலகத்தில் பிரவேசிக்கும்போது பெருமையோடு வாழ்கிற வாழ்க்கையை அவர் தெரிந்து கொள்ளாமல் ''தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர்சாயலானார்'' என்று பிலி.2:6,7–ல் படிக்கிறோம். உங்களுடைய தெரிந்துகொள்ளுதல் எப்படிப்பட்டவையாக இருக்கிறது?

இயேசுவை சோதித்த பிசாசு தன் பெருமைக்கு அடிபணிய வைக்க முயற்சித்தான். ''உலகத்தின் சகலராஜ்யங்களையும் அவைகளின்

மகிமையையும் அவருக்குக் காண்பித்து; நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்து கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான். அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே'' என்றார் (மத்.5:8–10). இன்று உலகத்தின் மகிமைக்கு மயங்காதவர்களே இல்லை என்றே சொல்லலாம். ஆனால் இயேசுவையோ பிசாசு தன் இச்சைக்கு இழுக்க முடியவில்லை. இயேசுவோ பிசாசை அங்கிருந்து துரத்தியடித்தார் என வாசிக்கிறோம். ''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' (யாக்.4:7). இன்றைக்கு அநேகர் பிசாசுக்கும் அவனால் கொடுக்கப்படும் பெருமைக்கும் அடிபணிந்து விடுகின்றனர். ஐசுவரியவான், லாசரு சம்பவத்தைக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஐசுவரியவானோ இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். அதே நாட்களில் லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து அவனுடைய மேஜையிலிருந்து விழுந்த துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான். நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. ஒரு நாளில் அந்தத் தரித்திரன் மரித்து தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டு பாதாளத்திலே கிடத்தப்பட்டான். அவன் பாதாளத்திலே வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான், அப்பொழுது அவன் தகப்பானகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும். இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அனுபவித்தான். அதை நினைத்துக்கொள். இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய்'' என்றார் (லூக்.16:19–25). இந்த ஐசுவரியவான் பூமியில் இருக்கும் போது தரித்திரன் லாசருவை



நினைக்கவில்லை அவன் தனக்காகவே சம்பிரமமாய் வாழ்ந்து கொண்டிருந்தான். மரித்த பின்பு லாசரு விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து என் நாவைக் குளிரப்பண்ணும் என்று ஆபிரகாமை பார்த்து கேட்கிறான். லாசருவை பூமியில் நினைக்காத ஐசுவரியவான் நித்தியத்திலே லாசருவின் உதவியை நாடுகிறான். என்ன ஆச்சரியம்! இவனைப்போல சுகபோகமாய் பெருமையோடு தனக்காகவே வாழ்ந்து தன் ஆத்துமாவை அழித்துப்போடுகிற ஜனங்களைப் பார்க்கிறோம். ''அவனவன் தனக்கானவைகளையல்ல பிறருக்கானவைகளையும் நோக்குவானாக'' என்ற பிலி.2:4 வசனத்தை அநுதினமும் நினைவுகூர்ந்து பெருமையான வாழ்க்கையை வெறுத்து, நம்மைப்போல உள்ள மற்றவர்களை நினைவுகூர்ந்து, நம்மால் ஆன உதவிகளை அவர்களுக்குச் செய்து, லாசருவைப்போல எந்த நிலைமையிலிருந்தாலும் பொறுமையுடனிருந்து தேவனுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள். ''பெருமையுள்ளவனைப் பார்க்கிலும் பொறுமையுள்ளவன் உத்தமன்'' (பிர.7:8).

நேயர்களே, அகாஸ்வேரு ராஜாவின் நாட்களில் பெருமையுடனிருந்த ஆமானுக்கு என்ன சம்பவித்தது தெரியுமா? அவன் வேலைபார்த்த அதே ராஜாவின் அரண்மனையில் நேபுகாத்நேச்சார் காலத்தில் சிறைபிடிக்கப்பட்டவர்களில் ஒருவனாகிய மொர்தெகாய் என்னும் பேருள்ள ஒரு யூதன் இருந்தான். அவனோ ஆமானை மதியாமலும் அவனுக்கு வணக்கம் செலுத்தாமலும் இருந்துகொண்டு வந்தான். இதனால் மொர்தெகாய் மீது எரிச்சல் உள்ளவனானான். ஒரு முறை எஸ்தர் தான் செய்த விருந்திற்கு ராஜாவும், ஆமானும் வர வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தாள். அந்தப்படியே அந்நாளிலே ராஜாவும் ஆமானும் விருந்துண்டு சந்தோஷமாயிருந்தார்கள். பின்னும் எஸ்தர் இன்னும் ஒருமுறை தாங்களுக்கு செய்யப்போகிற விருந்துக்கு வரவேண்டும் என்றாள். இதை நினைத்து அன்றையதினம் ஆமான் சந்தோஷமும் மகிழ்ச்சியுமாய்ப் புறப்பட்டு தன் குடும்பத்தாருக்கு இதை பெருமையுடன் அறிவித்து ராஜா தன்னை பெரியவனாக்கி தன்னைப் பிரபுக்கள் மேலும் ராஜாவின் ஊழியக்காரர் மேலும் உயர்த்தினார். இருந்த போதிலும் ராஜாவின் அரமனைவாசலில் உட்கார்ந்திருக்கிற அந்த யூதன் மொர்தெகாயை நான் காணுமளவும்

அவையெல்லாம் எனக்கு ஒன்றுமில்லையென்றான். அப்பொழுது அவன் மனைவியும், சிநேகிதர்களும் ஐம்பது முழ உயரமான ஒரு தூக்குமரத்தை செய்து அந்த மொர்தெகாயை தூக்கிப்போடு என்று ஆலோசனை கொடுத்தனர். இது ஆமானுக்கு நலமாக கண்டதினால் அந்தப்படியே ஒரு தூக்கு மரத்தை செய்து தன் வீட்டண்டை நாட்டிவைத்தான். இரண்டாம் முறை ஆமான் விருந்திற்கு அழைக்கப்பட்டபோது சந்தோஷத்துடனும், பெருமையுடனும் சென்றான். ராஜாவோ தனக்கு விரோதமாக தன்மேல் கைபோடப் பார்த்த இரண்டு பிரதானிகளைப் பற்றிய செய்தியை மொர்தெகாய் அறிவித்தான் என்று நடபடிபுஸ்தகத்தில் எழுதியிருக்கிறதை வாசித்து அதை தமக்கு அறிவித்த மொர்தெகாய்க்கு ஒன்றும் செய்யப்படவில்லை என்பதை அறிந்து யோசித்துக்கொண்டிருக்கும்போது அங்கே அரமனை முற்றத்திலே வந்து நின்று கொண்டிருந்த ஆமானை அழைத்து, ராஜா கனம் பண்ணவிரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்படவேண்டும் என்று கேட்டான். அதற்கு ஆமான் என்னையன்றி யாரை ராஜா கனம் பண்ணவிரும்புவார் என்று தன் மனதிலே நினைத்து ராஜாவுக்கு பிரதியுத்தரமாக ராஜ வஸ்திரம் தரித்து, ராஜா ஏறுகிற குதிரையிலே ஏற்றி நகரவீதியில் உலாவும்படி செய்யப்படவேண்டும் என்றான். நீ அந்தப்படியே ராஜ அரண்மனையின் வாசலில் உட்கார்ந்திருக்கிற யூதனாகிய அந்த மொர்தெகாய்க்கு செய் என்றார். அந்தப்படியே ஆமான் மொர்தெகாய்க்கு செய்தான். அதன்பின்பு ராஜாவுடன் ஆமான் எஸ்தர் அழைத்த இரண்டாம் விருந்துக்கு வந்தான். விருந்து வேளையில் எஸ்தரின் கோரிக்கை என்னவென்று ராஜா கேட்டார். அவளோ யூதருக்கு விரோதியான துஷ்ட ஆமானை கைகாட்டினாள். அன்றைய தினமே ஆமான் மொர்தெகாய்க்கு ஆயத்தப்படுத்தி வைத்த தூக்குமரத்திலே ஆமானை தூக்கிப்போட ராஜா உத்தரவிட்டார். ஆமானுடைய பெருமைக்கு கிடைத்த பரிசாக இது அமைந்தது. ''படுகுழியை வெட்டுகிறவன் தானே அதில் விழுவான்'' என்ற நீதி.26:27–ன் படி அவனுக்கு நடந்தேறியது. பிரியமான சகோதரனே, சகோதரியே உன் வாழ்வில் நீ எப்படி இருக்கின்றாய்? பெருமை உள்ளவர்களுக்கு கர்த்தர் எதிர்த்து நிற்கிறார். நீ பெருமையான வாழ்வை விரும்புவாயானால் உனக்கு தேவனே எதிராகயிருப்பார். உலகத்திலே



பிசாசினால் உண்டாக்கப்பட்ட பெருமையை நீ வெறுத்து, கர்த்தர் சொல்லும் பொறுமையை வாஞ்சித்து, யோபுவைப்போல பொறுமையாக இருந்துகொள்வாயானால் உனக்கு வரக்கூடிய சோதனைகளிலிருந்து அவர் உன்னைக் காப்பார்.

**கேள்வி நேரம்**

**பெருமையாக வாழ்வதால் என்ன நன்மை கிடைக்கிறது?**

ஒரு நன்னையும் கிடைக்கப்போவதில்லை. ஆனாலும், எல்லோருமே பெருமையாக வாழவே விரும்புகின்றனர். மற்றவர்களுக்கு நான் சலைத்தவனா? என்ற எண்ணம் இருக்கும் வரை மெய்யான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளமுடியாது. முதலாவது தான் ஒன்றுமில்லை என்ற முடிவுக்கு வரவேண்டும். நாம் காண்கிற எல்லாவற்றையும் நம்முடைய பிதாவாகிய தேவன் உண்டாக்கினார். நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை இதிலிருந்து ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். அப்படியிருக்கும்போது, நாம் பெருமைகொள்ளவேண்டியதற்கு என்ன இருக்கிறது? ''உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்'' என்ற 1யோவான்2:17–ன் படி தேவனுடைய சித்தம் செய்யும்படியாக அர்ப்பணிக்கும்போது அநேக நன்மைகளை நீங்கள் பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 49. எழுதியிருக்கிறபடி
## As it is written

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் பரிசுத்தர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். எழுதியிருக்கிறபடி – As it is written. உலகத்திலுள்ள அனைவருக்கும் தெரிந்த புத்தகம் எதுவாகத்தானிருக்கமுடியுமென்றால், அது பரிசுத்த வேதாகமம் ஒன்றாகத்தானிருக்க முடியும். அதில் எழுதியிருக்கிறபடி நடந்திருக்கிறது, நடந்து கொண்டிருக்கிறது, இனிமேல் நடக்கவும் போகிறது.

இப்படிப்பட்ட காலகட்டங்களின் நிகழ்வுகளை வேறே எந்த புத்தகத்திலும் நாம் காணமுடியாது. இது தேவனால் கொடுக்கப்பட்டபடியால் நேற்றும் இன்றும் என்றும் தனிச்சிறப்புடன் விளங்கக்கூடியதாயிருக்கிறது. அநேகர் கேட்கக்கூடிய கேள்வி: இயேசுவை ஏன் சிலுவையில் அறைந்து கொன்றார்கள்? இது நாம் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டிய கேள்விதான். ஏனென்றால், அவர் பாவம் செய்யவில்லை. பின்பு ஏன் அவரை சிலுவையில் அறைந்து கொலை செய்தார்கள்? இதற்குரிய பதிலை நாம் வேதாகமத்தில் பார்க்கலாம். இயேசுவுக்கு முன்னோடியாக வந்தவன் யோவான்ஸ்நானகன். இவன் இயேசுவைக் கண்டு, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான்" (யோவா.1:29). ஆம்! நாம் அறிந்திருக்கிறபடி பாவங்களுக்காக ஆடுகள்பலியிடப்பட்டு பாவநிவர்த்தி செய்யப்பட்டது. இவரோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கும் தேவ ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார். அப்படியானால், இவர் ஆடு பலியிடப்படுவதைப்போல பலியிடப்படவேண்டும். "எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது" லூக்.24:46–ன் படியும் ஏசாயா தீர்க்கதரிசன புத்தகத்தில் இயேசுவைக்குறித்து எழுதியிருக்கிறபடியும், அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். பாவத்தின் கீழ் அடைக்கப்பட்டுள்ள அனைவரையும் மீட்கும்படியாக அவர் மரித்து, பின்பு அவருடைய உயிர்த்தெழுதலில் நாம் இணைக்கப்படும்படியாக அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இயேசுவின் மேல் கைபோட ஒருவருக்கும் அதிகாரமில்லை. அப்படியிருந்த போதிலும் இயேசுவை பிடித்து அடித்து சிலுவையில் அறைந்தார்கள். எழுதியிருக்கிறபடி, தேவனாகிய கர்த்தர் இயேசுவை பாடுகளுக்கு ஒப்புக்கொடுத்தார். அன்று இருந்த யூதர்களும், ஆசாரியர்களும் சேர்ந்து களிகூர்ந்தார்கள். தேவனோ, அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை உயிரோடு எழுப்பி, உன்னதங்களிலே அவரோடே கூட உட்கார்ந்திருக்கும்படி அருள் செய்தார். அவருக்கு வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த மகிமையை அவர்கள் அறியாதுபோனார்கள்.



நம்முற்பிதாக்களின் காலத்திலே, நேபுகாத்நேச்சார் என்று சொல்லக்கூடிய ஒரு ராஜா எருசலேமை முற்றுகையிட்டு சாலமோன் கட்டினதேவாலயத்திலிருந்த பொன், வெள்ளி பாத்திரங்களை கொள்ளையிட்டு தன் வசமாக்கினான், பின்பு வானத்துக்கும் பூமிக்கும் தேவனானவர் எப்படிப்பட்டவர் என்பதை தானியேல் மூலம் அறிந்து அவன் எழுதினது என்னவென்றால், "நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன். அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள், அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்" (தானி.4:37). இவனுக்கு பின்பு வந்த இவனுடை மகன் பெல்ஷாத்சார் என்ற ராஜா எழுதியிருக்கிற தன் தகப்பனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் தன் தகப்பனால் எருசலேம் தேவாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட பொன், வெள்ளி பாத்திரங்களில் தானும், தன் பிரபுக்களும், தன் மனைவிகளும் தன் வைப்பாட்டிகளும் குடிக்கிறதற்காக அவைகளைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டு, அவைகளில் ராஜாவும் அவனுடைய பிரபுக்களும் அவனுடைய மனைவிகளும் அவனுடைய வைப்பாட்டிகளும் குடித்து பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள். அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று; எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான் அப்பொழுது ராஜாவின் முகம் வேறுபட்டது. அவனுடைய நினைவுகள் அவனைக் கலங்கப்பண்ணினது. அவனுடைய இடுப்பின் கட்டுகள் தளர்ந்தது. அவனுடைய முழங்கால்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டது. எழுதப்பட்ட எழுத்து என்னவென்றால், **'மெனே, மெனே, தெக்கேல் உப்பார்சின்'** என்பதே இதனுடைய விளக்கத்தை ஞானிகளாலும், ஜோசியராலும், குறிசொல்லுகிறவர்களாலும் சொல்லக்கூடாதிருக்கும்போது தானியேல் என்ற தேவமனிதன் அதற்குரிய விளக்கத்தை தெரியப்படுத்தினான். தேவன் உன்ராஜ்யத்தை மட்டிட்டு அதற்கு முடிவுண்டாக்கினார். நீ குறையக் காணப்பட்டாய் என்றான். அன்று இராத்திரியிலே ராஜாவாகிய பெல்ஷாத்சார் கொலை செய்யப்பட்டான். என்

மகனே உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள் என்ற வசனத்தை மறந்து, எழுதப்பட்டுள்ள வார்த்தைகளை பெல்ஷாத்சார் ஏற்காமல் தன் இஷ்டப்படி நடந்து கொலைசெய்யப்பட்டான். தேவனுடைய வார்த்தையை ஏற்காமல் இஸ்ரவேல் மக்களை சபிக்க சென்ற மதிகெட்ட பிலேயாம் தீர்க்கதரிசியை தடுக்க கர்த்தர் பேசாத மிருகத்தின் வாயைத்திறந்தார். அதுபோல தன் தகப்பனால் எழுதப்பட்டுள்ள தேவனுடைய மகத்துவங்களை ஏற்காத பெல்ஷாத்சாரின் செயலை கண்டித்து கர்த்தர் சாந்து பூசப்பட்ட சுவரில் கைவிரல்கள் தோன்றி அவன் பார்க்க எழுதும்படி கட்டளையிட்டார். இச்செய்தியை கேட்கும் அன்பு நேயரே, பரிசுத்த வேதாகமம் எதற்காக எழுதப்பட்டுள்ளது? நீ உன் தேவனாகிய கர்த்தரை அறிந்து கொள்ளும்படியாக, ‘‘இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது’’ (யோவா.20:31). நீங்கள் அவரை விசுவாசித்து பற்றிக்கொள்ளும்போது என்றுமே அழியாத நித்திய ஜீவனை பெற்றுக் கொள்வீர்கள். ஒருவேளை நீங்கள் இதை அறிந்தும் அறியாதவர்கள் போல மெத்தனமாக இருப்பீர்கள் என்றால் கர்த்தர் கூறும் வசனத்தை வாசியுங்கள் ‘‘என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிற தொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும் (யோவா.12:48). ஆண்டவரையும் அவர் மூலமாக சொல்லப்பட்ட அல்லது எழுதப்பட்ட வார்த்தைகளை புறம்பே தள்ளும்போது நீங்களும் நியாயந்தீர்க்கப்பட்டு புறம்பே தள்ளப்படுவீர்கள். இஸ்ரவேல் மக்களை நாற்பது வருடம் வனாந்திரத்திலே வழிநடத்தின மோசேமூலமாக கர்த்தர் பேசும்போது ‘‘என் மகிமையையும், நான் எகிப்திலும் வனாந்தரத்திலும் செய்த என் அடையாளங்களையும் கண்டிருந்தும் என் சத்தத்துக்கு செவிகொடாமல், இதனோடே பத்து முறை என்னைப் பரீட்சை பார்த்த மனிதரில் ஒருவரும் அவர்கள் பிதாக்களுக்கு நான் ஆணையிட்டுக் கொடுத்த தேசத்தைக் காணமாட்டார்கள்’’ என்றார் (எண்.14:22). ஒரு முறையா, இரண்டு முறையா ஒன்பது முறை இஸ்ரவேலர் தேவனை பரீட்சை பார்த்திருந்தும் அவர்களை மன்னித்திருக்கிறார். அதற்கு மேலும் அவர்கள்



பாவம் செய்ய இடங்கொடாமல் பத்துமுறை தன்னை பரீட்சை செய்த மனிதர்களை கானானுக்குள் பிரவேசிக்க அனுமதியாமல் அவர்களை அழித்துப்போட்டார். நமக்கும் இப்பூமியில் மனந்திரும்புவதற்கான சந்தர்ப்பங்களைத் தேவன் கூட்டி வழங்கி வருகிறார். இனிமேல் காலம் கடத்தாமல் எழுதப்பட்டுள்ள எச்சரிப்பின் வார்த்தைக்கு செவிகொடுங்கள். வேதாகமம், இஸ்ரவேல் மக்களைப்போல நாமும் அழிந்துபோகாமல் காக்கப்படும்படியாக எழுதப்பட்டுள்ளது. அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. நம்முடைய பிரயோஜனத்துக்காகவே வேதாகமம் எழுதப்பட்டுள்ளதை நாம் தெரிந்துகொள்கிறோம். சாலை ஓரங்களில் சில வாசகங்கள் எழுதப்பட்டுள்ளதை பார்த்திருப்பீர்கள். Go, Slow, Keep left., போன்ற வாசகங்களால் ஓட்டுநர் எச்சரிக்கப்படுகிறார். இது ஓட்டுநருக்கும், செல்லக்கூடிய பயணிகளுக்கும் பிரயோஜனமாக இருக்கிறது. ஒருவர் இதை மீறி செயல்படுவாரானால் என்னவாகும்? நிச்சயமாக விபத்துக்குள்ளாவார். அதுபோல, வேதாகமம் பாவத்தை சுட்டிக் காட்டுகிறது, அதிலிருந்து விடுதலையடையக்கூடிய வழியையும் நமக்குப் போதிக்கிறது. சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்ற ஆண்டவரின் வசனத்தின்படி சத்தியத்தை அறிய முயற்சியுங்கள்.

‘‘தேவன் செய்வது எதுவோ அது என்றைக்கும் நிலைக்கும் என்று அறிவேன்; அதினோடே ஒன்றும் கூட்டவுங்கூடாது, அதிலிருந்து ஒன்றும் குறைக்கவுங் கூடாது; மனுஷர் தமது சமூகத்தில் பயந்திருக்கும்படி தேவன் இப்படிச் செய்துவருகிறார்’’ (பிர.3;14). வேதாகமத்தில் உள்ள ஒரு வார்த்தையை கூட்டவோ அல்லது குறைக்கவோ ஒருவருக்கும் அதிகாரமில்லை. சொல்லப்பட்டுள்ள அனைத்தும் தேவனால் கொடுக்கப்பட்டவையே. அவைகளுக்குரிய கனத்தையும் மரியாதையையும் நாம் கொடுக்கவேண்டும். தேவன் கோணலாக்கினதை ஒருவர் நேராக்கமுடியுமா? முடியாதே. அப்படியிருக்க தேவன் அருளிச்செய்த வேதாகமத்தை மாற்றியமைக்க முயற்சிக்கலாமா? ‘‘அபத்தமானதை தரிசித்து, பொய்க்குறியைச் சொல்லுகிற தீர்க்கதரிசிகளுக்கு என் கை

விரோதமாயிருக்கும், அவர்கள் என் ஜனத்தின் சங்கத்தில் இருப்பதுமில்லை'' என்று கர்த்தர் சொல்லுகிறார் (எசே.13:9). நீங்கள் மாயைக்கும், கனவுகளுக்கும், பொய்யான உபதேசங்களுக்கும் செவிகொடாமல் உங்களை விலக்கிக் காத்துக்கொள்ளுங்கள். தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்த வேதாகமத்திற்கு முழுவதுமாக செவிகொடுங்கள். எழுதப்பட்டிருக்கிறபடி ஒரு நாள் கிறிஸ்துவானவர் வருவார். அவர் வருகைக்கு முன் நாம் சிந்திக்கவேண்டிய காரியங்கள் நிறைய உண்டு. அவர் வருகையில் நாம் அவரோடுகூட எடுத்துக்கொள்ளப்படுவோமா? அல்லது கைவிடப்படுவோமா? கர்த்தருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரோடுகூட நித்தியத்துக்கு செல்ல முடியாது. ஏனென்றால், தேவனை அறியாதவர்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படியாதவர்களும், கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்களாகி நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள் என 2தெச.1:10–ல் எழுதப்பட்டுள்ளது. ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனொ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்படுவான். இனிமேல் சம்பவிக்கப்போகிற காரியங்களைக்குறித்து வேதாகமம் நமக்கு போதிக்கிறது. ஆகையால் எழுதப்பட்டுள்ள கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, நீங்கள் இரட்சிக்கப்படும்படியாக சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படியுங்கள்.

**கேள்வி நேரம்**

**பரிசுத்த வேதாகமம் மற்ற மார்க்கங்களில் உள்ள புத்தகத்தைப்போன்றதா?**

பரிசுத்த வேதாகமத்திற்கு நிகராக எந்த ஒரு புத்தகமும் இருக்கமுடியாது. ஏனெனில், இது தேவ ஆவியானவரால் கொடுக்கப்பட்ட ஒன்று. மற்ற மார்க்க புத்தகங்கள் மனிதனுடைய சுயபுத்தியினால் எழுதப்பட்டவை. அவைகளுக்கு துவக்கமும் முடிவும் இராது. ஆனால், ''வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ்செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும்,



கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' (2தீமோ.3:16,17). பாவத்திலே வீழ்ந்துபோன மனிதனை மீட்டு, அவனை தேவனோடு ஒப்புரவாக்கும் ஒப்பற்றவழியை வேதாகமம் காட்டுகிறது. அதிலே எழுதப்பட்டுள்ள வார்த்தைகளை ஒரு மனிதன் கைக்கொள்ளும்போது அவன் எல்லையில்லா சந்தோஷம் அடைந்து முடிவில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்வான். மனிதனுக்கு உலகத்திலே உறுதியான வாழ்வையும், மரித்தபின் நித்தியத்திலே நிலையான வாழ்வையும் குறித்துப்போதிப்பது பரிசுத்த வேதாகமமே. தேவஆவியானவராலே கொடுக்கப்பட்ட இந்த வேத வசனங்களை உங்களுடைய இருதயமாகிய பலகையில் எழுதிக்கொள்வீர்கள் என்றால், கன்மலையின் மீது அஸ்திபாரம் போடப்பட்ட வீட்டைப்போல இருப்பீர்கள். பரிசுத்த வேதாகமம் பரிசுத்தத்திற்கு நேராகவும், பரிசுத்தருக்கு நேராகவும் வழிநடத்தும் புத்தகம். அதன்வழியே செல்லுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 50. யோசேப்பு கனிதரும் செடி
## Joseph is a fruitful bough

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் மெய்யான திராட்சசெடியாகிய இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். யோசேப்பு கனிதரும் செடி – Joseph is a fruitful bough. யோசேப்பின் தகப்பனாகிய யாக்கோபு அவனை ஆசீர்வதிக்கும்போது; யோசேப்பு கனிதரும் செடி! அவன் நீர் ஊற்றண்டையிலுள்ள கனிதரும்செடி, அதின்கொடிகள் சுவரின்மேல் படரும்... உன் தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் என் பிதாக்களுடைய ஆசீர்வாதங்களுக்கு மேற்பட்டதாயிருந்தது, நித்திய பர்வதங்களின் முடிவு மட்டும் எட்டுகின்றன! அவைகள் யோசேப்புடைய சிரசின்மேலும், தன் சகோதரரில் விசேஷித்தவனுடைய உச்சந்தலையின் மேலும் வருவதாக என்று சொல்லி ஆசீர்வதித்தான். இந்த ஆசீர்வாதத்திற்கு யோசேப்பு பாத்திரவானாக இருந்தான். அது எப்படி என்று கேட்கிறீர்களா? அவன்

சகோதரர்கள் அவனை இஸ்மவேலர் வசமாக இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டார்கள். அவனோ, எகிப்து தேசம் முழுமைக்கும் அதிபதியானான். கொடிய பஞ்சத்தால் தானியம் கொள்ள வந்த தன் சகோதரர்களை நேசித்து அவர்கள் தனக்கு செய்த தீமைக்கு தீமைசெய்யாதபடி வெகு ஜனங்களை உயிரோடே காக்கும்படிக்கு கர்த்தர் அதை நன்மையாக முடியப்பண்ணினார் என்று சொல்லி கானான் தேசத்திலிருந்து வந்த தன் தகப்பனாகிய யாக்கோபின் குடும்ப முழுவதையும் போஷித்து பராமரித்தான். யோசேப்பு, தான் உயர்த்தப்படுவதற்கு முன்பு எந்நிலைமையில் இருந்தான் என்பதை அறிவோம். யோசேப்பைக்குறித்து விவரமாகப்பேசவேண்டுமானால்; அவன் பதினேழு வயதில் தன் சகோதரருடனே ஆடுகளை மேய்த்துக்கொண்டுவந்தவன். அவன் பில்காள் சில்பாள் என்னும் தன் தகப்பனுடைய மறுமனையாட்டிகளின் குமாரரோடே இருந்து, அவர்களுடைய துன்மார்க்கத்தைத் தன் தகப்பன் யாக்கோபுக்குச் சொல்லுவான். இவர்களுடைய துன்மார்க்க செயல் பதினேழு வயதில் இருந்த யோசேப்புக்கு பிடிக்கவில்லை. அப்படியானால் அவன் இளம்பிராயத்திலே மிகவும் பரிசுத்தத்தை வாஞ்சித்து இருக்கிறான் என்று அறிகிறோம். இஸ்ரவேலின் முதிர்வயதில் யோசேப்பு தனக்குப் பிறந்ததினால், தன் குமாரர் எல்லாரிலும் அவனை அதிகமாய் நேசித்து பலவருணமான அங்கியைச் செய்வான். இதனால் அவனுடைய சகோதரர்கள் அவனை பகைத்தனர். மேலும் அவனுடைய சொப்பனங்களைக் கேட்டு அவன் மீது பொறாமை கொண்டனர். அவன் தகப்பனோ அவைகளை மனதிலே வைத்துவைத்தான்.

"ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து குறிப்பிடுகிறார் (யோவா.15:5). ஒரு மனிதன் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கும்போது அவனோடு தேவன் அருளிய வார்த்தை இருக்கிறது. அந்தப்படியாக யோசேப்புடன் கர்த்தர் இருந்தார். ஆகையால் அவன் மிகுதியான கனிகளைக் கொடுக்கமுடிந்தது. தன் குடும்பத்தாருக்கும் மற்றும் எகிப்து தேசம் முழுமைக்கும் கனி கொடுக்கிறவனாக அதாவது ஆசீர்வாதம் நிறைந்தவனாக இருந்தான். ஆகவே அவன் தகப்பன் 'யோசேப்பு கனிதரும்



செடி' என ஆசீர்வதித்தான். இச்செய்தியை கேட்கிற அருமையான நேயரே நீ உன் குடும்பத்தாருக்கும் உன் தேசத்திற்கும் எப்படிப்பட்டவனாக இருந்துகொண்டுவருகின்றாய். நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு வகையில் நம் மக்களுக்கு கனி கொடுக்கிறவர்களாக வாழ முடியும். எப்பொழுது என்றால், இயேசு உங்களில் இருக்கும்போதும், தேவனுடைய வார்த்தை உங்களில் தங்கியிருக்கும்போதும் கனிகொடுக்கிற தேவ மக்களாக இருப்பீர்கள். தேவனுடைய வார்த்தையை நீங்கள் ஏற்றுக்கொள்ளாமல் உங்களால் கனிகள் நிறைந்த வாழ்க்கை செய்யமுடியாது. தாவீதுடைய நம்பிக்கையும் இதுதான் "நானோ தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைப் போலிருக்கிறேன் என்கிறார் (சங்.52:8). தாவீது இந்த இடத்தில் தன்னை ஒலிவமரத்தைப்போலிருக்கிறேன் என்று சொல்ல வேண்டிய காரணம் என்ன? ஒலிவமரத்தின் உண்மையைப் பற்றி உலகத்தில் தெரியாதவர்கள் யாரும் இருக்க முடியாது. உலக அளவில் ஒலிவமரத்தின் எண்ணெய் பிரசித்தி பெற்றதாயிருக்கிறது. அது ஒரு சிறந்த மூலிகை மருந்தாக உள்ளது. அப்படியானால் தாவீது தேவாலயத்தில் உள்ளவர்களுக்கு நிழலாகவும், மருந்தாகவும் பயன்பட்டிருக்கிறார் என்று காண்கிறோம். ஆரம்பமுதல் தனக்கு எதிராக இருந்த சவுலை தாவீது ஒரு நாளும் கைபோட துணியவில்லை. காரணம் என்ன? தேவன் அபிஷேகம் பண்ணினவரை நான் தொடமாட்டேன் என்ற உறுதியுடனிருந்து. சவுலுடைய மரணத்திற்குப்பின்பும் அவனுடைய குடும்பத்தை போஷிக்க தவறவில்லை. உங்களுடைய சபையில் நீங்கள் இந்த தாவீதைப்போல ஆசீர்வாதமாயிருக்கிறீர்களா? நமது ஆண்டவரும் கூட "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள் என்றும் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றும் (மத்15:13,14) குறிப்பிடுகிறார். உப்பும், வெளிச்சமும் உலகத்துக்கு ஆசீர்வாதங்களை கொடுக்ககூடியதாக இருக்கிறது. ஆகையால் தான் இதற்கு ஒப்பிட்டு பேசுகிறார். உப்பிட்டவரை உள்ளளவும் நினை என்ற பழமொழியைக் கேள்விப்பட்டு இருப்பீர்கள். நாமே அந்த உப்பாக இருந்தால் இன்னும் எத்தனை ஆசீர்வாதமாக இருப்போம்.

ஒருவேளை நீங்கள் என்னிடம் ஒன்றுமில்லையே நான் எப்படி

மற்றவர்களுக்கு உதவ முடியும். என்தலையே எண்ணெய் இல்லாமல் காயும்போது மற்றவர்களுடைய தலையைப் பற்றி நான் கவலைப்பட்டு என்ன பயன் என்று நினைக்கலாம். உங்களைக் காட்டிலும் கொடிய பஞ்சத்தில் அகப்பட்ட ஒரு விதவையைப் பற்றி வேதாகமத்தில் பரிசுத்த ஆவியால் பொறிக்கப்பட்டுள்ளது. தேவனாகிய கர்த்தர் எலியா என்ற தீர்க்கதரிசியை இவளுடைய வீட்டிற்கு அனுப்பினார். எலியா தேவவார்த்தைக்கு கீழ்ப்படிந்து சாறிபாத் ஊருக்குப்போய் அந்த விதவையிடம் தனக்கு அப்பம் கொண்டுவரும்படி கேட்டான். அவளோ பானையில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். அப்பொழுது எலியா, அவளைப் பார்த்து; பயப்படாதே நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து. ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப்பண்ணி என்னிடத்தில் கொண்டு வா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம். கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அவள் போய் எலியாவின் சொற்படி செய்தாள். அவளும், இவனும் அவள் வீட்டாரும் அநேக நாள் சாப்பிட்டார்கள். தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொண்ட சாறிபாத் விதவை எப்படி போஷிக்கப்பட்டாள் என்று பார்த்தீர்களா? அன்பானவர்களே, நீங்களும் இந்த விதவையைப்போல தேவ வார்த்தையை ஏற்றுக் கொண்டு செயல்படும்போது ஆசீர்வதிக்கப்படுவீர்கள். ஒரு முறை குஷ்டரோகியாகிய சீமோன் வீட்டில் இயேசு கிறிஸ்து போஜன பந்தியிருக்கையில் ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற நளதம் என்னும் உத்தம தைலமுள்ள வெள்ளைக்கல் பரணியைக் கொண்டு வந்து அதை உடைத்து அந்தத் தைலத்தை அவர் சிரசின் மேல் ஊற்றினாள். அப்பொழுது சிலர் தங்களுக்குள்ளே விசனமடைந்தார்கள். அதற்கு அவர் இவள் என்னிடத்தில் நற்கிரியையைச் செய்திருக்கிறாள் என்றார். கனிகள் நிறைந்த ஜீவியம்



என்றால் இப்படித்தான். இந்த ஸ்திரீ இயேசுவை அறிந்து கொண்ட நாள்முதல் எவ்வளவு முயற்சி எடுத்தாளோ தெரியவில்லை. இவ்வளவு பெரிதான இரட்சிப்பை கொண்டு வந்த இயேசுவுக்கு தன்னால் முடிந்த நளதம் என்ற தைலத்தை அவர் சிரசில் ஊற்றி நற்கிரியையைச் செய்தாள் என்ற பட்டத்தை இயேசுவின் மூலம் பெற்றுக்கொண்டாள். நாமும் நமக்கு கிடைக்கும் சமயத்தை பயன்படுத்தி நற்கிரியைகளைச் செய்வோம்.

நியாயப்பிரமாணம் நிறைவேறிய காலத்தில் வாழ்ந்த அந்தரங்க சீஷன் யோசேப்பை அறியாதவர் உண்டா!. வெளியரங்கமாக வாழ்கின்றவர்களை கூட நாம் மறந்து விடுவோம். ஆனால் அந்தரங்கமாக வாழ்கின்றவர்களை நாம் மறவோம். இயேசுவின் பன்னிரண்டு சீஷர்களும் ஓடிப்போய்விட்ட சூழ்நிலையில் கர்த்தரின் சரீரம் சிலுவையில் தொங்கி கொண்டு இருந்த வேளையில், அந்தரங்க சீஷன் யோசேப்பு இயேசுவின் சரீரத்தை துணிந்து கேட்டு, தான் கன்மலையில் வெட்டியிருந்த தன்னுடைய புதிய கல்லறையில் அவருடைய சரீரத்தை வைத்தான். வெளியரங்கமாக வாழ்ந்தவர்கள் இயேசு சிலுவையில் அறையப்பட்டவுடன் மறைந்தார்கள். ஆனால் மறைமுகமாக வாழ்ந்த யோசேப்பு வெளிப்பட்டான். அவன் இயேசுவை எந்த அளவுக்கு நேசித்து உள்ளான் என்பது அவனது துணிவிலிருந்து தெரிய வருகிறது. ''நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்'' என்ற நீதி.24:16–ன் படி அவன் வெளிப்பட்டான். மேலும் ''நீதிமானுடைய வேர் கனி கொடுக்கும்'' என்ற நீதி.12:12–ன் படி கனிகொடுக்கிற மகனாக இருந்தான். இந்த வசனங்கள் எல்லாமே உண்மையிலும் உண்மையாக இருக்கிறது. மறைந்து வாழ்ந்த யோசேப்பு கடைசிவேளையில் அதாவது சரியானநேரத்தில் வெளிப்பட்டான். மண்ணுக்குள் மறைந்திருக்கும் பலாமரத்தின் வேர் கனி கொடுக்கும். அதுபோல அந்தரங்கமாய் வாழ்ந்த இந்த யோசேப்பு கடைசிவேளையில் இயேசுவின் சரீரத்தை பாதுகாத்தான். இச்செய்தியைக் கேட்கும் அருமையான நேயரே, நீங்கள் இந்த யோசேப்பைப்போலவும், இயேசுவின் சிரசில் தைலம் வார்த்த ஸ்திரீயைப்போலவும், எலியாவைப் போஷித்த சாறிபாத் விதவையைப்போலவும், தேவனுடைய ஆலயத்தில் பச்சையான ஒலிவமரத்தைபோல இருந்த தாவீதைப்போலவும், தன் தகப்பனாகிய

யாக்கோபின் குடும்பத்துக்கும் எகிப்து தேச முழுமைக்கும் ஆசீர்வாதமாக இருந்த யோசேப்பைப்போலவும் கனிகொடுக்கும் மக்களாகவும், பரிசுத்த ஜாதியாகவும், ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

"நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளை கொடுக்கும் என்ற மத்.7:17–ன்படி நல்ல கனிகளை கொடுக்கிற தேவஜனங்களாக, சபைக்கும், சமுதாயத்திற்கும் ஏற்ற கனிகளைக் கொடுக்கும் மக்களாக மாறுங்கள். அப்பொழுது பிதாவின் நாமம் மகிமைப்படும். இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்ற ஆண்டவரின் வார்த்தைப்படி வெளிச்சம் கொடுக்கிற மெர்க்குரியாக மாறுங்கள். யோசேப்பு நூற்றுப்பத்து வருஷம் உயிரோடிருந்து கனி கொடுக்கிற செடியாக வாழ்ந்தான். நீங்கள் எப்படிபட்ட செடியாக இருக்கப்போகிறீர்கள்?

**கேள்வி நேரம்**

**தேவ மனிதன் தேவையற்ற கனிகளைக் கொடுப்பானா?**

தேவையற்ற கனிகளைக் கொடுக்கிற மனிதன் தேவமனிதனாக இருக்கமுடியாது. ஏனென்றால் யாக்கோபு சொல்லுகிறார்; "ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தை கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்" (யாக்.3:11–13). மெய்யான திராட்சசெடியாகிய இயேசுவில் இருக்கிற மனிதன் நிச்சயமாக நல்ல திராட்சப்பழங்களைக் கொடுப்பான். ஒருவேளை அவன் அதிலிருந்து வெட்டுண்டு அல்லது தானே அதிலிருந்து பிரிந்துபோவானேயானால் அவனால் நிச்சயமாக நல்ல கனிகளைக் கொடுக்கமுடியாது. எப்படியென்றால் இயேசு சொல்கிறார்: "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக்



கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்கிறார்" (யோவா.15:5). ஆகையால், இயேசு இல்லாமல் நீங்கள் தேவனுடைய மனிதனாக வாழமுடியாது. அவரும் அவருடைய வசனமும் நம்மை பிதாவுக்கு ஏற்றவர்களாக மாற்றுகிறது. நீங்கள் கனிகொடுக்கிற கிறிஸ்தவர்களாக மாற உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 51. கர்த்தருக்கு விரோதமான துரோகம்
## Transgression against the Lord

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் இரட்சிப்பை கொடுக்க வந்த ஆண்டவர் இயேசுவின் தூயநமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். கர்த்தருக்கு விரேதமான துரோகம் – Transgression against the Lord. இன்றைய நாட்களில், கர்த்தருக்கு விரோதமான துரோகம் பண்ணுவது போல நம்முற்பிதாக்களின் காலங்களிலும் துரோகம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை எசேக்கியல் தீர்க்கதரிசிக்கு உண்டாகி "மனுபுத்திரனே ஒரு தேசம் எனக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணிக்கொண்டேயிருந்து பாவஞ் செய்தால், நான் அதற்கு விரோதமாக என் கையை நீட்டி, அதில் அப்பம் என்னும் ஆதரவு கோலை முறித்து, அதில் பஞ்சத்தை அனுப்பி, மனுஷரையும் மிருகங்களையும் அதில் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன். அப்பொழுது நோவா தானியேல் யோபு ஆகிய இம்மூன்று புருஷரும் அதின் நடுவில் இருந்தாலும் அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்றான் (எசே.14:13,14). ஒரு தேசம் கர்த்தருக்கு விரோதமாக துரோகம் செய்யும்போது நாட்டில் பஞ்சம், துஷ்டமிருகம், பட்டயம், கொள்ளைநோய் போன்றவற்றை தேவன் அனுமதிக்கிறார். இவைகளில் ஏதாவது ஒன்று மனிதனுக்கு ஏற்பட்டு நாசமடைகிறான். இவைகளில் இருந்து விடுதலையடைய தேவனோடு ஒப்புரவாக வேண்டியது அவசியமாயிருக்கிறது. இஸ்ரவேலருக்கு ராஜா இல்லாத நாட்களில் கர்த்தரே ராஜாதி ராஜாவாக இருந்து வழி நடத்தினார். ஆனால் இஸ்ரவேலரோ

புறஜாதி மக்களுக்கு இருப்பது போல தங்களுக்கும் ஒரு ராஜா வேண்டும் என்று முறையிட்டனர். அப்பொழுது தேவனாகிய கர்த்தர் கீசின் குமாரனாகிய சவுலை ராஜாவாக்கினார். அவனோ ‘‘கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாமல், கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தினிமித்தமும், அவன் கர்த்தரைத் தோடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்கும்படிக்குத் தேடினதினிமித்தமும் செத்துப்போனான்’’ (1நாளா10:13). பார்த்தீர்களா! கர்த்தரைத் தேடாமல் அஞ்சனம் பார்க்கிறவர்களைத் தேடினதினிமித்தம் பட்டயத்திற்கு இறையாகி மடிந்தான். மேற்கூறிய நான்கில் ஒன்று பட்டயம். இவன் கர்த்தருக்கு விரோதமாக துரோகம் செய்ததினிமித்தம் தன் பட்டயத்தை நட்டு அதின்மேல் விழுந்து செத்துப்போனான். இவனுக்கு பின்பு வந்த ராஜா தாவீது. இவன் தேவனுக்கு பயப்படுகிற மனுஷனாக இருந்தான். ஆகையால் கர்த்தர் தாவீதை என் தாசன் என்றழைக்கிறார். ஒரு முறை தாவீதும் கர்த்தருக்கு விரோதமாக செயல்பட ஏவப்பட்டான். தன்னோடிருக்கிற சேனாபதியாகிய யோவாபைப் பார்த்து இஸ்ரவல் யூதா என்பவர்களின் இலக்கத்தை நான் அறியும்படிக்கு நீ தாண் முதல் பெயர் செபா மட்டுமுள்ள இஸ்ரவேலரின் கோத்திரமெங்கும் சுற்றி திரிந்து ஜனங்களைத் தொகையிடுங்கள் என்றான். அந்தப்படியே யோவாப் ஜனத்தை இலக்கம் பார்த்து தொகையை ராஜாவுக்குக் கொடுத்தான். இஸ்ரவேலிலே பட்டயம் உருவத்தக்க யுத்தசேவகர் எட்டு லட்சம்பேர் இருந்தார்கள். யூதா மனுஷர் ஐந்து லட்சம்பேர் இருந்தார்கள். இவ்விதமாய் ஜனங்களை எண்ணினபின்பு, ராஜாவின் இருதயம் அவனை வாதித்தது. ஏனென்றால் ஆபிரகாமுக்கு கர்த்தர் சொன்ன வார்த்தையை அவன் நினைவு கூர்ந்திருக்கக் கூடும். ‘‘உன் சந்ததியைப் பூமியின் தூளைப்போலப் பெருகப்பண்ணுவேன். ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால், உன் சந்ததியும் எண்ணப்படும்’’ (ஆதி.13:16). அப்பொழுது தாவீது கர்த்தரை நோக்கி நான் இப்படிச் செய்ததினாலே பெரிய பாஞ்செய்தேன். இப்பொழுதும் ஆண்டவரே, உமது அடியானின் அக்கிரமத்தை நீக்கிவிடும், நான் மகா புத்தியீனமாய்ச் செய்தேன் என்றான். ஆனால் கர்த்தரோ தாவீதின் விண்ணப்பத்தைக் கேட்டு சில நிபந்தனைகளை காத் தீர்க்கதரிசி மூலம் வைத்தார். ஏழு வருஷம் பஞ்சம் வரவேண்டுமோ? அல்லது மூன்று மாதம்



உம்முடைய சத்துருக்கள் உம்மைப் பின் தொடர நீர் அவர்களுக்கு முன்பாக ஓடிப்போக வேண்டுமோ? அல்லது உம்முடைய தேசத்திலே மூன்று நாள் கொள்ளை நோய் உண்டாக வேண்டுமோ? இதைக் கேட்ட தாவீது கர்த்தரை நோக்கி கொடிய இடுக்கணில் அகப்பட்டிருக்கிறேன். இப்பொழுது நான் கர்த்தருடைய கையிலே விழுவேனாக. அவருடைய இரக்கங்கள் மகா பெரியது; மனுஷர் கையிலே விழாதிப்பேனாக என்றான். ‘‘தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்’’ என்ற வசனப்படி தாவீது தன் பாவங்களை அறிக்கையிட்டு தேவ சமுகத்தில் இரக்கம் பெற்றான்.

இச்செய்தியை கேட்கிற நேயரே, நீ உன் பாவ வாழ்வைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பி அறிக்கையிட்டால் இரக்கம் பெறுவாய். ஞாயிற்று கிழமை வேதாகமத்தை எடுத்துக்கொண்டு சபை ஆராதனைக்கு செல்லுகிற இன்றைய கிறிஸ்தவர்களிடமும் கர்த்தருக்கு விரோதமான துரோகத்தை காணமுடிகிறது. தாவீதே தேவனுக்கு விரோதமாக பாவஞ்செய்ய ஏவப்பட்டிருக்கும்போது இவர்கள் என்ன விதி விலக்கா? ‘‘அந்நியநுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப் பீர்களாக; நீதிக்கும் அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது? கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் இசைவேது? அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது? (2கொ.6:14,15). இந்த வசனத்தை கைக் கொள்ளக்கூடியவர்கள் சொற்ப ஜனங்களாகவே காணப்படுகிறார்கள். ஏனென்றால் அநேகர் மாயைக்கு அடிமையாகி வேலை, பணம், பங்களா, கார், என, அழகு பார்த்து தேவனை அறியாத மக்களோடு சம்பந்தம் கொண்டு கர்த்தருக்கு விரோதமாக துரோகம் செய்து கொண்டே இருக்கிறார்கள். இதைக் குறித்து நெகேமியா ‘‘நீங்கள் மறுஜாதியான ஸ்திரீகளைச் சேர்த்துக் கொள்ளுகிறதினால் நம்முடைய தேவனுக்குத் துரோகிகளாகி’’ என்று குறிப்பிடுகிறார் (நெகே.13:27). அவிசுவாசியுடன் பிணைக்கப்படுவது தேவனுக்கு விரோதமான துரோகம் என்ற போதனையை கேட்டும், அதை மீறி செயல்படும்போது பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகம், கொள்ளைநோய் போன்ற வாதைகள் பின்தொடரும். ஒருவேளை நீங்கள் சொல்லலாம் நாங்கள் பரம்பரை கிறிஸ்தவர்கள், எங்களது தாத்தா ஒரு பாஸ்டர், எங்களது மாமா ஒரு

சபை மூப்பர் என்று அடிக்கிக் கொண்டே போகலாம். கர்த்தர் உரைக்கிறதைக் கவனியுங்கள். “நான் அந்த தேசத்தில் கொள்ளை நோயை அனுப்பி, அதிலுள்ள மனுஷரையும் மிருகங்களையும் நாசம் பண்ணும்படி அதின்மேல் இரத்தப்பழியாக என் உக்கிரத்தை ஊற்றும்போது, நோவாவும் தானியேலும் யோபும் அதின் நடுவில் இருந்தாலும், அவர்கள் தங்கள் நீதியினால் தங்கள் ஆத்துமாக்களை மாத்திரம் தப்புவிப்பார்களேயல்லாமல், குமாரனையாகிலும், குமாரத்தியையாகிலும் தப்புவிக்கமாட்டார்கள் என்று என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்றார்” (எசே.14:20). ஆகையால் “பாவம் செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன் மேல் தான் இருக்கும்” பிதாக்கள் திராட்சக் காய்களைத் தின்றார்கள். பிள்ளைகளின் பற்கள் கூசிப்போயின என்னும் பழமொழியை சொல்லாமல் கர்த்தருக்கு விரோதமான துரோகமான பேச்சையும், செய்கையையும் களைந்துவிட்டு மனந்திரும்பி குணப்படுங்கள். துரோகம் என்பது உண்ட வீட்டுக்கு இரண்டகம் பண்ணுவது. இதைத்தான் யூதாஸ் காரியோத்து செய்தான். இவனைக் குறித்து இயேசு குறிப்பிடும்போது: “நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன், ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடனே, அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்” என்றார் (யோவா.13:18). அந்தப்படியே இயேசுவை 30 வெள்ளிக் காசுக்குக் காட்டி கொடுத்தான். இவனைக் குறித்து பரிசுத்த ஆவியானவரின் துணை கொண்டு எழுதும் லூக்கா இவனை துரோகியான யூதாஸ் காரியோத்து என்று குறிப்பிடுகிறார். தேவனுடைய வார்த்தையை ஒருவன் தள்ளும்போது பிசாசு அவனுக்குள் புகுவான். அந்தப்படியாக சாத்தான் யூதாசுக்குள் புகுந்தான். இயேசுவைக் காட்டிக் கொடுத்து, துரோகியான யூதாஸ் என்ற பட்டத்தை பெற்று மரித்தான்.

இன்றைக்கு துரோகம் செய்யக்கூடிய அநேகர் நான் என்ன கர்த்தருக்கா செய்தேன், அவனுக்குத்தானே செய்தேன், அல்லது அவளுக்குத்தானே குழிபறித்தேன். அவர்கள் செய்த துரோகம் கொஞ்சமா, நஞ்சமா அப்படியிருக்கும் போது சும்மா விடுவேனா? என்று சொல்லி பெருமூச்சு விடுவார்கள். இப்படிப்பட்டவர்கள் நினைக்கிற எண்ணமும்



செய்கிற செயலும் கர்த்தருக்கு விரோதமான துரோகம் அல்ல என்று எண்ணுகிறார்கள். இது முற்றிலும் தவறாகும். பிரியமானவர்களே, “பழிவாங்குதல் எனக்குரியது. நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள் அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங் கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பாணங்கொடு; நீ இப்படிச் செய்வதினால் அக்கினித்தழலை அவன் தலையின் மேல் குவிப்பாய் நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு” (ரோ.12:19–21). இந்தப் போதனை எல்லாம் எனக்குத் தேவையில்லை நான் பழிவாங்கியே தீருவேன் என்று நீ நினைப்பாயானால் கர்த்தர் சொல்லுகிறதை கவனி: “என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்” என்கிறார் (மத்.18:6). ஆகையால் எனதருமை சகோதரனே, மனிதனுக்கு விரோதமாக இருந்த நீ இப்பொழுது தேவனுக்கு விரோதியாக மாறுகிறாய், உன்னைப்போல உள்ள உன் சகோதரனுக்கு விரோதமாக பேசாதிரு. நோவா நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். தானியேலோ குற்றமற்றவன். யோபு உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயப்படுகிறவன், மேலும் பொல்லப்புக்கு விலகினவன். இப்படிப்பட்ட தேவ தாசர்களை குறித்து வேதாகமம் பேசுகிறது. ஒரு வேளை ஒரு தேசம் தேவனுக்கு விரோதமாக செயல்படும் போது இப்படிப்பட்ட தாசர்கள் அதில் இருந்தாலும் அவர்கள் மட்டுமே தங்கள் நீதியினால் தப்புவிக்கப்படுவார்கள். அவர்கள் பிள்ளைகளையோ தப்புவிக்கமாட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். அந்தப்படியே முதல் நூற்றாண்டு சபையில் இருந்த அனனியா, சப்பீராள் ஆகிய இருவரும் தேவனிடத்தில் பொய் சொல்லி மாண்டுபோனார்கள். ஆனால் அச்சபையில் இருந்த பேதுருவோ மற்ற சபை அங்கத்தினர்களோ மாண்டுபோகவில்லை. காரணம் தங்கள் நீதியினால் தப்புவிக்கப்பட்டார்கள். கர்த்தர் நோவாவை, ஜாலப்பிரளயத்திலிருந்து காப்பாற்றினார். தானியேலை, சிங்கங்களின் கெபியிலிருந்து காப்பாற்றினார். தன் குடும்பத்தில் உள்ள

பிள்ளைகளையும் செல்வங்களையும் இழந்த யோபுவை, இரட்டிப்பான ஆசீர்வாதத்தினால் ஆசீர்வதித்தார். இன்று உங்களையும் என்னையும் அந்தப்படியே காக்கவும் ஆசீர்வதிக்கவும் கர்த்தர் சித்தமுடையவராயிருக்கிறார். நாம் செய்ய வேண்டியது கர்த்தருக்கு விரோதமான துரோகத்தை விட்டு மனந்திரும்பி நீதியைச் செய்ய பிரயாசப்பட வேண்டும்.

**கேள்வி நேரம்**

**துன்மார்க்கனும் சன்மார்க்கனும் என்னாவார்கள்?**

துன்மார்க்கனுக்கு, சன்மார்க்கன் பரவாயில்லை என்று நீங்கள் சொல்லுவீர்கள். சன்மார்க்கன், யாருக்கும் துரோகம் சொய்யாமல் வாழ்ந்தாலும் அவன் துன்மார்க்கனுக்கு சரியாகவே காணப்படுகிறான். ‘‘கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்ன வென்றால், இதோ, நான் உனக்கு விரோதமாக வந்து, என் பட்டயத்தை அதின் உறையிலிருந்து உருவி, உன்னில் சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் சங்காரம்பண்ணுவேன்’’ என்று எசேக்கியேல் தீர்க்கதரிசி மூலம் உரைத்தார் (எசே.21:3). இந்த இரண்டு மனிதர்களும் தேவனுக்கு அருவருப்பானவர்கள். ஆனால் நீதிமான்களோ தேவனால் தப்புவிக்கப்படுவார்கள். நீங்கள் ஒரு நீதிமானாக மாற விருப்பமா? நீதிக்குரிய வேதவசனங்களுக்கு செவி கொடுத்து உங்களை பரிசுத்தத்திற்கு ஒப்புக்கொடுங்கள். ‘‘கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்தசொற்களாயிருக்கிறது’’ (சங்.12:6). அது ஒரு மனிதனை பாவத்திலிருந்து விடுவிக்கும். நீதிமானாக மாற்றும். கர்த்தர் நீதிமானைச் சோதித்தறிகிறார். கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம்செம்மையானவனை நோக்கியிருக்கிறது. ஆனால் துன்மார்க்கனும் சன்மார்க்கனும் தேவனால் சங்காரம் அடைவார்கள். நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்? நீங்கள் ஒரு நீதிமானாக மாற்றப்பட நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 52. பண ஆசை
## Love of Money



வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் வல்லவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். பண ஆசை – Love of money. அன்றும்சரி இன்றும்சரி சிலர் பணத்தையே மையமாக வைத்து வாழ்கின்றனர். பண ஆசையைக் குறித்து வேதாகமம் இப்படியாக சொல்லுகிறது. ‘‘பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள்’’ (1தீமோ.6:10). உண்மைதான் பணத்தில் தன் முழுகவனத்தையும் செலுத்தும் ஒரு மனிதன் நிம்மதியாக இருக்க முடியாது, அதுவே அவனது வாழ்க்கையில் அழிவைக்கொண்டு வரும் வேராயிருக்கிறது. அவன் அநேக வேதனைகளாலே தன்னைத்தானே கெடுத்துக்கொண்டிருக்கிறான். அது அவனை, அவனது ஆத்தும அழிவுக்கு நேரே வழி நடத்தக் கூடியதாகவும் இருக்கிறது. ‘‘மனிதன் உலகமுழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன்னைத்தான் கெடுத்து நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன’’ என வேதம் போதிக்கிறது. இப்போதனையை ஒரு மனிதன் நிராகரிக்கும்போது இவ்வுலகத்தின் அதிபதியாகிய பிசாசானவனால் பிடிபட்டு அழிவுக்குள்ளாகிறான். நமது தேவனாகிய கர்த்தரும் அப்படிப்பட்ட மனிதனை கேடான சிந்தைக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறார் என வேதத்தில் வாசிக்கிறோம். இச்செய்தியை கேட்கிற அன்பு நேயரே, ‘‘நீயோ, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு’’ பணம் ஒரு மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்காது. ஆகையால், உங்களை பணஆசைக்கு விலக்கி, காத்துக்கொள்ள வேண்டியது மிக அவசியம். பவுல் இங்கு இவைகளை விட்டோடி நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் சாந்தகுணத்தையும் நாடு என்று குறிப்பிடுகிறார். இன்றைய தேவ மனிதர்கள் சிலர் தாங்கள் அழைக்கப்பட்ட அழைப்பை மறந்து பண ஆசையில் மூழ்கிப்போய் நாங்கள் கர்த்தருக்காகத்தான் இதை செய்கிறோம், அதைச்செய்கிறோம் என்கிறார்கள். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சற்று கவனித்துப்பாருங்கள். அவருடைய ஆளுகை எருசலேம்

துவங்கி பூமியின் சகல இடங்களிலும் இருக்கிறது. ஆனால் அவருக்கோ ஒரு அரண்மனைகூட இல்லை. ''மனுஷகுமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை'' என்று லூக்.9:58–ல் வாசிக்கிறோம். ஆக, தேவனுடைய சித்தம் தான் என்ன? ''ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு உங்கள் பொருட்டு... புறஜாதிகளுக்குள்ளே விளங்கின இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்'' அது என்னவென்றால், கிறிஸ்துவானவர் தம்முடைய சீஷர்களைப் பார்த்து ''நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார்''. ஆனால் இன்றைய சீஷர்களோ உலகமெங்கும் உலகப்பிரகாரமான கல்லூரிகளை நடத்திக்கொண்டும், உலக ஆஸ்திகளை வாங்கிக் கொண்டும் சொகுசு வாழ்கை வாழ பிரயாசப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். அன்பர்களே, இதுவா சீஷர்களுக்குக் கர்த்தர் கொடுத்த கட்டளை?

இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுலை நீங்கள் அறிவீர்கள் என்று நம்புகிறேன். அவன் கர்த்தருடைய சொல்லைக்கேளாமல், கொள்ளையின்மேல் பறந்து, கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, நான் கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்று சாமுவேல் தீர்க்கதரிசிக்கு சொன்னான். அப்பொழுது சாமுவேல் அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்குக் கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன என்றான். அதற்கு சவுல் ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள். மற்றவைகளை முற்றிலும் அழித்துப் போட்டார்கள் என்றான். சவுல் கர்த்தருடைய வார்த்தையைக் கைக்கொள்ளாததினால் அவன் ராஜ்யபாரத்தை பிடுங்கி தாவீது வசமாக கொடுத்தார். அவனோ பட்டயத்தை நட்டு செத்துப்போனான் என்று



வாசிக்கிறோம். இன்றைக்கும் இந்த சவுலைப்போல சிலர் உண்டு. தேவ சித்தத்தை நிறைவேற்றாமல் கர்த்தர் பேரிலே இதை செய்கின்றோம், அதைச் செய்கின்றோம் என்று சொல்லி உலக சம்பத்தை சம்பாதித்துக் கொண்டு கர்த்தருடைய சுவிசேஷ வேலையைச் செய்யாதிருக்கிறார்கள். பன்னிரண்டு சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ் பண ஆசைக்கு உடன்பட்டு இயேசுவை முப்பது வெள்ளி காசுக்கு காட்டி கொடுத்தான். இவனுடைய நோக்கம் என்னவாக இருந்தது? இயேசுவை காட்டிக்கொடுத்தால் தனக்கு முப்பது வெள்ளி பணம் கிடைக்கும், அதை வைத்து இதைச் செய்யலாம் அதைச் செய்யலாம் என்று கனவு கண்டிருக்கக்கூடும். ஆனால் அது அவனது கனவை நிறைவேற்றியதா? பாவத்தின் சம்பளம் மரணம் என்ற வசனத்தின்படியே தன்னைத்தானே சவுலைப்போல மாய்த்துக்கொண்டான். இதற்காகவா இவனை கர்த்தர் அழைத்தார்? மற்ற பதினொருபேரும் செய்த ஊழியத்தை இவன் செய்யாமல், தன்னுடைய இச்சைகளுக்கும், இன்பங்களுக்கும் அடிமைப்பட்டு மரணத்தை தெரிந்துகொண்டான். உன்னதமான இவனுடைய பதவியை மற்றொருவன் பெற்றான். இன்றும் இவனைப்போல சிலர் சுவிசேஷம் அறிவிக்கிற பணியிலிருந்து சற்று விலகி பணஆசை கொண்டு இயேசுவையும், அவருடைய வசனங்களையும், விற்பனை செய்து கொண்டு வருகிறார்கள். அவர்களுடைய முடிவு என்னமாயிருக்கும். ''சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே: அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு'' என்ற நீதி.23:23–ம் வசனத்தை தள்ளிவிட்டு, சத்தியத்தை விற்பனை செய்யும் கூட்டமாக மாறிவருகிறார்கள். அவர்களின் முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு.

பணத்தினாலே எதையும் சாதிக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு. மாய வித்தைக்காரனாகிய சீமோனும் பணத்தினால் எதையும் சாதிக்கலாம் என நினைத்து பேதுருவிடம் பணத்தைக் கொண்டுவந்து ''நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான்'' (அப்.8:19). அதற்கு பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடே கூட

நாசமாய்ப் போகக்கடவது என்றான். பணத்தினாலே பரிசுத்த ஆவியை விலைக்கு வாங்க முயற்சித்தவனுடைய நிலைமையை பார்த்தீர்களா? அன்பர்களே, இன்றைய கிறிஸ்தவ உலகில் தேவனையே விலைக்கு வாங்க முயற்சிக்கிறார்கள். நாம் கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்படுகிறோம் என திருமறை மிக தெளிவாக கூறுகிறது. இது நம்மால் உண்டானதல்ல தேவனுடைய ஈவு. இலவசமாக கிடைக்கப்பெற்ற இந்த இரட்சிப்பை விசுவாசத்தைக் கொண்டு தேவனுடைய பலத்தினாலே காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது. தேமா என்று சொல்லக்கூடிய ஒரு சீஷன் இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசை வைத்து என்னை விட்டுப்பிரிந்து போய்விட்டான் என்று பவுல் குறிப்பிடுகிறார். ஆம், இன்றைய சபைகளிலும் இது சர்வசாதாரணமாகிவிட்டது. ‘‘கற்பாறையின் மேல் விதைக்கப்பட்டவர்கள் கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆயினும் தங்களுக்குள்ளே வேர் கொள்ளாதபடியினாலே, கொஞ்சக்கால மாத்திரம் விசுவாசித்து சோதனை காலத்தில் பின்வாங்கிப்போகிறார்கள்’’ (லூக்.8:13). இதற்கான முக்கிய காரணத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, பண ஆசையே என்று காண்கிறோம். எலிசாவின் உதவிக்காரனாகிய கேயாசியைப் பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள், நாகமானிடம் எலிசாவே பணம் வாங்காமல் அவனை ஆசீர்வதித்து அனுப்பி இருக்கும்போது இந்த கேயாசி என்பவன் பணத்துக்கு ஆசைப்பட்டு அவன் பிறகே சென்று ஒருதாலந்து வெள்ளியையும் இரண்டு மாற்று வஸ்திரங்களையும் பொய்சொல்லிப் பெற்றுக்கொண்டு அந்தப்பாவத்தை தன் வீட்டில் வைத்துவிட்டு பின்பு எலிசா தீர்க்கதரிசியைச் சந்தித்தான். ஒரு தீர்க்கதரிசியினிடம் பொய் சொல்ல முடியுமா? பணத்தை வாங்குகிறதற்கும், வஸ்திரங்களையும் ஒலிவத்தோப்புகளையும் திராட்சத்தோட்டங்களையும் ஆடுமாடுகளையும் வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் வாங்குகிறதற்கும் இது காலமா? என்றான். ஆகையால் நாகமானின் குஷ்டரோகம் உன்னையும் உன் சந்ததியாரையும் என்றைக்கும் பிடித்திருக்கும் என்றான்: உடனே அவன் உறைந்த மழை நிறமான குஷ்டரோகியாகி, அவன் சமுகத்தை விட்டுப்போனான். ‘‘பொய்நாவினால் பொருளைச் சம்பாதிப்பது சாவைத் தேடுகிறவர்கள் விடுகிற சுவாசம்



போலிருக்கும்’’ (நீதி.21:6). பணத்துக்கு ஆசைப்பட்டவர்கள் தங்கள் ஜீவியத்தில் பாதி நாட்களைக்கூட காண்பதில்லை. உங்களுடைய ஆசை பணத்தை பற்றியதா? அல்லது நம்மை பாவத்திலிருந்து மீட்டு நம்மை பரலோகம் கொண்டுசெல்ல வந்த ஆண்டவர் இயேசுவைப் பற்றியதா? இன்றே ஒரு தீர்மானத்துக்கு வாருங்கள்.

பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடைவதில்லை; செல்வப்பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே என்று பிரசங்கி சொல்லுகிறார். திருப்தி தராத பணத்தையும், மாயையான செல்வத்தையும் நாடாமல், ‘நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்’ என்று சொன்ன கர்த்தரையும் அவருடைய வார்த்தையையும் விசுவாசியுங்கள். ‘‘மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்’’ (லூக்.4:4). மேலும் ‘‘போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிருந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை என்பது நிச்சயம். உண்ணவும், உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம்’’ என்ற 1தீமோ.6:6–8 –ல் சொல்லப்பட்ட வசனங்களை நம்முடைய அனுதின ஜீவியத்தில் நினைவு கூர்ந்து, பணஆசையை கொண்டுவருகிற பிசாசையும், அவனுடைய கூட்டத்தாரையும் விட்டு விலகி கர்த்தருக்கும் அவருடைய திருச்சபைக்கும் முன்பாக ஒருவனும் உங்களை குற்றப்படுத்தாதபடிக்கு ஜீவியத்திலும், நடக்கையிலும், நற்சாட்சியுள்ளவர்களாக ஜீவிக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது கிறிஸ்துவானவர் கொடுக்கும் வாடாத ஜீவகிரிடத்தைப் பெறுவீர்கள்.

## கேள்வி நேரம்

**பணம் நல்ல குணங்களைக் கொண்டுவருமா?**

பணமே எல்லாதீமைக்கும் வேராயிருக்கிறது என்று செய்தியில் தியானித்தோம். பின்பு எப்படி அது நல்ல குணத்தைக் கொண்டுவரமுடியும். பணம் எல்லாவற்றிற்கும் உதவும். அதில் எந்த விதமான சந்தேகமும் இல்லை.

ஆனால் பணம் நல்ல குணத்தைக் கொண்டுவராது. மனிதர்கள் பெரும்பாலும் பணத்தையே நாடிப்போகின்றனர். எடுத்துக்காட்டாக பாருங்கள். பெண்பார்க்கப்போகிறார்கள். அவர்களுடைய முழு கவனமும் பணத்திலே இருக்கிறது. எத்தனை பவுன் நகை போடுவீர்கள் என்பதுதான் அவர்களுடைய முதல் கேள்வியாக இருக்கிறது. பணம் இருந்தால் ஒ கே, இல்லாவிட்டால் பெண்பிடிக்க வில்லை என்று சொல்லி புறப்பட்டுவிடுவார்கள். வேதம் சொல்லுகிறது: ''குணசாலியான ஸ்திரீ தன் புருஷனுக்குக் கிரீடமாயிருக்கிறாள்'' (நீதி.12:4). இவ்விதமான குணசாலியான பெண்ணைக் கண்டடைகிறவன் யார்? பணத்தை மையமாக வைக்காமல், கர்த்தருக்கு பயந்து அவர் வழியில் நடக்கிறவன். குணசாலியான பெண்ணைத் தேடுவான். ஆகையால் எனக்கு அன்பானவர்களே, முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல. சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள். அப்படிப்பட்ட குணங்களைக் கொண்ட ஸ்திரீயை கண்டடைகிறவன் நன்மையானதை கண்டடைகிறான் என்று வேதம் சொல்லுகிறது. அன்பர்களே, பணத்தையல்ல குணத்தைத் தேடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 53. இயேசு கிறிஸ்துவின் இரத்தம்

## The Blood of Jesus Christ

வானொலி நேயர்களாகிய உங்கள் யாவருக்கும் ஜீவனைக் கொடுக்கும்படியாக தம்மையே சிலுவையில் ஒப்புக்கொடுத்த நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் தூயநாமத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் – The blood of Jesus Christ. மனிதன் தன்னுடைய பாவத்தைப்போக்க பல வழிகளை கையாளுகிறான். ஆனால் அனைத்தும் வீணாக போய்விடுகிறது. வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்த தேவனாகிய கர்த்தர் மனிதனுடைய பாவத்தைப் போக்க ஒரே ஒரு வழியை மட்டமே ஏற்படுத்தியிருக்கிறார். அந்த



வழி அவரால் அனுப்பப்பட்ட அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறது என்பதே உண்மை. ''ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே'' என பரிசுத்த வேதாகமம் மிக தெளிவாக நமக்குப் போதிக்கிறது (லேவி.17:11). ஆதியிலே மனிதன் தன் பாவத்தைப் போக்க பாவநிவாரண பலியாக வெள்ளாட்டுக் கடாக்களையும், காளைகளையும் கர்த்தருடைய சந்நிதியிலே செலுத்திக் கொண்டு வந்தான். ஏனென்றால் ''நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங் குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும், இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது'' எபி.9:22–ன் படி ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்யும்படி பாவநிவாரணபலியாக இரத்தம் செலுத்தப்பட்டு வந்தது. இவைகளை தேவன் நித்திய காலமாக மனிதனுக்கு நியமிக்கவில்லை. கிறிஸ்துவானவர் மனிதனுக்காக இரத்தம் சிந்தும் நாள் வரை இவைகள் நடைமுறையில் இருந்தது. ஆகையால் ''இவைகள் சீர்திருத்தல் உண்டாகும் காலம் வரைக்கும் நடந்தேறும்படி கட்டளையிடப்பட்ட போஜனபானங்களும், பலவிதஸ்நானங்களும், சரீரத்திற்கேற்ற சடங்குகளுமேயல்லாமல் வேறல்ல. கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டி சம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார். அதெப்படியெனில், காளை வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தமும், தீட்டுப்பட்டவர்கள் மேல் தெளிக்கப்பட்ட கடாரியின் சாம்பலும், சரீரசுத்தியுண்டாக்கும்படி பரிசுத்தப்படுத்துமானால், நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம். நமக்காக தம்மைத் தாமே அடிமையாக்கிய உலகத்தாருடைய பாவங்களை எல்லாம் தம்மேல் சுமந்துகொண்டு, சிலுவையில் சிந்திய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் நம்மை பாவமற கழுவி சுத்திகரிப்பது அதிக

நிச்சயமல்லவா!

"திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்குச் ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன், நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். நல்ல மேய்ப்பராக இயேசு தமது மந்தைக்காக ஜீவனையே கொடுத்திருக்கிறார். ஆகையால் தான் யோவான்ஸ்நானகன் அவரைக் குறித்து சொல்லும்போது, "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறதேவ ஆடுக்குட்டி" என்றான் (யோவா.1:29). உலகத்தில் பிசாசு கொல்லவும் அழிக்கவும் வருகின்றான். அவனுக்கு பயந்து அவனை நமஸ்கரிக்கிற கூட்டம் அதிகம். ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்க வெளிப்பட்டாரென்று அறிவீர்கள், அவரிடத்தில் பாவமில்லை. அவருடைய இரத்தத்தால் நாம் பாவமற கழுவப்பட்டாலொழிய பரிசுத்தமாக்கப்பட முடியாது. இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம். ஆகையால் நம்முடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் தேவன் கிறிஸ்துவுக்குள் மன்னித்தார். இப்படி மன்னிக்கப்பட்டதுண்டானால், இனிப்பாவத்தினிமித்தம் பலி செலுத்தப்பட வேண்டுவதில்லையே, ஆனால் இன்றும் அநேகர் பலி செலுத்துகிறார்கள். அவ்விதமான இரத்த பலி வீணான ஆராதனையை குறிக்கிறது. இயேசுவின் மரணத்தின் மூலம் பாவமன்னிப்பை பெற்ற நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ் செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல் நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே காத்திருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் ஆவிக்குரிய போஜனமாகிய அவருடைய வசனத்தை அநுதினமும் தியானித்து அவரில் நிலைத்திருக்க வேண்டும். இயேசு சொல்கிறார்: நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்கிறார். திராட்சச்செடியில் உள்ள கொடியை துண்டித்துப்பாருங்கள் அது சில நிமிடங்களிலே வாடி வதங்கிப்போய்விடும்.



பின்பு அதனால் கனி கொடுக்க முடியாது. அதைப்போல ஆண்டவரோடுள்ள தொடர்பு துண்டிக்கப்படும்போது நம்மால் ஒன்றும் செய்ய இயலாது. "என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம் பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனில் நிலைத்திருக்கிறேன்" என்றார் (யோவா.6:56). அவரை வாரந்தோறும் நினைவு கூர்ந்து அவருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்ட நாம் இந்த உலகத்தில் கிறிஸ்துவை தரித்துக்கொண்டவர்களாக வாழவேண்டும்.

இயேசுவின் சரீரம் ஒருமுறை மட்டுமே பலியிடப்பட்டது. திருமுழுக்கு பெற்ற ஒருவன் மீண்டும் பாவம் செய்வானேயென்றால் அவன் கர்த்தரை நோக்கி ஜெபிக்க வேண்டும். ஒருவேளை அவனுடைய பாவம் மன்னிக்கப்படலாம் அல்லது அவன் நியாயத்தீர்ப்புக்கு காத்திருக்க வேண்டும். பிலிப்புவின் பிரசங்கத்தைக் கேட்டு, விசுவாசித்து, ஞானஸ்நானம் பெற்ற மாயவித்தைக்காரனாகிய சீமோனை அறிவீர்கள். அவனும் இப்படித்தான் திருமுழுக்கு பெற்ற பின்பு பாவம் செய்தான். என்ன பாவம் என்றால், தேவனுடைய வரத்தை பணத்தினாலே சம்பாதிக்க ஆசைப்பட்டான் இதை அறிந்த பேதுரு: "உன் பணம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது, உன் இருதயம் தேவனுக்கு முன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள், ஒரு வேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்" என்றான் (அப்.8:20,22). திருமுழுக்கு பெற்ற ஒருவன் பாவம் செய்தால், மீண்டும் ஒரு திருமுழுக்கு பெறவேண்டுமென்பதல்ல. அவன் தான், தேவனுக்கு விரோதமாக செய்த பாவத்தினிமித்தம் மனந்திரும்பி தேவனை நோக்கி ஜெபிக்கவேண்டும். இதை தவிர வேறு வழியில்லை. ஆகையால் ஞானஸ்நானம் பெற்ற ஒருவன் பாவம் செய்யாது தன்னைப் பாதுகாத்துக்கொள்வது அவனுக்கு மிக மிக நல்லது.

இயேசுவின் இரத்ததினால் பாவமற கழுவப்பட்ட அநேகர் இன்றைய நாட்களில் வீழ்ந்துபோய், சபைக்கு செல்லாதவர்களாக இருந்து கொண்டு, சபைக்கு செல்லுகிறவர்களுக்கும் இடையூராகவு வாழ்ந்து வருகிறார்கள். இவர்களைக் குறித்து பரிசுத்த ஆவியானவர் உணர்த்துவது

என்ன? ‘‘மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே, தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து தன்னை பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்’’ (எபி.10:28,29). மேலும் கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக் கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை, முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்த பின்பு அவர்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். ‘‘நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது’’ என்கிறார் பேதுரு (2பேது.2:20–22). மனிதவர்க்கத்தையே காப்பாற்றும்படியாக தம்முடைய கீழ்ப்படிதலினாலே தம்முடைய இரத்தத்தை சிந்தி சிலுவையில் மரித்த இயேசுவை தள்ளி, உலக அசுத்தங்களுக்கு திரும்பி, பாவம் செய்தால் அவன் பின்னிலைமை, முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். ஆகையால் பிரியமானவர்களே! பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதற்கேதுவான ஆலோசனைகளை கொண்டுவரும் பிசாசையும் அவன் கூட்டத்தாரையும் விட்டுவிலகுங்கள். அப்பொழுது இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி உங்களைச் சுத்திகரிக்கும்.

இயேசுவின் இரத்தத்தினாலே ஒரே ஒரு மார்க்கமே தேவனால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அது ஜீவனுள்ள மார்க்கம். ‘‘அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்’’ என்று எபி.10:20–ல் வாசிக்கிறோம். இம்மார்க்கத்திலே சென்றால் எல்லையில்லா சந்தோஷத்தை பாடுகளோடு அநுபவித்து முடிவில் நித்திய ஜீவனை அடையலாம். இம்மார்க்கத்தானாக



மாறுவதற்கு பணமோ, பொருட்களோ தேவையில்லை. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் உங்களுடைய முழு இருதயத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தால் போதுமானது. இச்செய்தியை கேட்கும் அன்பான நேயரே, சகோதரனே, சகோதரியே உன் ஆத்துமாவிற்று பாவநிவர்த்தி செய்வது இயேசுவின் இரத்தமே! அவர் சிந்திய இரத்தத்தினாலே மட்டுமே நாம் பாவமற கழுவப்பட முடியும். ஏனென்றால் ‘‘அவர் பாவஞ் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை அவர் வைப்படும்போது பதில் வையாமலும் பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள், இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்’’ (1பேது.2:22–25). இதை அறிந்து விசுவாசிக்கிற நீங்கள், அநேகர் இயேசுவின் இரத்தத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற வழிகாட்டியாக இருந்து கொண்டு, தேவ சித்தம் நிறைவேற பிரயாசப்படுங்கள்.

**கேள்வி நேரம்**

**இயேசுவின் இரத்தத்தினால் பாவமற கழுவப்பட்ட ஒருவருக்கு நோய் வராதா?**

ஆண்டவர் நம்முடைய பாவங்களை சிலுவையில் சுமந்துதீர்த்தார். பாவம் நம்முடைய ஆத்துமாவில் தொற்றிக்கொண்ட நோய், அந்த பாவ நோயிலிருந்து விடுபடுகிறோம். எப்போது? நாம் அவரை விசுவாசித்து, மனந்திரும்பி, அறிக்கையிட்டு, பாவமன்னிபுக்கென்று பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே திருமுழுக்கு பெற்றுக்கொள்ளும்போது. மற்றபடி பாடுகளும், பிரச்சனைகளும், போராட்டங்களும், நோய்களும் நம்முடைய வாழ்க்கையில் வரத்தான் செய்யும். அவைகள் எல்லாம் ஒன்றும் வராது என்று கர்த்தர் சொல்லவில்லை. முதல் நூறாண்டில் வாழ்ந்த பவுலுக்கு ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அது தன்னை விட்டு நீங்கும்படி அவன் மூன்று முறை வேண்டிக்கொண்டான். அதற்கு கர்த்தருடைய பதில்: ‘‘என் கிருபை

உனக்குப்போதும்'' என்பதே (2கொ.12:9). இப்படி அநேக நோய்களோடு கிறிஸ்துவுக்காக வாழ்ந்து மரித்தவர்கள் நிறைய உண்டு. ''சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்'' என்கிறார் நமது ஆண்டவர் இயேசுகிறிஸ்து (மத்.10:28). சரீரத்திலே அநேக உபத்திரவங்களையும் நோய்களையும் பிசாசு கொடுக்கக்கூடும். யோபுவை உச்சங்கால் தொடங்கி கொடிய பருக்களால் வாதித்தான். அதேவிதமான பாடுகள் வரக்கூடும். ஆனால் நீதிமான்களுடைய இரட்சிப்பு கர்த்தரால்வரும்; இக்கட்டுக்காலத்தில் அவரே அவர்கள் அடைக்கலம். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.